2576/ஆ31/85
245
2 . . . 85

தமிழ்நாடு
சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# அதிகாரபூர்வமான வெளியீடு
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 15, 1985—தொகுதி 211-எண் 3
Friday 15th March 1985—Volume 211 - No. 3

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ: 2.75]

2A05

பொருளடக்கம்

பக்கங்கள்


1. உரிமைப் பிரச்சினை—

'அண்ணா' நாளிதழில் மேலவை நடவடிக்கை குறித்து வெளியான செய்தி குறித்து .. 169—171

2. தகவல் கோரல்— 171

உரிமைப் பிரச்சினையை எடுத்துகொள்வது குறித்து .. .. .. .. 172—174

3. ஒழுங்குப்பிரச்சினை—

திரு. ஆர். டி. சீத்தாபதி இரண்டாவது முறையாகப் பேசியது குறித்து .. 174—268

4. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் ... 269—273

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1985 மார்ச் 15.

பங்குனி 2, ரக்தாட்சி—திருவள்ளுவராண்டு 2016.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. உரிமைப் பிரச்சினை.

### 'அண்ணா' நாளிதழில் மேலவை நடவடிக்கை குறித்து வெளியான செய்தி குறித்து.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே,

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் தொடக்கவே இல்லை. அதற்குள். . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** கேள்வி நேரம் இல்லை என்பதாலே, தலைவர் அவர்களே, ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். நேற்றைய தினம் சபையிலே நடந்த நிகழ்ச்சி ஒன்றை 'அண்ணா' பத்திரிகை தவறாக வெளியிட்டிருக்கிறது. அதன் மீது தான் ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் எனக்கு எழுத்து மூலம் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் எடுத்துக்கொள்கிறேன் என்று எனது அறையில் சொல்லியிருக்கிறேன். நான் அதை எடுத்த பிறகுதான் உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றிப் பேச வேண்டும். பழைய உறுப்பினராகிய திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களே இப்படிச் செய்தால் எப்படி ?

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் மேலவையின் விதி 157-ன்கீழ் ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்ப முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின்கீழ் வருகிறது என்பது குறித்து சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, நேற்றைய தினம் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது இங்கே விவாதம் தங்களுடைய அனுமதியோடு தொடங்கப்பட்டு நடந்து கொண்டிருந்தது. விவாதம் நடைபெற்றபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் எங்களுடைய கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மீது சாமாரியான குற்றச்சாட்டுக்களைக் கூறி இந்த அவையிலே பேசிக் கொண்டிருந்தார். அப்போது எங்களுடைய தலைவர் இங்கே அமர்ந்திருந்தார். அதற்குப் பிறகு தன்னுடைய சொந்த அலுவல் காரணமாக இந்தச் சபையிலிருந்து வெளியே சென்றார். இந்த அவையில் இருக்கின்ற உறுப்பினர் தங்கள் விருப்பப்படி வெளியே செல்லவோ, உள்ளே வரவோ சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அது மரபும்கூட. இது எல்லோரும் அறிந்த ஒன்று. அப்படி இருக்கும்போது, எங்களுடைய தலைவர் வெளியே சென்ற நிகழ்ச்சிக்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் நேற்றைய மாலை 'அண்ணா' இதழில் "ஜேப்பியார் அவர்கள் சாமாரியான குற்றச்சாட்டு. சபையிலிருந்து கருணாநிதி வெளியேறினார்" என்று தலைப்பிட்டு ஏதோ இங்கே பேசுவதற்கு பயந்து கொண்டு ஓடியது போல தலைப்பு வெளியிட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் அவர்கள் வெளியிட்டிருக்கிற போஸ்டரில் "மேலவையிலிருந்து கருணாநிதி ஓட்டம்" என்று போட்டு விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே மேலவையிலே நடைபெறுகிற நிகழ்ச்சிக்கு உள்நோக்கம் கற்பிக்கிற வகையிலே, இந்தச் சபையிலே இருக்கக் கூடிய தலைவர் அவர்களை அவமதிக்கக் கூடிய வகையில், அவர்களுக்குக் களங்கம் ஏற்படுத்துகிற வகையில் இப்படி வெளியிட்டிருப்பதை இந்தச் சபை அனுமதிக்கிறதா ; அப்படி அனுமதித்தால் இந்தச் சபையின் கௌரவம் என்ன ஆவது? அப்படிப் போட வேண்டிய அவசியம் என்ன ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்தச் சபை அனுமதிக்கிறதா என்று கேட்க வேண்டியதில்லை. உரிமைப் பிரச்சினையின்கீழ் வருகிறது என்று சொன்னாலே போதும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இது எப்படி இருக்கிறது என்பதற்காக ஒரு சில உதாரணத்தைச் சொல்லுகிறேன். அவைத் தலைவர் அவர்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறீர்கள். என்னைப் பேச அனுமதிக்கிறீர்கள். நான் பேசும்போது தலைவர் அவர்கள் எழுந்து வெளியே செல்லுகிறார். அப்போது "மீனாட்சிசுந்தரம் பேச ஆரம்பித்ததும் அவைத் தலைவர் இந்த அவையை விட்டு ஓட்டம்" என்று போட்டால். . . .





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நல்ல வேளை நாடு அந்த அளவிற்கு இன்னும் போகவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அல்லது மீனாட்சிசுந்தரம் பேசும்போது அமைச்சர் அவர்கள் பயந்து ஓடினார் என்று சொன்னால், இந்த அவையின் கௌரவம் என்னவாகும்? ஆகவே இதை உரிமைப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு தீர்ப்பு வழங்க வேண்டுமென்று இந்த அவையிலே கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது குறித்து 'அண்ணா' நாளிதழ் ஆசிரியரிடம் விளக்கம் கேட்டு எனது தீர்ப்பை பின்னர் வழங்குகிறேன். இது தான் மரபு. அதைச் செய்கிறேன்.

## 2. தகவல் கோரல்.

### உரிமைப் பிரச்சினை எடுத்துக்கொள்வது குறித்து.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் மேலும் ஓர் உரிமைப் பிரச்சினையைத் தந்திருந்தேன். அந்த உரிமைப் பிரச்சினையை இந்த அவையில் எழுப்ப விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது குறித்து என் அறைக்கு வந்து சொன்னார்கள். அதற்கு எந்தவிதமான தஸ்தாவேஜும் கிடையாது. எந்தவிதமான தஸ்தாவேஜும் இல்லாமல் அது எப்படி உரிமைப் பிரச்சினையாகும்? அதைப்பற்றி நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். சில விஷயங்களைப்பற்றி என்னுடைய அறையில் நான் சொல்லிவிட்ட பிறகு, அப்படியே விட்டுவிட வேண்டும். அதற்குப் பிறகு இங்கே வந்து எழுப்பக் கூடாது. தாங்கள் கூறியது குறித்து ஒன்றும் பதிவாகவில்லை. அதற்கு தஸ்தாவேஜ

(முற்பகல் 10-05)

கிடையாது. நீங்கள் கொடுத்த கேள்வி பதிவு ஆகவில்லை என்று நான் சொல்லியாயிற்று.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, வினா பதிவு ஆகியிருக்கிறதா இல்லையா என்று உறுப்பினர்களுக்குத் தெரியாது. பதிவு ஆகவில்லை என்று சொல்லியிருந்தால், அதைப்பற்றிக் கேட்காமல் இருக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் பேசலாம்.

3. ஒழுங்குப் பிரச்சனை.

திரு. ஆர். டி. சித்தாபதி இரண்டாவது முறையாகப் பேசியது குறித்து.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே ஓர் ஒழுங்குப் பிரச்சினை. நேற்றையதினம் ஆளுநர் அவர்கள் உரையின்மீது 4 பேர்கள் பேசினார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பும் கடைசி பிரச்சினைதானே இது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அதுவும் கடைசியாகத் தான் நடந்தது. நேற்றையதினம் 4 உறுப்பினர்கள் ஆளுநர் அவர்கள் உரையில் பேசினார்கள். மூன்றாவதாக திரு. ஆர். டி. சித்தாபதி அவர்கள் பேசினார்கள். அவர் பேசி முடித்த பிறகு, நான்காவதாக திரு. தாஸ் அவர்கள் பேசினார்கள். அவர் பேசி முடித்த போது அவைக் கூட்டத்தை முடிக்கின்ற நேரம் வந்துவிட்டது. அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். டி. சித்தாபதி அவர்கள் பேசினார்கள். "நான் பேச குறித்து வந்த கருத்துக்களிலே சிலவற்றை விட்டுவிட்டேன். அதைப் பேச அனுமதி அளிக்கவேண்டும்" என்று அவர்கள் கேட்டார்கள். இது சபை மரபு அல்ல. அப்படி அனுமதித்து வழக்கமில்லை. நானும் அப்படி பார்த்ததில்லை. என்னுடைய பேச்சிலே நிறைய பேச வைத்திருந்தேன். நான் துணைத் தலைவர் அவர்களிடம் "நான் கூட வைத்திருக்கிறேன். எனக்கும் அனுமதி அளிக்க வேண்டும்" என்று கேட்டேன். பின்னர் அவர்கள் பேசியதை அனுமதித்ததால் நான் எழுந்தபோது . . .

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நேற்று நடந்ததாக ஒரு நிகழ்ச்சியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இவ்வளவு நேரம் இங்கே தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த நிகழ்ச்சி நடந்ததாக சபை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா, நடந்ததா, துணைத் தலைவர் அவர்கள் அனுமதித்தார்களா என்பது தெரியவில்லை. அந்தச் சூழ்நிலையில் இன்றைக்கு இந்தப் பிரச்சினையை எழுப்பிக்கொண்டிருப்பது அவசியமற்றது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் சொல்லியாகட்டும். முதலில் தெரிந்துகொள்ளலாம். பிறகு நான் சொல்கிறேன்.



**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் அனுமதி அளிக்கவில்லை. அவர் பேசுகின்றபோது அவர்கள் பொறுத்திருந்தார்கள். உறுப்பினர் அவர்கள் அப்போது சொன்ன கருத்தை நான் மறுக்கவில்லை. அவர் பேசிய கருத்து எல்லோராலும் வரவேற்கக் கூடியது. ஆனால் அப்படி அனுமதிக்கும் மரபு இல்லை. ஒருமுறை பேசி முடிந்தபிறகு மறுபடி பேசும் மரபு இல்லை. அப்படி சந்தர்ப்பம் அளிக்கின்ற மரபும் இல்லை. அது சட்டப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளக்கூடியதுதானா என்று தலைவர் அவர்கள் தீர்ப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. ஜி. சுவாமிநாதன் :** நான் ஒரு விவரம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். திரு. சித்தாபதி அவர்கள் பேச ஆரம்பித்தபோது கேட்டேன். "நீங்கள் ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர் பேச விரும்புகிறீர்களா அல்லது கிளாரிபிகேஷன் கேட்டு பேச விரும்புகிறீர்களா ?" என்று கேட்டேன். அப்படி கேட்டுக்கொண்டிருக்கின்றபோதே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமெரிக்கா சென்று வந்ததுபற்றியும் நன்றி சொல்லியும் பேசினார்கள். ஆகவே அவர் பேசி முடிக்கின்ற வரையிலே பொறுமையாக இருந்தேன். அப்போது தடுக்க இயலாதவனாக இருந்தேன். அது பேசி முடிக்கின்ற நேரமாக இருந்தது. நான் மணி அடித்துக்கொண்டே இருந்தேன். அவர் பேசி முடிக்கிறவரை பொறுமையாக இருந்தேன். அந்த இறுதி நிலைமையிலே உறுப்பினர் அவர்கள் எழுந்து "நானும் பேசவேண்டும்" என்று எழுந்தார். இந்தமாதிரி ஒவ்வொருவரும் பேச ஆரம்பித்தால், மணி அடித்த பிறகும் உறுப்பினர் பேசிக்கொண்டிருந்தால், அவர்களை வெளியேற்றித்தான் ஆகவேண்டும். அதற்குமேல் துணைத் தலைவர் ஆசனத்தில் அமர்ந்திருக்க முடியாது. அந்த மாதிரி நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்பதற்காகத் தான் நான் அப்படிச் செய்தேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே பேசுகிறபோது, மணி அடித்த பிறகும் உறுப்பினர் பேசிக்கொண்டிருந்தால், அவர்களை வெளியேற்றித்தான் தீரவேண்டும் என்று சொன்னார்கள். அது மிக அதிகமான தண்டனை என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட வார்த்தை துணைத் தலைவர் அவர்கள் வாயிலிருந்து வருவது அவ்வளவு நல்லதல்ல.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, திரு. சித்தாபதி அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, நான் மணி அடித்துக் கொண்டே இருந்தேன். திரு. சித்தாபதி அவர்கள் மேலும் பேசிக்கொண்டி

ருந்தார். அப்படி திரு. சீத்தாபதி பேசிக்கொண்டிருந்தால் நான் சார்ஜெண்ட்டைக் கூப்பிட்டு அவரை வெளியேற்றச் சொல்ல வேண்டும். அவை முடிகிற சமயம். இந்த ரசாபாசம் வேண்டாமென்றே நான் வெளியேறி விட்டேன். அவ்வளவுதான் நடந்த விஷயம்.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* 10 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கின்றார்கள். நேரத்தை அவர்கள் கொஞ்சம் சுருக்கமாக எடுத்துக்கொண்டு 15 நிமிடத்திற்கு அதிகமாகப் போகாமல் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

### 4. ஆளுநர் உரையின்மீது விவாதம்—தொடர்ச்சி.

(முற்பகல் 10-10)

Thirumathi TARA CHERIAN : Hon. Chairman, Sir, I thank you for giving me this opportunity to join the other Hon. Members in supporting the Motion of Thanks to the Governor for his Address on the first day of this Session.

Sir, the Governor is an experienced administrator. While he was in the Indian Administrative Service, he served the country very well in various capacities in some of the States and particularly in the Government of India. He was a very sincere Member of the Central Social Welfare Board, about the working of which many of our hon. Members may not know very much. I hope that one day I will be able to explain the functioning of the Central Social Welfare Board and the District Social Welfare Boards which are doing yeoman service through voluntary organisations.

Sir, several condolence meetings have been held to pay homage to the respected, departed Prime Minister Indiraji and almost all the citizens of our country have attended those meetings. The Press and other media have done full justice in bringing on record the life and service of that great, departed personality and have recorded the glorious tributes that have been paid to her by small and big people from the four corners of the world. Those tributes are still echoing in our ears. She played a great role both in the national and in the international spheres. In our House, the first day of the Session was earmarked just for passing a Condolence Resolution on the passing away of that very great leader. But, I think it was rather embarrassing and also ironical, in a way, that, because of certain procedure of the Legislature that has been adopted by convention



or rule, it was not possible for even one woman to participate in the Proceedings of this House on that day and express her feelings. Sir, it should not be forgotten that women from nearly 50 per cent of the population of this country. Therefore, it would have been nice if at least one or two lady Members had been allowed to speak on that day. I understand the Chairman's difficulty on that day. I hope that the rules and conventions of the House, which are made only to suit the wishes of the Members of the House, will be changed so as to accommodate some of the lady Members also on such occasions.

Sir, as the Governor has made a reference to the passing away of Indiraji in his Address, I think it is proper for me to say a few words about her. The late Prime Minister, Thirumathi Indira Gandhi, was one of the rarest and greatest leaders of this era. The crutal assassination of that beloved leader was a shock to the whole world. She was not only an illustrious national leader but also a great international personality in the last two decades. She, undoubtedly, led the country to allround progress. She had deep faith in maintaining the integrity of the nation and communal harmony. This faith and also her desire to remove the sufferings of the people, particularly those of women and children, made her fight most relentlessly against tremendous odds and, ultimately, she laid her life for the cause which she stood for. Her labour was not in vain. Significant progress was made India in the removal of property and in the advancement of agriculture and industry. Science and technology, including space technology, received an impetus and the country made great strides in strengthening the national defence and being in a state of defence-preparedness. Her stewardship earned, for the first time, a special status for India in the world arena. I think nobody will contradict me if I say that, even more than in the time of Panditji, the measure of international recognition for India was enhanced during the time Indiraji was Prime Minister of India. There is no time for me now to talk about the personal impressions that she made on those who had the occasion to meet her. She had a humane nature as a mother and as a friend of the people. She was a beautiful woman who was fond of all good things, including our South Indian sarees, and she had a rare sense of humour. Her concern for the Third World, her allergy for colonialism, the role played by her in strengthening the Non-Alignment Movement, her interest in the welfare of the Commonwealth countries, her views on the importance of our country remaining in

[Thirumathi Tara Cherian] / 1985 March 15

the Commonwealth, are all quite well-known. I would say, in a nut-shell, that she was very greatly interested in women's emancipation and in seeing that women got their rightful place, as equal partners, in the affairs of the present-day world. Her love towards women and children, especially those in the rural areas, has been expressed by her on more than one occasion.

(முற்பகல் 10-15)

Sir, in the liberation of women, both in the urban and rural areas, she once said that liberated women should feel free in their own right and not in rivarly to men. They should have faith in their capacity to put in more efforts in the interests of the country, not because they are women but because they comprise half the human race. She had great interest in the work of voluntary organisations. There have been many people, senior Administrative Officers and women like Mrs. Durgabai Deshmukh, who had taken great interest in the work. The reason why I am mentioning this is this. Government bodies talk about people's participation and also admit that the Government alone, without the participation of the people, cannot deliver the goods. But when the time comes for action, perhaps because of red-tapism or bureaucratic mentality there is no proper report between the Government departments and voluntary organisations. We are now thinking of many ameliorative things for women. The Governor's Address mentions about orphanages and about many things that have been done for women's development. Still there are a few things which have to be done. The Hon. the Chief Minister who always appreciates the work of women is here and I can say boldly that there are certain fields where women as well as voluntary organisations can work better. We can divide a line and identify the things which voluntary organisations can do. I am not blaming the Government officials. There are very many I.A.S. officers who are rendering wonderful, dedicated service. In the running of Homes for deserted women, Home for beggars there should be some humane touch and dedication to work. These fields cannot be served better by those persons who want to begin work at 10 a.m. and put the tools down at 5 p.m. Whether an Official or a non-official, one must have the spirit of dedication to work. If there is that spirit of dedication to work, even a Government official will be much better than a non-official. In Madras there are very many voluntary organisations doing very good service. When we are thinking of doing good things to the people in the 7th Five-Year plan period, let us realise that voluntary organisations could be given the responsibi-



1985 March 15] [Thirumathi Tara Cherian]

lity of looking after those schemes, because they will do it with a humane touch which is very necessary. I think the Government will do it very early.

Sir, this year, I think, we have started with more than one tragedy. Thirumathi Indira Gandhi fought relentlessly for the integrity of the country and for the alleviation of the sufferings of the people and she had laid down her life for that cause. We forgot the cause for which she stood and a large number of people of a particular community were made victims in a shameful manner and a large number of innocent people suffered untold misery. After these two tragedes, the third tragedy came in the form of an industrial accident, in which many had lost their lives and many are put to

(முற்பகல் 10-20)

suffering. These tragic events were followed by the unprecedented enthusiasm shown by the people in electing a popular Government. Once again the basic strength of democracy and the political maturity of our people have been demonstrated. The new Government headed by a very young leader who has also got very broad shoulders Thiru Rajiv Gandhi, has come to power. Thiru Rajiv Gandhi has settled down to serious business immediately after assuming charge. The action taken by him so far and the pronouncements made by him have been well received. I hope and pray that he will be able to give the country a clean Government.

Sir, the Hon. the Chief Minister has come back after undergoing medical treatment. I am mentioning about him not because he is now present in the House; I wanted to mention about him earlier also. We are thankful to God for spring the life of our Hon. Chief Minister. Though I do not know personally, I understand from reports in the Press that thousands of people have prayed for his life. Moreover, medical science has advanced to such an extent that it has been possible for the doctors to save him. His own will-power and the people's prayers have quickened his recovery. I also think that he must have done something very good in his past life which has helped him now. I do not know very much about the effects of the deeds of a person in his past life and I do not a so believe such things. But I feel that some such effect should have been there in the case of our Hon. Chief Minister He has earned a new lease of life to carry on his work fully supported by the faith that the people have placed in him. I, as a woman, would request him to

/Thirumathi Tara Cherian] /1985 March 15

show more sympathy towards women and children because they need it. In spite of all the amendments to the Constitution women are not treated as they ought to be. They are not given equal rights and opportunities. The Hon. the Chief Minister has got many women-officers belonging to the I.A.S. in his Government and, therefore, I am sure that he will be able to do many good things for the welfare of women and children.

Sir, a silver lining which we saw a few days ago was India's victory in the World Cup Cricket Tournament. The superlative performance of our Indian Cricket team made this great achievement possible. Earlier, we were rather diffident because of the poor performance of the team in the recent past. The team has now brought glory to our country. They have shown that we have the sporting spirit and also the required calibre. If only the State Governments and the Union Government could give the sportsmen all the patronage that they need and if we keep sports out of politics and give credit to the deserving sportsmen, our country will certainly get greater acclaim in the field of sports and games.

Sir, yesterday also, leaders of political parties in this House paid tributes to Konstantin Chernenkov, late President of Soviet Russia. Fortunately or unfortunately, no lady-Member of this House is a Party leader and, therefore, no lady Member was able to speak about him. I think it will not be out of place for me to say that in the demise of Konstantin Chernenkov, the world has lost a great leader. He stood for all the good principles of Communism. He had a firm belief in maintaining friendly relation with India. He believed in the doctrine of detente. He desired that all countries of the world should live in peace with one another. Therefore, glorious tributed have been paid in his honour both in this House and outside. Our Prime Minister, Thiru Rajiv Gandhi has now come back after meeting the new President of the U.S.S.R. The new President is almost as young as Thiru Rajiv Gandhi. He has got good ideas, is forward-looking and is firm in his belief in international peace and detente. I hope and pray that this type of understanding between the U.S.S.R. and India does not deter us from having the same amount of understanding with other countries because we are only a small block in the whole world. The mutual goodwill and understanding should exist not only between Governments but also between the people of the two countries.



1985 March 15] /Thirumathi Tara Cherian]

Sir, I will not take much time because I will get an opportunity to take part in the General Discussion on the Budget. One of the things in which I am much interested is the Family Planning programme All said and done, it is the women who have got more obligations to their families. I am glad that the Hon. the Health Minister is here. The Central Government and the State Government have devised many schemes for implementing the Family Planning Programme. But, I would like to say that we, in the Social Welfare Board, have organised nearly 2,000 Orientation Training Camps in this regard and we can co-operate with the Government in their efforts to make the programme a success. We have all the wherewithal like books, films, etc. With proper rapport, we can adopt particular districts and co-ordinate with the efforts of the Government.

Sir, we have a number of Public Health Officers because we believe that prevention is better than cure. But, I would like to say that we should have enough hospital facilities also. There was a time when we had hospital committees with non-officials as members. The members of those committees were chosen not with regard to their political stature, but with regard to the devotion that they had towards their work. Before my husband took me to Bombay, I was on the Hospital Committee of the Women and Children's Hospital for over 25 years. That committee was able to do much work without interfering in the day-to-day administration of the hospital. I do not know why the system of having hospital committees should not be revived. Such a committee can do a lot of good things without interfering in what the Hospital Superintendent does. I hope the Hon. the Health Minister will let us know his views in this matter. My husband was a Government servant and I know what is happening in the hospitals.

*(முற்பகல் 10-25)*

There is a lot of talk about pilferage and suspension of people from service. But we do not know what further action has been taken and what has been recovered. The people who are taking food for the patients in the hospital are asked to pay eight annas by the watchman or some other servant at the gates. This practice should be stopped. I know that the R M.O. who was strict in maintaining discipline was killed. I have seen milk being diluted with water and I have asked the person not to do such things. If there is integrity and honesty, these things will not happen. Our new

Prime Minister Thiru Rajiv Gandhi wants a clean Government and our Chief Minister also wants to achieve the same thing. There is so much of corruption everywhere and it should be minimised. Very often there is also political influence in the administration. Therefore, I do not want to say more on this. I am sure there will be re-organisation of the administration and red-tapism and bottle necks will be removed. Hundreds of crores of rupees are being set apart for many of the projects. We do not know how they are spent and what the result is. There must be a review every three months of what the Government have done.

Sir, I do not want to take much time of the House. Mention has been made about Orphanages and about things done for the women and poor children below the poverty line. Yesterday there was a celebration in which the physically handicapped took part in sports. I congratulate the Government on having given the necessary money. We could have done it in a more attractive manner, with the help of money from the public. The Police Department has co-operated in conducting the celebration and there was nice orchestral music by the students of a school from Royapuram. With the co-operation of the public, we could have arranged the celebration in a better manner.

About Tourism, the Hon. Minister Thiru Veerappan is here. Tourism is a commercial proposition. Let is not forget it. Tourism earns much foreign exchange and there is also good earning from the domestic tourists also. The people who are interested in the subject and people who have travelled a little bit should be associated with the work. The tourists should have no occasion to make any complaints. I am not criticising the present personnel. But we can do a lot to improve it.

The Hon. the Minister for Electricity is not here. I hope our power position is better. But the voltage fluctuation does great havoc and some of our costly gadgets get damaged because of fluctuation in voltage. This should be looked into. A number of huts have been provided with electric light and I congratulate the Government on that achievement. At the same time, there is a lot of pilferage going on and a Committee should be there to look into this problem.





About Family Planning, I have already spoken, "Health for all by 2000 A.D." is a million dollar question. There will be more and more children and more and more trouble. We have to see whether we could do anything with the Government help in the true spirit of the slogan. At present, there is a lot of communication gap. The old people do not know how to get Old Age Pension for themselves. There should be enough publicity for all these things. I am glad that the Hon. Thiru Veerappan, who is in charge of Publicity, is here. There should be a small group of officers who should tell the ordinary man whom to approach for getting Old Age Pension sanctioned for him.

Sir, I have a great grievance about the way certain communities are declared as backward. I find that the list of Backward Classes is being elongated from time to time. People claim that they should be included in that list because they would be able to get some privileges. The Hon. the Chief Minister, soon after he took over, made a wonderful proposition regarding the norms for deciding backwardness. I think that a Resolution was also passed in this House in that regard. The issue of declaring certain communities as backward has now become a burning issue in many other States also. Therefore, I think it is time to have a review of the matter. In the same community, persons belonging to a particular religion are declared backward and are given some privileges whereas others are not given those privileges. I do not want to mention the name of the community.

Sir, I would like to mention only one more point. Though the Telephones Department is under the control of the Government of India, it is we, the people of this State, who are paying the Telephone bills. Whether we use the telephone or not, whether the telephone is in working condition or not, we go on getting telephone bills for huge amounts every month. I hope that the committee which is functioning for this purpose will see that such things do not occur.

With these words, I conclude my speech in the hope that I will get an opportunity to express my view while participating in the General Discussion on the Budget.

Thank you.

(முற்பகல் 10-30)

* திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சில மாதங்களுக்கு முன்னாலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நோய்வாய்ப் பட்டு, மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டபோது, முதலிலே அது சாதாரணமான ஏதாவது ஒரு வியாதியாக இருக்கும், அவர்கள் மிகவும் விரைவாக குணமடைந்து விடுவார்கள் என்று நாட்டு மக்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள். நாட்கள் போகப் போக அது கடுமையான நோய் என்ற நிலைமை ஏற்பட்டு, நாட்டிலுள்ள எல்லா மக்களுமே அவருக்காக பிரார்த்தனை செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டது. முக்கியமாக அவருக்கு இரண்டு வியாதிகள் ஏற்பட்டன. ஒன்று கிட்னி டிஸ்பங்ஷன்; மற்றொன்று பேரலட்டிக் ஸ்ட்ரோக். ஒருவருக்கு இதில் ஏதாவது ஒன்று வந்தாலே மிகவும் கஷ்டம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அந்த இரண்டுமே சேர்ந்து வந்திருக்கிறதென்று சொன்னால், அவர் திரும்பி வந்து நம்முடைய மாநிலத்தின் முதலமைச்சராக இருப்பது சந்தேகம் என்ற உணர்ச்சி எல்லோருக்கும் எழுந்தது. அவர்கள் திரும்ப இங்கே முதலமைச்சராக வருவார்களா என்று நாட்டு மக்களாலே பேசப்பட்டது பத்திரிகைகளில் எல்லாம் எழுதப்பட்டது. மருத்துவர்கள் பலவிதமான அபிப்பிராயங்கள் கொடுத்தார்கள். மருத்துவத் துறையிலே நானும் ஓரளவுக்குப் பங்கு கொண்டவன். பல பெரிய மருத்துவர்கள் எல்லாம் கூட அவர் தேறி திரும்பி வருவது கடினம் என்று சொன்னார்கள். " அப்படி அவர்கள் தேறி வந்தாலும் கூட, பழைய மாதிரி இருக்க முடியாது, நடக்க முடியாது, தன்னுடைய காரியங்களைத் திறம்பட ஆற்ற முடியாது, தனிப்பட்ட முறையிலே இருந்தாலும் கூட நிர்வாகத்திலே பங்குகொள்ள முடியாது " என்று சொன்னார்கள். நாம் எல்லாம் சென்று பார்க்கும்போது, அவர்கள் தெளிவான அபிப்பிராயங்களைக் கூற முடியாது என்று சொன்னார்கள். இப்போது முதல்வர் அவர்களைப் பார்க்கிறபோது, மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். முதல்வராக அவர்கள் எப்படிச் சென்றாரோ அதுபோல திரும்பி முதல்வராக வந்திருக்கக்கூடிய காட்சியை நாம் பார்க்கிறோம். அந்த அளவுக்கு நாம் எல்லாம் மகிழ்ச்சி அடைகிறோம். எனக்கு முன்னாலே பேசிய திருமதி தாரா செரியன் அவர்கள் சொன்னார்கள். இதற்கெல்லாம் காரணம், நாட்டிலே இருக்கக் கூடிய பல்லாயிரக் கணக்கான, கோடிக் கணக்கான மக்கள் செய்த பிரார்த்தனை தான் என்று சொல்லி. இந்த நாட்டிலே இருக்கக் கூடிய நல்ல, மேலோங்கி இருக்கக்கூடிய மருத்துவத் துறையும் அதற்கு ஒரு காரணம் என்று சொன்னார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், நாட்டு மக்களுடைய பிரார்த்தனை காரணமாகத் தான் முதல்வர் அவர்கள் திரும்பி





வந்திருக்கிறார்கள் என்பதை நான் முழுமனதாக நம்புகிறேன். இந்திய நாட்டிலே மட்டுமல்ல, வெளிநாடுகளிலே இருந்து வந்திருக்கக் கூடிய சில நண்பர்களிடம் நான் பேசினேன். சில நண்பர்களை அமெரிக்காவில் தொலை பேசி மூலமாகத் தொடர்புகொண்டபோது கேட்டேன். அவர்கள் அங்கு இருக்கக் கூடிய மருந்துவ முறை கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு நம்மைவிட அதிகமாக முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களே கூட முதல்வர் அவர்கள் இவ்வளவு விரைவாக உடல் நலம் பெற்று திரும்பி வருவார்கள் என்று சொல்லவில்லை. இன்றையதினம் அவர்கள் நல்ல நிலைமையிலே திரும்பி வந்திருக்கிறார்கள். இன்றையதினம் அவர்கள் நல்லமுறையிலே திரும்ப வந்து மாநிலத்தை மறுபடியும் ஆளுவதற்கு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், நாட்டு மக்களுடைய ஏகோபித்த பிரார்த்தனை தான் காரணம் என்று சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். இது ஒன்றும் புதியதான கருத்தல்ல. இன்றையதினம், சைக்கிளிகல் கியூர் என்றும், பெய்த் கியூர் என்றும் நம்முடைய நாட்டிலே மட்டுமல்லாமல், வெளி நாடுகளிலேயும் அதைப்பற்றிப் பேசப்பட்டது. அதற்கான குழுக்கள் எல்லாம் கூட வைக்கப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்படி பிரார்த்தனையின் மூலமாக நல்ல நிலையில் திரும்ப வந்ததற்கு என்னுடைய சார்பிலேயும், இங்கே அமர்ந்திருக்கிற உறுப்பினர்கள் சார்பிலேயும் மனமார்ந்த மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்

இந்தச் சமயம் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். முதல்வர் அவர்கள் வெளிநாடு சென்று திரும்பி வருவதற்குள்ளாக அவருக்கு எவ்வளவு செலவாகி இருக்கிறது என்று ஒரு பிரச்சினை பரவலாக பத்திரிகைகளிலே எழுதப்பட்டது. அதுவும் குறிப்பாக எதிர்க் கட்சிகளுடைய பத்திரிகைகளிலே இதைப்பற்றி விரிவாக எழுதினார்கள். அதற்குச் செலவானது ரூபாய் 1 கோடியா, 5 கோடியா, 10 கோடியா, என்று, அவருக்கு மருத்துவச் செலவு 9 கோடி ரூபாய் ஆகியிருக்கிறதென்று ஒரு பத்திரிகையில் எழுதினார்கள். பின்னாலே அது அவர்களுடைய கற்பனைக்குத் தகுந்த மாதிரி விரிவடைந்து கொண்டே போனது. அப்புறம் எழுதினார்கள், அந்தக் கோடிக் கணக்கான ரூபாய்களை அரசாங்கம் செலவு செய்யலாமா? அந்த கட்சியோ, முதல்வர் அவர்களோ செலவு செய்துகொள்ள வேண்டுமென்று அந்தப் பத்திரிகையில் எழுதினார்கள். அதற்குக் காரணம் கேட்டபோது கூட சொன்னார்கள். அண்ணா அவர்கள் அமெரிக்க நாட்டிற்குச் சென்ற போது அவருக்கான செலவை அவர் தானே ஏற்றுக்கொண்டார். முதல்வருக்கான செலவை எப்படி தமிழக அரசு ஏற்றுக்கொள்ள முடியும் என்று எழுதி

ளார்கள். இதையெல்லாம் பார்த்து விட்டு, முதல்வர் அவர்கள் 2 நாட்களுக்கு முன்னால் "எனக்கு ஆன செலவை எல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே கொடுத்துவிடும்" என்று சொல்லி, அதற்கான செலவு எவ்வளவு என்று நேற்றைய தினம் நிதி அமைச்சர் அவர்கள் பேரவையிலே பேசியபோது, 90 லட்ச ரூபாய் என்று சொன்னார்கள். எதிர்க் கட்சியைச்

(முற்பகல் 10-35)

சார்ந்த அந்தப் பத்திரிகையில் என்ன எழுதினார்கள் என்றால், "மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஆன மருத்துவச் செலவு மொத்தம் 90 லட்சம் ரூபாய்தான் என்கிறார்கள், இந்த ரூபாய் 90 லட்சத்தையும் பொதுமக்களிடம் வசூலிக்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். எப்படி வசூலிப்பார்கள் தெரியுமா? தங்களிடமிருக்கும் கறுப்புப் பணத்தை வெள்ளையாக ஆக்கிவிட வேண்டுமென்றுதான் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள்" என்று எழுதியிருக்கிறார்கள். ஆரம்பத்தில் ஆன செலவு 9 கோடி ரூபாய், என்று சொன்னவர்கள் தற்போது 90 லட்சம் ரூபாய்தான் என்று ஆன பிறகு, அதுவும் பொதுமக்களிடமிருந்து வசூலித்துக் கொடுக்கப்படும் என்று வந்த பிறகு, "இவர்கள் ஏன் கொடுக்கிறார்கள், எப்படி கொடுப்பார்கள்" என்று காரண காரியங்களைக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இன்று காலை எதிர்க் கட்சியைச் சார்ந்த நண்பர் ஒருவர்—அவர் இந்த அவையிலேயேகூட உறுப்பினராக இருந்தவர்—அவர் நடத்துகிற பத்திரிகையில் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார். அதாவது இந்தப் பணத்தைப் பெரிய பணக்காரர்களிடமிருந்தும், வியாபாரிகளிடமிருந்தும் சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகள் மூலமாகவும் வசூலிப்பார்கள், அல்லது தங்களிடமிருக்கும் கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்ற நாடகம் நடத்துகிறார்கள் என்று எழுதியிருக்கிறார். ஒன்று அரசாங்கமே இந்தப் பணத்தைக் கொடுக்கட்டும் என்று விட்டுவிட வேண்டும், அல்லது அரசாங்கம் கொடுக்க வேண்டாம், கட்சிதான் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அப்படியே கட்சி கொடுப்பதற்கு முன்வரும்போது அதைப் பாராட்ட வேண்டும். அதை விட்டுவிட்டு, கட்சி கொடுக்க முன்வரும்போது, இவர்கள் கறுப்புப் பணத்தைக் கொடுக்கப் போகிறார்கள் என்று குற்றம் சாட்டுவது என்றால், ஏதோ குற்றஞ்சாட்ட வேண்டுமென்றே எதை எதையோ சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, உண்மையான வாதத்தை எடுத்து வைப்பதாக என்னாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அடுத்து, நேற்றைய தினம் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஆளுநர் உரையில் அதிகமான பக்கங்கள் வீணாக்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அதாவது பல



பக்கங்களில் மறைந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களைப் பற்றியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடல் நலத்தோடு இங்கே திரும்பி வந்ததைப்பற்றியும், மாநிலத்தில் தேர்தல்கள் நடந்தது பற்றியும், மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததைப்பற்றியும் அதிகமாக எழுதி பக்கங்களையெல்லாம் வீணாக்கியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் கூட சரியாகப் படிக்கவில்லையோ என்று கருதி, இன்றைக்கு மீண்டும் படித்துப் பார்த்தேன். 3 பாராக்களில் இரண்டு பக்கங்கள் இதற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பாராவில் மறைந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மறைவு குறித்தும், அடுத்த பாராக்களில் மாநிலத்தில் நடந்து முடிந்த தேர்தல் பற்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமெரிக்கா சென்று நல்ல முறையில் திரும்பியதுபற்றியும் பிறகு நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல்கள் பற்றியும் எழுதியிருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, ஏதோ எல்லாப் பக்கங்களிலும் இதையே எழுதி இருப்பதைப் போல் இங்கே பேசியிருப்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அடுத்து, நம் மாநிலத் தேர்தலைப் பொறுத்த வரையில், சில நண்பர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். எங்கே பேசினார்கள் என்று நான் குறிப்பிட விரும்பவில்லை. குறிப்பிடக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள், தேர்தலில் தங்கள் கட்சி வாங்கிய ஓட்டுக்களைக் குறிப்பிட்டு, "விகிதாசார அடிப்படையில் பார்த்தால் மோதிரம்தான் இல்லையே தவிர விரல் இருக்கிறது" என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிடும் மோதிரம் என்ன, விரல் என்ன என்று பார்க்கிறபோது, "விகிதாசார அடிப்படையில் பார்க்கும் போது, தங்கள் கட்சிக்கு அதிகமான ஓட்டுகள் கிடைத்திருக்கும் சட்டமன்றத்தில் இடங்களை வைத்துப் பார்க்கிற போது குறைவாக இருக்கிறது. எனவே உறுப்பினர் எண்ணிக்கையை வைத்து கணக்கிடக் கூடாது. சட்டமன்றத்தில் எண்ணிக்கை குறைவாக இருந்தாலுங்கூட வெளியே லட்சக் கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் எங்களை ஆதரிக்கிறார்கள் என்பதை மறந்து விடக் கூடாது" என்று சொல்லி அதற்குத்தான் மோதிரம்—விரல் என்ற உதாரணத்தைக் குறிப்பிட்டார்கள். அதைக் குறித்து நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தற்சமயம் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். 1971 ஆம் ஆண்டில் அவர் இங்கே முதலமைச்சராக இருந்தார்கள். 1971 ஆம் ஆண்டு மூதறிஞர் இராஜாஜி அவர்களும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களும் திராவிட முன்னேற்றக் [illegible] தேர்தலிலே எதிர்த்தார்கள். [illegible] பெரிய [illegible] அந்தக் கட்சிக்கு லட்சக் கணக்கான மக்கள் வந்திருந்

தார்கள். அப்போது மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தக் கூட்டத்திற்கு எவ்வளவு பேர் வந்தார்கள் என்று கேட்டபோது, லட்சக் கணக்கான மக்கள் வந்திருந்தார்கள் என்று நான்கூட குறிப்பிட்டேன் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள்கூட சொன்னார்கள். அந்தத் தேர்தலில் பெரும்பான்மையான இடத்தை திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றது. அப்போதே நான் மேலவையில் சொன்னேன். அந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகமும் அதனுடைய அணியும் 86 லட்சம் வாக்குகளைப் பெற்றன. காங்கிரஸ் கட்சியும் சுதந்திராக் கட்சியும் சேர்ந்து 60 லட்சம் ஓட்டுகளைப் பெற்றிருந்தன. ஆக மொத்தம் வித்தியாசம் 26 லட்சம் வாக்குகள்தான். ஆனால் இந்த லட்சம் இடைவெளியில் திராவிட முன்னேற்றக் கழக அணிக்கு 209 இடமும் மீதமுள்ள 21 இடங்கள் சுதந்திராக் கட்சிக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் கிடைத்தது. விகிதாச்சார அடிப்படையில் பார்த்தால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 125 இடங்களும் எங்களுக்கு மற்றவையும் கிடைத்திருக்க வேண்டும். விகிதாச்சார அடிப்படையை நான்

(முற்பகல் 10-40)

சொல்லுவதற்குக் காரணம் 1967-ல் திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலேகூட விகிதாச்சார முறை இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அண்ணா அவர்கள் காலத்திலேகூட, சொல்லப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தேன். அப்போது டாக்டர் கலைஞர் அவர்கள், "1967 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே இருந்தது, இப்போது வேண்டாம் என்றுதான் 1971 தேர்தல் அறிக்கையில் போடவில்லை. விகிதாச்சாரத்தைப்பற்றிப் பேசுவது சிறந்தது அல்ல. இருக்கின்ற நிதர்சனமான உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்." என்ற கருத்தைச் சொல்லி "அதைப்பற்றிப் பேசுவதால் எந்தவிதப் பயனும் இல்லை" என்று சொல்லிவிட்டு "தேர்தலில் தோற்றுவிட்டோம் என்ற உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டும்" என்று சொன்னார்கள். அதற்கு உதாரணமாகக் கூட ஒன்றைக் காட்டினார்கள். "அந்தத் தேர்தலில் இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் நாங்களும் சேர்ந்து மை எல்லாம் போட்டு நாட்டு மக்களுடைய ஓட்டுக்களை மாற்றிவிட்டோம் என்றெல்லாம் பரவலாகப் பேசுகிறார்கள். எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் தோற்றுவிட்ட பிறகு எதற்காக மக்கள் ஆளும் கட்சிக்கு ஓட்டு போட்டார்கள் என்ற ஆராய்ச்சியில் இறங்குவது நல்லதல்ல" என்று சொல்லிவிட்டு, திரு. மசானி அவர்கள் சொன்னதை எடுத்துக்காட்டினார்கள். நான் அப்போது சுதந்திராக் கட்சியில் இருந்தேன். சுதந்திராக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த திரு. மசானி அவர்கள், "இந்தத் தேர்தலை நான் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்கிறேன். ஜனநாயக அடிப்படையில் மக்கள் பெரும்பாலோர்



இந்திரா காந்திக்கு ஓட்டுப் போட்டார்கள் என்பதை ஒத்துக்கொள்கிறேன். அதன அடிப்படையில் சுதந்திராக் கட்சி தோற்றுவிட்டது என்பதையும் ஒத்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில்தான் ராஜினாமா செய்கிறேன்" என்று சொன்னார்கள் என்பதை எடுத்துச் சொல்லி திரு. மசானி, யதார்த்த உண்மைகளைப் புரிந்து கொண்டு பேசுகிறவர், அந்த யதார்த்த உண்மைகளை ஒத்துக்கொள்ள வேண்டும் என்று அப்போது சொன்னார். மேலும் "மக்களுடைய தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்தத் தீர்ப்பை யார் ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்கள்தான் நிதர்சன அரசியல் வாதியாக இருக்க முடியும்" என்ற கருத்தை டாக்டர் கலைஞர் அவர்கள் இதே அவையில் அவர் முதலமைச்சராக இருக்கும்போது எடுத்துச் சொன்னதை இங்கே நினைவு படுத்த விரும்புகிறேன். இதே நிலைதான் இன்றைய தினம் உள்ளது. நேற்றைய தினம் இங்கே இதே பிரச்சினையை எழுப்பினார்கள். மக்கள் அனுதாபத்திற்காக ஓட்டுப் போட்டார்களா இல்லையா என்றெல்லாம் பேசப் பட்டது. எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் தோற்றுவிட்டோம் என்ற உண்மையை உணர்வதற்கு அல்லது சொல்லுவதற்கு முன்வரவில்லை. ஜனநாயக ரீதியில் மக்கள் எங்களுக்கு ஓட்டுப் போடவில்லை என்பதை நேரடியாகச் சந்திக்க அவர்களுக்கு மனது இல்லை என்ற கருத்தை இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, துணைத் தலைவர் அவர்கள் கூறிய கருத்தில் எனக்கு எந்த மாறுபாடுமில்லை. ஆனால் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அண்மையில் நடைபெற்ற ஒரு கூட்டத்திலே கூட எனக்கு முன்பு பேசியவர் 'வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டோம்' என்று சொன்னார். அப்போது 'வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டோம்' என்று கௌரவமாகச் சொல்ல வேண்டியதில்லை, 'தோற்றுவிட்டோம்' என்று தான் சொல்ல வேண்டும் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அறிஞர் அண்ணா காலத்திலேயிருந்து விகிதாச்சார பிரதிநிதித்துவத்தை தேர்தல் முறையில் புகுத்த வேண்டும் என்ற கொள்கை இருந்தது. இப்போதுள்ள நிலையில் விகிதாச்சார பிரதிநிதித்துவம் இல்லை. இப்போது அதிக இடங்களைப் பெறுகிறவர்கள் ஆளும் கட்சியிலும், குறைவான இடங்களைப் பெறுகிறவர்கள் எதிர்க்கட்சியிலும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய வாக்கு எண்ணிக்கையை மறந்துவிடக் கூடாது என்று சொன்னோம். அதை அன்றைக்கும் சொன்னோம், இன்றைக்கும் சொல்லுகிறோம். நாங்கள் தோற்றுவிட்டோம் என்பதை நிச்சயமாக பல இடங்களில் நான் பேசியிருக்கிறேன். நாவலர் அவர்கள்கூட 'வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டோம்' என்று சொல்லுவார்கள். அப்போது அண்ணா அவர்கள் 'வெற்றி

வாய்ப்பை இழந்துவிட்டோம்' என்று ஏன் கௌரவமாகச் சொல்லுகிறீர்கள் 'தோற்றுவிட்டோம்' என்று சொல்லுங்கள் என்பார்கள். அதைத்தான் நானும் பத்து நாட்களுக்கு முன்பு நடந்த கூட்டத்திலேகூட சொல்லியிருக்கிறேன். 'தோற்றுவிட்டோம்' என்று சொல்லிக்கொள்வதில் அவமானம் இருப்பதாகத் தெரியவில்லை. ஜனநாயகத்தில் வெற்றி, தோல்வி என்பது சகஜம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அவர் அப்படிச் சொல்லியதில் எனக்குப் பெருத்த மகிழ்ச்சி. அவர் சொன்னார் என்று நான் சொல்லவில்லை. அவர் கட்சியைச் சார்ந்தவர்கள் அப்படிச் சொல்லவில்லை. அவரைச் சார்ந்தவர்கள் வேறுவிதமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள், "தோற்றுவிட்டதை நாங்கள் ஒப்புக் கொண்டுதான் பேசுகிறோம் ; அதை மறைக்க விரும்பவில்லை" என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் 1971 ஆம் ஆண்டில் மிகப் பெரும்பாலான இடங்களைப் பெற்று வந்தபோது, அவர் வைத்த வாதத்தைத் தான் துணைத் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்று காலையிலே வந்த பத்திரிகையிலேகூட வாக்குகள் எண்ணிக்கையை எடுத்துக்காட்டி, "ஆள்கிற கட்சி இவ்வளவு பெற்றிருக்கிறது, நாங்கள் இவ்வளவு பெற்றிருக்கிறோம்" என்ற வாதத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அவையிலேயும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் அதைக் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதாலேதான் துணைத் தலைவர் அவர்கள், முன்னாலே முதலமைச்சராக இருந்து 1971ஆம் ஆண்டு 184 இடங்களைப் பெற்றதற்காக அவர் காட்டிய காரணங்களை இங்கே எடுத்து விளக்குகிறார்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் ஒரு விளக்கத்தைத் தந்தார்கள். நான் அது குறித்து சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்று நான் 'முரசொலி'யில் எழுதிய கடிதத்தில் 'இடங்கள்—இதயங்கள்' என்று பேசும் போது தோற்றுவிட்டோம் என்றாலும், வெற்றி பெறவில்லை என்றாலும்கூட அதற்காக நமது கடமைகளை மறந்துவிடக் கூடாது. நம்முடைய அணிக்கு 86 இலட்சம் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். அவர்களைப் புறக்கணிக்க முடியாது. அவர்கள் நம் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களைப் புறக்கணிக்கக் கூடாது" என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன். தோற்கவில்லை என்று குறிப்பிடவில்லை. எப்போதும் ஆளும் கட்சி, அதிக





(முற்பகல் 10.45)

இடங்களைப் பெற்றுள்ள கட்சி, அந்த வாதத்தை இன்றைக்கு மட்டுமல்ல என்றைக்குமே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆளுங்கட்சியாக வருகின்ற நேரத்தில் விகிதாச்சார பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில் அதே வாதத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சியாக இருப்பவர்கள் இதே வாதத்தைத் தான் நடத்திக்கொண்டிருப்பார்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே சொன்னார்கள். இங்கே எதிர்க் கட்சியாக இருந்த போது அவர்கள் அவர்களுக்குக் கிடைத்த வாக்குகளைச் சொன்னார்கள். இப்போது நீங்கள் இடங்களைச் சொல்கின்றீர்கள். நாங்கள் வாக்குகளைச் சொல்கின்றோம். அவ்வளவுதான்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுங் கட்சியிலே இருப்பவர்கள் இப்போது இடங்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கவில்லை. ஆளுங் கட்சியாக வந்து பொறுப்பை நிறைவேற்றிக்கொண்டிருக்கின்ற நேரத்தில், எதிர்க் கட்சியாக அமர்ந்து கொண்டிருப்பவர்கள் தான் இந்த வாதத்தைச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே இந்தப் பிரச்சினை விவாதமாக எழுப்பப்பட்டிருக்கிறது. டாக்டர் கலைஞர் அவர்கள் 'நாங்கள் தோற்றுவிட்டோம், அதிலே ஒளிவு மறைவு இல்லை' என்று ஒப்புக்கொள்வதற்கு நன்றி.

திரு. ஜி. சுவாமிநாதன் : அது சரியான வாதம் ஆகாது. அன்று அவர்கள் சொல்லிக்கொண்டிருந்த காரணத்தை இப்போது நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம் இந்த 14 ஆண்டு கால இடைவெளியிலே அவர் சொல்லிக்கொண்டிருந்ததைத்தான் நான் ஞாபகப்படுத்தினேன். அதைப்பற்றி அபிப்பிராய பேதம் இருந்தும்கூட, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெளியிலேயும் உள்ளேயும் வேறு காரணத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருப்பதை நான் ஞாபகப்படுத்தி அது சரியான காரணமாக இருக்காது என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்னொன்றை இங்கே எடுத்துச் சொன்னார்கள். நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. மத்திய மாநில உறவுகளைப் பொறுத்த வரையில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சரியான முறையிலே நடக்கவில்லை என்ற கருத்தையும் சொன்னார்கள். "மாநிலங்களுக்குள்ள அதிகாரங்களைப் பற்றி உங்களுடைய கட்சி சரியான முறையிலே வற்புறுத்தவில்லை" என்பதையும் மறுபடியும் எடுத்துச்சொன்னார்கள். அதற்கு என்ன காரணத்தைச் சொல்கின்றார்கள் என்றால், "மத்தியிலே இருக்கக்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1985 மார்ச் 15

கூடிய திரு. ராஜீவ் காந்தி, இன்றைய பிரதமராக இருக்கக்கூடியவர்கள் அவர்களுடைய கட்சி மாநிலத்திலேயும் ஆட்சிக்கு வரவேண்டுமென்று சொன்னார்கள், மத்தியிலேயும் மாநிலத்திலேயும் ஒரே கட்சி ஆட்சியில் இருந்தால் நல்ல முறையிலே ஆட்சி நடக்கும் என்று சொன்னார்கள் என்று சொல்கின்றார்கள். அப்படிச் சொல்ல நீங்கள் விட்டுவிடலாமா? ஆகவே நீங்கள் மத்திய மாநில உறவுக்கு மாநிலங்களின் அந்தஸ்துக்கு வலிவு கொடுப்பதாக இல்லை" என்று சொல்கின்றார்கள். மத்தியிலே கட்சி வைத்திருப்பவர்கள், அகில இந்திய அளவிலே கட்சியை வைத்திருப்பவர்கள் அவர்களுடைய கட்சி மத்தியிலேயும் இருக்க வேண்டும், மாநிலத்திலேயும் இருக்க வேண்டும் என்று முயற்சி செய்வது இயற்கை. காங்கிரஸ் கட்சி பல மாநிலங்களிலே இருக்கின்றது. ஆந்திராவிலே காங்கிரஸ் இருக்கின்றது. தமிழகத்திலே காங்கிரஸ் கட்சி இருக்கின்றது. அகில இந்திய கட்சியாக இருப்பதால், அந்தக் கட்சியினுடைய கிளைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. "ஒரு மாநிலத்தில் தன்னுடைய கட்சி அதிகாரத்திற்கு வரவேண்டும் என்று சொல்லிவிட்ட காரணத்தினாலேயே அதை ஏன் எதிர்க்கவில்லை? அப்படி எதிர்க்காத காரணத்தினாலேயே நீங்கள் மாநிலத்திற்காக அதிக அதிகாரம் வேண்டும் என்ற உணர்ச்சியை விட்டுவிட்டீர்களா?" என்று சொல்வது ஒரு சரியான வாதமாகாது என்பதைத் தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மத்திய மாநில உறவுகள் தேர்தல் அறிக்கையால் மட்டும் தீரும் பிரச்சினையல்ல. அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் சொன்ன கொள்கையல்ல. அது ராஜமன்னார் கமிஷன் வந்தபோது, வைக்கப்பட்டது என்பதல்ல. இன்றையதினம் எட்டு நிதி குழுக்களது கிட்டத்தட்ட 40 ஆண்டு காலமாக, இந்த நிதிக்குழுக்களுடைய பரிந்துரையை எடுத்துப் பார்த்தால், ஒவ்வொரு நிதிக் குழுவிலும் மாநிலங்களுக்கு அதிக நிதி அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கின்றது. மாநிலங்களுக்கு அதிகாரங்கள் அதிகமாக வேண்டும் என்று பல்வேறு கட்சித் தலைவர்களாலேயே அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரையில் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. ஆகவே அந்தக் கொள்கை ஏதோ ஒரு கட்சிக்கு சொந்தமானது அல்ல. ஏதோ ஒரு கட்சிக்கு உடன்பாடானது என்பது மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் உடன்பாடானதுதான் அவர்களுக்குத்தான் உடன்பாடு, மற்றவர்களுக்கு உடன்பாடானது அல்ல என்று சொல்வது சரியான வாதமாகாது. எல்லோருடைய கோரிக்கையுமே மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதுதான். மாநிலங்களுக்கு அதிகப் பொருளாதாரம் வேண்டும் என்ற கோரிக்கை எல்லா மாநிலங்களிலும் இருக்கின்றது. மத்தியத்தில் உள்ள கட்சி மாநிலத்தில் ஆளுங்கட்சியாக இருந்தா



1985 மார்ச் 15] [திரு. ஜி. சுவாமிநாதன்]

லும், மாநிலங்களுக்கு அதிகாரம் வேண்டும் என்று பல சந்தர்ப்பங்களிலே பேசப்பட்டிருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். அதை முன்னாள் முதலமைச்சர் அவர்களும் அறிவார்கள். நம் மாநிலத்தில் அந்தக் கொள்கை உறுதி விட்டுக் கொடுக்கப்படுகிறது என்று கருதத் தேவையில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

சர்க்காரியா கமிஷன் போட்டிருக்கிறார்கள். நான் முன்பு போட்டிருந்த சர்க்காரியா கமிஷன் பற்றிச் சொல்லவில்லை. இப்போது ஒரு சர்க்காரியா கமிஷன் போட்டிருக்கின்றார்கள். இந்த சமயத்திலே போட்டிருக்கின்ற சர்க்காரியா கமிஷன் மத்திய மாநில உறவுகளைப்பற்றி ஆராய்வதற்காக போடப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி ஆராய்ந்து முடிவு எடுப்பதாக மத்திய அரசால் சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த சர்க்காரியா கமிஷன் வேலை தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றது. நம்முடைய மாநிலத்திற்கும் வருவார்கள். மற்ற மாநிலத்திற்கும் போவார்கள். அந்த சர்க்காரியா கமிஷன் மத்திய மாநில உறவுகளைப்பற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்ற ஒரு பரவலான அடிப்படையிலே அமைக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-50)

அதனுடைய முடிவுகள் சீக்கிரமாக வந்து, அதன் அடிப்படையில் நம்முடைய கருத்துக்களைச் சொல்லும்போது, விளக்கமாகவும், விரிவாகவும் மாநில அரசு சொல்லலாம். அப்போது அதனுடைய முடிவு ஏற்பளிப்பதாக இருக்கும்.

இன்னொன்று, எட்டாம் நிதிக் குழு பரிந்துரைகள் பற்றி கருத்துக்கள் சொன்னார்கள். நேற்றுகூட பேசிய உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள் மாண்புமிகு அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் வேறு ஒரு பிரச்சினைக்குப் போனார்கள். ஆதாரங்களை எப்படிப் பிரிப்பது என்று வரும்போது, இன்றைக்கு மத்திய அரசின் வருமானத்தில் மாநிலங்களுக்கு ஒரு விகிதாச்சாரப்படி 23 சதவிகிதத்தைக் கொடுக்கிறது. பாக்கி உள்ளதை மத்திய அரசு எடுத்துக் கொண்டும், திட்டக் குழு மூலமாகவும் மாநிலங்களுக்குக் கொடுக்கிறது. வரவேண்டிய அளவு அதிகமாக இருக்க வேண்டுமென்று எல்லா மாநில அரசுகளும் சொல்லுகின்றன. தமிழ்நாடு அரசு 2 ஆண்டுகளுக்கு முன்னாலே நிதிக் குழுவுக்குக் கொடுத்த அறிக்கையில் மத்திய அரசு கொடுக்கும் விகிதாச்சாரத்தை அதிகமாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அவர்கள் காட்கில் பார்முலா என்று வைத்திருக்கிறார்கள். இதை 20 ஆண்டுக்காலமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதனால் மாநிலத்திற்கு மாநிலம், மத்தியத்திற்கும் மாநிலத்திற்கும் வருமானத்தை ஒதுக்குவதில்

வேறுபாடு ஏற்படுகிறது. பார்முலாவை யார் ஆர்பிட்ரேட் பண்ணுவது? மாநிலங்களுக்கு அந்த வசதியில்லை. நமக்குப் பேச வாய்ப்பு இல்லை. அதிலே என்ன போட்டிருக்கிறார்கள் என்றால் 25 சதவிகிதம் மக்களுடைய தொகை அடிப்படையில் கொடுப்பது; 25 சதவிகிதத்தை அதிகரிக்க தனி நபர் வருமானத்தை மக்கட்தொகையால் பெருக்கி கொடுப்பது; மீதமுள்ள 50 சதவிகிதத்தை அதிக தனி நபர் வருமானம், பெறும் மாநிலத்திற்கும் மாநிலத்தில் தனி நபர் வருமானத்திற்கும் இடைவெளியை மாநில மக்கட் தொகையால் பெருக்கி அளிப்பது என்று மூன்றையும் மக்கள் தொகை அடிப்படையில் வைத்திருக்கிறார்கள். இங்கே நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் சொன்னதுபோல, நம்முடைய மக்கள் தொகை குறைந்து கொண்டே வருகிறது. 1971 தேர்தலின்போது நமக்கு நாடாளுமன்ற இடங்கள் குறைந்துவிட்டன. 41-லிருந்து 39 ஆகக் குறைந்துவிட்டது. 1971 மக்கள் தொகைக் கணக்கை நாடாளுமன்றத் தேர்தலுக்கு அடிப்படையாகக் கொண்டதுபோல் நிதிக்குழுவிற்கும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறோம். இன்றைக்கு நமக்குக் குறைந்த மக்கள் தொகை. ஆனால் உத்திரப் பிரதேசத்திற்கு மக்கள் தொகை அதிகமாகியிருக்கிறது; பீகாருக்கு அதிகமாகியிருக்கிறது. நாம் குடும்ப நலத்திட்டத்தில் முனைப்பாக இருப்பதால், நமக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இதை நம்முடைய மாநில அரசு எடுத்துச் சொல்லியிருக்கிறது. இது வலுவான கருத்து. இதை மத்திய அரசு ஏற்குமென்று நினைக்கிறோம். நிதிக் குழு 5 ஆண்டுகளுக்கு என்று ஆர்பிட்ரேஷன் கொடுத்தார்கள். ஆனால் அதை அவர்கள் மார்ச் மாதத்தில் கொடுத்தார்கள். அப்போது மத்தியிலேயும் பட்ஜெட் முடிந்துவிட்டது. மாநிலங்களிலும் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. எனவே முடிவுப்படி 4 ஆண்டுகளுக்குத்தான் கொடுப்போமென்று சொன்னார்கள். இதனால் மாநிலங்களுக்கு 2,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. வங்காளத்திற்கு 200 கோடி ரூபாய் இழப்பு இதனால் ஏற்பட்டிருக்கிறது. அங்குள்ள நிதி அமைச்சரும் பேசினார். 45 சதவிகிதத்தை எக்சைஸ் வருமானம் பிரிப்பதற்கான விகிதம் என்று கொடுக்கிறார்கள். அதில் 5 சதவிகிதத்தை டெஃபிசிட் மாநிலங்களுக்குக் கொடுக்கிறார்கள். இந்த நேரத்தில் ஒரு கருத்தைச் சொல்வேன். ஐந்தாண்டுத் திட்டம் 3, 4 ஆண்டுகளுக்குப் பின்னால் வருகிறது என்றால், நம்முடைய நிதி ஆதாரங்களை திரவிக்கொள்ளாமல், பற்றாக்குறையாகவே வைத்துக்கொள்வது நல்லது. இதைச் சொல்ல நான் வருத்தப்படுகிறேன். ஒரு மாநிலத்தில் பற்றாக்குறையாக 150 கோடி, 200 கோடி என்று இருந்தால், நிதிக் குழு 5 சதவிகிதம் எக்சைஸ் வருமானத்திலிருந்து கொடுக்கிறது. எந்த மாநிலம் பொருளாதாரத்தைச் சரியான முறையில் வைத்துக்கொள்ளவில்லையோ அவர்களுக்குக் கொடுக்கிறார்கள்.





நம்முடைய மாநிலம் சிறந்த முறையிலே வருவாய்க்கும் செலவுக்கும் ஈடு கட்டுவதால், நம்முடைய மாநிலத்திற்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறதென்று சொல்லவேண்டும். இப்படி பல கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். இதையெல்லாம் மத்திய அரசு ஏற்க வேண்டுமென்று சொல்லிக்கொள்வேன்.

இன்னும் ஒன்றிரண்டு கருத்துக்களை 5 நிமிடங்களில் சொல்லி, முடித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் தனி நபர் வருமானம் குறைந்து விட்டது; மற்ற மாநிலங்களில், பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களில் அதிகமாகியிருக்கிறது என்று ஒருவர் அங்கே பேசியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி ஆட்சிக்குப் பிறகு, தொழில் துறையிலே எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்று சொல்லப்படுகிறது. திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சிறந்த முறையில் தொழில் துறையை வளர்த்தார்கள். பின்னாலே வந்த அரசுகள்

(முற்பகல் 10-55)

எல்லாம் அவ்வளவு கவனம் செலுத்தவில்லை, குறிப்பாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பிறகு தொழில் துறை வளர்ச்சி அடையவில்லை என்று பேசப்பட்டது. ஆனால் ஒன்றை நான் சொல்கிறேன். தனி நபர் வருமானம் என்று நாம் பேசும்போது, தனிப்பட்ட ஒரு மாநிலம் என்று மட்டும் நாம் பார்க்க முடியாது. காரணம் மத்திய அரசின் இப்பொழுது இருக்கக்கூடிய நிலையில் பிளானிங் கமிஷன் சொல்லுவதின் அடிப்படையில் ஏதோ சிறிது மாற்றம் செய்து மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையாக வெளியிடுகிறார்கள். அந்த வகையில் பார்ப்போமேயானால், தனி நபர் வருமானம் பற்றி மத்திய அரசுக்குத்தான் பெரும் பங்கு இருக்கிறது. இந்தியப் பிரதமர் மாண்புமிகு திரு. ராஜீவ் காந்தி அவர்களும் அதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் எவ்வளவு அதிகமான தொழில்களை ஆரம்பித்து அதன் மூலம் எவ்வளவு உபரியாகப் பணம் வந்து நாட்டு மக்களுக்கும் பயன்படுகிறதோ அந்த அடிப்படையில் தான் பெர் கேப்பிட்டா இன்கமும் வளர முடியும். அக்ரிகல்சரல் எக்கானமியை மாற்றி அங்குள்ளவர்கள் இன்டஸ்ட்ரீசுக்கு வரச்செய்தால், அதன் மூலம் தனி நபர் வருமானம் உயரும் என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், இன்றைக்குள்ள நிலையில் அது ஏற்புடையதல்ல. காரணம் அரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் இன்றைக்கு அதிகமான பேர் அக்ரிகல்சரலிருந்து இன்டஸ்ட்ரீசுக்கு வந்திருக்கிறார்கள். அப்படி வந்தும் கூட, அந்த விவசாயத் தொழிலாளர்களுடைய சதவிகிதம் குறைவடையவில்லை. நாட்டிலே பொருளாதாரம் வளர்ச்சியடையவில்லையென்றால் என்ன காரணம் சொல்கிறார்கள் என்று பார்த்தால், 'ஸ்டாக்னேசன் ஆஃப் இன்டஸ்ட்ரீஸ்' என்ற முறையில் பார்த்தால், 1955-லிருந்து 1965 வரையிலும்

தொழில் வளர்ச்சியடைந்திருந்தது என்றும் 1965 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இந்திய நாட்டில் தொழில் வளர்ச்சியில் தளர்வு ஏற்பட்டுள்ளதாகவும் சொல்கிறார்கள். இந்நிலைமை தமிழ் நாட்டிலே மாத்திரம் இல்லை. இத்தகைய நிலை இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் இருக்கிறது. இன்டஸ்ட்ரீஸ் டெவலப்மென்ட் ரெகுலேஷன் ஆக்ட்ன்படி எந்த இன்டஸ்ட்ரீசை எந்தெந்த மாநிலங்களில் வைப்பது என்பதற்கான முடிவை எடுக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கிறது. அந்த அதிகாரத்தை மாநிலத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று இங்கே மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி ஒரு அதிகாரத்தை மாநில அரசுக்கு மத்திய அரசு கொடுத்தால்தான், நாம் இன்னும் அதிகப்படியாகக் காரியம் செய்ய முடியும். மாண்புமிகு திரு. இராஜாராம் அவர்களை தொழில் அமைச்சராக அறிவித்திருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில், டெல்லியில் அவர்களுக்குத் தெரிந்தவர்கள், பழக்கமுள்ளவர்கள் நிறைய பேர் இருப்பதுபோல் இங்கேயும் இருக்கிறார்கள். அவர்கள் நல்லமுறையில் நடைமுறைப்படுத்தக்கூடிய பல திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அதை நிச்சயம் செய்வார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தை நான் முழுமனதோடு வரவேற்கிறேன். என்னுடைய பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆரம்பக்காலத்திலிருந்தே இத்திட்டத்தை நான் தொடர்ந்து ஆதரித்து வருகிறேன். இன்றைய குழந்தைகளுக்கு சத்துணவு அளித்து வருங்காலத்தில் வளமான இந்தியாவையும், வலுவான இளைஞர்களையும் உருவாக்க இத்திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதோடு சீருடை அளித்தல் இன்னும் இலவசமாக பள்ளிக் குழந்தைகளுக்குப் புத்தகம் வழங்குதல் போன்ற நல்ல திட்டங்களையும் கொண்டு வந்திருக்கிறார்கள். இவையெல்லாம் எதிர்கால சந்ததியினருக்கு ஒளி விளக்கான திட்டங்கள் என்று சொல்லி, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது ஆசிரியர் பட்டதாரி முற்போக்கு முன்னணியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். பொதுத் தேர்தலுக்குப் பிறகு பெருவாரியான மக்களுடைய ஆதரவைப் பெற்று மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வந்துள்ள ஆளும் கட்சிக்கு என்னுடைய பாராட்டுதலையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்





கிறேன். அதேபோல உடல் நலம் நல்ல முறையில் தேறி பூரண உடல் நலம் பெற்று மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று தமிழக மக்களுக்கு வழிகாட்டுகின்ற முறையில் ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள மாண்புமிகு முதலமைச்சருக்கும் என்னுடைய பாராட்டுதலையும் நல்வாழ்த்துதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில், தேர்தலுக்குப் பிறகு, தெளிவான, உறுதியான முடிவு தெரிந்ததற்குப் பிறகு ஆளும் பொறுப்பில் பொறுப்பேற்றிருக்கின்ற ஆளும் கட்சியினருக்கும் அதேநேரத்தில் எதிர்க் கட்சியினருக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்க கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தல் முடிந்து விட்டது, தீர்ப்பு தெளிவாகக் கிடைத்திருக்கிறது. ஆட்சிப் பொறுப்பை மறுபடியும் ஆளும் கட்சியிடம் மக்கள் ஒப்படைத்திருக்கிறார்கள். ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்

(முற்பகல் 11-00)

கொண்டிருப்பவர்கள் இனிமேல் செய்யவேண்டிய கடமையைச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட கடமைகள் ஏராளமாக இருக்கின்றன. அவர்கள் அதைச் செய்வதில் தங்களுடைய கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் எதிர்க் கட்சியில் இருப்பவர்களும், தமிழ் நாட்டு மக்களின் ஒட்டுமொத்த நலனை மனதில் கொண்டு, ஆக்கபூர்வமான விமரிசனங்களைச் செய்வதோடு, அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பையும் கொடுத்து, தமிழக மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடவேண்டுமென்பது தான் எனது கோரிக்கை. அந்த வகையில், பலரும் ஒத்துழைத்து, தமிழக முன்னேற்றத்திற்காகவும், நல்வாழ்விற்காகவும் பாடுபட வேண்டும் என்று அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன். அதே சமயத்தில், ஆளும் கட்சியுடன் உடன்பாடு செய்துகொண்டு, தேர்தலில் பெருவாரியான இடங்களைப் பெற்ற காங்கிரஸ் கட்சிக்கும் ஒரு அன்பான வேண்டுகோளை விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த அளவுக்கு இந்த மாநிலத்தின் உரிமைகளைக் காப்பாற்றுவதிலும், சலுகைகளைப் பெறுவதிலும் மத்திய அரசுடன் நீங்கள் வாதாடிப் பெற்றுத் தர ஆர்வம் காட்டுகிறீர்களோ, எந்த அளவுக்கு பாடுபடுகிறீர்களோ, எந்த அளவுக்கு தமிழகத்திற்குத் தேவையான பல திட்டங்களைப் பெற்றுத் தருவதில் முயற்சிகளைச் செய்கிறீர்களோ அந்த அளவுக்கு தமிழக மக்களின் பாராட்டுக்களையும் காங்கிரஸ் கட்சி பெறும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இந்த நாட்டின் முதலமைச்சராக இருந்த நேரத்தில், மத்திய அரசில் காங்கிரஸ் கட்சியே ஆட்சியில் இருந்த போதிலும், மாநில மக்களின் நன்மைக்காக, உரிமைகளுக்காக அங்கே சென்று போராடி பல்வேறு திட்டங்களுக்கு முன்னுரிமை பெற்றுத்தர பாடுபட்டார்கள். இதற்காக கட்சி உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு பாராட்டப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் காட்டிய வழியில் நீங்களும், தமிழகத்தின் உரிமைக்காகப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பதைப் போல, நமக்கு நிதியுதவிகள் மத்திய அரசிலிருந்து கிடைப்பதற்கு எவையெவை முட்டுக்கட்டைகளாக இருக்கின்றனவோ, அவைகளை அகற்ற இங்குள்ள காங்கிரஸ் கட்சியினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் பல்வேறு முக்கியமான அறிவிப்புக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதைக் கண்டு, நான் உள்ளபடியே மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், குடும்ப நலநிதியாக ரூ. 10,000 என்று இருந்ததை, ரூ. 20,000 என்று உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது குறித்து, மிக்க மகிழ்ச்சியடைகிறோம், நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதைப் போலவே, ஒன்றாவது முதல் 8 வது வயது வரையில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவசப் புத்தகங்கள். இலவச சீருடை அளிக்கப்படும் என்று சொல்லப்பட்ட புரட்சிகரமான அறிவிப்புக்கு நாங்கள் உளமார்ந்த வரவேற்பு அளிப்பதோடு, நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம். அதுமட்டுமல்லாமல், படிப்படியாக மேலும் அதை உயர்த்திக் கொடுத்து, 15 வயது வரையுள்ள குழந்தைகளுக்கும் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, கல்வி வசதிகள் இவற்றை அரசே ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு திட்டங்களைப் படிப்படியாகத் தயாரித்துச் செயல்படுத்த வேண்டுமென்றும் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அப்படி குழந்தைகளின் நலனுக்கான பொறுப்பை முழு அளவுக்கு நாம் ஏற்றோமானால் உண்மையிலேயே சோஷலிச சமுதாயத்தை அமைக்க வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆக அதற்குத் தக்கவாறு திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

வறுமை ஒழிப்புபற்றி இப்போது பேசப்படுகிறது. வறுமை ஒழிப்புக்கான திட்டங்களை நிறைவேற்றுவதில் இந்த அரசு பிற மாநிலங்களை விட பின் தங்கிவிடவில்லை என்று கூறப்பட்டுள்ளது. பொதுப்படையாகப் பார்த்தால் வறுமை ஒழிப்புப் பணிகளில் நாம் எதிர்பார்க்கிற அளவுக்குப் பலன் இல்லை என்பதைத்தான் நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். அதற்கான பணம் துரிதமான வகையில் நமக்குக் கிடைப்பதில்லை. அந்தத் திட்டங்கள் வெற்றி பெற வேண்டுமென்று நினைக்கிறோமே தவிர, முழு திருப்தி அளிக்கிற வகையில் திட்டங்கள் வெற்றி பெறவில்லை. அதற்கான காரண காரியங்களைக் கண்டறிந்து, இந்தியாவிலேயே நாம் எல்லா மாநிலங்களை விடவும் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறவர்களைக் கைதூக்கி விடவும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் நாம் அனைத்து ஆதரவான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.





அடுத்ததாக, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வின் தேர்தல் அறிக்கையை நான் பாராட்ட விரும்புகிறேன். இந்தத் தேர்தல் அறிக்கையில், சமுதாயத்தில் இருக்கிற அனைத்துத் தரப்பு மக்களைப்பற்றியும் சொல்லப்பட்டிருந்தாலும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களைப் பற்றியும் அதில் சொல்லியிருப்பதற்காக நான் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய கோரிக்கைகளுக்கு சிறப்பான இடம் ஒதுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். அதில் இடம் பெற்ற வாக்குறுதிகள் போனஸ், இடைக்கால நிவாரணம், குடும்ப நல நிதி உயர்வு, இருவழிப் பயணச் சலுகை, தொழில் வரி நீக்கம் என்ற ஐந்து முக்கிய கோரிக்கைகளை அ.தி.மு.க. கொள்கையளவில் ஏற்றுக் கொள்கிறது என்று சொல்லப்பட்டிருந்ததைக் கண்டு நாங்கள் எல்லாம்

(முற்பகல் 11-05)

பாராட்டி மகிழ்ந்தோம். ஆனால் அந்த ஐந்து கோரிக்கைகளில், குடும்ப நல நிதி அளிப்பது குறித்தான கோரிக்கை மட்டும்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்கிற வகையில் ஆளுநர் உரை இருக்கிறது. அந்த ஒரு கோரிக்கை மட்டுமல்லாமல், தேர்தல் அறிக்கையில் வாக்களித்தவாறு, மீதி நான்கு கோரிக்கைகளையும் ஏற்று வருகின்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே அறிவிப்புகளைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற முக்கியமான இன்னொரு அம்சம், கிராம மறுமலர்ச்சித் திட்டம், கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சித் திட்டம் என்ற இரண்டு திட்டங்களுமாகும். இரண்டும் மிகச் சிறப்பான பொருளாதாரத் திட்டங்களாக தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த இரண்டு திட்டங்களும் இந்தியாவிற்கே தேவைப்படுகின்ற திட்டங்களாகும். மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டக்கூடிய வகையில் இவற்றை தமிழகத்திலே எடுத்துச் செயல்படுத்துவோம் என்று தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பதை பொருளாதாரக் கண்ணோட்டத்திலே பார்த்து மகிழ்ச்சியடைந்தோம். அந்தப் புரட்சிகரமான இரண்டு திட்டங்களையும் பற்றி ஒன்றும் விரிவாகவோ, குறிப்பிடத்தக்க விதத்திலோ ஆளுநர் உரையில் குறிப்பிட்டுக் கூறாதது குறித்து உள்ளபடியே நான் வருந்து

கின்றேன். ஒரு கால் நிதிநிலை அறிக்கையிலே கூறுவதற்காகத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்றால், நான் மகிழ்ச்சி அடைவேன். விரிவாகவும், குறிப்பாகவும், சிறப்பாகவும், நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட வேண்டுமென்று இந்தச் சமயத்தில் அரசை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கின்றேன்.

நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், நான் ஒவ்வொரு முறை விவாதத்தின் போது பேசும்போதும் குறிப்பிட்டிருக்கிறேன். எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தாலும், திட்டத்தின் பயன்கள் நியாயமாகப் போய்ச் சேர வேண்டியவர்களுக்கு, நியாயமான வழியில் நியாயமாகச் சென்று அடைய வேண்டும். அப்போதுதான் அந்தத் திட்டங்களினால் எதிர்பார்க்கக்கூடிய பயன்கள் மக்களுக்குக் கிடைக்கும். அரசினுடைய குறிக்கோளும் நிறைவேறும். ஆனால் இன்றைய நிர்வாக அமைப்பைப் பொறுத்தவரையில் திட்டங்களின் பலன்கள் ஏழை எளிய மக்களுக்கு போய்ச் சேருவதில்லை. திட்டங்களின் பலன்கள் யாருக்குச் போய்ச் சேரவேண்டுமோ அவர்களுக்கு எதிர்பார்க்கின்ற அளவுக்கு விரைவாகவும், வேகமாகவும், நியாயமாகவும் போய்ச் சேருவதில்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். நிர்வாக அமைப்பிலுள்ள கோளாறுகளை நாம் எந்த வகையிலும் களைந்தாக வேண்டும். நாம் கடந்த காலத்தில் பல குழுக்களையெல்லாம் அமைத்து அரசுக்கு அவைகள் பரிந்துரைகள் செய்திருந்தாலுங்கூட, அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று எங்களுக்கும் தெளிவாகவில்லை.

பணியாளர் நிர்வாகச் சீர்திருத்தத் துறை என்ற ஒரு துறையே இருக்கிறது இருந்தாலும் இன்றும் கூட, நிர்வாக அமைப்பிலே கோளாறுகள் இருக்கின்றன. வீண் தாமதம் ஏற்படுகின்றது. இதனால் அதிகமான அளவில் பாதிக்கப்பட்டவர்கள் ஏழை எளிய மக்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. அந்தக் கோளாறுகளையெல்லாம் நீக்க வேண்டும். திட்டங்களின் பலன்கள் மக்களுக்கு விரைவாகச் சென்றடையும் முறையில் நாம் நிர்வாகத்தை மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக சார்புச் செயலாளர் என்ற ஒரு பதவி அரசுத் துறையிலே இருக்கிறது. அதுபோல் துணைச் செயலாளர், இணைச் செயலாளர், செயலாளர் என்ற பதவிகளும் இருக்கின்றன. ஆனால் இந்த நான்கு அதிகாரிகளுக்கும் நாம் அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்திருக்கிறோமா என்றால் இல்லை. அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்கவில்லை. சார்புச் செயலாளர் ஒரு அதிகாரி என்ற அடிப்படையில் அவரே ஒரு முடிவு எடுக்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும். சார்புச் செயலாளர், தான் எடுக்க வேண்டிய முடிவுகளைக்கூட செயலாளரையோ அல்லது அமைச்சரையோ சென்று





பேசித்தான் எடுக்க வேண்டுமென்றால், இந்தப் பதவிகளே தேவை இல்லை. எனவே, அதிகாரங்களை இந்த நான்கு அதிகாரிகளுக்கும் பிரித்துக்கொடுத்து, நிர்வாக நடைமுறையைப் பரவலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவரவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகார வரம்புக்குட்பட்டு, அவரவர்களே முடிவுகளை எடுக்கலாம், ஆணை பிறப்பிக்கலாம் என்ற நிலையை நாம் உருவாக்க வேண்டும். மத்திய அரசைப் பொறுத்தவரையில், Office system என்று இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். Desk Officer என்பது அந்த அதிகாரிக்கு என்ன அதிகாரங்கள் வரையறை செய்யப்பட்டிருக்கிறதோ அந்த வரையறைக்குள் வரக்கூடிய விவகாரங்களைப் பொறுத்த அளவில் அவரே முடிவுகளை எடுத்து, மேலதிகாரிகளைக் கலக்காமல் ஆணை பிறப்பிக்கலாம். மத்திய அரசு உடனடியாகக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதற்காக இந்த ஏற்பாட்டைச் செய்திருப்பதாக அறிகிறேன். அது நல்ல ஏற்பாடாக இருக்குமானால், தமிழக அரசும் அதைப் பின்பற்றுவதில் தவறு இல்லை என்று வலியுறுத்தி, இப்படிப்பட்ட சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-10)

அமைச்சர்களைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நாங்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர் அவர்களை எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், எப்போதும் பார்க்கலாம். எங்களுக்கு அந்த உரிமை இருக்கிறது, வாய்ப்புக்கள் தரப்பட்டிருக்கின்றன. சென்னையிலே எப்போது எல்லாம் அமைச்சர்கள் இருக்கிறார்களோ அப்போது எல்லாம் அமைச்சர்கள் தலைமைச் செயலகத்துக்கு வந்து குறிப்பிட்ட நேரத்தில் பொதுமக்கள் வந்து அவர்களைப் பார்க்கலாம் என்று ஒரு நேரத்தை ஒதுக்குவார்களானால், பொது மக்கள், ஏழை எளிய மக்கள் எந்த அவதியும் இன்றி அமைச்சர்களைப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற உரிமைகள் திருப்தி அடையும் நிலையில் இருந்தாலும் கூட, நான் பொதுமக்களுடைய கண்ணோட்டத்தில் பேசுகிறேன். அப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டைச் செய்வது நல்லது. அப்படி ஒரு ஏற்பாட்டை—தலைமைச் செயலகத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அமைச்சர்கள் இருப்பார்கள் என்ற ஒரு ஏற்பாட்டை—செய்தால்தான் மக்கள் தங்களுடைய குறைகளைப் போக்கிக் கொள்ள, நல்ல ஜனநாயக வாய்ப்புக்களை ஏழை எளிய மக்கள் பெற முடியும் என்பதை இந்தச் சமயத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உடல் நலத்தைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, இந்த நேரத்தில் அவர்களுக்கு எங்களுடைய ஒரு வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னவென்றால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிபூரண உடல் நலம் அடைந்து வந்தாலும் கூட, இன்னும் சிறிது காலத்திற்கு அவர்களுக்கு அதிகமான தொல்லைகள் கொடுக்காமல் இருப்பது எல்லோருக்கும் நல்லது என்று நான் நினைக்கிறேன். அப்படிப்பட்ட தொல்லைகளைக் கொடுக்காமல் இருக்க வேண்டுமென்றால், அவர் தன்னுடைய இலாக்காக்களைப் பார்க்கக் கூடிய பொறுப்புக்களை, அந்த நடவடிக்கைகளைப் பார்க்கக் கூடிய பொறுப்புக்களை எல்லாம்—அந்த பணிச் சுமையின் காரணமாக நான் சொல்கிறேன்—அந்த பணிச் சுமையை சற்று பரவலாக மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் பிற அமைச்சர்களுக்குப் பிரித்துத் தர வேண்டும்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது, மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் கோட்டைக்கு வரவேண்டும், அப்படி வந்தால் ஏழை எளிய மக்களுக்கு வசதியாக இருக்குமென்று சொன்ன கருத்து பத்திரிகைகளிலே வந்து, ஏதோ அமைச்சர்கள் ஏழை எளிய மக்களைப் பார்க்காமல் இருப்பதுபோலவும், அல்லது பொதுமக்கள் அமைச்சர்களைப் பார்க்க முடியவில்லை என்பது போலவும் ஓர் உணர்வு வரக்கூடாது என்ற காரணத்தாலே சொல்கிறேன். இந்த அரசு ஏழை எளிய மக்களாலே ஏற்படுத்தப்பட்ட அரசு என்பதை அமைச்சர்கள் அத்தனை பேரும் நன்றாக அறிவோம். அதிலேயும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமைச்சர்களுக்கு எல்லாம் சென்னையிலே இருக்கும்போது நிச்சயமாகக் கோட்டைக்கு வந்தேயாக வேண்டும் என்று உத்திரவு போட்டிருக்கிறார்கள். ஆகவே பொதுமக்கள் எல்லாம் வரும்போது கோட்டையிலே மட்டுமல்ல, வீட்டிலேயும் கூட இந்த அமைச்சர்கள் 24 மணி நேரமும்—விடியற்காலம் 12 மணி, இரவு 1 மணிக்குப் பின்னாலே தூங்குகிறபோது வேண்டுமானால் ஒருவேளை பார்க்க முடியாமல் போகலாம்—எல்லா நேரங்களிலும் வீட்டிலிருந்தாலும் சரி, அலுவலகத்தில் இருந்தாலும் சரி, வருகின்ற பொதுமக்களை எல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிற அமைச்சர்களைப் பெற்றிருக்கிற அரசு புரட்சித் தலைவர் அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், பார்க்க முடியவில்லை என்ற அப்படிப்பட்ட ஒரு உணர்வு வரவேண்டாம் என்ற காரணத்தினாலே இதைச் சொல்கிறேன்.





திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: துணைத் தலைவர் அவர்களே, நான் அந்தப் பொருளில் சொல்லவில்லை. இப்போது அமைச்சர்களை எந்த நேரத்திலும் பார்க்கலாம். ஆனால் நான் ஒரு நிரந்தரமான ஏற்பாடு வேண்டுமென்று சொன்னேன். ஒரு நிரந்தரமான ஏற்பாடு இருந்தால், ஒரே சமயத்தில் அந்த அமைச்சர்கள் கோட்டையில் இருந்தால், 3, 4 அமைச்சர்களை ஒருவர் பார்க்க வேண்டுமென்றால், அவர்கள் ஒரே செலவிலே எல்லா அமைச்சர்களையும் பார்த்து விடலாம். அப்படிப்பட்ட ஒரு நிரந்தரமான ஏற்பாடு வேண்டுமென்று சொல்கிறேன். ஆதலால் நான் அமைச்சர்களை குறை சொல்வதாகக் கருதவேண்டாம். இப்போது தாராளமாகப் பார்க்கமுடிகிறது. இப்படி ஒரு நிரந்தரமான ஏற்பாட்டின் மூலமாக சில வசதிகளை மக்களுக்குக் கொடுக்க முடியும் என்ற கண்ணோட்டத்தில்தான் நான் சொன்னேன்.

அடுத்து, காவல் துறையினருக்கு நல்ல திட்டங்கள்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் அதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். காவல் துறையினருக்கு இன்னும் எவ்வளவு வசதிகள் வேண்டுமானாலும் இந்த அரசு செய்து தருவதை நாங்கள் எல்லாம் பாராட்டுவோம். ஆனால் ஒன்றை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காவல் துறையினருக்கு நீங்கள் நினைப்பதை விட இன்னும் எந்த அளவுக்கு அதிகமாகச் செய்ய வேண்டுமோ, அந்த வாய்ப்புகளையும், வசதிகளையும், உரிமைகளையும் செய்து கொடுக்கவேண்டும். அவைகளை வரவேற்கிறோம். காவல் துறையினருக்கு அவைகள் தேவை. ஆனால் காவல் துறையில் பணியாற்றக் கூடிய அதிகாரிகள் சாதாரண ஏழை எளிய மக்களுடைய உணர்வுகளையும், அவர்களுடைய நிலைமைகளையும் புரிந்துகொண்டு அவர்களுக்கு நியாயம் வழங்குவதற்கு முன் வரவேண்டும், இத்தகைய வசதிகளையும் வாய்ப்புகளையும் தமிழக அரசு செய்து தருவதே, ஏழை மக்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதற்காகத் தான் என்பதை உணர்ந்து அவர்கள் செயல்பட வேண்டும் என்பதை நான் சுருக்கமாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். சாதாரண ஏழை எளிய மக்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று ஒரு புகாரைப் பதிவு செய்ய விரும்பினால், அவர்களுக்கு உரிய வாய்ப்பு தரப்படுகிறதா அல்லது அவர்கள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதை அநேகமாக எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறவர்கள் கருத்து வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். இது இந்த சமுதாயத்தில் இருக்கிற ஒரு பெரிய கோளாறு ஆகும். ஆகவே நலிந்த பிரிவினரை சரியாகவும், மரியாதையாகவும் நடத்தி அவர்களுக்கு நியாயம் வழங்குவதுடன், அவர்களை நல்லமுறையில் நடத்தி காவல் துறையினர் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளை மறக்காமல் செய்ய வேண்டு

மென்று வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். அப்படி அவர்கள் செய்வதற்காகத்தான் தமிழக அரசு ஏராளமான சலுகைகளைச் செய்து தருகிறது. இன்னும் செய்து தரவேண்டுமென்று நாங்கள் கோருகிறோம்.

அதைப் போலவே, நம்முடைய அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், நான் முன்பே சொன்னேன். இப்போது 10 ஆயிரம் ரூபாய் ஆக இருந்த குடும்ப நல நிதியை 20 ஆயிரம் ரூபாயாக அரசு உயர்த்தியிருப்பதை நாங்கள்

(முற்பகல் 11-15)

வரவேற்று பாராட்டுகிறோம். எட்டு லட்சம் ஊழியர்கள் சார்பாக இந்த நல்ல அறிவிப்பை நாங்கள் வரவேற்கிறோம். இந்தத் திட்டம் எந்தத் தேதியிலிருந்து எப்படிச் செயல்படுத்தப்பட இருக்கிறது என்ற விவரங்கள் நிச்சயமாக நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்படும் என்ற நம்பிக்கையில் நாங்கள் எங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அடுத்து, அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது ரூபாய் 10,000 உதவித் தொகையாகக் கொடுக்கப்படும் என்றும் அதில் ரூ. 5,000 ஊழியர் பங்காகவும், மீதி 5,000 ரூபாய் அரசு உதவித் தொகையாகவும் இருக்கும் என்ற ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டு ஓராண்டுக்கும் மேலாகிறது. ஆனால் இந்தத் திட்டம் என்ன காரணத்தாலோ தனியார் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கும், நகராவை மற்றும் மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் இதுவரை விரிவுபடுத்தப்படவில்லை. எனவே இவ்வாசிரியர்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே விடுமுறைப் பயணச் சலுகை அரசு ஊழியர்களுக்குத் தரப்படுகிறது. ஆனால் தனியார் பள்ளி மற்றும் கல்லூரிகள், அதைப் போலவே நகராவைப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத அலுவலர்கள் ஆகியோர்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படவில்லை. இந்தத் திட்டத்தை அவர்களுக்கு விரிவாக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்தக் கோளாறு ஏற்படுவதற்குக் காரணம், அமைச்சரவையில் இத்தகைய சலுகைகளை வழங்க முடிவெடுக்கும் போது, அரசு ஊழியர்களுக்கு என்னென்ன சலுகைகளை வழங்க முடிவெடுக்கப்படுகிறதோ அவை அனைத்தையும் தனியார் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் மாநகராட்சி மற்றும் நகராவைப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்கள் அனைவருக்கும் சேர்த்து வழங்கப்படும் என்று கொள்கை ரீதியாக ஒரு முடிவை எடுக்காதது தான். எனவே அமைச்சரவை இப்படி ஒரு முடிவை எடுத்துவிட்டால், இனி இத்தகைய கோளாறுகள் ஏற்படாது



என்று தெரிவித்துக்கொள்கிறேன். அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் எந்தச் சலுகையானாலும், அது தனியார் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் மற்றும் மாநகராட்சி நகராவைப் பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் அனைவருக்கும் சேர்த்தே வழங்கப்பட வேண்டும் என்று முடிவெடுத்து செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்கள் பேசுவதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்க வேண்டும் என்று தலைவர் அவர்கள் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் 16 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார். விரைவில் முடிக்க வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சற்று தாராளமாக இருப்பார்கள் என்று நம்புகிறேன். நானும் விரைவில் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் இன்னும் அறையில் இருப்பதாக எனக்குத் தெரிகிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அடுத்து, அரசு ஊழியர்களை நிரந்தரப்படுத்த தமிழ்நாடு தேர்வாணைக் குழு என்ற ஒரு அமைப்பை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு நாம் சகல அதிகாரத்தைக் கொடுத்து நீண்ட காலமாகத் தற்காலிகமாக இருக்கும் ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களை அந்த அமைப்பு இப்போது வீட்டுக்கு அனுப்பும் வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறது. கல்வித் துறையைப் பொறுத்தவரையில், 3 லட்சம் ஆசிரியர்கள் பணியாற்றும் நிலை காரணமாக, தமிழ்நாடு தேர்வாணைக் குழு அதிகார வரம்பிலிருந்து இவ்வாசிரியர்களின் நியமனம் நீக்கப்பட்டு, அவர்களை நியமனம் செய்ய நியாயமான வேறு ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கேட்டு வருகிறோம். இது சம்பந்தமான கொள்கை ரீதியான ஒரு அறிவிப்பை இந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

அடுத்து, நான்காவது ஊதியக் குழுவின் அறிக்கை ஜனவரி மாதத்திலேயே வெளியிடப்படும் என்று தேர்தல் அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுவரை அது வெளியிடப்படவில்லை என்றாலும்கூட, இந்த பட்ஜெட் கூட்டத் தொடருக்குள் அதை வெளியிட்டு, அந்தப் பரிந்துரைகளை எற்று அமுல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1985 மார்ச் 15

அடுத்து, பல பள்ளிகள் நகரவைகளால் இன்றைக்கு சரியாக நடத்தப்பட முடியாத நிலையில் இருக்கின்றன. இதன் காரணமாக அங்கே பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும் நியாயமான ஊதியமும் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய சலுகைகளும் ஒழுங்காகக் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. கேட்டால் "எங்களிடம் போதிய நிதியில்லை. எங்கள் பள்ளிகளை அரசே ஏற்க வேண்டுமென்று நாங்கள் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறோம்" என்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட நகரவைப் பள்ளிகளையெல்லாம் அரசே தன்னுடைய நேரடிப் பொறுப்பில் ஏற்று ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஏற்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி வாரியம் அமைக்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த உறுதிமொழியைச் செயல்படுத்தும் வகையில் உரிய அறிவிப்பை விரைவில் வெளியிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அமைச்சரவையைப் பொறுத்தவரையில், ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் வடாற்காடு மாவட்டம் மற்றும் தென்னாற்காடு மாவட்டத்திற்குப் பிரதிநிதியாக இங்கே இருக்கிறேன். என்ன காரணத்தினாலோ வடாற்காடு மாவட்டத்திற்கு அமைச்சரவையில் தற்போது பிரதிநிதித்துவம் இல்லாமல் இருக்கிறது. எனவே வடாற்காடு மாவட்டத்திற்கும் அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலவையைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே ஆறு உறுப்பினர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள். இப்போது மூவர் மட்டுமே இடம் பெற்றிருக்கிறார்கள். ஆறு அமைச்சர்களாக இருந்தபோது எங்களுக்கு அது பெருமையாக இருந்தது. மேலவைக்கு உரிய நியாயமான உரிமையையும் பெருமையையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்போது அளித்தார்கள். 6 அமைச்சர்கள் என்ற நிலை மாறி 3 அமைச்சர்கள் என்று தற்போது குறைந்திருப்பது மேலவைக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான மரியாதையைக் கொடுக்காதது போல் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கும்போதே இந்த நல்ல கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கலாம்.



1985 மார்ச் 15]

(முற்பகல் 11-20)

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** துணைத் தலைவர் அவர்களே, யாருக்குத் தர வேண்டும் என்பதைக்கூட அவர் சொன்னால் நலமாக இருக்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** யாருக்குத் தர வேண்டும் என்று முடிவு செய்யும் அதிகாரம் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இருக்கிறது.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு உறுப்பினரே ஒரு 'சஜெஸ்டியன்' கொடுக்கலாம். அதிலே தவறு ஒன்றும் இல்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** முதல்வர் அவர்கள் இங்கே இல்லாவிட்டாலும்கூட, இந்தக் கருத்து நிச்சயமாக அவருக்குப் போய்ச் சேரும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லமாட்டார் என்று நான் நினைக்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நிச்சயமாக நான் எந்த வம்பிலும் மாட்டிக் கொள்ளமாட்டேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** நிச்சயமாக எனக்கு வேண்டாம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பத்தாயிரம் குழந்தை நல நிலையங்கள் பாலர் தொடக்கப் பள்ளிகளாக மாற்றப்படும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் பாலர் தொடக்கப் பள்ளிகள் கல்வித் துறையின் கட்டுப்பாட்டிற்குள் வந்தால்தான், அவைகளை நல்ல நிலையில் நடத்த முடியும். இப்போது சமூக நலத் துறையில் இருக்கின்றன. சமூக நலத் துறையை நான் குறைவாக மதிப்பிட்டுச் சொல்லவில்லை. குழந்தை நல நிலையங்கள் கல்வி நிறுவனங்களாக மாற்றப்படுவதால், கல்வித் துறையிலே இருப்பதுதான் நியாயம். அந்த வகையிலே அரசு சிந்தித்து பத்தாயிரம் பாலர் தொடக்கப் பள்ளிகளையும் கல்வித் துறை நிர்வாகத்தின்கீழ்க் கொண்டு வந்து சரியான அஸ்திவாரத்தைப் போடக்கூடிய கல்வித் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1985 மார்ச் 15

நம்முடைய மதிப்பீட்டுக் குழு இரண்டாண்டுகளுக்கு முன்பு ஒரு கருத்தைச் சுட்டிக் காட்டியிருக்கிறது. சுமார் 45 ஆயிரம் ஆசிரியர் பதவி இடங்களை ஏற்கெனவேயுள்ள விதி முறைகளின்படி ஏற்படுத்த வேண்டும் என்று அந்தக் குழு இரண்டாண்டுகளுக்கு முன்பே கருத்து தெரிவித்துள்ளது. அப்படி ஏன் ஏற்படுத்தவில்லை என்று கல்வித் துறையிடம் கேள்வி கேட்ட போது, நிதி ஆதாரத்தைச் சுட்டிக்காட்டி பதில் வந்தது. இப்பொழுது உள்ள விதிமுறைகளின்படி தேவைப்படக்கூடிய நாற்பத்தைந்தாயிரம் ஆசிரியர் பணியிடங்களை ஏற்படுத்த அனுமதி கொடுக்காமல் எப்படி கல்வித் துறையிடமிருந்து, ஆசிரியர்களிடமிருந்து, பிள்ளைகளிடமிருந்து நியாயமான கல்வித் தரத்தை எதிர்பார்க்க முடியும்? தேவைப்படும் ஆசிரியர்கள் பதவியை ஏற்படுத்தாத நிலையில் அதிகமான வேலைப் பளுவை ஆசிரியர்கள் ஏற்கும் பொழுது பிள்ளைகளின் நலம் என்னவாகும் என்பதைச் சிந்தித்துப் பார்த்துச் செயல்பட வேண்டும். மனம் வைத்தால் எவ்வளவு பெரிய திட்டமாக இருந்தாலும் செயல்படுத்தக்கூடிய திறனும், ஆற்றலும், மனப்பக்குவமும் மரியாதைக்குரிய முதல்வர்களிடத்திலே உண்டு என்பதால், தேவைப்படக்கூடிய ஆசிரியர்கள் பணியிடங்களை ஏற்படுத்த அனுமதி அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

'டிஸ்னி லேண்ட்' போன்ற 'அதிசய உலகத்தை' தமிழகத்திலே அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நீண்ட நாட்களாக வைத்திருக்கிறோம். ஆனால் அரசுத் துறையில் அதற்காக முயற்சி எடுத்ததாக எந்தவிதமான தகவலும் இல்லை. வட சென்னையில் எண்ணூரில் அமைந்துள்ள தீவில் 1,600 ஏக்கர் நிலப்பரப்பில் ஓர் அதிசய உலகத்தை தனியார் துறையைச் சேர்ந்த வி.ஜி.பி. சகோதரர்கள் ஏற்பாடு செய்திருப்பதை நேரில் சென்று பார்த்தேன். அத்தகைய அதிசய உலகத்தை அமைக்க தமிழக அரசு செய்யவேண்டிய நியாயமான உதவிகளை, ஒத்துழைப்பைத் தர வேண்டும். அதிலே முதலீடு செய்ய பணம் இல்லாவிட்டால், இப்படி தனியார் முன்வந்து செய்வதை ஏற்றுக்கொண்டு அதற்கு அனுமதி கொடுத்து, ஆதரவு கொடுத்து, வேண்டுமானால் அவர்களுடைய திட்டங்களில் மாற்று ஏற்பாடு செய்ய வேண்டுமானால் அதையும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, ஆலோசனை கூறி, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சமயத்தில் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் பல்கலைக்கழகங்களைப்பற்றி ஒன்றும் குறிப்பிடப்படாவிட்டாலும், காரைக்குடியில் ஒரு புதிய பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது விரைவாகச் செயல்படுமென்று நம்புகிறேன். பி.ஈ., பி.டி.எஸ். போன்ற உயர் படிப்புக்கு நுழைவுத் தேர்வு கொண்டு வருவதை நாங்கள் வரவேற்கிறோம். பி.ஈ., பி.எஸ்சி. (அக்ரி.), பி.டி.எஸ்., பி.வி.எஸ்சி. போன்ற எல்லாத் தொழில் பாடங்களுக்கும் நுழைவுத் தேர்வை அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எந்த முறையைக் கொண்டு வந்தாலும், அதை எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் கொண்டுவர வேண்டும். எந்த முறையைக் கொண்டு வந்தாலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை மட்டும் மறந்துவிட்டு, மற்றப் பல்கலைக் கழகங்களுக்குக் கொண்டு வருகிறோம். ஆகவே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையும் நினைவில் வைத்துக்கொண்டு எல்லாவற்றிற்கும் பொதுவான ஒரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். சென்ற ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நுழைவுத் தேர்வு நடந்தது. தமிழக அரசும் நுழைவுத் தேர்வை நடத்தி எல்லா மாணவர்களுக்கும் மதிப்பெண்களை வழங்கியது. ஆனால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடந்த நுழைவுத் தேர்வுக்கான மதிப்பெண்கள் மாணவர்களுக்குத் தரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கொத்தடிமைகளாக இருந்த ஆசிரியர்களுக்குப் பல சலுகைகளைப் பெற்றுத் தருவதிலும், காரியங்களை நிறைவேற்றுவதிலும் . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஏற்கெனவே 25 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துணையாக இருந்த தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-25)

ஆசிரியர்கள் இதற்காக பல தியாகங்கள், போராட்டங்கள் செய்யவேண்டிய அவசியம் வந்தாலும்கூட, தமிழக அரசு, குறிப்பாக நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், பல நேரங்களில் உறுதுணையாக இருந்து பல உரிமைகளைப் பெற்றுத் தந்திருப்பதற்கு, இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்கலைக்கழகங்களில் செனேட், சின்டிகேட் ஆகிய அவைகளில் ஒருவர் இரண்டு முறைகளுக்கு மேல் பதவியில் இருக்கக்கூடாது என்று ஒரு சட்டத்தை நிறைவேற்றி அந்தச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம். தமிழக அரசு எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் சேர்த்துத்தான் இதை நிறைவேற்றியிருக்கின்றது. ஆனால் நாம் நிறைவேற்றிய அந்தச் சட்டத்திற்கு முரண்பாடான வகையில் அங்கே நிய மனம் நடைபெற்றுள்ளது. இச்சட்டம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மீறப்பட்டிருக்கிறது Nomination by Chancellor Pro-Chancellors -ல்கூட தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. இரண்டு முறைகள் ஏற்கெனவே பதவி வகித்தவர்கள் மூன்றாவது முறையாக நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். அது நம்மால் நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கு முரணானதாக இருக்கின்றது. அந்த லைசென்சை எல்லோரும் எடுத்துக் கொள்ளலாமா என்பதை மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலம் நான் இந்த அரசிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அப்படி நியமிக்கப்பட்டவர்கள் பெயர்களை வேண்டுமானால் தருகிறேன். 1. திரு. எல். பி. இராமநாதன் செட்டியார்,

2. திரு. டி. எஸ். சுப்பிரமணிய பிள்ளை, 3. டாக்டர் எஸ். பி. ஷண்முகம், 4. திரு. முருகேசன், 5. திரு. சுப்பராயுலு பிள்ளை, 6. திரு. வி. வி. சுவாமி நாதன். இவர்கள் எல்லாம் இரண்டு முறைகளுக்கும் மேலாக மூன்றாவது முறையாக சட்டத்திற்கு முரணாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இது நியாயமான முறையில் நடக்கவில்லை. அந்தத் தவறுகளை உடனடியாகத் தீர்த்து வைக்க வேண்டும். அந்தத் தவறுகளைச் சரி செய்யவேண்டியது தமிழக அரசினுடைய கடமை என்பதையும் நான் எடுத்துச்சொல்ல விரும்பு கிறேன்.

இன்னும் ஒரே ஒரு நிமிடத்தில் என்னுடைய உரையை முடித்துக் கொள் கிறேன். ஆளுநர் அவர்கள் உரையில் உள்ள நல்ல பல அம்சங்களை நான் வர வேற்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், கடலூரில், நிலத் தடி கழிவு நீர் திட்டம் இல்லாமல் இருக்கின்றது. கடலூர் ஒரு மாவட்டத்தின் தலைநகரம். அங்கே நிலத்தடி கழிவு நீர் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நடப்பு ஆண்டில் அந்த திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். வட ஆற்காடு மாவட்டத்தில், திருப் பத்தூரில் மகளிர் கல்லூரி வேண்டும் என்று நீண்டகால கோரிக்கை இருக் கின்றது. அதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய இரண்டு மாவட்டத்திற்கும் விவசாயம் மிகவும் முக்கியமான தொழிலாக இருக்கின்றது. இந்த இரண்டு மாவட்டங்களுக்கும்



என்று ஒரு விவசாயப் பல்கலைக்கழகம் வரவேண்டும் என்று நீண்டகாலமாகக் கோரி வருகிறோம். ஏராளமான நிலம் இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஒரு விவசாயப் பல்கலைக்கழகம் இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, சிதம் பரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு பெருவாரியாகப் பாசன வசதி பெறச் செய்வது வீராணம் ஏரி ஆகும். அந்த வீராணம் ஏரியைப் பொறுத்தவரை யில், அதைச் சீரமைக்காமல் இருக்கிறோம். பல்லாண்டு காலமாக அதை அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறோம். அதன் காரணமாக பாசன வசதி இல்லாமல் அந்தப் பகுதியின் விவசாயமே பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே வீராணம் சீரமைப்புத் திட்டத்தையும், அந்த ஏரியில் தூர் வாரும் திட்டத்தை யும் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடலூர் கல்வி மாவட்டம் பெரிய மாவட்டமாக இருப்பதால், கடலூர் கல்வி மாவட்டத்தில் இப்போது கடலூர் ரெவின்யூ டிவிஷன், சிதம்பரம் ரெவின்யூ டிவிஷன் என்று இரண்டு பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு ரெவின்யூ டிவிஷனுக்கும் ஒரு கல்வி மாவட்டம் என்று பாவித்து இருப்பதால், சிதம்பரத்திற்கு என்று ஒரு மாவட்டக் கல்வி அலுவலகம் தொடங்க வேண்டும். சிதம்பரம் பகுதியில் உள்ள விவசாய மக்கள் அதிகமாகக் கரும்பு உற்பத்தி செய்கின்றார்கள். அந்த மக்களுக்கு அந்த பக்கத்திலே சர்க்கரை ஆலை ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த அளவுக்குப் பேச வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன்.

(முற்பகல் 11-30)

* திரு. மு. செ. சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலை வரவர்களே, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெறும் இந்த விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, கடந்த தேர்தலில் மக்களின் தீர்ப்புப்படி பெரும் பான்மை வெற்றி பெற்று, அமைச்சர்களாக அமர்ந்திருக்கும் அமைச்சரவைக்கு நான் பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் நான் சார்ந்திருக்கின்ற கல்லூரி ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பாகவும், இளைய ஆசிரியர்கள் சங்கங்களின் சார் பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. மு. செ. சங்கரலிங்கம்] [1985 மார்ச் 15

ஆளுநர் அவர்கள் உரையில் மக்கள் நல்வாழ்வுக்காக பல்வேறு திட்டங்கள் இருப்பதை வரவேற்பதோடு, அதில் விடுபட்டதைச் சொல்வது என் கடமை என்ற அடிப்படையில், அதில் விடுபட்டிருக்கின்ற சிலவற்றைக் கூறலாமென்று எண்ணுகிறேன். ஈழத் தமிழர்கள் பாதிக்கப்பட்டு, தமிழ் நாட்டுக்கு வந்த வண்ணம் இருக்கிறார்கள். அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றி இந்த அவையிலும், பேரவையிலும் அதிகமாக எடுத்துப் பேசியிருக்கிறார்கள். இருந்தபோதிலும், இங்கே வந்துள்ள மக்களுக்குப் பொருளாதார உதவி எந்த அடிப்படையில் மத்திய அரசும், மாநில அரசும் செய்யப் போகிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்ட வேண்டிய நிலை இருக்கிறது. பங்களா தேஷிலிருந்து அகதிகளாக வந்த மக்களுக்கு உதவி அளிப்பதற்காக 5 காசுகள் தபால் தலை அதிகமாக ஒட்டி, அந்தத் தொகை அந்த அகதிகளின் புனர் வாழ்விற்காக அளிக்கப்பட்டது. அதுபோல, இப்போது ஸ்ரீலங்காவிலிருந்து வரும் தமிழர்களுக்காக 5 காசு தபால் தலை அதிகமாக ஒட்டி, அந்தப் பணத்தை தமிழ் நாட்டுக்கு வரும் ஸ்ரீலங்கா வாழ் தமிழ் மக்களுக்குக் கொடுக்கலாமென்று இங்கே இருக்கும் அந்தக் கட்சி உறுப்பினர்களும், தமிழக அரசும் திட்டமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட வயது முதிர்ந்தவர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அரசு ஊழியர்களாக இருந்து, குற்றேவலர்களாக இருந்து, 30 ஆண்டுகள் பணி புரிந்தவர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கப்படாமல், அவர்கள் வாழ வழியில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கப்படவேண்டும். அதற்கான திட்டத்தை உருவாக்க வேண்டுமென்றும், அதை அமுல்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டங்களைப் பொறுத்தவரையில், அதிகமாக நிர்வாகத் திறமையை ஏற்படுத்துவதற்கும், மக்களோடு நெருங்கிய தொடர்பு கொள்வதற்காகவும் பிரிக்கப்படுகின்றன. எனவே நெல்லை மாவட்டத்தையும் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று, நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற அடிப்படையில் தெரிவித்துக்கொள்கிறேன். நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, புதிய மாவட்டத்திற்கு வ.உ.சி. மாவட்டம் என்று பெயரிட வேண்டும். நெல்லை மாவட்டம் பெரிய மாவட்டமாக இருக்கிறது. அங்கே நிர்வாகத் திறமையை அதிகப்படுத்த, இதை கொள்கை அறிவிப்பில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 மார்ச் 15] [திரு. மு. செ. சங்கரலிங்கம்]

மின் வெட்டு பற்றியும், மின்சாரப் பற்றாக்குறை பற்றியும் அதிகமாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. குடிசைகளுக்கு மின் விளக்கு கொடுத்ததற்காக நன்றி. ஆனால் அதே நேரத்தில் மின் வெட்டினால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருடந்தோறும் கோடை காலம் வரும்போது மின் வெட்டு இருக்கிறது. அதற்கு முன் எச்சரிக்கையாக அனல் மின்சாரத்தை அதிகப்படுத்தும் வகையில் எந்தவிதமான திட்டமும் செயற்படுத்தப்படவில்லை. அதற்கான திட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்பது என்னுடைய கருத்து. அங்கே நிர்வாகச் சீர்குலைவுகூட ஏற்பட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் பார்க்கிறோம். எனக்குக்கூட அனுபவம் இருக்கிறது. எங்கள் வீட்டில்கூட 4 மாதங்களாக மீட்டர் ரீடிங் எடுக்கப்படவில்லை. இதுமாதிரி நிர்வாகச் சீர்கேடு இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மின் வாரிய நிதி நிலை அறிக்கை விரைவில் இந்த அவையில் வைக்கப்பட இருக்கிறது. அதில் இந்தக் கருத்துக்களைப் பேசினால், அப்போது மின் துறை அமைச்சர்வர்களும் இங்கே இருப்பார்கள், பயனுடையதாக இருக்கும். இப்போது வேறு கருத்துக்களைப் பேசினால், அது பயனுள்ளதாக இருக்கும். தங்களுடைய அபிப்பிராயத்தைப் பொறுத்து பேசலாம்.

திரு. மு. செ. சங்கரலிங்கம் : அனல் மின்சார உற்பத்திக்குத் தேவையான நிலக்கரியை முன்கூட்டியே சேமித்து வைத்திருந்தால், இந்த மின் வெட்டு வந்திருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசு புதிதாகத் தெரிந்தெடுக்கப்பட்டு வந்த பிறகு, அரசுப் பணியாளர்களுக்கு 300 ரூபாய் இடைக்கால நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. எந்த அடிப்படையில் அது நிறுத்தப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமி காந்தன் அவர்கள் சொன்னதுபோல, ஆசிரியர்களுக்கு என்று அரசாணை பிறப்பித்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது. இப்போது முக்கியமான பிரச்சினை ஒன்று இருக்கிறது. அது தான் இடைக்கால நிவாரணம் கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை என்கிற பிரச்சினை. அது [illegible] [illegible] ஏற்பாடு செய்ய வேண்டும்.

[திரு. மு. செ. சங்காலிங்கம்] [1985 மார்ச் 15

(முற்பகல் 11-35)

அடுத்து, ஆதி திராவிட நல மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்களை அரசு வகுத்திருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் 90 சதவிகிதம் அட்டென்டன்ஸ் இருந்தால்தான், மாணவர்களுக்குரிய ஸ்காலர்ஷிப் போன்றவை தரப்படுகின்றன. 90 சதவிகிதம் அட்டென்டன்ஸ் இல்லாவிட்டால், ஸ்காலர்ஷிப் வழங்குவதை நிறுத்தி விடுகிறார்கள். 90 சதவிகிதம் அட்டென்டன்ஸ் வருவதில் பல்வேறு இடர்ப்பாடுகள் இருக்கின்றன. இந்த விதியை ஒவ்வொரு தடவையும் தளர்த்துவது உண்டு. ஆனால் இந்த ஆண்டு இந்த விதியைத் தளர்த்தாத காரணத்தால், 6 ஆயிரம் மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த விதியைத் தளர்த்தினால்தான் அவர்கள் பண உதவியைப் பெற முடியும், அதன் மூலம் அவர்கள் தொடர்ந்து படிக்க முடியும். ஆகவே விதியைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதி திராவிட நலத் துறையின் கீழ் இருக்கின்ற பள்ளிகளை எல்லாம் கல்வி இலாகாவில் சேர்க்க வேண்டுமென்று பலமுறை இங்கே எடுத்துச் சொல்லி வருகிறோம். அதையும் விரைவில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பணியில் இருக்கும்போது, அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் இறந்துவிட்டால், 10 ஆயிரம் ரூபாய் அளிக்கப்படும் திட்டத்தை இப்போது 20 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறார்கள். இது உண்மையிலேயே நன்மை பயக்கும் திட்டம். ஆனால் ஓய்வு நலத் திட்டத்தை இன்னும் நகராட்சி, மாநகராட்சி, தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நடைமுறைப்படுத்தவில்லை. இதுசம்பந்தமாக பலமுறை மேலவையில் சொல்லியும், இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை. ஆகவே பணியில் இருக்கும்போது ஓய்வு பெற்றால் 10 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தை 1—4—1984 முதல் நகராட்சி, மாநகராட்சி மற்றும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்கும் வகையில் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 மார்ச் 15] [திரு. மு. செ. சங்காலிங்கம்]

அடுத்து, சத்துணவுத் திட்டத்திற்கு உண்மையிலேயே நாட்டு மக்களிடத்தில் நல்ல வரவேற்பு இருக்கிறது. ஆனால் விடுபட்டுப் போன முக்கியமான ஒன்றை நான் இங்கே சொல்லியாக வேண்டும். கண்தெரியாத, காது கேளாத குழந்தைகளுக்கான பள்ளிகளுக்கு இத்திட்டத்தை விஸ்தரிக்கவில்லை. சாதாரண மாணவர்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ள இத்திட்டம் கண்தெரியாத, காது கேளாத குழந்தைகள் படிக்கின்ற பள்ளிகளுக்கு விஸ்தரிக்கப்படாதது சரியல்ல. அவர்களுக்கும் இத்திட்டத்தை உடனடியாக விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பள்ளி மாணவர்களுக்கு சீருடை, இலவசப் புத்தகம் போன்றவை வழங்குவதை நான் வரவேற்கிறேன். ஆனால் இன்றயதினம் மாணவர்களுக்குப் பாடம் கற்றுத்தருகிற ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பும், உயிர் பாதுகாப்பும் இல்லை. ஆசிரியர்களுக்கு சட்டப்படி பணிப்பாதுகாப்பு தர வேண்டுமென்று பலமுறை போராட்டங்கள் எல்லாம் நடைபெற்றன. ஆனாலும் இதுவரை அவர்களுக்கு சட்டபூர்வமான பணிப் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. அண்மையில் திருப்பத்தூரிலுள்ள ஒரு கல்லூரியில் ஓர் ஆசிரியர் தாக்கப்பட்டிருக்கிறார். நிர்வாகத்தினர் அந்த ஆசிரியரை கல்லூரிக்குள்ளேயே ஆள் வைத்து தாக்கியிருக்கிறார்கள். மேலும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கற்றுத் தரும் சூழ்நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை இருக்கிறது. இதைச் சுட்டிக்காட்டியும்கூட, நிர்வாகத்தினர் மீது நடவடிக்கை எடுக்க சட்ட ரீதியாக தனியார் கல்லூரிகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தில் வழிவகை இல்லை. நிர்வாகத்தினர் தவறு செய்தால், நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகை செய்யும் வகையில் சட்டத்தை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் நேரத்தில் சொல்லியதுபோல், ஏற்கெனவே கர்நாடகா, ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களில் எல்லாம் போனஸ் அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் நாட்டிலே மட்டும் இதுவரை வழங்கப்படவில்லை. அதையும் உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு தொழில் வரியையும் ரத்து செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக, சென்னையில் ஒரு மருத்துவப் பல்கலைக் கழகம் வருவதை வரவேற்கிறேன். ஆனால் ஒன்றைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே இருக்கின்ற பல்கலைக் கழகமே சரியாக நடைபெறவில்லையே. உதாரணத்திற்கு மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் 4 ஆண்டுகளாகத் தேர்தல் நடைபெறவில்லை. அது ஓர் அரசு அலுவலகம்

போல் இயங்கிக்கொண்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அங்கு இல்லை. இப்போது இருக்கின்ற சட்ட திட்டங்களை மாற்றி மதுரை-காமராஜர் பல்கலைக் கழகத்திற்கு உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு அந்தப் பல்கலைக் கழகம் இயங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு ஆளுநர் உரைக்கு நன்றிதெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-40)

* கவிஞர் முத்துலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் தந்த சரித்திர நாயகனின் சிந்தனைக்கு செயல் வடிவம் தருகின்றதைப் போல உள்ள இந்த ஆளுநர் உரையினை நான் வரவேற்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் மருத்துவ மனையில் இருந்தபோது வாயுள்ள ஜீவராசிகள் எல்லாம் அழுதன. வருத்தமுற்றன. அப்போது அழாதவர்கள் பாவம் செய்தவர்கள் என்று சொல்லக்கூடிய அளவில் சூழ்நிலை இருந்தது.

இராமன் காட்டுக்குச் சென்றபோது, யார் யார் அழுதார்கள் என்று கேட்ட போது,

“ கிள்ளையொடு பூவையழுத,
கிளர்மாடத் துள்ளுறையும் பூசை அழுத
பெரியோரை என் சொல ”

என்று கம்பர் கூறுவார்.

கருவினில் இருக்கக்கூடிய பிள்ளையே அழுதால், பெரியோரைப் பற்றி என்ன கூறுவது என்று கூறுவார். அதைப்போல, தாய் வயிற்றில் இருந்த பிள்ளைகள் எல்லாம் அழுதன, புரட்சித் தலைவர் மருத்துவமனையில் இருந்த போது.

கோயிலுக்குச் செல்லாதவர்கள் எல்லாம் கோயிலுக்குச் சென்றார்கள். 60 ஆண்டுக்காலமாக கோயிலுக்கே சென்றறியாத மாண்புமிகு உறுப்பினர் திரு. இராகவானந்தம் அவர்களே கோயிலுக்குச் சென்று வேண்டுதல் விடுத்தார்கள். ஆக, நாத்திகர்களைக் கூட, ஆத்திகராக்கிய பெருமை புரட்சித் தலைவரையே சாருகிறது. மற்றவர்களுடைய வாழ்த்துக்களும், அவர் செய்த தான தருமங்களும்தான் அவரைக் காத்தன. அப்படி அவரைக் காத்ததால் தான், அவர் மீண்டும் வலிவோடும் பொலிவோடும் திரும்ப வந்திருக்கிறார். அப்படி அவர் திரும்ப வந்த காரணத்தால்தான், ஏழையெளிய மக்களுக்கெல்





லாம் பலன் கொடுக்கக்கூடிய நல்ல பல திட்டங்களையெல்லாம் ஆளுநர் உரை நமக்குக் கொடுத்திருக்கிறது. அதற்காக, புரட்சித் தலைவரை அமெரிக்காவுக்கு அனுப்பி, உடல் நலம் பெற பெரு முயற்சியெடுத்துக்கொண்ட, மாண்புமிகு அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்களையும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு பாராட்டுகிறேன்.

எட்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளில் தமிழ் நாட்டுக்கு நியாயம் வழங்கப்படவில்லையென்றும், அதனால் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்றும், அந்த இழப்பை ஈடுகட்டக்கூடிய வகையில், ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிதி ஒதுக்கும்போது, தமிழ் நாட்டுக்கு அதிக அளவு நிதி ஒதுக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். ஏன் அதிக நிதி ஒதுக்கவில்லையென்று கேட்டால், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொன்னது போல், தனி நபர் வருமானம் இங்கே இப்போது உயர்ந்திருக்கிறது.

ஏன் தனி நபர் வருமானம் உயர்ந்திருக்கிறது என்றால், மக்கள் தொகை முன்பு இருந்ததை விட இப்போது குறைந்திருக்கிறது. மக்கள் தொகை குறையக் குறைய தனி நபர் வருமானம் அதிகமாகிறது. பெருகப் பெருக தனி நபர் வருமானம் குறைந்து கொண்டே போகிறது. ஆகவே அதற்குக் காரணம், குடும்ப நலத் திட்டத்தை நாம் நல்ல முறையில் நிறைவேற்றியது தான்.

இந்தியாவிலேயே குடும்ப நலத் திட்டத்தை பிற மாநிலங்களோடு போட்டியிட்டு, வெற்றிகரமாக-நிறைவேற்றிக் காட்டிய மாநிலம் தமிழ்நாடு மாநிலம் ஒன்றுதான். அப்படி யாரையும் விட சிறப்பாக நிறைவேற்றியதால்தான் தமிழ் நாட்டில் மக்கள் தொகை குறைவானது. அந்த அடிப்படையில் தனி நபர் வருமானம் அதிகரித்துள்ளதாக புள்ளி விவரம் காட்டுகிறது. ஒரு பக்கத்தில், குடும்ப நலத் திட்டத்தை அமல் படுத்துங்கள் என்று மாநிலங்களுக்குத் தாக்கீதுகள் அனுப்பிக் கொண்டிருக்கின்ற மத்திய அரசு, குடும்ப நலத் திட்டத்தை சிறப்பாக நிறைவேற்றிய இந்த அரசுக்கு, தனி நபர் வருமானம் அதிகமானதாக இருந்தாலும், அதிக நிதி உதவி செய்யவேண்டியதிருக்க நிதியைக் குறைத்து, அதற்குத் தண்டனை கொடுக்கக்கூடிய அளவில் வழங்க வேண்டிய நிதியைக் கூட குறைத்துக் கொண்டிருக்கிறது.

நாடாளுமன்றத் தொகுதிகள் மக்கள் தொகை அடிப்படையில்தான் நிர்ணயிக்கப்படுகின்றன. மக்கள் தொகை மற்ற மாநிலங்களை விட இங்கே குறைவாக இருப்பதால் இங்கே எற்கெனவே இருந்த 41 இடங்களுக்குப் பதிலாக 39 இடமாக அது குறைந்து விட்டது. அதற்குக் காரணம் நாம் குடும்ப நலத் திட்டத்தை சிறப்பாக அமல் நடத்தியதுதான். இப்படி அந்தத் திட்டத்தை சிறப்பாக அமல் நடத்தியதற்காக, அதிக நிதி உதவி செய்வதுடன், போனஸ் பர்சும் கொடுக்கும் வகையில் நாடாளுமன்றத்திலும், நமக்கான இடங்களை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை எந்த அடிப்படையில் இருந்ததோ, அந்த அடிப்படையில் நிதியுதவி வழங்க வேண்டுமென்று சொல்கிறபோது, 1971 ஆம் ஆண்டு தனி நபர் வருமானம் எந்த அளவில் இருந்தது என்ற அடிப்படையில் மத்திய அரசு நிதியுதவி செய்ய வேண்டுமென்று இந்த அறிக்கையில் இருக்கிறது. ஆனால் அது தெளிவாக இல்லை. "1971 ஆம் ஆண்டு மாநிலங்களில் நிலவிய மக்கள் தொகையைத் தான் அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென்று மத்திய அரசு எடுத்துள்ள சரியான முடிவு, நபர்வாரி வருமானத்தை வைத்து நிர்ணயிக்கும் நிதியுதவிகளுக்கும் பொருந்துமாறு செய்ய வேண்டும்" என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நபர்வாரி வருமானம் என்றால் எந்த ஆண்டு நபர்வாரி வருமானம் என்று சரியாகக் குறிப்பிட்டிருந்தால், எங்களைப் போன்றவர்களுக்குப் புரிந்து கொள்ள முடிந்திருக்கும். அதை இரண்டு மூன்று முறை படித்தால்தான் விளங்குவதாக இருக்கிறது. அப்படியே பத்திரிகைகளில் போடுவதால்தான், இந்த அறிக்கையை பொதுமக்கள் புரிந்தும் புரியாதவர்களாகப் போய் விடுகிறார்கள். ஆகவே மொழி பெயர்ப்பு செய்யும்போது, எல்லோருக்கும் புரியும் வகையில் எளிமையாக இருந்தால்தான் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக நாடுகளில் எல்லாம், தமிழ் நாட்டின் ஒரு திட்டத்தைப் பாராட்டுகிறார்கள் என்றால், அது சத்துணவுத் திட்டம் ஒன்றுதான். பசித்த மக்களுக்கெல்லாம் சோறிட வேண்டுமென்று விரும்பிய வள்ளலாரின் கொள்கையை நிறைவேற்றியது இந்த அரசுதான். இந்த சத்துணவுத் திட்டம் இந்தியாவில் உள்ள மாநிலங்கள் எல்லாம் பின்பற்றி, செயல்பட விரும்புகின்ற ஒரு திட்டமாக இருக்கின்றது. அதைப்போலவே இன்னொரு முக்கியமான திட்டம், மற்ற மாநிலங்கள் எல்லாம் பாராட்டுகிற திட்டம் இருக்கிறது என்றால், அது ஆயிரம் கோடி ரூபாயில் அமைய விருக்கின்ற தொழில் கல்வி வளர்ச்சித் திட்டம்தான்,





(முற்பகல் 11-45)

அந்தத் திட்டம் சரியான முறையில் நிறைவேற்றப்பட்டால், இன்னும் இருபது ஆண்டுகளுக்குப் பின் தமிழ் நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்து விடும். பி.ஏ., எம்.ஏ., படித்த பட்டதாரி இளைஞர்கள் படித்துவிட்டு வேலை இல்லை என்று சுற்றுகிற நிலைமை இனிமேல் வாராது. அடுத்த தலைமுறை நன்றாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு இருந்த காரணத்தால்தான் நீண்ட காலம் பயன் அடையக்கூடிய இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்.

அதைப்போல மாணவ மாணவியருக்கு முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை இலவசமாகச் சீருடை வழங்குவதாகவும், அடுத்த கல்வியாண்டிலிருந்து இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்குவதாகவும் அறிவித்திருக்கிறார்கள். அதில் தகுதியுள்ள பிள்ளைகளுக்கு வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் கூட சந்தேகத்தை எழுப்பினார். 'தகுதியுள்ள பிள்ளைகள்' என்றால், அரசாங்கம் உதவி செய்வதற்குத் தகுதி வாய்ந்தவர்கள், பொருளாதார வசதியற்ற பெற்றோர்களின் குழந்தைகள் என்ற அடிப்படையில்தான் 'தகுதியுள்ள பிள்ளைகள்' என்று போட்டார்களே தவிர, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கூறியதைப்போல வேறு கண்ணோட்டத்தில் போடவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நம் சென்னைப் பல்கலைக் கழகப் பாடப் புத்தகம் பற்றி ஒன்று சொல்ல வேண்டும். இது சிலருக்குக் கசப்பாக இருந்தாலும் அதைச் சொல்லியாக வேண்டும். சென்னைப் பல்கலைக் கழகப் பாடத் திட்டத்திலே ராஜராஜனைப் பற்றியும், பிரதமர் இந்திரா காந்தி அவர்களைப் பற்றியும், கலைஞர் அவர்களைப் பற்றியும், பாரத மாதாவைப் பற்றியும் மிகவும் இழிவாகவும், தாக்குறைவாகவும் எழுதியிருக்கின்றார்கள். கடல் கடந்துசென்று அயல்நாடுகளில் தமிழவின் சிறப்புக்களைப் பறை சாற்றியவன் இராஜராஜன், ஊராட்சித் தலைவர்களை குடவோலை முறை மூலம் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சட்டத்தை முதன் முதலில் கொண்டு வந்தவன். உலகத்தில் இருக்கிற பொறியியல் வல்லுநர்கள் எல்லாம் வியந்து போற்றும் தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலைக் கட்டியவன் இராஜராஜன். விஞ்ஞான சாதனை வளராத காலத்திலே இத்தகைய கோவிலைக் கட்டியவன். அப்படிப்பட்ட இராஜராஜனைப் பற்றி இழிவாக எழுதியிருக்கின்றார்கள். தேர்தலுக்கு நிற்பவர்களுக்கு எப்படிப்பட்ட தகுதிகள் இருக்க வேண்டும் என்று வரையறை வைத்திருந்தார். எவரெவர் எல்லாம் தேர்தலில் நிற்கக்கூடாது என்றும் வரையறை செய்து சட்டமாக்கி இருந்தான் இராஜராஜன்.

கள் குடிப்பவர்கள், பெண்களை மானபங்கம் செய்தவர்கள், திருட்டுக் குற்றம் செய்தவர்கள், கொலைக் குற்றத்தில் ஈடுபட்டவர்கள், வரி ஏய்ப்பு செய்தவர்கள் அல்லது ஏதோனுமொரு பஞ்சாயத்தில் அபராதம் கட்டியவர்கள் தேர்தலில் நிற்கக்கூடாது. அதுமட்டுமல்ல, இதுபோன்ற குற்றங்களை உயிரோடு வாழ்கின்ற உறவினர் யாராவது செய்திருந்தாலும் கூட, தேர்தலில் நிற்கக்கூடாது, எப்படிப்பட்ட ஒழுக்கமும், கண்ணியமும் இந்தத் தமிழ் நாட்டிலே தழைத்தோங்க வேண்டுமென்று இராஜராஜன் எண்ணியிருந்தால், இப்படிப்பட்ட சட்டத்தைக்கொண்டு வந்திருப்பான் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போல ஒரு சட்டத்தை நாம் இப்போது கொண்டு வந்தால் தேர்தலில் நிற்க யாரும் கிடைக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட கண்ணோட்டம் வளர்வதற்குப் பாடுபட்ட இராஜராஜனைப் பற்றி எவ்வளவு இழிவாக எழுதி இருக்கிறார்கள் என்பதைத் தலைவர் அவர்கள் அனுமதியோடு படிக்கின்றேன்.

"ராஜராஜனின் சிலைக்காக வருந்துகிறார்.
ராஜராஜனின் சிலையின் உள்ளே நரம்புகள் உண்டா
நாளங்கள் உண்டா
இதயத்துடிப்பையேனும் கேட்டதுண்டா
சிலையாகுமுன்னர் ஜீவித்திருந்த இம்மன்னன்
என்னத்தைச் செய்து கிழித்து விட்டானாம்.
ஈழம் கொண்டானாம்
சாவகம் வென்றானாம்
காலனி ஆதிக்கத் தொழுநோய்த் தேமலை
பூமியின் முகத்தில் எழுதிய புல்லனுக்கு
மக்களாட்சியா மகத்துவம் சேர்க்கும்
பிரகதீஸ்வரர் ஆலயத்துக்காக
குடும்ப விளக்கின் கொழுந்துகளை எல்லாம்
மண்ணில் தோய்த்த மாபாதகன் இவன்
தஞ்சை நகரில் தேவடியாள் தெருக்களுக்குக்
கால்கோள் விழாச் செய்த காமுகன் இம்மன்னன்
மக்களாட்சியின் மகத்துவத்தை
சிலையான பின்னரும் கற்பழிக்கின்றான்"

இம் மண்ணில் முடியாட்சி இருந்த காலத்திலேயே—ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மக்களாட்சித் தத்துவத்தை பலாச்செய்வதற்காக இந்த மண்ணிலே விதை தூவியவன் இராஜராஜன். அவனை மாபாதகன் என்றும், காமுகன் என்றும் எழுதியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கவிதையை—இன்குலாப் என்பவர் எழுதிய கவிதையை—பாடப் புத்தகத்திலே வைத்திருக்கிறார்கள்.



இக்கவிதையை யாரேனும் பரிந்துரை செய்து படித்துப் பார்க்காமல் சேர்த்தார்களா, அல்லது இனப் பகைவர்களும் மொழிப் பகைவர்களும் பாடநூல் குழுவிலே ஊடுருவி இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். இதைக் கல்வித் துறையின் கண்ணுக்கும், கவனத்திற்கும் கொண்டு வருவது என்னுடைய கடமையாகும் என்பதால் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படி யாரோ இராஜராஜ சோழனைப்பற்றி, இந்திரா காந்தி பற்றி, கலைஞர் அவர்களைப் பற்றி, பாரதமாதா பற்றி எழுதியிருக்கிறார்கள் என்று இருந்துவிட முடியாது. அதேபோல் நாளை புரட்சித் தலைவர் அவர்களைப் பிடிக்காத ஒரு கவிஞன் எழுதுவான். புரட்சித் தலைவரைப் பிடிக்காத யாரும் பாடக்குழுவிலே இருந்து, அதைச் சேர்க்கலாம். எனவே கல்வித் துறை இக்கவிதையைப் பரிசீலித்து, பாடப் புத்தகத்திலிருந்து அந்தப் பகுதியை நீக்கவேண்டும் அல்லது அந்தப் பாடப் புத்தகத்தையே தூக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சிலர் மாவட்டங்களைப் பிரிக்கும் பிரச்சினைக்கு இவ்வளவு அவசரம் காட்ட வேண்டுமா என்று பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார்கள். ஒரு மாவட்டத்தை தொழில் வளர்ச்சியிலே பின் தங்கிய மாவட்டமாகக் கருதி உதவி செய்ய வேண்டுமானால், அந்த மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலைகூட இருக்கக்கூடாது என்று மத்திய அரசு வரையறை செய்திருக்கிறது. உதாரணமாக எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், ஏதேனும் ஒரு மூலையில் தொழிற்சாலை இருந்தால் அதைக் காரணம் காட்டி, மத்திய அரசு உதவி செய்வதற்கு முன்வருவதில்லை.

(முற்பகல் 11-50)

அதை இரண்டு, மூன்றாகப் பிரித்துவிட்டால் தொழில் இல்லாத பகுதிகளில் எல்லாம் தொழில் வளரும் என்ற காரணத்தின் அடிப்படையிலே தொழில் வளர்த்தால் மாவட்டத்தில் இருக்கிற மக்கள் எல்லாம் வேலை வாய்ப்பு பெறுவார்கள், வறுமை ஒழியும் என்ற வகையிலே இந்த மாவட்டப் பிரிவினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் தொழில் துறைக்கு அமைச்சராக இருந்த காலத்திலே, மத்திய அமைச்சர் திரு. திவாரி அவர்களிடம், தொழில் வளர்ச்சி இல்லாத மாவட்டம் என்பதை மாற்றி, தொழில் வளர்ச்சி இல்லாத தாலுகா என்ற அளவிலே அதை எடுத்துக்கொண்டு நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். அப்போது அவர்கள் மறுத்து விட்டார்கள். ஆகவே நான் இந்த மன்றத்தின் மூலம், மாவட்டத்தை தொழில் இல்லாத தாலுகா என்ற அளவிலே எடுத்துக்கொண்டு மானியம் வழங்க மத்திய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[கவிஞர் முத்துலிங்கம்] [1985 மார்ச் 15

அடுத்து, ஸ்ரீலங்கா பிரச்சினைபற்றி அறிக்கை தெளிவாக இருக்கிறது. உலக நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து தீர்க்க வேண்டிய பிரச்சினை ஸ்ரீலங்கா பிரச்சினை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் நேற்று கூறினார்கள். அதைப் போலவே உலக நாடுகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து முடிவு கட்ட வேண்டிய பிரச்சினை அது. இன்றைக்கு ஸ்ரீலங்கா நாடாகவும் இல்லை, காடாகவும் இல்லை. ஒரு கொடிய நரகமாக இருந்து கொண்டிருக்கிறது. நரகத்தின் நேரிடையான ஒரு ஆட்சி நடை பெறுகின்ற இடம் இந்த உலகத்தில் ஒன்று உண்டு என்றால், அது சிங்களத் தீவுதான். இந்து மகா சமுத்திரம் இன்றைக்கு தண்ணீர் சமுத்திரமாக இல்லை. ஸ்ரீலங்கா தமிழர்களின் கண்ணீர் சமுத்திரமாக இருக்கிறது. ஸ்ரீலங்காவின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாக தமிழினத்தை சிங்கள அரசு எழுதத் தீர்மானித்துவிட்டது. யூதர்களை ஒழிப்பதுதான் எனது லட்சியங்களில் ஒன்று என்று கொள்கைப் பிரகடனம் செய்து வந்த ஹிட்லர் கூட இந்த அளவுக்கு அவர்களைச் சித்திரவதை செய்யவில்லை. “சிங்களத் தீவினுக்கு ஓர் பாலம் அமைப்போம். சேதுவை மேடுறுத்தி வீதி செய்வோம்” என்றான் பாரதி. கற்களால் நாம் ஸ்ரீலங்காவிற்கும், இந்தியாவுக்கும் பாலம் கட்டாவிட்டாலும் கூட, ஸ்ரீலங்கா அரசு தமிழர்கள் சவங்களின் மீது அந்தப் பாலத்தைக் கட்டி விடுமென்ற அஞ்சத்தக்க சூழ்நிலை உருவாகியிருக்கிறது. மண்டை ஓடுகளைக் கிரீடங்களாக அணிந்துகொண்டு, எலும்புக் கூடுகளிலே சிம்மாசனத்தை அமைத்துக் கொண்டு, மயான பூமியிலே ஆட்டம் போடவேண்டிய பேய்கள் எல்லாம் ஜெயவர்த்தனாவின் வடிவத்திலே, அதுலத்முதலியின் வடிவத்திலே ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றன. முன்பு இதைப்போல 1974-லே படுகொலை அங்கே நிகழ்ந்தபோது, திருமதி பண்டாரநாயகா தமிழ் நாட்டுக்கு வந்தார். அப்போது அவர் மாலை மரியாதை வாங்கிக்கொண்டு சென்றார். ஆனால் இன்றைக்கு அதைப்போல இங்கே வருவதற்கு அங்கு இருக்கிற ஆட்சியாளர்களுக்கு யாருக்கும் துணிவு இல்லை. நேராக ஸ்ரீலங்காவிலிருந்து டெல்லிக்குப் போய்விடுகிறார்கள். காரணம் புரட்சித் தலைவருடைய அரசுக்கு அஞ்சி. ஸ்ரீலங்கா தமிழர்களுக்குப் பாதுகாப்பாக இருப்பது புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு என்பதற்கு இது ஒரு உதாரணம் இப்படிப்பட்ட நல்ல நோக்கங்களை எல்லாம் உள்ளடக்கிய வகையில் ஆளுநர் உரை அமைந்திருக்கிற காரணத்தால், அந்த உரையைப் பாராட்டி அமைகிறேன். வணக்கம்.



1985 மார்ச் 15]

* மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : மாண்புமிகு மேலவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைக் கூறுகின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்தமைக்கு முதலில் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே ஆளுநர் உரையைத் துவக்கி வைத்துப் பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் தம் பேச்சினுடைய ஆரம்பத்திலே “இப்படிப்பட்ட ஆளுநர் உரையிலே கருத்துக்கள் தெரிவிக்கின்ற எதிர்க் கட்சிகள் எடுத்த எடுப்பிலே அதிலே ஒன்றுமில்லை என்று சொல்லிவிடுகிறார்களே, அப்படிப்பட்ட மரபு சரிதானா? அதிலே இருக்கின்ற அம்சங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி, அதற்குப் பின்னாலே அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ளலாம்” என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அவர்கள் ஆளுநர் உரையை முன்மொழிந்து பேசிய அந்த மொத்த நேரத்தில், ஆளுநர் உரையிலே இருக்கின்ற நல்ல கருத்துக்களைச் சொல்வார்கள் என்று நான் எண்ணிக்கொண்டிருந்தபோது, அவர்களுடைய பேச்சினுடைய பெரும் பகுதியில் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சொல்லி, இது சரிதானா, எங்கள் மனதெல்லாம் வாடிப்போயிருக்கிறது என்று சொல்லி, அதற்கு மன்னிப்பு கேட்க வேண்டுமென்று கேட்டார்கள். அந்த உரையிலே பெரும் பகுதியை அவர்கள் அதற்காகச் செலவிட்டார்கள். உள்ளபடியே அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த உரையிலே ஏதாவது நல்ல கருத்துக்கள் இருந்திருக்குமென்று சொன்னால், அவர்கள் அதனை எடுத்துச் சொல்லியிருக்க முடியும். சட்டியிலே இருந்தால் தான் அகப்பையிலே வரும். இந்த ஆளுநர் உரையிலே ஒன்றும் இல்லை என்கிற அடிப்படையிலே, அவர்கள் பேசிய பெரும் பகுதியான நேரத்தில் எங்களுடைய தானைத் தலைவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொன்னார்கள். நான் ஒன்றைத் தெளிவாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக ஆளுநர் உரையிலே ஒன்றுமில்லை என்பதுதான் எங்களுடைய கருத்தும்.

(முற்பகல் 11-55)

ஆளுநர் உரை 27 பாராக்களைக் கொண்டிருக்கிறது. அதில் 6-வது பாராவில் தொடங்கி 26-வது பாரா வரையில் ஆளுநர் அவர்கள் இந்த ஆட்சி எதைச் செய்ய இருக்கிறது என்று எடுத்துச் சொல்லாமல், ஏற்கெனவே நடந்து முடிந்தவைகளை நான் முதலில் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று தெரிவித்துவிட்டு தொடங்குகிறார். அதாவது 6-வது பாராவில் “வரும் [illegible] அரசு நிறைவேற்றும் [illegible] [illegible],

பணிகள் சிலவற்றைப் பற்றிய செய்திகளை உங்கள் முன் வைப்பதற்கு முன், சென்ற ஆண்டில் அரசு எய்திய சாதனைகள் சிலவற்றின் சிறப்புகள் குறித்து, சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்” என்று ஆரம்பித்து, இறுதியில் 26-வது பாராவில் முடிக்கிறார். அதில் என்ன சொல்கிறார் என்றால் “ஆக இவ்வரசு, வாக்காளப் பெருமக்களுக்கு அளித்த பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றி வருவதுடன்” என்று சொல்லி . . . . “இனி இவ்வரசு எதிர் காலத்தில் தொடங்கக் கருதியுள்ள புதிய திட்டங்கள் பற்றிய விவரங்களை உங்கள் முன் எடுத்துக் கூற விரும்புகிறேன்” என்று கூறி, அதைத் தொடர்ந்து சில விவரங்களைச் சொல்லிவிட்டு, கடைசியாக 27-வது பாராவோடு முடித்துவிடுகிறார். இதுதான் ஆளுநர் அவர்களின் உரை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் பேசும்போது, காரில் உள்ள முன் பக்கத்துக் கண்ணாடி பற்றியும், பின்பக்கத்தில் இருப்பதைப் பார்க்க வைக்கப்பட்டிருக்கும் சின்னக் கண்ணாடி பற்றியும் உதாரணமாகக் கொண்டு வந்து இங்கே பேசினார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு முன்னால் பார்த்துப் போகிற அரசு என்றும் முன்னால் இருக்கிற கண்ணாடியைத்தான் பார்க்கிறது என்றும், பின்பக்கத்தைப் பார்க்க வைத்திருக்கும் கண்ணாடியைப்பற்றிக் கவலைப்படுவதில்லை என்றும், அதைப் பார்ப்பதில்லை என்றும் குறிப்பிட்டார்கள். ஆனால் ஆளுநர் தன் உரையில் 6-வது பாரா முதல் 26-வது பாரா வரை காரில் உள்ள சின்னக் கண்ணாடியைப் போல் பின்னால் இருப்பவைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் எடுத்துச் சொல்லியிருக்கிறாரே தவிர வேறு ஒன்றுமில்லை. கடைசி பாராவில்தான் அவர் முன்னால் இருக்கிற கண்ணாடியைப் போல் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

மேலும் அவர் பேசும்போது தங்களுடைய மனமெல்லாம் புண்படும் அளவுக்குப் பேசிவிட்டார்கள் என்று கூட குறிப்பிட்டார்கள். ஆனால் இந்த உரையைப் பார்க்கும்போது 6-வது பாரா முதல் 26-வது பாரா வரை அரசு ஏற்கெனவே செய்தவைகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார் என்ற அடிப்படையில் பார்க்கும்போது அவர் எதையெதையெல்லாம் சொல்லாமல் விட்டுவிட்டார் என்பதையும் நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே வந்து அமர்ந்திருந்தார்கள். நான் பேசுகிற நேரத்தில் அவர்கள் இருப்பார்கள், நம் கருத்தை எடுத்துச் சொல்லி அவரே அறிகிற வாய்ப்பைப் பெறலாம் என்று நான் எண்ணியிருந்தேன். ஆனால் பல்வேறு காரணங்களால், அல்லது வேலை காரணமாக இங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்று நம்புகிறேன்.



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் பேசியிருக்க வேண்டும்.

மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : அதற்குத் தகுந்த வாய்ப்பைத் தாங்கள் அளிக்கவில்லை.

எனவே 6 முதல் 26 பாராக்கள் வரையில் ஏற்கெனவே செய்த பல்வேறு காரியங்களைப்பற்றி ஆளுநர் அவர்கள் சொல்லியிருப்பதால், நான் சொல்லாமல் விடப்பட்ட சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த நாட்டை ஆண்டபோதுதான் புட்லூர் தண்டபாணி இறந்துபோனார். திருவில்லிப்புத்தூரில் எங்களுடைய இயக்கத்தைச் சார்ந்த வெற்றிச்செல்வன் கொலை செய்யப்பட்டார். அதைப் போலவே இளஞ்செழியன் என்ற திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியைச் சார்ந்த தொண்டன் கூட்டத்தில் பேசிவிட்டுத் திரும்பும்போது, கல்லால் அடித்துக் கொல்லப்பட்டான். மதுராந்தகத்தில் ஞானசௌந்தரி என்கிற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பெண் கொலை செய்யப்பட்டு இதுவரை அதற்கான எந்த முகாந்திரமும் கண்டுபிடிக்கப்படவில்லை. அதைப் போலவே திருச்செந்தூரில் நகை சரிபார்க்கும் அதிகாரியாக இருந்த திரு. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் கொல்லப்பட்டது இந்த ஆட்சிக் காலத்தில்தான். அதாவது 6 முதல் 26 பாராக்கள் வரை சாதனைகள் செய்து முடிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட அந்தக் காலத்தில்தான் இந்தக் கொலைகள் நடைபெற்றன. அடுத்து திருவரங்கத்தில் கோயில் அதிகாரி வெங்கடாசலம்—இளைஞர்—வாழ்க்கையின் வசந்த காலத்தைப் பற்றி கனவு கொண்டிருந்தவர் இறந்தார். அதைப் போலத்தான் பேர்ணாம்பட்டில் ஆஷா என்கிற பெண்ணும் புரசையில் இராஜேந்திரனும் கொலை செய்யப்பட்டார்கள். அதைப் போலவே சேலம் இச்சிப்பாளையத்தில் ஒரு ஹரிஜனப் பெண் கற்பழித்துக் கொலை செய்யப்பட்டார். மேட்டூரில் பெண் சப்-இன்ஸ்பெக்டர் கலா கொலை செய்யப்பட்டார். இப்படிப்பட்ட கொலைகள் எல்லாம் இந்தக் காலத்தில்தான் நடைபெற்றிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் பொறுப்பில் இருந்த போது, அ.தி.மு.க.வினர் தாக்கப்பட்டதையெல்லாம் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார். ஆனால் இந்த ஆட்சியில் நடைபெற்றது என்ன? திரு. எம். சி. பாலன் யார்? அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்

கழகத்தின் அவைத் தலைவராக இருந்தார். சாதாரணமானவர் அல்ல. ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். ஆனால் இந்த ஆட்சியில் தான் அவர்மீது ஒரு வழக்கு போடப்பட்டது. என்ன வழக்கு தெரியுமா ? அவர் ஒரு ஓட்டலில் சாராயம் குடித்துவிட்டு ஒரு பெண்ணோடு இருந்தார் என்று வழக்கு போடப்பட்டது. புரட்சித் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் வாழ்க என்று அடிவயிற்றிலிருந்து கோஷம் போட்ட அந்த அவைத் தலைவர் மீது, அந்த நாடாளுமன்ற உறுப்பினர்மீது வழக்கு போடப்பட்டது. அதையெல்லாம் சொல்லியிருந்தால், அந்தக் குடும்பங்களில் ஏற்பட்ட வடு நீங்கியிருக்காதா ?

(நண்பகல் 12-00)

மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அதற்கு வருத்தம் தெரிவித்திருக்கலாம், மன்னிப்பு கேட்டிருக்கலாம். "இவ்வளவு நன்மைகள் செய்திருந்தாலும், என்னுடைய பதவிக் காலக் கட்டத்திலே இவ்வளவு கொலைகள் நடைபெற்றன. ஆகவே அதற்காக வாடிக்கொண்டிருக்கிற அவரது குடும்பத்தினரிடம் மன்னிப்புக் கேட்கிறேன்" என்று சொல்லியிருக்கலாம். இன்று காலை கூட இங்கே வந்து அமர்ந்திருந்தார்கள். என்னவோ தெரியவில்லை, ஒன்றும் பேசாமல் சென்று விட்டார்கள். ஒரு கால கட்டத்திலே பேசுவார்கள். அன்றைக்காவது மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் உள்ள ஒரு மையக் கருத்தை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ". . . . ஆக இவ்வளவு வாக்காள பெருமக்களுக்கு அளித்த பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றி வருவதுடன் . . ." என்று ஆளுநர் சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு அப்பட்டமான பொய் இது. வாக்காள பெருமக்களிடம் மாநகராட்சித் தேர்தலை நடத்துவோம் என்று சொன்னார்கள். இந்த வாக்குறுதியை நிறைவேற்ற ஏதாவது கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறதா ஆளுநர் உரையில் ? மாநகராட்சியில் பணிகளைக் கவனிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இருக்க வேண்டாமா ? இன்றைக்கு நம்முடைய மாநகராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பொறுப்பில் இல்லை என்பதாலே சென்னை நகரம் எந்த நிலையில் இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். நல்ல நேரம், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே அமர்ந்திருக்கிறார்கள். அண்ணா நகரில் மாலை நேரத்தில் போய்ப் பாருங்கள். ஜைன மதத்தைச் சேர்ந்தவர்களை போல எல்லோரும் முகத்தில் துணியைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்குக் கொசு வாயில் புகுந்துவிடுகிறது. அண்ணா நகரில்



வாழவே முடியவில்லை. மாலை 6 மணிக்கு மேல் அண்ணா நகரில் யாரும் நடமாட முடியாது. புல் வளர்ப்புத் திட்டம் என்று சொல்லி, எம்.எம்.டி.ஏ. வினர் கழிவு நீரைக் கொண்டுவந்து கொட்டுவதால், அதை கொசு உற்பத்தி செய்கின்ற கேந்திரமாக ஆக்கியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அண்ணா நகரில் பயங்கரமாகக் கொசுத் தொல்லை இருக்கிறது. மாநகராட்சித் தேர்தல் நடத்தப்பட்டு உறுப்பினர் இருந்தால், நிச்சயமாக அதுகுறித்து போராட முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கொசுத் தடுப்பு மருந்து தெளிப்பதாகச் சொல்கிறார்கள். 150 வட்டங்களுக்கும் இவர் ஒருவரே பிரதிநிதித்துவம் கொடுக்க முடியாது. ஆகவே வாக்காளப் பெருமக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுகின்றன என்று ஆளுநர் உரையில் இருப்பது சரிதானா என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்று முதல் எட்டாவது வரை உள்ள ,தகுதியுள்ள மாணவர்களுக்குச் சீருடை அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசும்போது, 'தகுதியுள்ள மாணவர்கள்' என்பதற்கு தவறான உதாரணத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று சொன்னார்கள். அதை நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுக்கு இதிலே சந்தேகம் வருகிறது. ஏற்கெனவே பல்வேறு திட்டங்களை அறிவித்தார்கள். அவற்றை அறிவிக்கும்போது, மக்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் திட்டங்கள், ஏழை எளியவர்களுக்குப் பயன்படும் திட்டங்கள் என்று அறிவித்தார்கள். அவற்றை நடைமுறைப் படுத்தும்போது, பல்வேறு சிக்கல்கள் வருகின்றன. இந்தச் சிக்கல்கள் நீங்கி எவ்வளவு பேர் பயன் அடைகிறார்கள் என்று பார்த்தால், 'negligihle number' தான். மிகவும் குறைந்த அளவு எண்ணிக்கையுள்ளவர்கள்தான் பயன்பெற்றிருக்கிறார்கள். 'தாலிக்குத் தங்கம்' என்று சொன்னார்கள். எல்லா ஏழைப் 'பெண்களுக்கும் தருவார்கள் என்று சொன்னார்கள். கடைசியில் 'தாய் தாலி அறுத்திருந்தால்தான் மகளுக்குத் தங்கம்' என்ற அளவிற்கு வந்தது. அதைப் போலவே எஸ்.எஸ்.எல்.சி., பி.யு.சி., பி.ஏ. படித்த மாணவர்களுக்கு உதவித் தொகை 50 ரூபாய், 75 ரூபாய், 100 ரூபாய் வழங்கப்படும் என்று சொன்னார்கள். இதனால் எத்தனை மாணவர்கள் பயனடைகிறார்கள்? இந்தப் பயனைப் பெற வேண்டும் என்றால், அவர்களுக்கு 50 ரூபாய்க்கு மேல் வருமானம் இருக்கக் கூடாது. குடும்பத்தின் மொத்த வருமானம் இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய்க்கு மேல் போகக் கூடாது என்று இருக்கிறது. அப்படியானால் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர்கள், பி.யு.சி. வரை படித்தவர்கள் பிச்சைக்காரர்களாக இருக்க வேண்டுமா ? எந்தவிதமான வருமானம் இல்லாமல்.

அவருடைய குடும்பத்திலே யாருக்கும் வருமானம் இல்லாமல் இருக்க வேண்டுமா ? அதைப் போலவே இந்த அவையிலேயே ஒன்றைச் சொன்னார்கள். ஐந்து கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ அரிசி தருவோம் என்று சொன்னார்கள். உயர்நீதி மன்றத்திலே வழக்கைப் போடும்போது நாங்கள் ஒன்றைச் சொல்லுவோம். அஃபிடவிட்டிலே சொல்லுவோம்

"The averments made in the plaint may be treated as Part and Parcel of this affidavit"

என்று சொல்லுவோம். அந்த மாதிரி ஆளுநர் தன்னுடைய அறிக்கையிலே "நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 1984 ஆகஸ்ட் 15 ஆம் நாள் அளித்த பல்வேறு உறுதிமொழிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது" என்று அதையும் சேர்த்துக்கொள்கிறார்கள். ஆகவேதான் நாங்கள் சந்தேகப்படுகிறோம். 1 முதல் 8-வது வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு இலவசச் சீருடை என்று சொல்லியிருந்தால், பரவாயில்லை, "தகுதியுள்ள" என்ற வார்த்தையைப் போடுகிறபோது, அதை அமுல்நடத்தும் போது ஒரு ஐந்து, பத்து மாணவர்கள்தான் பயனடைய முடியும். ஆனால் பத்திரிகையில் பார்க்கும்போது, "1 முதல் 8-வது வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு இலவசச் சீருடை" என்று கொட்டை எழுத்துக்களில் வருகிறது. ஒன்று முதல் 8-வது வகுப்பு வரை இலவசப் பாடபுத்தகம் என்று போட்டு அதிலே 'தகுதியுள்ள' என்ற வார்த்தையையும் போட்ட பின்னாலே சந்தேகம் இருக்கின்றது. அதிலே அரசு தெளிவாக இல்லை என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-05)

அடுத்து, ரூ. 10 ஆயிரம் என்பதை ரூ. 20 ஆயிரம் என்று மாற்றியிருக்கிறார்கள். என்றைக்குத் தரப்போகின்றார்கள் ? 'அதற்கு என்று கால வரையறை உண்டா ? எந்தத் தேதியிலிருந்து அப்படித் தரப்போகின்றார்கள் ? ஏதாவது அதற்கு அடிப்படை உண்டா ? பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. குடும்ப நல நிதி 10 ஆயிரம் ரூபாய் என்பதை 20 ஆயிரம் ரூபாய் என்று மாற்றி அதற்குத் தக்கவாறு திட்டங்கள் தயாரிக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். இந்த அரசு எத்தனை உறுதிமொழிகள் கொடுத்திருக்கின்றது? அத்தனையும் காற்றிலேதான் விடப்பட்டிருக்கின்றன. அஷ்யூரன்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டுகளில் பார்க்கிறோம். ஆயிரம் அஷ்யூரன்ஸ்கள் பல்வேறு திட்டங்களைச் சொல்வது என்று இருக்கின்றது. சொல்வதை நிறைவேற்றும்போது. நடைமுறைப்படுத்தும் போது. அதிலே பயங்கரமான ஓட்டைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அடுத்து, நான் ஸ்ரீலங்காப் பிரச்சினையை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு கவர்னர் அவர்கள் மிக அழகாக ஸ்ரீலங்காப் பிரச்சினையைப்பற்றி எடுத்துச்சொன்னார்கள். ஸ்ரீலங்காப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன், அந்தப் பகுதியையே இதிலிருந்து எடுத்துவிடுவது நல்லது என்று நான் கருதுகிறேன். 5-வது பாராவை அதற்காக ஆளுநர் உரையிலே ஒதுக்கியிருக்கின்றார்கள். நம்மால் இயலாத தன்மையை இந்த அறிக்கை மிகத் தெளிவாகத் தெரிவிக்கிறது. உள்ளபடியே சொல்கிறேன் அந்தப் பகுதி நம் இயலாத தன்மையைத் தெரிவிக்கின்றது. ஆகவே அதை எடுக்க வேண்டும். உள்ளபடியே அந்த அறிக்கையை அப்படியே ஸ்ரீலங்கா அரசுக்குக் கொடுத்தால், நம்முடைய கையாலாகாத தன்மையை மிகத் தெளிவாக அவர்கள் தெரிந்துகொள்வார்கள். நான் மெத்த பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். முதல் பாராவிலே சொல்லியிருப்பதைப் பாருங்கள்.

"இலங்கையில் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள படுபயங்கரமான வன்முறை தாக்குதல்கள்" 'படுபயங்கரமான வன்முறை தாக்குதல்கள்' என்று இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். "இந்தியர்களிடையே, குறிப்பாக தமிழ் நாட்டு மக்களிடையே பெருந்துயரை ஏற்படுத்தியுள்ளன. இதற்கு விரைவில் அரசியல் வழி தீர்வு காண வேண்டுமென்று இந்தியப் பேரரசிடம் தமிழ் நாடு அரசு பலமுறை எடுத்துக் கூறிவந்துள்ளது" என்று சொல்லியிருக்கின்றார்கள். நாம் நியாயமாக எடுத்துச் சொல்லியிருக்கின்ற கருத்துக்களை எடுத்துக் கொண்டிருந்தால், ஒரே முறையிலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி எடுக்கப்படவில்லை. இது சாதாரண பிரச்சினையல்ல. ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினை. இன்றைக்குப் பார்க்கிறோம். எந்த அளவுக்குக் கொடுமைகள் அங்கே நடக்கின்றன. இன்றைக்கு அங்கே தாய்மார்கள், இளம் குழந்தைகள், பள்ளியிலே படிக்கின்ற மாணவர்கள் கொல்லப்படுகின்றார்கள். யார் என்று பார்க்காமல் சிவிலியன்களே அடித்துக்கொல்லப்படுகின்றார்கள். "தமிழ் நாட்டு மக்கள் சார்பில் முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பேரரசுக்கு வேண்டுகோள் விடுத்து, இலங்கையில் தமிழர்களை மனிதாபிமானமற்ற முறையிலும், கண்மூடித்தனமாகவும் தாக்கி வருவதை அறவே நிறுத்துமாறு இலங்கை அரசை இந்திய பேரரசு வற்புறுத்த வேண்டுமென்று வலியுறுத்தி வந்துள்ளார்" இது முதல் பாரா. 5-வது வரிசையில் 3 பாராக்கள் இருக்கின்றன. முதல் பாராவிலே இதைச் சொல்லியிருக்கின்றார்கள். ரைட். ஆனால் அடுத்த பாராவிலே என்ன சொல்லியிருக்கிறார்கள்? முதல் பாராவிலே சொல்லியிருப்பதுபோல், மத்திய அரசு நடவடிக்கை எடுத்

திருந்தால், அதற்கு அடுத்த பாரா தேவையில்லை. பலமுறை வலியுறுத்தி அந்தப் பேராபத்தைப்பற்றிச் சொல்கின்றார்கள். 'படு பயங்கரமான வன் முறைகள்' என்று கூறுகிறார்கள். அது முதல் பாராவிலேயே வருகிறது. அதையே ஆளுநரே சொல்கின்றார்கள். பின் பாராவிலே 'இந்திய பேரரசிடம் தமிழ்நாடு அரசு பலமுறை எடுத்துக் கூறியது' என்று வருகிறது. அதை எடுத்துச்சொன்ன பிறகு, அடுத்த பாரா வந்திருக்கக்கூடாது. அதற்கு முன்னாலேயே அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். அடுத்த பாரா வைப் பார்த்தால், "இராமேசுவரம் கடற்கரையில் அமைதியாகவும் நிராயுத பாணியாகவும் மீன் பிடித்து வரும் தமிழக மீனவர்கள்மீது இலங்கை தொடர்ந்து தாக்குதல் நடத்துகிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. முதல் பாராவிலே ஸ்ரீலங்கா தமிழர்கள் படுகொலை குறித்து இருக்கிறது. அதைப்பற்றி பலமுறை சொல்லிக்கொண்டு வருகிறோம் என்று இருக்கிறது. முதல் பாராவிலே ஸ்ரீலங்கா தமிழர்கள் குறித்து, அடுத்த பாராவிலே நம்முடைய தமிழ்நாட்டு மீனவர்களைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. பலமுறை வற்புறுத்தி என்ன பயன்? மத்திய அரசிடம் நாம் எடுத்துக்கூறியும் படுபயங்கரமான படுகொலையை நிறுத்த வேண்டும் என்று சொன்ன அந்தக் கருத்துக்கு அடுத்த பாராவிலே அர்த்தமே இல்லாமல் போய்விடுகிறது. அடுத்த பாராவிலே நம் ஆட்களையே அவர்கள் 'அட்டாக்' பண்ணுகிறார்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது.

"தமிழ்நாட்டு மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், மத்திய அரசு பாதுகாவல் படையை வலுப்படுத்தி இருப்பதோடு கப்பல் படையைச் சார்ந்த ரோந்து படகுகளையும் அனுப்பி வைத்துள்ளது. அது போதுமானதா? அதனால் பிரச்சினை தீர்ந்துபோய் விடுமா? நம்முடைய மீனவர்கள், தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் சுட்டுக் கொல்லப்படுகின்றார்கள். ஸ்ரீலங்கா தமிழனை விட்டுவிட்டார்கள். அடுத்து நம் ஆளை அடிக்கிறான். "இலங்கை தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண இராஜதந்திர வழிகளில் மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளும், இந்திய பிரதமர் மேற்கொண்ட முயற்சிகளும் இப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு காண வழிவகுக்கும் என்று நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்." இந்த மாதிரி நம்பிக்கை கொண்டுள்ளோம் என்றால் என்ன அர்த்தம்? அங்கே இருக்கக்கூடிய தமிழர்கள் இன்றைக்குச் சாகிறார்கள். அடுத்த பாராவிலே நம் ஆட்களைக் கொல்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. முதல் பாராவிலே ஸ்ரீலங்கா தமிழர்கள் குறித்து சொல்லப்படுகிறது. அடுத்த பாராவிலே, பல்வேறு முறைகளிலே எடுத்துச் சொன்ன பிறகு, நம்முடைய மீனவர்கள் நிராயுதபாணியாக இருப்பவர்கள் 'அட்டாக்' பண்ணப்படுகின்றார்கள் என்று சொல்லப்படுகிறது. அதையும் ஆளுநர் அவர்களே சொல்கின்றார்



கள். அதற்கு அப்புறம், நம்பிக்கை கொண்டு இன்றைக்கு என்ன சொல்கின்றார்கள்? "இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண இராஜ தந்திர வழிகளில் மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளும் இந்திய பிரதமர் மேற்கொண்டுள்ள முயற்சிகளும் இப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு காண வழிவகுக்கும்" என்று சொன்ன பிறகு இப்போது "இலங்கை தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைத் தாக்குதல்களைத் தொடர்ந்து அகதிகளின் வருகை பெருகிக் கொண்டே இருக்கிறது" என்று சொல்கிறார்கள். இந்த நம்பிக்கைகொண்டே இங்கே இருந்தீர்கள் என்றால், உள்ளபடியே மத்திய அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டிய முறையில் எடுத்திருந்தால், நாம் நல்ல முறையில் எடுத்துச்சொல்லியிருந்தால், அந்த அகதிகள் வரத் தேவையே இருந்

(பிற்பகல் 12-10)

திருக்காது. "அகதிகளின் வருகை பெருகிக் கொண்டே இருக்கிறது. இனி எதிர் காலத்தில் இந்த வருகை மேலும் தீவிரமாகக்கூடும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்போது என்ன அர்த்தம்? நாம் எடுக்கும் நடவடிக்கையால் எந்தப் பிரயோசனமும் இல்லை. அகதிகள் வருகை எதிர்காலத்தில் பெருகக்கூடும்— இந்த வார்த்தைகளைப் போடலாமா? நாம் சொல்வதைக் கேட்டு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நாமே 'அட்மிட்' பண்ணிக்கொள்கிறோம். அகதிகள் வருகை எதிர்காலத்தில் தீவிரமாக கூடுமென்று . . . .

Thirumathi TARA CHERIAN: Sir I appreciate what the hon. Minister is trying to say. But, this is not an issue which he, or the Hon. the Chief Minister or Thiru Rajiv Gandhi by himself can solve. This is some kind of a political issue. If we rub them on the wrong side, thousands of people in that island will be in trouble and whatever is happening there now may double or even treble. Therefore, caution is necessary. Thiru Rajiv Gandhi, more than Thirumathi Indira Gandhi, has come out to say that what is happening there is a wrong thing. But, our talking here is not going to solve the problem and it is also not going to make things better. That should be understood.

**மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஸ்ரீலங்கா தமிழர்களுடைய பிரச்சினை தீர்க்கப் பட வேண்டுமென்ற ஆதங்கத்திலேதான் சொல்கிறேன். ஆளுநர் உரையில் 5 ஆம் பாராவில், மூன்று பாராக்கள் இருக்கின்றன. அவை ஒன்றுக்கொன்று கான்ட்ரவர்சியலாக இருக்கின்றன என்பதைத்தான் சொல்கிறேன். முதல் பாராவில் ஸ்ரீலங்கா தமிழர்கள் பற்றிக் குறிப்பிடுகிறார்கள்; இரண்டாவதில் நம்முடைய மீனவர்கள்

[மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்] [1985 மார்ச் 15

பற்றிக் குறிப்பிடுகிறார்கள் ; மூன்றாவதில் "எதிர்காலத்தில் அகதிகளின் வருகை மேலும் தீவிரமாகக் கூடும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம முடைய நடவடிக்கைகளுக்குப் பிறகும், மத்திய அரசு இதில் தலையிடப் போவதில்லை. வரக்கூடிய அகதிகளை எப்படிப் பாதுகாக்க வேண்டுமென்ற அடிப்படையில் போடப்பட்டுள்ள அந்த வரிகள் நம்முடைய கையாலாகத் தனத்தைத்தான் காட்டுகிறது. எனவே இந்தப் பிரச்சினையில், இந்தப் பாராவை நீக்கிவிட்டு, மேலும் எந்த அளவுக்கு இதில் தீவிரம் காட்ட வேண்டு மென்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். நேற்றைக்கு முன்தினம்கூட ஐ.சி.எஃப். லேபர் யூனியன் கேட் மீட்டிங்குக்கு என்னை அழைத்திருந் தார்கள். அந்தக் கூட்டத்திலே 1,001 ரூபாய் நிதி தந்தார்கள். நான்கூட ஸ்ரீலங்காவிலிருந்து வரும் அகதிகளுக்காகத் தருகிறார்கள் என்று நினைத்த போது, அந்த நிதியை ஈழத் தமிழர்கள் போராட்ட வீரர்களுக்குத் தருகிறார்கள். ஐ.சி.எஃப். லேபர் யூனியன் 1,001 ரூபாய் கேட் மீட்டிங் போட்டு வசூல் செய்து, துப்பாக்கிகள், தோட்டாக்கள் வாங்க துணிச்சலாகத் தருகிறார்கள். அகதிகளுக்குத் தரலாம். ஆனால் . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இதை எல்லாம் சொல்லாமல் இருப்பது நல்லது.

மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அதை நான் மாற்றிக்கொள்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த அரசு எடுத்து வைக்கும் கருத்து, ஒரே நேரத்தில் தாக்க வேண்டும். ஸ்ரீலங்காவில் உள்ள திரு. ஜயவர்த்தனா இந்த உரையைப் பார்த்து பயப்பட வேண்டும். அதுலத் முதலி இந்த உரையைப் பார்த்து பயப்பட வேண்டும். ஆனால் இந்த உரை அப்படி இல்லை. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் பேசும்போது 1975 ஆம் ஆண்டு நான் மிசாவில் கைதியாக இருந்தேன் என்று சொன்னார்கள் . . . . .

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர், வழக்கறிஞர் திரு. கணேசன் அவர்கள் ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினைபற்றிப் பேசி முடிக்கும்வரை குறுக்கிடாமல், அமைதி யாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். அவர் என்ன செய்ய வேண்டுமென்று கருதுகிறார்? இந்த அரசிடத்தில் எதை எதிர்பார்க்கிறார்? எதைச் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்? அவற்றைச் சொன்னால் நலமாக இருக்கும்.



1985 மார்ச் 15]

மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள் இந்தக் கேள்வியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களிடம் கேட்டால் சரியான பதில் அளிப்பார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பாகிஸ்தானிலிருந்து வங்காளம் பிரிந்த நேரத்தில், அங்கே ஒரு போட்டி அரசாங்கம் அமைக்கப்பட்டது. அவர்கள், எங்களுக்கு உதவி தர வேண்டு மென்று இந்தியாவிடம் கேட்டார்கள். அப்போது இந்தியா வேறு வழியில்லா மல் படை அனுப்பியது. . . .

(பிற்பகல் 12-15)

மிசா. ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : நேற்றைக்கு உரையை துவக்கி வைத்துப் பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள்கூட 1976-லே மிசா கைதியாக இருந்ததாகவும், அங்கு கொடுமைகள் ஒன்றும் நடைபெறவில்லை என்றும் சொன்னார்கள். அதே மத்திய சிறைச் சாலையிலேதான் மிசா சட்டத்தின்கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்களும் நானும் இருந்தோம். 9-ம் பிளாக்கில் நான் அனுபவித்த கொடுமைகளை விட 10 சதவிகிதமாவது அதிகமாக அவர்களும் அனுபவித்திருப் பார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் காலம் எங்கள் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்த காலம். அப்போது அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அத்தனை சலுகைகளும் வழங்கப்பட்டன. அதைத்தான் அவர்கள் நல்ல உணவு வழங்கப் பட்டதாகக் குறிப்பிட்டதாக நான் கருதுகிறேன்.

திரு. ஜேப்பியார்: மாண்புமிகு உறுப்பினர் மிசா கைதியாக சிறைக்குள் வந்தபோது தான் நல்ல சாப்பாடு போடப்பட்டது. "நாங்களும் நல்ல சாப்பாடு போடவில்லை" என்று குறிப்பிட்டால் தான், நான் அதைப்பற்றிக் குறிப் பிட்டேன். 1976 வரை நான் 'சி' கிளாஸ் சாப்பாடு. அதற்குப் பிறகு நல்ல சாப்பாடு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இங்கே மாண்புமிகு உறுப்பினர் நேற்றைய தினம் பேசும்போது சிறைச்சாலையில் பேன், மூட்டை, கட்டில், மெத்தை, சோளக் கஞ்சி எல்லாம் வழங்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஜேப்பியார்: கடும் சிறையில் வாடினோம் என்று சொன்னதால்தான் நான் அதைப்பற்றிக் குறிப்பிட்டேன். ஆனால் அவர்களுடைய காலத்தில் 'சி' கிளாஸ் சாப்பாடு போடப்பட்டது உண்மை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள் இங்கே இருக்கின்றார்கள். நானும் அவரோடு முதன் முதலாக சிறைக்குச் சென்றேன். 9 ஆம் பிளாக்கில் அவரோடு தள்ளப்பட்டேன். அவர்கள் முதல் நாளே கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தார்கள். அடுத்த நாள் நானும் உள்ளே செல்லும் வாய்ப்பு கிடைத்தது. முதல் நாள் நான் பார்த்த மாவட்டச் செயலாளர் திரு. சீத்தாபதி அவர்கள்தானா என்று வியப்படையும்வண்ணம் சட்டை கிழிந்து, பனியன் கிழிந்து, கொடுமையாகத் தாக்கப்பட்டு, 'புளூ இங்க்' தடவப்பட்டு, குஷ்டரோகிகள் வசிக்கின்ற அந்த 9 ஆம் பிளாக்கில் பிப்ரவரி மாதக் கடும் குளிரில் அவர் வாடியதை நானே நேரில் பார்த்தேன். அந்தப் பகுதியிலிருந்து வேறொரு பகுதிக்கு மாற்றுகிற போது கூட, 9 ஆம் பிளாக்கிலிருந்து வெளியே வந்தாலே போதும், இன்னொரு கொட்டடிக்கு வந்தாலே போதும், அதுவே விடுதலைதான் என்கிற நிலைமையில் அன்றைக்கு நிலைமை இருந்தது. அந்த அளவுக்குக் கொடுமை இருந்தது. அன்றைக்கு மகாலிங்கம் என்கிற வார்டர் எம்.ஜி.ஆர். பாட்டை பாடிப் பாடித்தான் அடித்தார். நேற்றைக்கு கலைஞர் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். நான் கூட பல்வேறு வழக்குகளில் ஆஜராகியிருக்கிறேன். *** கமிஷன் போடப்பட்டு, அடித்திருக்கிறார்கள் என்று ரிப்போர்ட்டும் தந்திருக்கிறார்கள்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்தில் தலைவர்களுடைய பெயரை முழுமையாகச் சொல்வதில்லை. நேற்றைக்குக் கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் பேசுகின்ற நேரத்தில் முன்னாள் முதல்வர், முன்னாள் முதல்வர் என்று தான் பேசினார். என்னுடைய பழைய தம்பியை பாசத்தோடு கேட்டுக்கொள்கிறேன். எம். ஜி. இராமச்சந்திரன் என்று பேசுவதை மாற்றிக்கொள்ள வேண்டும். நான் பேசும்போது கலைஞர் என்று தான் பேசுகிறேன். மற்றவர்கள் பேசும் போதும் கலைஞர் என்றுதான் பேசுகிறார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசும்போதும் கலைஞர் என்று தான் பேசினார்கள். 'முதலமைச்சர்' என்று பேசினால் நல்லது என்பதைப் பணிவன்போடு வேண்டுகோளாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-20)

**மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, *** மகாலிங்கம் என்ற அந்த வார்டர் முதலமைச்சருடைய

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டாகச் சொல்கிறார்கள், அதை உறுப்பினர் அவர்கள் திருத்திக்கொள்வது நல்லது.

**மிசா. ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்:** ஏனென்றால் நேற்றைக்குப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் . . .

(திரு ஜேப்பியார் எழுந்தார்)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் சொல்கிற பிரச்சினை, அடித்தவர், அடிக்கும்போது, புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் பாடிய பாட்டைப் பாடிக்கொண்டு அடித்தார் என்று சொல்கிறார். *** என்று திரும்பத் திரும்பச் சொல்வது எதிர்மறையாகச் சொல்கிறார் என்று தெரிகிறது. (குறுக்கீடுகள்) ஆகவே கூடுமானவரையில், உறுப்பினர்கள் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லாமல் இருப்பது நல்லது.

**மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு இந்த விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசிய உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் பேசுகிறபோது, திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தை ஆண்டுக்கொண்டிருந்தபோது, டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இங்குள்ள உறுப்பினர் திரு. பண்ருட்டி சிவராமன் தாக்கப்பட்டார் என்று குறிப்பிட்டார். நான் என்னுடைய காரில், சாராய பாட்டிலை வைத்திருந்ததாகவும், நான்கு தெரு தள்ளி இருக்கக்கூடிய வீட்டில் உள்ள காரில் சாராயம் இருந்ததாகவும் . . . (குறுக்கீடுகள்)

**திரு. ஜேப்பியார்:** நான் பேசாத வார்த்தைகளை நான் பேசியதாகச் சொல்லி, ரிகார்டு செய்வதை அனுமதிக்கக்கூடாது. நான் அப்படிப் பேசியிருக்கிறேனா என்று ரிகார்டுகளைப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் இரண்டு பேரும் உணர்ந்து பேசுவது நல்லது. எனக்குக் கொஞ்சம் கால அவகாசம் கொடுங்கள். அவர் பேசவில்லை என்கிறார். இவர் பேசியதாகச் சொல்கிறார். அவர் அப்படிப் பேசியிருக்கிறாரா இல்லையா என்று தெரியவில்லை. ஆகவே இந்த விவாதங்களை முடித்துக் கொண்டு உறுப்பினர் அவர்கள், ஆளுநர் உரையில் பேச ஆரம்பிப்பது நல்லது.

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1985 மார்ச் 15

**மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்:** எனவே இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில், அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற இந்த ஐந்தாவது பாராவில், ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து . . . .

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, * * * என்ற கருத்துத் தோனுகிற வகையில் பேசிக் கொண்டிருந்தார்கள். அது அவைக் குறிப்பில் அப்படியேதான் பதிவாகியிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அப்படி இருந்தால், அந்த வார்த்தைகள் சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம், திரு. ஜேப்பியார் அவர்கள் பேசுகிறபோது, நாட்டில் நடக்கிற . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** துணைத் தலைவர் அவர்களே, இங்கே ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் பேசுகிற கருத்துக்கள் தொடர்புள்ள கேள்விகள், விளக்கங்கள் பெற மற்ற உறுப்பினர்கள் அனுமதி அளிக்கப்படுகிறார்கள். அந்தக் கட்சியின் தலைவர் எழுந்து அதற்கான விளக்கங்களைத் தரலாம். அப்படித் தந்து அதிலேற்பட்டுள்ள அசிங்கங்களைப் போக்க முயற்சிக்கலாம். நானும் அப்படித்தான் இந்த அவை முன்னவர் என்ற வகையிலே அல்லது அமைச்சரவையின் சார்பிலே எழுந்து அதற்கான விளக்கங்களைத் தரலாம். இடையில் ஒரு கட்சியின் தொடர்புடைய உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அவரவர் பேச முயற்சிப்பது, அவை நடவடிக்கைக்கு உகந்ததுதானா என்று தெரியவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் பேசுகிறபோது குறைபாடு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒரு கட்சியினுடைய பிரச்சினையாக இருந்தால், அதற்குரிய தலைவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் விளக்கங்கள் அளிக்கலாம்.

* **திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு பேசுகிறேன். நான் பொதுவாக அதிகம் பேசுவதில்லை. நேற்று பேசிய உறுப்பினர் கருத்துக்களுக்கு, இன்று இவர் பதில் சொல்ல வேண்டியதாகிவிட்டது என்று சொல்கிறார்கள். அவர்கள் குற்றச் சாட்டாகச் சொல்லவில்லை. நேற்றையதினம் திரு. ஜேப்பியார் அவர்கள்

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1985 மார்ச் 15] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

பேசியபோது, முன்னவர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசவில்லை. இப்போது எங்கள் கட்சி உறுப்பினர் அவர்கள் பேசுகிற போது, அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு அடிக்கடி பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. நேற்றும் இவர்கள் குறுக்கிட்டுப் பேசியிருந்தால், எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும்.

(பிற்பகல் 12-25)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் பேசுகிறபோது, சம்பந்தப்பட்ட மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவர்களே, எதிரே உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். ஆகவே குறுக்கிடவேண்டியதோ, அல்லது மறுக்க வேண்டியதோ தேவை இல்லாமலிருந்தது. மறுப்புரைக்க உரிமையுள்ள தலைவர் அவர்களே, இங்கே உட்கார்ந்திருந்ததாலே, நான் இடையிலே எழுந்திருப்பது அவ்வளவு பொருத்தமாக இருந்திருக்காது. நான் இன்றைக்கும்கூட மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்துக்களுக்குள்ளே நுழைய விரும்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் பேசியது முறையல்ல என்று அவர்கள் கருதுவார்களேயானால், அந்த முறையற்ற வாதத்திற்கு முறையற்ற முறையிலே நானும் பதில் சொல்கிறேன் என்று மாண்புமிகு உறுப்பினர் தொடருவாரேயானால், மாண்புமிகு துணைத் தலைவர் அதற்கு அனுமதிப்பார்களேயானால், எனக்கு அதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் முன்னாள் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்களைச் சுட்டிக்காட்டி, அவை அவர்களுக்கும் தெரிந்துதான் நடந்திருக்கும் என்று நான் சொல்லவில்லை. அவர்களுக்குத் தெரியாமல் நடந்திருக்கலாம்; ஆனால் உங்களுடைய ஆட்சிக் காலத்திலே நடந்தது என்று அவர்கள் குறிப்பிட்டதற்கும், நீங்கள் மிசாவிலே இருந்தபோது *** என்கிற பொருள்பட இந்த அவையிலே வாதத்தை எடுத்து வைப்பது அவ்வளவு சரியாக இருக்காது. ஆகவேதான் நான் குறுக்கிட்டு அது அவைக் குறிப்பிலே இருப்பது பொருத்தமாக இருக்காது என்று தெரிவிக்கிறேன்.

**மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் விவாதம், ஆளுநர் உரைமீது ஆரம்பிக்கின்ற கால கட்டத்திலேயே, அந்த விவாதம் வெறும் ஆளுநர் உரையோடு ஆரம்பித்திருந்தால், இந்தப் பிரச்சினை இங்கே எழுந்திருக்காது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் சில கருத்துக்களை இங்கே எடுத்துச்சொல்லி . . . . .

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவர் அடித்தது, அவர், முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாட்டைப் பாடி *** உள்நோக்கம் கற்பிக்கிற மாதிரி உறுப்பினர் அவர்கள் சொல்லியிருந்தால், அது எடுபடவேண்டிய ஒன்று. உறுப்பினர் அவர்கள் அந்த மாதிரி ஒரு வார்த்தை சொல்லியிருக்கிறார்கள். ***இப்படி எதிர்மறையாகச் சொன்னால், *** என்கிற பொருள் வருகிறது. ஆகவே அப்படிச் சொல்லியிருந்தால், எடுத்துவிடலாம். ஒரு சம்பவத்திற்கு உள்நோக்கம் கற்பித்து உறுப்பினர் அவர்கள் பேசுவது தவறானது என்ற அடிப்படையிலே அந்த வார்த்தைகளை நம்முடைய அவைக்குறிப்பிலிருந்து எடுத்து விடுகிறேன்.

மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இப்படிப்பட்ட விவாதமே இந்த அவையில் தேவை இல்லை. ஏனென்று சொன்னால் ஆரம்பத்திலே ஒன்றை ஆரம்பித்து வைத்துவிட்டு, அது இந்த அவைக் குறிப்பிலே இடம்பெற்று, அதற்குப் பின்னாலே நாங்கள் எல்லாம் இந்த அவையில் இருந்த நேரத்தில்கூட, பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்கள். "அவையிலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எல்லாம் அமர்ந்திருந்தார்கள்" என்று 'அண்ணா' பத்திரிகையிலே எழுதியிருந்தார்கள். ஆகவே, இதே அவையிலே ஒரு பதிலை அதற்குச் சொல்லவேண்டி வந்தது. உள்ளபடியே ஆளுநர் உரை குறித்துத்தான் இன்றைக்குப் பேச வேண்டும் என்று அவைக்கு வந்தேன். இருந்தாலும், அப்படிப்பட்ட கருத்து தெரிவிக்கப்பட்டதால்தான், இங்கே இதுபோல் சொல்லவேண்டி வந்தது. இவ்வாறு விவாதம் செல்வதற்கு வழி வகுத்ததே நீங்கள்தான். ஏனென்றால் ஆரம்பக் கட்டத்திலேயே நீங்கள் தடுத்திருந்தால், அப்படிப் பேசக்கூடாது என்று தடுத்திருந்தால் . . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நான் அந்த மாதிரி பேசவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அதை யார் முடிவு செய்வது, குறிப்பை எடுத்துப் பார்த்தால்தான் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் பேசினாரா இல்லையா என்று முடிவு செய்ய முடியும். குறிப்பைப் பார்க்காமல் எப்படி முடிவு செய்வது? ஆகவேதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் சொல்வதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் ஏற்றுக்கொண்டு, "ஆமாம், நான் அப்படித்தான் சொன்னேன்" என்று சொன்னால், அதற்குமேல் விவாதத்தைத் தொடரலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் "நான் அந்த மாதிரிச் சொல்லவில்லை" என்று சொல்கிறார். அவர் சொன்னார் என்று உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள். எப்படி



முடிவு செய்வது? யார் முடிவு செய்வது? குறிப்பை எடுத்துப் பார்த்துத்தான் முடிவு செய்ய வேண்டும். எனவே அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு, வேறு பிரச்சினைக்குச் செல்லலாம் என்று அதனால்தான் நான் சொன்னேன். குறிப்பு வந்த பிறகு, குறிப்பில் "அவர் சொன்னார்" என்று இருந்தால் மறுபடியும் தொடருங்கள் எப்போதாவது. இப்போது அதைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தால் எப்படிச் சரியாகும்? குறிப்பிலே இருக்கிறதா இல்லையா என்ற எந்தவொரு விவரமும் இல்லாமல் எப்படிப் பேசுவது? இரண்டாவது உறுப்பினர் பேச ஆரம்பித்து முப்பது நிமிடங்களுக்கு மேலாகிறது. ஆகவே சீக்கிரம் முடித்துக் கொள்ள வேண்டும்.

மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையிலே ஒன்றுமே இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்தி, இந்த ஆளுநர் உரை எங்களைப் பொறுத்த அளவிலே ஒரு கானல் நீராகத்தான் இருக்கின்றது . . . .

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பிரச்சினையை நீட்டிக்க விரும்பவில்லை. ஆனாலும், இந்த விவகாரத்திற்கு தலைவரே காரணம் என்பதாக • இருப்பது முறையல்ல. தலைவராக இருப்பவர்களைக் குற்றம் சாட்டக் கூடாது என்கிற முறை இருக்கிறது. அது குறித்து தங்கள் கருத்தை அறிய விரும்புகிறேன்.

*திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குற்றம் சாட்டும் நோக்கம் கிடையாது. குற்றம் சாட்டவும் மாட்டோம். தலைவர் சொல்கிறபடிதான் நடக்க வேண்டும் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் சொன்னது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் பேசும்போதே, அதைத் தடுத்து நிறுத்தி இருந்திருப்பாரேயானால், இந்த அளவுக்கு வந்திருக்காது என்பதுதானே தவிர, தலைவருக்கு உள்நோக்கம் கற்பிக்க வேண்டும் என்பதோ, தலைவரைக் குற்றம் சொல்ல வேண்டும் என்பதோ எங்களுடைய நோக்கம் இல்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவர்கள் சொல்கிறபோது "திரு. ஜேப்பியார் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் பேசுவதற்கு நீங்கள் அனுமதித்த காரணத்தால், தலைவர் அவர்கள் அனுமதித்த காரணத்தால்தான், அவர்கள் பேசினார்கள். அதற்கு நீங்கள்தான் காரணமாக இருந்தீர்கள்" என்பது போல் பேசுகிறார். ஆகவே தலைவரை வம்புக்கு இழுத்து, அவர்தான் காரணம்,' அவர் பேசியதற்கு என்று சொல்வது நல்லது அல்ல என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். தலைவரை ஒரு காரணம் காட்டி, செய்ததற்கு ஒரு காரணத்தைச் சொல்வது அவ்வளவு சரியல்ல.

மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்களை மதித்து, மரியாதையோடு நீங்கள் இடுகிற கட்டளைகளை எல்லாம் கேட்டுக்கொண்டு நடக்கிற ஒரு உறுப்பினராகத் தான் வந்திருக்கிறேன். என்னுடைய கன்னிப் பேச்சிலே நீங்கள் எடுத்துப் பார்த்தால், முதலிலே நான் சொன்னது இந்த அவைக்கு எந்த அளவுக்கு உரிய மரியாதை கொடுத்து எந்த அளவிற்கு நடக்க வேண்டுமோ அந்த அளவிற்கு நடக்கின்ற ஒரு உறுப்பினராகத்தான் நான் வந்திருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். எனவே அந்த அளவுக்கு உங்களுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையை எல்லாம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே அதிலே ஒரு சிறிதும் நான் குறையமாட்டேன் என்று எடுத்துச் சொல்லி, நீங்கள் நேரமாகிவிட்டது என்று சொல்கின்ற காரணத்தால், இந்த கவர்னர் உரை ஒரு கானல் நீர், மணக்காத ஒரு காகிதப் பூ, எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் பேசியதைப் போல இது ஒரு புஸ்வாணம், வெற்று வேட்டு, குப்பைக் காகிதம் என்று சொல்லி விடைபெறுகிறேன்.

* திருமதி வி. ஜெயலட்சுமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த காலக் கட்டத்திலே நாம் இங்கே கூடி இருக்கின்றோம். உலக சரித்திரத்திலேயே தான் இழந்த தலைமையை மீண்டும் பெற்ற தலைவர்கள் இருவர் தான். ஒருவர் பிரான்சு அதிபர் டிகால். இன்னொருவர், ஆசிய ஜோதி நேரு பெற்ற புதல்வி, கூட்டுச் சேரா நாடுகளின் அணித் தலைவி, வளருகின்ற, வளரக்கூடிய நாடுகளுடைய நாயகமாக உலக மன்றத்திலே ஒலித்த அன்னை இந்திரா காந்தி ஒருவர். இங்கே தென்னகச் சரித்திரத்தைப் பொறுத்தவரையில், குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரை



(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

யிலும், 'படுத்துக் கொண்டே ஜெயிப்பேன்' என்று ஒரு வார்த்தைக்கு உயிருள்ள அர்த்தத்தைக் கொடுத்தவர்கள் இரு தலைவர்கள். மருத்துவ மனைக்கும், சிறைச்சாலைக்குமாகத் திரிந்து கொண்டு சிறையிலே இருந்து வேட்பு மனுவைத் தாக்கல் செய்து தொகுதிக்கே வாராமலே ஜெயித்து, மறைந்த தெய்வத் திருமகனாக இருந்தார் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள். அதற்குப் பின்னாலே, 7 ஆயிரம் மைல்களுக்கு அப்பால் படுத்துக் கொண்டே இருந்து வேட்பு மனுவைத் தாக்கல் செய்து நல்ல ஒரு வெற்றியைப் பெற்று இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் தலைவராகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள். இங்கே மத்தியிலே அன்னை இந்திரா காந்தியினுடைய குடும்பத்தின் கையிலே, நேருவின் குடும்பத்தின் கையிலே பொறுப்பு இருந்தால்தான் இந்த நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற முடியும். (மணி அடித்தது).

திரு. ஆர். டி. சீத்தாபதி : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவருகிறேன் ; வேறு ஒன்றும் இல்லை. காயிதே மில்லத் கூட தொகுதிக்கே செல்லாமல் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதையும் சொன்னால் நன்றாக இருக்கும்.

திருமதி வி. ஜெயலட்சுமி : மாற்றுத் தலைவர் அவர்களே, தயவுசெய்து நான் அதை மறந்து விட்டேன். இரண்டு தலைவர்களை மூன்று தலைவர்களாகச் சேர்த்துக் கொள்வதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. அதுவும் ஒரு முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு தலைவர் அத்தகைய ஒரு பெரும் வெற்றியைப் பெற்றிருந்தார் என்றால், அது தமிழகத்துக்கே பெருமை தருவதாகும்.

இந்திய நாட்டை ஆளும் பொறுப்பை, இளம் தலைமுறையின் தலைவராக திரு. ராஜீவ் காந்தி இன்று எடுத்துக்கொண்டிருக்கிறார். அந்தக் காலக் கட்டத்திலே மக்கள் இரு பெரும் தலைவர்களுடைய திறமையில் நம்பிக்கை வைத்து, இந்திய நாட்டினுடைய ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுவதற்கு நேருவின் குடும்பத்தைச் சேர்ந்த திரு. ராஜீவ் காந்தி அவர்களால்தான் முடியும் என்ற முறையிலும், இங்கே தமிழகத்தை நல்ல முறையில் நடத்திச் செல்வதற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக வந்தால் தான் முடியும் என்ற முறையிலே, இந்தத் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த மக்களுடைய தீர்ப்பு பொய்த்துவிடாத வண்ணம், மக்களுடைய நம்பிக்கை பொய்த்து விடாத வண்ணம் இந்த இரண்டு அரசுகளும் தங்களுடைய கடமைகளை

ஆற்றும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இன்று இந்த ஆளுநர் உரை விவாதத்தில் நான் பங்கேற்றுக் கொள்ள வந்திருக்கிறேன். நேற்று இந்த சபையிலே பேசும்போது நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய தமிழகத்திற்கு உரிய நிதி சரியாகக் கொடுக்கப்படவில்லை. ஒரு திட்டத்தை நல்ல விதமாக செயலாற்றியதன் பலனால் நாம் நம்முடைய நிதிகளைக் குறைத்து வாங்க வேண்டிய ஒரு கால கட்டம் வந்திருக்கிறது என்று சொன்னால், அது மிகவும் வேதனைப்படத்தக்க விஷயம் என்று தெளிவாகச் சொன்னார்கள். இங்கே மத்திய அரசிலிருந்து வாங்க வேண்டிய நிதி, குறிப்பாக குடும்ப நலத் திட்டத்திலே நல்ல விதமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று நம்முடைய நல்வாழ்வுத் துறை

(பிற்பகல் 12-35)

அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்திய நாட்டின் புள்ளிவிவரக் கணக்கைப் பார்த்தால், தமிழகம்தான் குடும்பநலத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தி வருகிறது என்பது தெரியும். அந்த அடிப்படையில் அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டு வருவதால், நமக்குக் கிடைக்க வேண்டிய உதவி சரியான அளவுக்குக் கிடைக்கவில்லை என்று இங்கே குறிப்பிட்டார்கள். அது உண்மையாக இருக்குமானால், எங்கள் கட்சியின் தலைவராக இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்களும், அவருக்கும் பின்னாலே இருக்கும் நாங்களும் உங்களோடு சேர்ந்து குரல் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த பாரதப் பிரதமர் அவர்களேகூட நம்முடைய நல்ல செயல்பாட்டைப்பற்றி அறிந்து வாக்குறுதி கொடுத்தார்கள் என்றுகூட இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டது. இப்போதுள்ள பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களிடம் அதைப் பற்றி சொல்லி உரிய நிதி உதவியைப் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதற்கு நாங்களும் உறுதுணையாக இருப்போம் என்றோம். அதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்றும் இந்த நேரத்தில் உறுதி அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

யாரோ துயரத்தில் இருக்கும்போது, அடுத்தவர் வீட்டுத் துயரத்தில் நாம் இலாபம் தேடுவதைப் போல் இங்கே உள்ளவர்கள் ஸ்ரீலங்கா பிரச்சினையில் பேசக் கூடாது என்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் உங்களிடம் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். உண்மையான மனிதாபிமான உணர்வோடு நாட்டின் நலனையும் நம் கருத்தில் கொண்டு இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும். இங்கே பேசிய அரசியல் வல்லுநர்களும், மத்திய அரசைச்





சேர்ந்தவர்களும் இனிமேல் இந்தியாவுக்கு ஆபத்து தென் பிராந்தியத்திலிருந்து கடல் வழியாகத்தான் வரும் என்று திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால், இந்தியாவின் வளர்ச்சியைக் கண்டு பொறுக்காத ஏதோ ஒரு வல்லரசு ஒன்று ஸ்ரீலங்கா பிரச்சினையில் பின்னாலே இருந்துகொண்டு அவர்களைத் தூண்டி விடுவதன் காரணமாகத்தான் இந்த மாதிரியான அட்டூழியங்கள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரசியலில் இந்தப் பக்கமாக இருந்தாலும் சரி, ஆளும் கட்சி வரிசையில் இருந்தாலும் சரி, இதை அனைவரும் உணர்ந்திருப்பார்கள் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. ஸ்ரீலங்கா இந்திய வம்சாவழியினர் பிரச்சினையைப் பொறுத்த மட்டில், நம்முடைய தமிழ்க்குடி மக்கள் அங்கே உள்ளவர்களால் படுகொலை செய்யப்படும்போது, நாம் அதனைக் கண்டிக்காமல் இருக்க முடியாது. இவ்வளவு பெரிய இனப் படுகொலை அங்கே நடைபெறுவதை காங்கிரஸ் கட்சி மட்டும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதை உணர்ந்திருந்தாலும்கூட, வேண்டுமென்றே காங்கிரஸ் கட்சியை மட்டும் 'எக்ஸ்போஸ்' செய்வதைப் போல் பேசுவதும், ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழகமும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் மட்டும்தான் தீவிரமாக இருக்கிறார்கள் என்பதைப் போல் பேசுவதும் சரியல்ல. ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினையைப் பொறுத்த வரையில், அங்குள்ள தமிழர்களுக்கு நல்ல வகையில் நியாயம் கிடைக்க வேண்டும் என்ற வகையில் உங்கள் அனைவரோடும் சேர்ந்து குரல் கொடுக்க நாங்கள் எப்போதும் தயங்க மாட்டோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர், எங்கள் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்களும் நல்ல முறையில் எடுத்துச் சொல்ல வேண்டிய நேரத்தில் எடுத்துச் சொல்வார் என்று சொல்லி, இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், காங்கிரஸ் கட்சி உங்களோடு சேர்ந்து என்றைக்கும் குரல் கொடுக்கத் தயாராக இருக்கிறது என்று இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மத்திய அரசிடமிருந்து நிதி உதவிகள் சரியான முறையில் கொடுக்கப்படவில்லை என்ற பொதுவான ஒரு குற்றச்சாட்டு இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய சகோதரி மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் கூட இங்கே பேசும்போது, பல கோடிக்கணக்கான ரூபாய் மத்திய அரசிலிருந்து இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி, அவ்வாறு கொடுக்கப்பட்ட பணம் எவ்வாறு எங்கெங்கே செலவழிக்கப்பட்டது என்று இதுவரை ஒரு செவ்வூவாவது இங்கே வைக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்கள். என்.ஆர்.ஈ.பி., ஆர்.ஐ.ஈ.ஜி.பி. ஐ.ஆர்.டி.பி;

போன்ற திட்டங்கள் என்ற முறையில் எவ்வளவோ கோடிக்கணக்கான ரூபாய்களை மத்திய அரசு மாநிலத்திற்கு அளித்துள்ளது. இதுவரை சட்டமன்றப் பேரவையிலோ, மேலவையிலோ அல்லது இம்மாமன்றத்தைச் சார்ந்த உறுப்பினர்களுக்கோ அல்லது குறைந்தபட்சம் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் எனப்படும் டி.டி.சி. கூட்டங்களிலோ ஒரு எவால்யுவேஷன் ரிப்போர்ட்டாவது கொடுத்திருக்கலாம். அதைச் செய்யவில்லை என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எவ்வாறு எந்தெந்தத் துறையில் அந்தப் பணமெல்லாம் செலவிடப்பட்டது என்ற உண்மையான கணக்கைத் தரவேண்டும். பொய்யான கணக்கை அரசு தரும் என்று நான் சொல்ல வரவில்லை. அந்த அளவுக்கு ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கை இருக்கிறது. ஆனால் ஆட்சியில் இருப்பவர்கள் நல்லபடியாக எதையும் செய்ய விரும்பினாலும், கீழே உள்ள அரசு அதிகாரிகள் எந்த அளவுக்கு திட்டங்களைச் செயல்படுத்துகிறார்கள் என்பதை நாமெல்லாம் அறிவோம். இதையெல்லாம் சரியான முறையில் கவனிப்பதற்காக முறையான இயந்திரத்தை நாம் வைத்திருக்கவில்லை.

அடுத்து, கடந்த 15 ஆண்டுக் காலமாக நமது மாநிலம் உள்ளாட்சித் தேர்தலைச் சந்திக்காமல் இருக்கிறது . . . .

(பிற்பகல் 12-40)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, நான் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால் அவர் பேசியிருக்கின்ற கருத்துக்கள் நல்ல அடிப்படையிலே தெரிவிக்கப்பட்டாலும், நாளைக்குப் பத்திரிகையில் வருகிறபோது, 'அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது காங்கிரஸ் உறுப்பினரின் கடுமையான தாக்கு' என்கிற தலைப்பிலே வருவதைப் போன்ற உணர்வை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாகக் குறுக்கிடுகிறேன்.

மத்திய அரசின் நிதி உதவிகளைப் பெற்றுக்கொண்டு மாநில அரசு நிறைவேற்றுகிற திட்டங்கள் ஒழுங்காக நடக்கின்றனவா என்கிற கணக்கு விவரங்களை இந்த மன்றத்திற்கோ அல்லது வேறு எந்த இடத்திலோ அளித்தார்களா என்று கேட்கிறார்கள். மத்திய அரசு அளிக்கின்ற நிதியுதவிகளை மாநில அரசு மிகச் சிறந்த முறையில் நிர்வகிக்கிறது. செலவழிக்கிறது என்பதை மத்திய அரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது. 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுகிற மாநிலங்களில் இந்தியாவிலேயே தமிழகம்தான் சில திட்டங்களில் முதலாவது





இடத்தையும் சில திட்டங்களில் இரண்டாவது இடத்தையும் பெற்றிருக்கிறது என்ற பாராட்டை, சிறப்பைப் பெற்றிருக்கிறது. இந்தக் கணக்கு விவரங்களையெல்லாம் கேட்க வேண்டியவர்கள் கேட்கிறார்கள். அவை கொடுக்கப்பட வேண்டிய இடத்திலே கொடுக்கப்படுகின்றன. ஆகவே இந்த உணர்வைப் புரிந்து கொண்டுதான் மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார் என்றாலும், தெரிவிக்கிற வார்த்தைகள் வழியாக வேறு தவறான கருத்துக்கள் வரக்கூடாது என்பதற்காகத்தான் இந்த விளக்கத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் கொடுக்கிற நிதியாக இருந்தாலும், மாநில அரசாங்கத்தின் நிதியாக இருந்தாலும் எல்லாம் மக்கள் பணம்தான். மக்கள் பணம் சரியாகச் செலவழிக்கப்படுகிறதா என்பதை மத்திய அரசாங்கத்திற்கு மட்டும் தெரிவித்தால் போதாது. இந்த மாமன்ற உறுப்பினர்களும் தெரிந்துகொள்வது, இந்த அரசாங்கத்திற்கும் நல்லது, பொது மக்களுக்கும் நல்லது என்ற அளவிலே மாண்புமிகு உறுப்பினர் கருத்தை வெளியிட்டார் என்ற அளவிலே எடுத்துக் கொள்ள வேண்டும். அவர் குறை கூறுவதாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** நான் அவர் குறை கூறுவதாக எடுத்துக்கொள்ளவில்லை. அப்படிக் குறை கூறினாலும் தவறு இல்லை. ஆனால் மாநில அரசு செலவழிக்கிற தொகைகள் அனைத்தும் கணக்கு ஆய்வாளரால் ஆய்வு செய்யப்படுகின்றன. பொதுக் கணக்குத் தணிக்கைக் குழுவால் பரிசீலிக்கப்படுகின்றன. நம்முடைய இரு அவைகளின் உறுப்பினர்களைக் கொண்ட பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி பரிசீலனை செய்கிறது. ஆகவே எந்த நேரத்தில் பரிசீலிக்கப்பட வேண்டுமோ அந்த நேரத்திலே பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதை எடுத்துச் சொல்லுகிறேன். தெரிவிக்கப்பட வேண்டிய நேரத்தில், தெரிவிக்கப்பட வேண்டிய இடத்திலே தெரிவிக்கப்படுகிறது. இந்த அவைக்கும் தெரிவிக்கப்படுகிறது. மத்திய அரசுக்கும் தெரிவிக்கப்படுகிறது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன். வேறு அவர்கள் குறையாகவோ. குற்றச்சாட்டாகவோ எடுத்துச் சொன்னாலும் பரவாயில்லை. இங்கே தவறு நிகழ்கின்றது என்று எடுத்துச்சொல்ல எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. அப்படி எடுத்துச் சொன்னால்தான், அந்தத் தவறைத் திருத்தலாம். அந்தத் தவறுக்கு உரியவர்களைக் கண்டிக்கலாம், தண்டிக்கலாம். ஆனால் வேறு தவறான பொருள் வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் குறுக்கிட்டேன்.

திருமதி வி. ஜெயலட்சுமி : மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய தலைவர் அவர்களே, விளக்கம் கொடுத்த பிறகு, நான் மேலும் எடுத்துச் சொன் னால், அது அதிகப்பிரசங்கித்தனமாக இருக்கும். மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னதுபோல, அவ்வப்போது எங்களுக்கு இந்த அறிக்கை கிடைத்திருக்குமானால், நாங்கள் உடனடியாக மேலிடத்திலே சொல்லுவதற்கும், பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக நம்முடைய காரியங்களை நிறைவேற்றவும் வசதியாக இருக்கும் என்ற அந்த அடிப்படையிலேதான் நான் பேசினேன். பொது நிறுவனங்கள் குழு, மதிப் பீட்டுக் குழு ஆகியவை எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். இரண்டாண்டுக் காலம் கழித்து பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி மூலமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வோம். இரண்டாண்டு களுக்குப் பிறகு பொதுக் கணக்குக் குழுவின் பரிசீலனைக்கு வரும் என்றால், இப்போது எப்படி நம்முடைய குரலை எழுப்ப முடியும் என்ற அடிப்படையிலே தான் நான் கேட்கிறேன். குற்றச்சாட்டு சொல்லுவதற்காகவோ, கடுமை யாகத் தாக்கினார் என்று பத்திரிகைகளில் வரும் என்பதற்காகவோ என்னுடைய கடமையிலிருந்து நழுவ முடியாது. ஆக்கபூர்வமான காரியங் களில் உங்களோடு நின்று செயலாற்ற சித்தமாக இருக்கிறேன் என்று சொல்ல விரும்புகிறேன். அதே சமயத்தில் மக்கள் பிரதிநிதியாக உட்கார்ந்திருக்கும் போது, அவர்களுடைய நல்லெண்ணங்களுக்கும், காரியங்களுக்கும் உறு துணையாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் பேசுகிறேன்.

பல்லாண்டுக் காலமாக நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற உள்ளாட்சித் தேர்தலைப் பற்றியும், கூட்டுறவு இயக்கங்களுக்கான தேர்தலைப் பற்றியும் ஆளுநர் உரையில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. நமக்குக் கொடுக்கப்பட் டிருக்கும் ஆளுநர் பேருரையில், "1983 ஆம் ஆண்டு கூட்டுறவு இயக்க திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் நடைபெறும் என்று இருக் கிறது." ஆனால் நேற்று முன்தினம் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த

(பிற்பகல் 12-45)

அமைச்சர் அவர்கள் இன்னும் ஓராண்டுக்காலம் தேர்தல்கள் தள்ளி வைக்கப்பட வேண்டும் என்று ஒரு சட்டமுன்வடிவு கொண்டுவந்திருக்கின்றார்கள். அதிலே ஸ்பெஷல் ஆபீசர்கள் நீடிப்பதைப்பற்றி சொல்லிக்கொண்டு வந்திருக்கின் றார்கள். ஏன் இந்த முரண்பாடு? 1983 வது ஆண்டு திருத்தப்பட்ட இந்தச் சட்டத்தை உடனடியாக அமுல் நடத்த வேண்டும். ஏன் தேர்தலை நடத்தக் கூடாது? ஏன். இன்னும் திருத்தப்படவேண்டிய அம்சம் அதிலே இருக்கிறதா? இந்த இரண்டு ஆண்டுகாலமாக இந்த அரசு என்ன செய்து கொண்டிருந்தது



என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதிலே உள்ளாட்சித் தேர்தல் களைப்பற்றி ஒரு வார்த்தைகூட குறிப்பிடவில்லை. தேர்தல்கள் நடத்தாத தால் நிர்வாகம் எவ்வளவு சீர்குலைந்திருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். கிராமங்களில் விளக்கு கள் இல்லை. விளக்குக் கம்பங்கள்தான் இருக்கின்றன. பல்புகள் கிடை யாது. தெருவிலே நடக்க முடியவில்லை. தெருவிலே சாக்கடை நீர் ஆறாகப் போய்க்கொண்டிருக்கிறது. சுகாதார வசதிகள் இல்லை. குடிநீர் அங்கே வரவில்லை. அங்கே ஊராட்சி மன்றங்கள் இயங்கவில்லை. ஊராட்சி ஒன்றியங்கள் இல்லாத நிலையில் பஞ்சாயத்துக்களில் கிராம சேவகர்களைப் போட்டிருக்கிறோம் என்று சொல்கின்றார்கள். அங்கே கிராம சேவிகர்கள் இல்லை. எங்களுடைய கிராம சேவகரைக் காணவில்லை கண்டால் தெரிவி யுங்கள் என்று போர்டு வைக்க வேண்டும் என்று கிண்டல் செய்கின்றார்கள். அவர்கள் கிராமங்களுக்குச் செல்வதே இல்லை. எந்த நேரத்தில் எங்கே அவர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்று அறிய முடியவில்லை. கிராமத்தில் உள்ளவர்கள் பூனிபனுக்கு ஒரு கார்டு எழுதிப் போட்டுவிடுங்கள் என்று சொல்கின்றார்கள். அந்த கிராம மக்கள் எழுதிப்போடவேண்டுமாம். உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஒரு கிராமத்திலே ஒரு போர்வெல் ரிப்பேர் ஆகிவிட்டது என்று சொன்னால், பூனிபனுக்கு எழுதிப் போடுங்கள் என்று சொல்வார்கள். அப்படி கார்டு எழுதிப் போட்டுவிட்டால் பூனியனிலே இருந்து ஆள் அனுப்புவார்கள். ஒரு யூனியனுக்கு ஒரு மெம்பர் என்ற முறையிலேதான் போட்டிருக்கின்றார்கள். அந்த மெம்பர் எங்கே இருக் கின்றார் என்று தேடிக்கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. மாதக்கணக்கில் சொல்லி அனுப்பியும் வந்து ரிப்பேர் பார்க்கப்படாமல் அப்படியே இருக் கின்றது. இதற்கெல்லாம் காரணம் உள்ளூரில் ஒரு பஞ்சாயத்து, ஊராட்சி மன்ற உறுப்பினர் இல்லாததுதான். அப்படி உறுப்பினர்கள் இருந்திருந்தால், அவ்வப்போது நல்லமுறையில் பணிகள் நடந்திருக்கும். கிராம மக்கள் அவர்களிடம் சென்று விவரங்களைச் சொல்லிக்கொள்ள வசதியாக இருந்திருக் கும். அவ்வாறு செய்யவில்லை. உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதில் என்ன சிரமம் இருக்கிறது? எந்தக் கொள்கையின் அடிப்படையில் அரசு உள்ளாட்சித் தேர்தலை நடத்த இருக்கின்றது? இல்லை, தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பெண்களுக்கும் ஒதுக்கிய அந்த ரிசர்வேஷன் அடிப்படையிலே நடத்தப் போகின்றார்களா? "மாடல்" செய்யப்பட்ட முறையில் நடத்தலாம், என்று பூரணமாக அனுமதி கொடுத்தும்கூட உள்ளாட்சித் தேர்தல் இன்னும் ஏன் தள்ளிப் போய்க் கொண்டிருக்கின்றது இதற்கும் காரணம் என்ன? சொன்னால் மிகவும் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

மேலும் குடிநீர் வடிகால் வாரியம்பற்றிச் சொல்லிக்கொள்கிறேன். "எத்தனையோ குடியிருப்புகளுக்கு நாங்கள் கொடுத்திருக்கிறோம். எத்தனையோ குடியிருப்புகளுக்கு ஓவர் ஹெட் டேங்க் மூலமாக நாங்கள் சப்ளை கொடுத்திருக்கிறோம். எத்தனை குடியிருப்புகளுக்கு இனிமேல் பம்புகள் போடப்போகிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்போகிறோம் என்ற திட்டத்தையும் சொல்லியிருக்கிறார்கள். குடிநீர் வாரியத்தைப்பற்றி நான் மிகவும் வேதனையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். குடிநீர் வாரியத்திலே ஓவர் ஹெட் டேங்க் ஒழுங்காக 'பங்க்ஷன்' செய்கின்றதா?. அவ்வாறு ஒழுங்காக 'பங்க்ஷன்' செய்கின்றவைகள் சுகாதார முறையில் நல்லமுறையில் 'பங்க்ஷன்' செய்கின்றனவா? குறிப்பாக உதாரணத்திற்கு நான் சொல்கிறேன். என்னுடைய கிராமத்திலே வீடுகளுக்குக் குடிநீர் சப்ளை செய்து கொண்டிருக்கிறார்கள். எங்கள் வீட்டிலே ஒரு டேப்பில் அடைப்பு இருக்கிறதே என்று சொல்லி, அந்த டேப்-ஐக் கழற்றிப் பார்த்தால், அதிலேயிருந்து வெண்மையாக நீளமாக ஒன்று வந்தது. இரண்டு அடி நீளம் உள்ள குடல் வந்து விழுந்தது. அது எப்படி வந்திருக்கின்றது என்று பார்த்தால், ஓவர் ஹெட் டேங்கின் மேல் உள்ள ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் உடைந்து அதை ஒரு பறவைக் குடும்பம் சரணாலயமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. அதனுடைய குஞ்சுகள்தான் இறந்த நிலையில், கால் எல்லாம் வந்திருக்கின்றது. பொதுமக்கள் பிரதிநிதி வீட்டிற்குச் சென்றால்தான் இந்த விஷயம் தெரியவரும் என்ற அளவில் அது என்னுடைய வீட்டிலேயே வந்திருக்கிறது என்று ஊரில் உள்ளவர்கள் சிரித்துக்கொண்டே சொன்னார்கள். சில ஊர்களிலே தண்ணீர் தொட்டிகள் இருந்துகொண்டிருக்கின்றன. அதில் வாட்டர் சப்ளையே வருவதில்லை. ஏதோ ஒட்டுமொத்தமாக நான் குற்றம் சாட்டுகிறேன் என்று நினைக்கக்கூடாது. குறிப்பாக வேண்டுமென்றால், அந்த ஊரின் பெயரையே நான் சொல்கிறேன். வெம்பக்கோட்டை பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த விளாமரத்தப்பட்டி என்ற கிராமத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே உள்ள பெண்கள் எல்லாம் என்னிடம் சண்டைக்கு வந்தார்கள். பக்கத்திலே ஆறு இருக்கிறது, ஓவர் ஹெட் டாங்க் கட்டி வைத்துவிட்டார்கள், ஏன் தண்ணீர் கொடுக்காமல் இருக்கிறது என்று கேட்கிறார்கள். இந்த நிலையில், அங்கே கழிப்பிடம் கட்டப்பட்டு, அதற்குக் குழாய் இணைப்பு இழுத்துக்கொண்டிருக்கிறார்கள். குடி தண்ணீருக்கே இன்னும் வழியில்லை. கழிப்பிடம் கட்டுகிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்த அரசைக் குற்றம் சாட்ட வேண்டுமென்று இவற்றைக் கூறவில்லை. எவ்வாறு பஞ்சாயத்து நிர்வாகங்கள் நடக்கின்றன என்பதற்காகத்தான் சொல்கிறேன். இவ்வாறு குடிநீர் வடிகால் வாரியம் இயங்கிக்கொண்டிருக்கிறது.





இந்தக் குறைகளை எல்லாம் களைந்து, கிராம மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அடுத்து, மின்சாரத்தைப்பற்றிப் பேச விரும்புகிறேன். மின்சாரத்தைப் பற்றிச் சொல்லும்போது. இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் மின்சாரத் துறை நிதி நிலை அறிக்கை வருகிறதென்று மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதிலே விரிவாகப் பேசலாமென்றும் அவர்கள் சொன்னார்கள். மின்சாரத்தைத் தொட்டாலே 'ஷாக்' அடிக்கும் நிலையில் இருக்கிறது. அதைப்பற்றி விரிவாகத் தலைவாவர்கள் பேச வேண்டுமென்று விட்டுவிட்டு, குறிப்பாக விவசாயிகளைப் பொறுத்த மட்டில் உள்ள ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது புதியதாக ஒரு ஹார்ஸ் பவருக்கு 70 ரூபாய் வசூலித்தால் போதுமென்று சொல்லியுள்ளார்கள். இதை விவசாயிகளுக்கு நல்ல நிவாரணமாக நினைக்கிறார்கள். அது நல்ல நிவாரணம் தான். யாருக்கு? காவிரி, பவானி, நொய்யல் ஆறு ஆகிய ஆறுகளின் கரைகளில் உள்ள விவசாயிகளுக்கு ஒரு ஹார்ஸ் பவருக்கு 70 ரூபாய் என்று போட்டிருப்பது நல்லது தான். ஆனால் வறட்சியால் பாதிக்கப்பட்ட நெல்லை, இராமநாதபுரம், சேலம், தர்மபுரி போன்ற மாவட்டங்களுக்கு இது ஒத்துவருமா என்று பார்க்க வேண்டும். எனவே 70 ரூபாய் என்று போட்டிருப்பதை 50 ரூபாயாகக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையேல் பழைய மாதிரி யூனிட்டுக்கு இவ்வளவு என்று வசூலித்தால் நல்லதாக இருக்கும்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தமட்டில், 350 சப்-ஸ்டேஷன்கள் இயங்கி வருகின்றன. அதை இரண்டு மடங்காக்கி, 25 கிலோ மீட்டருக்கு ஒரு சப்-ஸ்டேஷன் என்று ஏற்படுத்தினால். நல்ல முறையிலே விவசாயிகளுக்கு சேவை செய்ய முடியுமென்று கூறிக் கொள்கிறேன். மின்சாரத்தைப் பொறுத்தவரையில், களவு எப்படி நடக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லையா அல்லது கண்டுபிடித்தாலும் அதன்மேல் நடவடிக்கை எடுக்கத் தயாராக இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன். பல தொழிற்சாலைகளில் எவ்வாறு எல்லாமோ மின்சாரம் திருடப்படுவதாகச் சொல்லப்படுகிறது. மேலும் மின் கட்டண பாக்கி ஏராளமாக இருந்தாலும், அதை வசூலிக்க நம்முடைய அரசு ஆவன செய்யவில்லை. அதே சமயத்தில் ஒரு விவசாயி 15 ரூபாய் மின் கட்டணம் செலுத்தவில்லை என்றால், உடனே ப்யூஸ் கேரியரைப் பிடுங்கிவிடுகிறார்கள். ஆகவே கிராம ஜனங்களுக்கு [illegible]

கோவில் ஆண்டிகளாக இருக்கிறார்கள் என்று வேதனையோடு சொல்லி,
இந்தக் குறைகளை எல்லாம் களைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
யார் யாரிடம் மின் கட்டண பாக்கி அதிகமாக இருக்கிறதோ, அதை வாங்கி
நல்ல விதமாக மின்சாரத் துறையை இயக்கி, நஷ்டத்தைப் போக்க வேண்டும்.
அடுத்து, ஒரு குறையை காவல் துறையினரிடம் சொல்வதா அல்லது மின்
துறை அமைச்சரவர்களிடம் சொல்வதா அல்லது மாண்புமிகு முதலமைச்சரவர்
களிடம் சொல்வதா என்று தெரியவில்லை. எங்கள் பகுதியில் இரண்டு
மாதங்களுக்கு ஒரு முறை ஒயர்களைக் 'கட்' பண்ணிவிடுகிறார்கள் ஒயர்
திருட்டு நடக்கிறது. அதைப் போய் சொன்னால், 'இப்போது எங்களிடம்
ஸ்டாக் இல்லை. உங்களுக்கு அவசரமென்றால் வாங்கிப் போட்டுக்கொள்
ளுங்கள்' என்று சொல்லுகிறார்கள். இதனால் ஒவ்வொரு முறையும் 150
ரூபாய், 200 ரூபாய், 300 ரூபாய் என்று செலவு செய்ய வேண்டியிருக்கிறது.
இந்த நிலையில், எவ்வளவு நாட்களுக்குத்தான் விவசாயிகளால் நஷ்டத்தைச்
சமாளிக்க முடியுமென்று பார்க்க வேண்டும். எனவே இப்படிப்பட்ட திருட்
டுக்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக ஏழை விவசாய
மக்களின் கிணறுகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று இந்த மன்றத்
தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைபற்றி இங்கே பல புள்ளிவிவரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.
நெற்பயிருக்கு இன்சூரன்ஸ் சலுகை கொடுத்திருந்தோம். இப்போது
கடலைப் பயிரையும் இன்சூரன்ஸ் செய்வதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-55)

இந்த இரண்டு பயிர்களுக்காவது இந்த வசதியைக் கொடுத்திருப்பதை வர
வேற்கிறேன். ஆனால் எந்தெந்த ஏரியாவுக்கு இந்த வசதி என்கிற விவரம்
இல்லை. குறிப்பாக வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இத்
திட்டத்தை அவசியம் விஸ்தரிக்க வேண்டும்.

அடுத்து, வேளாண்மைத் துறையிலே 'பயிற்சி வழித் திட்ட அதிகாரிகள்'
என்று போட்டிருக்கிறார்கள். எப்படி பஞ்சாயத்துக்களில் கிராம சேவகர்கள்
போட்டிருப்பது பலனில்லாமல் இருக்கிறதோ அதேபோல் இவர்களுக்குப்
தெண்டமாகச் செலவு செய்து வருகிறோம். நானும் விவசாயக் குடும்பத்
தைச் சார்ந்த, கிராமத்திலுள்ள ஒரு குடும்பத்தில் தான் வாழ்கிறேன். எங்கள்
பகுதிக்கு இந்தப் பயிற்சி வழித் திட்ட அதிகாரிகள் ஒரு தடவை கூட வந்து
அவ்வாறு செய்ய வேண்டும், இவ்வாறு செய்ய வேண்டும் என்று பயிற்சி





கொடுத்தது கிடையாது. என்னுடைய ஊரிலேயே இந்த நிலைமை
என்றால், மற்ற இடங்களில் எப்படியோ? அவசியம் இதுகுறித்து ஆராய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுடைய விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம்
பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இளம் தலைவர் திரு. ராஜீவ் காந்தி
அவர்கள் கூட விவசாயப் பெருங்குடி மக்கள் காலம் காலமாக நஷ்டத்தில்
உழன்றுகொண்டிருப்பதைப் பார்த்து. அவர்களுடைய நிலைமை மறுபரி
சீலனை செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, தலைவர்
அவர்கள் சொல்லியிருப்பதுபோல், மாநில அரசு மத்திய அரசையோ, மத்திய
விவசாய அமைச்சரையோ, அதிகாரிகளையோ அல்லது அக்ரிகல்சுரல்
பிரைசஸ் கமிஷன் என்ற ஒன்று இருக்கிறது அதனையோ அணுகி, அவர்கள்
மூலமாவது இங்கே இருக்கக்கூடிய ஏழையெளிய விவசாயிகளுடைய விளை
பொருள்களுக்கு நல்ல விலை நிர்ணயம் செய்து அவர்களுடைய வாழ்வை
வளமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 'என்விரன்மென்டல் பொலூஷன் கன்ட்ரோல்' என்று ஒரு
மந்திரி போட்டு, இதற்காக என்று தனியாக ஓர் இலாகாவையும் ஏற்படுத்தி
னோம். சுற்றுப்புறத்தை எப்படி சுகாதாரமாக வைத்துக்கொள்ள வேண்டு
மென்று கண்காணிக்க வைத்திருக்கிறோம். அதுபற்றி ஆளுநர் உரையில்
ஒரு வரி கூட இல்லை. 'என்விரன்மென்டல் பொலூஷன் கன்ட்ரோல்'
என்கிற முறையில் இதுவரை இந்த அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்
டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். பேப்பர் மில்களில் இருந்து
வருகின்ற கழிவுகள் ஆற்று நீரில் கலந்து விடுகின்றன. வட ஆற்காடும்
தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற தண்ணீர் நல்ல
தண்ணீரோடு கலந்துவிடுகிறது. அதுபோல் மணலியில் உள்ள கெமிக்கல்
பேக்டரியிலிருந்து வருகிற புகை ஆகாசத்தை அசுத்தப்படுத்துகிறது.
அரியலூர், ஆலங்குளம் போன்ற இடங்களிலுள்ள சிமெண்ட் தொழிற்சாலை
யிலிருந்து வருகின்ற சிமெண்ட் தூசியால் விவசாயிகளும் பொது மக்களும்
மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்றமுறை நான் இதே அவையில்
பேசும்போது, சம்பந்தப்பட்ட அமைச்சர், "ஆலங்குளத்தைப் பொறுத்தவரை
யில் தூசி தடுப்பான் கருவி பொருத்தியிருக்கிறோம், தனியார் ஆலைகளிலும்
இதனைப் பொருத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று சொன்
னார்கள். "மேலும் இது சம்பந்தமாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்"
என்றும் சொன்னார்கள். ஆனால் இதுவரை இதுசம்பந்தமாக என்ன
நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது' என்கிற விவரம் இல்லை. இதுகுறித்து

ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக சிமெண்ட் கார்ப்பரேஷனின் தலைவராக இருந்த திருமதி யாஸ்மின் அகமது அவர்களைச் சந்தித்தேன். அவர்கள் தூசி தடுப்பான் கருவி இருப்பதாகவும், மின் பற்றாக்குறை காரணமாக அதை உடனடியாகப் பொருத்த முடியவில்லை என்றும், தனியாக இதற்காக ஜெனரேட்டர் வைத்தால்தான் தடுக்கலாம் என்றும் சொன்னார்கள். அந்த வகையில் இதுசம்பந்தமாக இந்த அரசு நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சிமிண்ட் தூசி விளை நிலத்தில் விழுந்து காண்கிரிட் போல் அப்படியே படர்ந்து விடுகிறது. நிலம் பாழாகி விடுகிறது. சுற்றுப்புறங்கள் நல்ல சுகாதார நிலையில் இருந்தால்தான் நாட்டு மக்கள் ஆரோக்கியமாக வாழ முடியும். அதற்கு நல்ல விதமாக ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து, சோசியல் வெல்பேர் ஸ்கீம் என்று பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டங்கள் யார் யார் மூலம், எவ்வாறு நிறைவேற்றப்பட இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன். இங்கே 'வாலன்டரி ஆர்கனைசேஷன்' மூலம் கொடுத்தால் நல்லவிதமாகச் செயல்படும் என்று சொல்லப்பட்டது. அதிகாரிகளிடம் இதைக் கொடுத்தால், அவர்கள் 10 மணி முதல் 5 மணி வரை வேலை செய்வது என்கிற முறையில் செயல்படுவதால், நல்ல சேவா மனப்பான்மை அவர்களிடம் இல்லையாதலால், அவர்களிடம் கொடுப்பது நல்லதில்லை என்று சொன்னார்கள். எல்லாத் துறைகளிலும் ஒருசில பிளாக் ஷிப் (Black Sheep) இருக்கத்தான் செய்கிறார்கள். ஒரு சில வாலண்டரி ஆர்கனைசேஷன்களிலும் பொய்யும், பித்தலாட்டமும் நடைபெறத் தான் செய்கிறது. ஆனால் உள்ளபடியே தீமை எங்கு நடைபெற்றாலும் அரசு

(பிற்பகல் 1-00)

களைய வேண்டும். அப்படி சமூக நல வாரியத்தை நல்ல முறையில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

மாற்றுத் தலைவர் (திரு. பி. இராமலிங்கம்): அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு 20 நிமிடம் ஒதுக்கப்பட்டது. 31 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் மூன்று உறுப்பினர்கள் பேச வேண்டும். பேச்சை சீக்கிரம் முடிக்க வேண்டும்.





திருமதி வி. ஜெயலட்சுமி : இந்த சமூக நல வாரியம் எவ்வாறு பணி புரிகிறது என எனக்குப் புரியவில்லை. அது நான்காண்டுக் காலமாக முழுமை பெற்று செயல்படவில்லை. 30 உறுப்பினர்கள் கொண்ட அந்த வாரியம், 15 உறுப்பினர்களை மட்டுமே கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. அப்படி ஐந்தாண்டுக் காலமாக 15 பேரை மட்டும் வைத்துக்கொண்டு ஏன் நடத்த வேண்டும்? இதைப்பற்றி மத்திய சமூக நலவாரியக் கூட்டத்தில் எடுத்துச் சொன்னோம். முழுமையான வாரியமாக அதைச் செயல்பட வைத்தால் என்ன என்று கேட்டபோது, மாநில வாரியத்திடமிருந்து ஒரு தகவலும் இல்லையென்று அப்போது சொன்னார்கள்.

Thirumathi TARA CHERIAN: I appreciate all that my hon. colleague is saying. Probably she does not know the rules and regulations. There is nothing to be done by the Tamil Nadu Government. It is the Central Social Welfare Board who have to do it. Therefore, the appeal should be made to the Central Social Welfare Board at Delhi.

திருமதி வி. ஜெயலட்சுமி : மத்திய சோஷியல் வெல்பேர் போர்டு சேர்மனிடம் சொன்னபோது, நாங்கள் ஏற்கெனவே மாநில சோஷல் வெல்பேர் போர்டில் சொல்லியிருக்கிறோம் என்று சொன்னார்கள். இப்படி பரஸ்பரம் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தால், நல்ல விதமாக எப்படி நடைபெறும் என்று தெரியவில்லை. தமிழகத்தில் இந்த வாரியத்தில் பணியாற்ற மேலும் 15 பேர் கிடைக்கவில்லையா? அப்படி பணியாற்ற யாருக்கும் அருகதை இல்லையா? ஏன் இன்னும் 15 பேர்களைப் போடுவதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள்? ஆகவே அவர்களை உடனே நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Thirumathi TARA CHERIAN: I am sorry the hon. Member is again wrong. Every district is supposed to have a Board. Now that the district is bifurcated and trifurcated, many Members have to come. That is the point.

திருமதி வி. ஜெயலட்சுமி : மாவட்டங்களைச் சிறு சிறு மாவட்டங்களாக்கும் பணி நடக்கிறது என்றார்கள். அது நிர்வாகத்திற்கும், தொழில் வளர்ச்சிக்கும் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்பதற்காகத்தான். ஆனால் உண்மையிலேயே அவ்வாறு இல்லை என பயப்படுகிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஸ்பின்னிங் மில்கள் இனிமேல் கிடையாது என்று சொல்லிவிடும் நிலை இருக்கிறது என்று சொல்லி, இவைகளையெல்லாம் மனதில் கொண்டு, இந்த அரசின் ஆக்க பூர்வமான காரியங்களுக்கு காங்கிரஸ் கட்சி ஒத்துழைப்பைத் தரும் என்று சொல்லி, குறைகள் கண்டால் அவைகளைச் சுட்டிக் காட்ட தயங்கமாட்டோம் என்றும் சொல்லி அமைகிறேன். வணக்கம்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

*திரு. பா. அங்கமுத்து : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேச வாய்ப்பளித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான்கு மாதங்கள் வாடிய பயிராக இருந்த கோடிக்கணக்கான மனித இதயங்களை தன் நிலவு முகத்தின் சத்திய தரிசனத்தினால் மலரச் செய்த இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் சாதனைகளை சரித்திரமாக்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த ஆளுநர் உரை எடுத்துக் காட்டுகிறது.

தர்மம் தலையைக் காக்கும் என்பார்கள். இன்று தர்மத்தையே தமிழ் நாட்டு மக்கள் காப்பாற்றியிருக்கிறார்கள். ஆம். அவர்கள் அழுத கண்ணோடும், தொழுத கைகளோடும் தமிழகத்துக் கோயில்களில் எல்லாம் நின்று கேட்ட வரத்தால், இன்று தர்மதேவன் பிழைத்து வந்து மீண்டும் கோட்டையிலே அமர்ந்துவிட்டார். ஏழைகள் ஆற்றாது அழுத கண்ணீர், அநீதியை அழிக்கும் என்பதையும் அதே ஏழைகள் மனமுருகி வேண்டுகின்ற வரம் அற்புதங்களை சாதிக்கும் என்பதையும் கண்கூடாக இன்று கண்டு விட்டோம். சத்தியத்துக்கு மரணமில்லை. எங்கள் சத்தியத்தாய் பெற்றெடுத்த தர்ம தேவனுக்கும் அப்படித்தான் என்பதற்கு மூன்றாவது பிறவி எடுத்த எங்கள் தலைவர் சாட்சியமாகிவிட்டார்.

தாயுள்ளம் கொண்ட தலைவர் அப்பல்லோ மருத்துவ மனையில் படுத்து விட்டார் என்ற செய்தியைக் கேட்ட அளவிலே தங்கள் இன்னுயிரைக் காணிக்கையாக்கி தர்மத்திற்கு உயிர் கொடுத்த அந்தத் தியாகச் செம்மல்களின் ஆன்மாவிற்கு கண்ணீரால் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த





(பிற்பகல் 1-05)

நாட்டின் இதய தெய்வத்தை இரவு பகல் அருகே இருந்து பாதுகாத்துக் காப்பாற்றி மீண்டும் இந்த நாட்டுக்குத் தொண்டாற்றும் வகையில் அளித்த அண்ணியார் திருமதி ஜானகி அம்மையார் அவர்களுக்கும், மருத்துவ உலகில் புதிய சரித்திரம் படைத்த மேல்நாட்டு மருத்துவ நிபுணர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக்கொள்வதை எனது கடமையாகக் கருதுகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீது மக்கள் வைத்துள்ள பேரன்பையும் பெரும் பற்றையும் குறிப்பிட்டு, உடல் நலத்தோடு திரும்பிய அவரை விழாக் கோலத்தோடு தமிழகம் வரவேற்ற காட்சியை ஆளுநர் அவர்கள் அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அத்துடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நலத்தோடு மீள்வதற்குத் துணை நின்றவர்களுக்கு நன்றியாக சில வார்த்தைகள் சேர்த்திருந்தால், இன்னும் பெருமையாக இருந்திருக்குமென்று கூற விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையில் பல நல்ல திட்டங்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயத்தை எடுத்துக்கொண்டால், விளைச்சல் பெருக வேண்டும் என்பதற்காக விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை அளிக்கும் திட்டம் பாராட்டப்பட வேண்டியதாகும். ஒரு குவிண்டால் நெல்லுக்கு பதினைந்து ரூபாய் என்ற அளவுக்கு ஊக்கத் தொகையை அரசு அளிக்கிறது. அந்தத் தொகையை இடுபொருள் உதவித் தொகையாக வழங்குவதால், விவசாயிகள் பயிருக்கு உரம் வாங்கும் செலவு குறைகிறது. உற்பத்திச் செலவைக் குறைத்து விவசாயிகள் பயன் பெறும் வகையில் வகுத்துள்ள இத்திட்டத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பம்பு செட்டுகளையே நம்பியுள்ள சிறு உழவர்களுக்கு மின் சக்தியை இலவசமாகவும் ஒரு குதிரைத் திறன் கொண்ட பம்புசெட்டுக்கு ஆண்டுக்கு எழுபத்தைந்து ரூபாய் மட்டுமே செலுத்தும் சலுகையும் அரசு அளித்திருப்பதை விவசாயப் பெருங்குடி மக்கள் பாராட்டுகிறார்கள். அதற்காக அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

கைவினைஞர்களுக்கு ஓய்வுகால நலத்திட்டம் வகுத்து செயல்படுத்த இருப்பதாக ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்காக அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குத் தமிழ் நாட்டில் கைவினைஞர்கள் என்று சொல்லக்கூடிய சிற்பி, கருமார், தச்சர், கன்னார், பொற்கொல்லர் ஆகிய தொழிலாளர்கள் நாற்பது லட்சத்துக்கும் மேலாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள்

தொழிலைச் செய்வதற்கான மூலப்பொருள்களை வழங்கவோ, அல்லது அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை கொள்முதல் செய்து விற்கவோ இன்றைக்கு எந்த அமைப்பும் இல்லை. கைத்தறி நெசவாளர்களுக்கு உள்ளதைப்போல கோ-ஆப்டெக்ஸ் போன்ற எந்த ஒரு அமைப்பும் இந்தக் கைவினைஞர்களுக்கு உதவியாக இதுவரை ஏற்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே மாவட்டம் தோறும் அரசு அமைப்புகளை கூட்டுறவு முறையில் நிறுவி கைவினைஞர்களுக்குக் கச்சாப் பொருள்கள் நியாய விலையில் கிடைக்கவும், அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு தக்க விற்பனைச் சந்தையை உருவாக்கவும் அரசு வழிகாண வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சி. இராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கைவினைஞர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களைக் கொள்முதல் செய்து விற்க எந்த அமைப்பும் இல்லை என்று சொல்கிறார். ஸ்வாமி மலையில் இருக்கிறது. அது போல் கருமார்களுக்கு இருக்கிறது. மற்றவர்களுக்கும் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. பா. அங்கமுத்து : இன்றைக்குக் கேரள மாநிலத்தில் கைவினைஞர்களுக்கு என்று ஆர்டிசான் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் என்ற பெயரில் ஒரு வாரியம் தனியாக அமைக்கப்பட்டு, அதன்மூலமாக கைவினைப் பொருள்கள் உற்பத்தியும், விற்பனையும் நடைபெறுவதாக அறிகிறேன். அதைப் போன்று நமது அரசும் ஒரு செயல் திட்டத்தை உருவாக்கினால், கைவினைஞர்களின் வாழ்வு மேம்பட உதவியாக இருக்குமென்ற கோரிக்கையை அரசின் முன் வைக்க விரும்புகிறேன்.

நமது முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் எதிர்காலத் தலைமுறையினர் வேலையில்லை என்ற ஏக்கத்துக்கு ஆளாகாமல் இருக்க வேண்டும் என்பதற்காக பல திட்டங்களை வகுத்து வருகிறார்கள். தொழில் அடிப்படையிலான கல்வித் திட்டம் அமைத்து அதற்கு ஆயிரம் கோடி ரூபாய் செலவானாலும் அதை நிறைவேற்ற வேண்டுமென்ற உறுதியை இந்த உரையில் பார்க்கும்போது, எதிர்காலம் ஒளிமயமாக இருக்குமென்ற நம்பிக்கை பிறக்கிறது.



தமிழகத்தை பல முடி மன்னர்கள் ஆண்டிருக்கிறார்கள், வள்ளல்கள் என்று பல மன்னர்கள் புலவர்களால் பாராட்டப்பட்டிருக்கிறார்கள். அண்மையில் தஞ்சையில் சிறப்பிக்கப்பட்ட மாமன்னன் இராஜராஜன் போன்ற சாதனையாளர்கள் செங்கோல் செலுத்தியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் யாருமே இந்த நாட்டில் பிறந்த குழந்தைகளுக்குப் படிப்போடு உணவையும் அளித்தார்கள் என்ற வரலாறு காண முடியவில்லை. குறுநில மன்னர்களாயினும் பெரும் மாமன்னர்களாக இருந்தாலும், பட்டினி கிடக்கும் பச்சிளங் குழந்தைகளுக்குப் பகலுணவு அளித்தார்கள் என்ற செய்தியைப் பார்க்க முடியவில்லை. ஆனால் குடியாட்சி நிலவும் தற்காலத்தில் மக்களின் ஒத்துழைப்போடு இந்த மண்ணில் பிறந்து அம்மா என்று அழைக்கும் அத்தனை ஏழைக் குழந்தைகளுக்கும் தாயுள்ளம் கொண்ட ஒரு தர்மதேவன் சத்துணவு போடுகிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படிக்கும்போது அல்லது பேசும்போது எப்போதாவது ஒருதடவை துணைத் தலைவரையும் பார்த்துக்கொண்டு பேசுவது நல்லது.

திரு. பா. அங்கமுத்து : இந்த ஆண்டு பசித்த வயிற்றுக்கு சோறு போடுவதோடுகூட திறந்த மேனிக்கு உடையும் தந்து, மகிழப்போகிறார் என்ற செய்தியை இந்த உரையில் பார்க்கும்போது, இந்தத் தலைமுறையில் பிறந்து வளரும் ஏழைக் குழந்தைகள் பசியறியாத பாக்கியசாலிகளாக வளர்வார்கள் என்பதை எண்ணிப் பார்த்துப் பெருமைப்படுகிறேன். உணவும் உடையும் பெற்று மலரும் அந்தக் குழந்தைச் சிரிப்பில் கோடி புண்ணியம் சேருகிறது. அது அரணாக நின்று எங்கள் தலைவரை எத்தனையோ ஜன்மங்களுக்குக் காப்பாற்றப் போகிறது. தேர்தல்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வரலாம். ஆனால் இன்று வளருகின்ற தலைமுறையின் வாழ்த்துக்கள் பலநூறு ஆண்டுகளுக்கு அந்தத் தலைவனைப் போற்றும்.

(பிற்பகல் 1.10)

எட்டாவது வகுப்பு வரை படிக்கிற குழந்தைகளுக்கு சீருடை வழங்குவதோடு இலவசமாகப் பாடப் புத்தகங்களையும் வழங்கும் திட்டம் தொடர்ந்து இருப்பதாக ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் ஏழைப் பாட்டாளி பாமர மக்களின் இதயங்களிலே கல்வெட்டாக மின்னப் போகும் சரித்திர சாதனைகள்.

அதே சமயத்தில் நடுத்தர வர்க்கத்தினரை சுரண்டி பகல் கொள்ளை அடிக்கும் தனியார் ஆங்கிலப் பள்ளிகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டிய கட்டாயமும் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை நினைவூட்டுவது எனது கடமை என்று கருதுகிறேன். அந்தப் பள்ளிகளை நோக்கி போட்டி போட்டுக்கொண்டு ஏன் செல்ல வேண்டுமென்று கேட்கலாம். அந்த அளவுக்கு அரசுப் பள்ளிகளின் கவர்ச்சி குறைந்திருக்கிறது. அதைச் சீராக்கி மக்களை தங்கள் பக்கம் ஈர்க்கும் வகையில் அரசுப் பள்ளிகள் கண்காணிக்கப் படவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். பல கோடி ரூபாய்களை ஊதிய மாக அளித்து ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக வைத்துப் போற்றுகிறது அரசு. ஆனால் அரசுப் பள்ளிகள் என்றால், இரண்டாம் தரமானவை என்ற பெயர் மக்கள் மத்தியிலே உருவாகி வருகிறது. இதை உடனடியாக சரிப் படுத்த வேண்டும். ஆங்கில மோகம் உள்ளவர்கள் மட்டும் தனியார் பள்ளி களுக்குச் செல்லவில்லை. கட்டுப்பாடும், ஒழுங்கும் அங்கே கற்பிக்கப்படு கிறது என்ற எண்ணமும் அதற்குக் காரணமாகும். எனவே நல்ல கண்டிப் பும், கட்டுப்பாடும் ஒழுக்கமும் அரசுப் பள்ளிகளிலே நிலவுகிறது என்ற நிலையை உருவாக்க அரசு வழிகாண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற் றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் முதலான வேலை வாய்ப்புப் பெருக்கத் திட்டங்கள், எஸ்.எஸ்.எல்.சி., பி.யு.சி., தேறியுள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வரை உதவித் தொகை வழங்கும் திட்டம் போன்ற ஆக்க பூர்வமான பல நல்ல திட்டங்களை ஆளுநர் உரையிலே அரசு வெளியிட் டிருக்கிறது.

முக்கியமாக பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கும் முயற்சியாக தொழிற் கல்வியின் வளர்ச்சியில் அக்கறையோடு செயல்படும் அரசின் திட்டங்கள் வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்தி, சரித்திர நாய கரின் புகழ் உலகமெங்கும் பரவும் வகையில் அமைந்துள்ள இந்த உரையைப் பாராட்டி எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து, அமைகிறேன்.

* **திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையில் அறிவித்துள்ள நல்ல பல திட்டங்களைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன், அதற்குப் பாராட்டுக் களைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது கருத்துக்களைச் சொல்வதற்கு





முன்பாக, உடல் நலமின்றி அமெரிக்காவுக்குச் சென்று நல்லமுறையில் தேறி வந்த முதல் அமைச்சர் அவர்களுக்கு நான் சார்ந்துள்ள பட்டதாரி முற் போக்கு ஆசிரியர்கள் கூட்டணி சார்பாக, நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து, தொடர்ந்து அவர்களது சேவையால் ஏழை எளிய மக்களுக்கு ஒரு நல்வாழ்வினை அவர்கள் நிச்சயமாக அளிப்பார்கள் என்று கருதி எனது மகிழ்ச்சியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நான் முதலில் ஸ்ரீலங்காப் பிரச்சினையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அதனை மிகவும் சுட்டிக்காட்டி, எந்த அளவுக்கு ஸ்ரீலங்கா அரசு நம்முடைய தமிழர்கள் மீது கட்டவிழ்த்து பலவிதமான இன்னல்களையும், பலவித உயிர் களையும் போக்கி கொடூரமான செயல்களைப் புரிந்து வருகிறது என்று கூறினார்கள். அவர்களுக்கு விரைவிலே ஒரு நிவாரணம் அளிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அண்மையில் நான் வேலூர் சென்றிருந்த போது, ஸ்ரீலங்கா தமிழர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. நான் கலந்துகொண்ட கூட்டத்தில் அவர் கூறிய ஒரு சம்பவம் எங்களுடைய மனதை எல்லாம் கலக்கி எல்லோருடைய கண்களிலேயும் நீரை வரவழைத் தது. அவர்கள் குறிப்பிட்ட ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறேன். ஸ்ரீலங்காவிலே அந்தத் தமிழர் ஒருசமயம் ஒரு கடைத் தெருவிலே இருக்கும் போது, அங்கு சிங்கள ராணுவ வீரர்கள் வண்டியிலிருந்து வந்து ஒரு தமிழ் சகோதரி, அதுவும் கர்ப்பமாக உள்ள சகோதரி, மண்ணெண்ணெய் வாங்கு வதற்காக கடைக்கு வந்திருந்தபோது, அந்த ராணுவ வீரர்கள் வண்டியை நிறுத்தி, அந்தப் பெண்ணை மானபங்கம் செய்து, ஒரு பந்தயம் கட்டிக் கொண்டு—அந்தப் பந்தயம் என்னவென்றால், அந்த சகோதரியின் வயிற்றில் இருக்கும் குழந்தை ஆண் குழந்தையா, பெண் குழந்தையா என்று, கேவலம் அந்தப் பந்தயத்திற்கு ஒரு சிகரெட்டை பந்தயமாக வைத்து—துப்பாக்கி யினுடைய பயோனட் மூலமாக அந்த சகோதரியினுடைய வயிற்றை அறுத்து அந்தக் குழந்தையைப் பார்த்து, அவர்கள் ஒருவருக்கொருவர் 'ஜெயித்து விட்டாய், சிகரெட் வாங்கிக் கொடுக்கிறேன்' என்று சொல்லி, அந்த சிசுவின் உயிரையும் தாயின் உயிரையும் பயங்கரமாகக் கொன்றிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-15)

இவ்வாறு பல்வேறு கொலைகளும், கொள்ளைகளும், அட்டூழியங்களும் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. நம்முடைய அரசு இதையெல்லாம் மிகவும் வன்மையாகக் கண்டித்திருக்கிறது. மேலும் இத்தகைய வன்முறைச்

சம்பவங்கள் அங்கே நடவாமல் இருக்கவும் தமிழர்கள் பாதுகாக்கப்படவும் மத்திய அரசு முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசிடமிருந்து திட்டங்களுக்கு உரிய அளவுக்கு மாநில அரசுக்கு நிதி உதவி அளிக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு அமைச்சர் அவர்கள்கூட இங்கே அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். மத்திய அரசு உரிய உதவியை அளித்தால்தான், திட்டங்களை மாநில அரசு செம்மையாகச் செயல்படுத்த முடியும் என்பதைச் சொல்லி, மத்திய அரசு உரிய உதவியை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வறுமையை ஒழிக்க மேற்கொண்டுள்ள திட்டங்களை நான் பாராட்டி வரவேற்கிறேன். முதியோர்க்கு ஓய்வு ஊதியம் வழங்குவதையும் நான் பாராட்டி வரவேற்கிறேன். இவைகளையெல்லாம் காலதாமதமில்லாமல் விரைவாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடிப்படை சுகாதார வசதிகளை கிராமப்புறங்களில் செய்து தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். தமிழக அரசின் பொது விநியோக முறையை நான் பாராட்டுகிறேன் என்றாலும் அவற்றில் தரமான பொருள்களை வழங்கிட வேண்டும் என்றும், 600 குடும்ப அட்டைகளுக்கு ஒரு கடை என்றிருப்பதை மாற்றி 500 அட்டைகளுக்கு ஒரு கடை என்று ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் அங்கே பணியாற்றும் ஊழியர்களையும் நிரந்தரமாக்கி அவர்களின் பணியை வரன் முறைப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பல பெரிய மாவட்டங்களையெல்லாம் இரண்டாகப் பிரித்திருப்பதை வரவேற்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தை விழுப்புரம் வள்ளலார் மாவட்டம் என்று மாற்றியிருப்பதை வரவேற்கிறேன். அதை மாற்றி வள்ளலார் வாழ்ந்த வடலூரை உள்ளடக்கிய பகுதிக்கு வள்ளலார் மாவட்டம் என்று பெயரைச் சூட்டலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய் மாவட்டங்கள் வருவாய்க் கோட்டமாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆனால் கல்வி மாவட்டங்கள் அதுபோல் இல்லை. கல்வி மாவட்டமான கடலூர் மாவட்டம் மிகப் பெரிய மாவட்டம். சிதம்பரம் வருவாய்க் கோட்டத்தைப்போல் சிதம்பரம் கல்வி மாவட்டமாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



தமிழகத்தில் உணவு நிலைமை திருப்திகரமாக இருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் நெல் கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு விளைபொருளுக்கு ஏற்ற விலையில்லை. அதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உற்பத்தி பெருகுவதற்காக ஊக்க ஊதியத் தொகையாக ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 15 என்ற விகிதத்தில் நேரடி கொள்முதல் நிலையங்களில் வழங்கப்படும் தொகையை விரைவாகக் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சக்தி உற்பத்தி கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு உயர்ந்துள்ளதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் கடந்த ஆண்டைவிட கோடைக்கு முன்னேயே மின்வெட்டு மிக அதிகமான அளவில் உள்ளது. இதன் காரணமாக விவசாயிகளும், சிறு தொழில் அதிபர்களும் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் உற்பத்தியும் குறைகிறது. எனவே எந்த அளவுக்கு மின்வெட்டைக் குறைத்து அவர்களுக்கு மின்சாரம் வழங்க முடியுமோ அதை தமிழக அரசு முன்வந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் ஒரு விளக்கு திட்டத்தை அமுல்படுத்தியிருப்பதை நான் பாராட்டி வரவேற்கிறேன். அதிலும் 15—9—1984 முதல் குடிசைகளுக்கு ஒரு விளக்குக்குத் தேவைப்படும் மின்சக்தியை இலவசமாக வழங்குவதையும் வரவேற்கிறேன்.

தமிழக அரசு தொழில் துறையில் மிகுந்த முன்னேற்றம் கொண்டுவர அக்கறை கொண்டிருக்கிறது. என்றாலும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும் போது, நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம். மத்திய அரசு பெரும் தொழில்களை நமது மாநிலத்தில் துவக்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தேவையான கடன் வசதிகளையும் இறக்குமதி வசதிகளையும் அளித்தால், இங்கே அதிகமான அளவில் வேலை வாய்ப்பு பெருகும். அதோடு தொழில் வரியை ரத்து செய்ய வேண்டுமென்றும் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தின் தலைநகர் கடலூர் பாண்டிச்சேரிக்குப் பக்கத்தில் இருப்பதால், அங்கே தொழில் துறையில் முன்னேற்றம் ஏதுமின்றி இருக்கிறது. பாண்டிச்சேரியில் தொழில் துவங்குவோருக்குப் பல்வேறு சலுகைகளை வழங்குகிறார்கள். நிலம் வாங்கவும், கருவிகளை வாங்கவும் நல்ல பல சலுகைகளைக் கொடுக்கிறார்கள். நாமும் அதைப்போன்ற சலுகைகளை தென்னாற்காடு மாவட்டத்தில் தொழில் தொடங்குவோருக்கு அளித்தால், நிச்சயமாகத் தொழில் துறையில் முன்னேற முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எல். ஜெயச்சந்திரன்] [1985 மார்ச் 15

அடுத்து, சென்னையில் மருத்துவப் பல்கலைக் கழகம் துவங்க இருப்பதைக் குறித்து மகிழ்ச்சியடைகிறேன். மருத்துவத் துறை இன்று மிகவும் முன்னேறி வரும் காலத்தில் நாம் இன்னும் பின்தங்கி இருப்பது குறித்து வேதனைப் படுகிறேன். மாநிலத்தில் உள்ள மாவட்டத் தலைநகரில் அரசு மருத்துவ மனையில் போதுமான நவீன கருவிகள் மற்றும் சாதனங்கள் இல்லை. எல்லோருமே சென்னை வர இயலாது. எனவே மாவட்ட மருத்துவ நிலையங் களில் இத்தகைய வசதிகளையும் செய்து தர வேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

அண்மையில் கடலூரில் ஒரு கோர படகு விபத்து ஏற்பட்டது. அப்போது மருத்துவ அதிகாரிகள் நல்ல பணியைச் செய்தார்கள். இருந்தாலும் அங்கு ஒரு 'கோல்ட் ஸ்டோரேஜ்' (Cold storage வசதி சரியாக இல்லாததால் பல இன்னல்கள் ஏற்பட்டன. ஆகவே அங்கேயுள்ள மருத்துவமனையில் நவீன வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு வாகனங்களில் செல்பவர்கள் 'ஹெல்மெட்' அணிய வேண்டும் என்ற அளவில் சட்டம் வரவிருந்தது. அப்படிப்பட்ட சட்டம் வரவிருக்கிறது என்று கடந்த வாரம் பத்திரிகையில் படித்தேன். அந்த 'ஹெல்மெட் லெஜிஸ்லேஷனை' உடனடியாக தமிழக அரசு கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுவும் குறிப்பாக இரண்டு சக்கர வண்டிகளில் செல்பவர்கள் ஹெல்மெட்டை அவசியம் அணிய வேண்டும் என்ற ஆணையை விரைவாக வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்ட அரசு மருத்துவ மனையிலும் பல்வேறு தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட தவறுகள் நடப்பதைத் தடுக்க தமிழக அரசு ஒவ்வொரு மருத்துவ மனையிலும் ஒரு 'விஜிலென்ஸ் செல்'-ஐ அமைத்து, கண்காணிப்பு அதிகாரிகளை நியமித்தல், அத்தகைய தவறுகள் நடக்காமல் தடுக்க ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலையில்லா பட்டதாரிகளுக்கு ஊக்க ஊதியத்தை ரூபாய் நூறாக உயர்த்தியமைக்க தமிழக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக என்னுடைய பாராட்டுக்கள். ஆனால் ஐந்து வருட காலத்தை மூன்று வருடமாகக் குறைத்தால் இன்னும் வசதியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதற்கான ஆணையை உடனே வெளியிட வேண்டு



1985 மார்ச் 15] [திரு. எல். ஜெயச்சந்திரன்]

மென்று கேட்டுக்கொள்கிறேன். வேலையில்லா பட்டதாரிகள் சிறு தொழில் துவங்க வங்கிகள் மூலம் கடன் வழங்க அரசு உதவ வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கினாலே நாடு நிச்சயமாக முன்னேறும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நலனில் இந்த அரசு காட்டும் பொறுப் புணர்வை நாங்கள் பாராட்டுகிறோம். குடும்ப நல நிதியை பத்தாயிரம் ரூபாயிலிருந்து இருபதாயிரம் ரூபாயாக உயர்த்தியமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே அவர்கள் ஓய்வு பெறும்போது கொடுக்கும் தொகை பத்தாயிரம் ரூபாயை இருபதாயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்கலாம் என்று அரசுக்குப் பரிந்துரை செய்கிறேன். நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை விரைவிலே அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள் நலனில் அரசு அதிக அக்கறை காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பட்டதாரி ஆசிரியர்கள், முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் ஆகியவர்களின் பணியை அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அவர்களை தேர்வாணைக் குழுவுக்கு உட்படுத்தாது பணிவரன்முறை செய்ய வேண்டும். ஊக்க ஊதியத்தினை அனைத்துப் பிரிவு ஆசிரியர்களுக்கும் தர வேண்டும். மற்றும் உடற்கல்வி இயக்குநர்களுக்கும் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர் களுக்கென தனி வீட்டு வசதி வாரியம் விரைவில் துவக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கை மாவட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர், அரசு ஊழியர்களுக்கு சென்னை மாநகரில் உள்ளவர்களுக்கு வழங்குவதைப் போலவே நகர ஈட்டுப்படி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களது குழந்தைகளுக்கு கல்லூரியிலும், வேலை வாய்ப்பிலும் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பல ஆண்டுகளாக பதவி உயர்வோ அல்லது ஊதிய உயர்வோ இல்லை. அவர்களுடைய தகுதிக்கேற்ப பதவி உயர்வும், ஊதிய உயர்வும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலைமை ஆசிரியர்களுக்குத் தலைமை ஆசிரியர் படி வழங்கப்பட வேண்டும். பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கும் அனைத்து சலுகைகளும் வழங்கப்பட வேண்டும். ஆயிரக்கணக்கான இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அந்த இடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்க

வேண்டும், தனியார், நகராட்சிப் பள்ளிகள் மற்றும் கல்லூரி ஆசிரியர்களின் பிரச்சினைகளைக் கவனித்து அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு முக்கியமான பிரச்சினை. பல முறை நாங்கள் இதைப் பேசியிருக்கிறோம். தனியார் பள்ளி, நகராட்சிப் பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள் ஆகியவர்களுக்கு அரசு கொடுக்கும் பல சலுகைகள் போய்ச் சேருவதில்லை. அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கும் பத்தாயிரம் ரூபாய், எல்.டி.சி.—பயண விடுப்புச் சலுகை போன்ற அனைத்துச் சலுகைகளையும் அவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் பள்ளி ஆசிரியர்களாக இருந்தாலும், அவர்களுக்கும் அரசுதான் ஊதியம் வழங்குகிறது. ஆகவே அவர்களுக்கும் இந்தச் சலுகைகளை வழங்க வேண்டும்.

பள்ளிக் கட்டிடங்களைச் செப்பனிட அரசு முன்வந்தது குறித்து என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது மாநிலத்தில் நிறைய பள்ளிகளில் மாணவர்கள் இட வசதி இல்லாமல் படித்து வருகிறார்கள். இது அவர்களுக்கு நிச்சயமாக நல்ல உதவியாக இருக்கும். இதற்காக தனியாக ஒரு கட்டுமான பிரிவை—பொதுப் பணித் துறையில் அமைக்கலாம். 1—6—1981-க்குப் பிறகு தளவாட சாமான்கள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அதை விரைவிலே வழங்க ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து, ஒரு மிக முக்கியமான திட்டம். மாண்புமிகு முதல்வர் சத்துணவுத் திட்டத்தை 15 வயது வரை உள்ள மாணவ மாணவிகளுக்கு விரிவுபடுத்தியிருக்கிறார்கள். அதற்காக எங்களுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். பள்ளி சத்துணவுக் கூடங்களுக்கு நிலையான சமையல் கூடம் கட்டப்பட வேண்டும். அதற்குத் தேவையான பாத்திரங்கள் வழங்கப்பட வேண்டும். அங்கே பணிபுரியும் ஆயிரக்கணக்கான அமைப்பாளர்களையும், இதர பணியாளர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும். இதற்கென தனியாக ஒரு அமைச்சர் இருக்கும்போது, தனியாக ஒரு துறையை ஏன் அமைக்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். இதற்கென்று தனியாக ஒரு துறை இருந்தால், இப்போது நடைபெறுவதைவிட நிச்சயமாக நல்ல முறையில் செயல்பட முடியும் என்பதால், அதைப் பற்றியும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தகுதியின் அடிப்படையில் எட்டாம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு இலவச சீருடை, பாடப் புத்தகம் வழங்க முன் வந்தது குறித்து மகிழ்ச்சியடைகிறோம். இந்தத் திட்டத்தை நாங்கள் பாராட்டுகிறோம். இந்த



அருமையான திட்டத்தை தமிழகத்திலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டத்திற்காக அவர்களுக்கு நான் என் மனமார்ந்த பாராட்டுதலையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-25)

அடுத்ததாக, கல்விபற்றிக் கூறும்போது, கடலூர் செங்கற்பட்டு அரசு கலைக் கல்லூரிகள் அங்கே ஆரம்பிக்கப்பட்ட நாள் முதற்கொண்டு பட்ட மேற்படிப்பு (போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ்) இதுவரையில் இல்லை. அதைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் குறிப்பிட்டார்கள். ஊராட்சி, நகராட்சி தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று அதனை உடன் நடத்திட வேண்டுகிறேன். நகராட்சியினுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கின்றது. நகராட்சிகளின் நிதிநிலைமை மிகவும் மோசமாக இருக்கின்றது. மாவட்ட தலைநகரங்கள், கடலூர், வேலூர் மற்றும் செங்கற்பட்டு போன்ற ஊர்களிலேயெல்லாம் ரோடுகள் மிகவும் பின்தங்கி இருக்கின்றன. ரோடுகள் மோசமாக இருக்கின்றன. அதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பார்க்கும்போது, அவர்கள் ' நிதி இல்லை, நிதி இல்லை ' என்று கூறுகிறார்கள். அவர்களுக்குப் போதுமான நிதியை அளித்து, இதுபோன்ற முக்கியமான ஊர்களிலேயாவது நல்ல நிலைமைகளை ஏற்படுத்தவேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன். நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சரியான ஊதியம் வழங்கப்படுவதில்லை. குடியாத்தம், வேலூர் போன்ற இடங்களிலே ஊதியம் சரியாக வழங்குவதில்லை. நாங்கள் ஒரு முறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பார்க்கும்போது, பணம் இல்லை என்று கூறுகிறார்கள். அந்த நிலைமைகளை மாற்றி இந்த நகராட்சிப் பள்ளிகளை அரசுப் பள்ளிகளாக ஏற்றுக்கொண்டால், மிகவும் நன்றாக இருக்கும்.

காவல் துறைக்கு மேலும் பல சலுகைகளை, பல நன்மைகளைச் செய்து கொடுத்திருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். குறிப்பாக காவல் துறையை எடுத்துக்கொண்டால், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு மிகவும் கெட்டிருக்கிறது. அதற்குக் காரணம் அங்கே போதிய காவலர்களும் போதிய அதிகாரிகளும் இல்லாததுதான். அந்தக் காரணத்தினால் சட்டம் ஒழுங்கை சரியாக பரிபாலிக்க முடியவில்லை. தென்னாற்காடு மாவட்டத்தைப் பார்த்தால், குறிப்பாக சில திருட்டுக்களை எடுத்துக்கொண்டால், " அங்கே யார் திருடினார்களோ அவர்கள் யார் என்று கண்டு பிடித்துவிட்டோம், ஆனால் அவர்களைப் பிடிக்க முடியவில்லை " என்று சொல்கின்றார்கள். அவர்களைக் கண்டுபிடிக்க, அவர்களுக்கு போதிய அளவு [illegible] இல்லாததும்

அதிகாரிகள் இல்லாததும்தான் காரணம். அவர்களைச் சென்று பிடிப்பதற்கு, அவர்களைக் கண்காணிப்பதற்கு வேண்டிய வாகன வசதியில்லை. அந்த வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது வழக்குகள் நிறைய இருக்கின்றன. இந்த சிறு வழக்குகளை விரைவில் முடித்திட முன்பு இருந்தது போல, ஆனரரி மாஜிஸ்ட்ரேட்கள் இருக்க வேண்டும். அப்படி இருந்தால், நிச்சயமாக சிறு சிறு வழக்குகளை விரைவில் முடிக்க ஏதுவாக இருக்கும்.

அடுத்து, ஊர்க்காவல் படைபற்றிச் சொல்கிறேன். தமிழகத்தில் அது அநாதைக் குழந்தைபோல் இருக்கின்றது. அதைக் கவனிப்பார் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களை நாங்கள் ஒரு முறை சந்தித்தபோது, அவர்கள் சலுகைகளைத் தருவதாகக் கூறினார்கள். அந்த ஊர்க்காவல் படையினர் அணிவகுப்பு வரும்போது, அன்று தரும் படியானது ரூ. 3.50 ஆக இருக்கிறது. அதை பல வருடங்களாக குறைந்தது ரூ. 10 ஆக ஏற்றித் தரவேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக்கொண்டிருந்தோம். அவர்களும் அதற்கு ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அண்மையில் மத்திய அரசு ரூ. 15 அளிக்க முன்வந்துள்ளது. அந்த ரூ. 15-ல் மத்திய அரசு பாதியும் மாநில அரசு பாதியும் அளிக்க முன்வந்துள்ளது. அந்த ரூ. 15 விரைவில் தர அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊர்க்காவல் படையில் அரசு ஊழியர்கள் அல்லாதவர்களுக்கும் குடும்ப நலத் திட்டத்தின்கீழ் ரூ. 20 ஆயிரம் வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். ஊர்க்காவல் படையில் வேலையில்லாத பட்டதாரிகளுக்கு முழு நேரப் பணி அளிக்க வேண்டும், அவர்கள் அப்படி நியமிக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, முக்கியமாக தமிழக அரசு விளையாட்டுத் துறைக்கு பல சலுகைகளையும் முக்கியத்துவத்தையும் அளித்து வருகிறது. அது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்கு என்று தனியாக ஒரு வாரியத்தையும் அமைத்திருக்கின்றார்கள். அந்த வாரியம் ஒரு இரண்டு வருடங்களுக்கு முன்பாக அமைக்கப்பட்டாலும், ஏறத்தாழ இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பாகத்தான் அது செயல்பட ஆரம்பித்தது. நம்முடைய திட்டங்கள் நல்ல திட்டங்களாகத்தான் இருக்கின்றன. ஆனால் செயல்படுவதில் தடங்கல்கள் காரணமாக தாமதம் இருக்கின்றது. அதனால் நல்ல முறையில் செயல்பட முடியாமல் போகிறது. இந்த வாரியமானது நல்ல பல பணிகளைச் செய்ய அவர்களுக்கு பல்வேறு ஒத்துழைப்பையும் ஆதரவையும் தமிழக அரசு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





நமது விளையாட்டுக் கவுன்சில் மூலமாக ஒவ்வொரு மாநிலக் கழகமானது ஒரு அணியை மற்ற மாநிலங்களுக்கு அனுப்பும்போது, ஒரு நாள் படியாக ரூபாய் 8 தான் கொடுக்கின்றார்கள். குறைந்தது 15 ரூபாயாவது கொடுக்க வேண்டும். ஏனென்றால் நமது இந்தியாவிலேயே பஞ்சாப், கேரளாவிற்கு அடுத்தபடியாக நம் தமிழகம்தான் மூன்றாவது இடத்தில் இருந்து வருகிறது. நாம் முதலாவதாக வரவேண்டுமென்றால், இந்த விளையாட்டு வாரியம் அனைத்து சலுகைகளையும் கொடுக்க வேண்டும். குறைந்தது ஒரு நாளைக்கு படியாக ரூ. 15 கொடுக்க வேண்டும். அவர்களது பயிற்சிக்கும் நிதி வசதி அளிக்க வேண்டும்.

(பிற்பகல் 1-30)

அடுத்து, முக்கியமானது விளையாட்டு வீரர்களையும், வீராங்கனை களையும் உருவாக்கக் காரணமாக இருப்பது நம்முடைய பள்ளிகள்தான். இந்தப் பள்ளிகளைக் கண்காணிக்க மண்டல உடற்பயிற்சிக் கல்வி ஆய்வாளர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒருவர் இருக்கிறார். ஒவ்வொரு மாவட்டத்திலும் 300, 320 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. எனவே வருடத்திற்கு ஒருமுறை கூட ஒரு பள்ளிக்குச் செல்ல அவர்களுக்கு நேரமில்லை. எனவே ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் ஒரு மண்டல உடற்பயிற்சி ஆய்வாளர் இருந்தால், பல விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் உருவாக்கலாம். இதுபோன்று மூன்று மாவட்டங்களுக்கு ஒரு பெண் மண்டல் உடற்பயிற்சி ஆய்வாளர் இருக்கிறார். அதை மாற்றி, ஒரு மாவட்டத்திற்கு ஒரு பெண் மண்டல உடற்பயிற்சி ஆய்வாளரை நியமிக்க வேண்டும்.

அடுத்து, நேரு தங்கக் கோப்பை கால் பந்துப் போட்டி சென்னையில் நடக்க இருக்கிறது. கேரளாவிலும், கல்கத்தாவிலும்தான் இந்தப் போட்டிகள் நடந்து கொண்டிருக்கும். அந்தப் போட்டியை சென்னையில் நடத்த மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உதவி செய்திருக்கிறார்கள். அதற்காக தரமணியில் ஒரு இடத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். தரமணி ஏறத்தாழ 20 கிலோமீட்டர் தள்ளி இருப்பதால், ஐலண்ட் கிரவுண்டிலேயே அவ்விடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தால், நன்றாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மாநில கால்பந்து அசோசியேஷன், ஒலிம்பிக் அசோசியேஷன் ஆகியவற்றின் யோசனையை மாநில அரசு பரிசீலனை செய்தால் நன்றாக இருக்கும்.

அடுத்ததாக, கடலூரிலே நீண்டகாலமாக நாங்கள் கேட்டுக்கொண்டிருந்த ரயில்வே மேம்பாலம் இப்போது வரும் தருவாயில் இருக்கிறது. அதற்கான வேலைகளை விரைவாகச் செய்ய வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, கடலூர் பெண்ணையாறு மேம்பாலத்தைக் கட்ட வேண்டும். அங்கே சிறிய பாதையாக இருக்கிறது. அதனால் அடிக்கடி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் கூறியதுபோல, கடலூருக்குப் பாதாள சாக்கடை அவசியமான ஒன்று. அங்கு கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. சிதம்பரம், விழுப்புரம் ஆகிய இடங்களில் ரெயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டும். செங்கற்பட்டிலும் மேம்பாலம் அமைக்க வேண்டும். கடலூர் தாலுக்காவில் உள்ள பெருமாள் ஏரிக்கரையை ஆழப்படுத்தி, வடிகால் வசதி செய்து தர வேண்டும் அதனால் ஏறத்தாழ 10,000 ஏக்கருக்குப் பாசன வசதி ஏற்படும்.

அடுத்ததாக, வட ஆற்காடு மாவட்டம், ஆம்பூரில் குடி தண்ணீர் பிரச்சினை இருக்கிறது. அங்கேயுள்ள தோல் தொழிற்சாலைகளால் ஏற்படும் கழிவு நீரால் அங்கேயுள்ள நிலத்தடி நீர் குடிப்பதற்கு ஏற்றதாக இல்லை. இந்தப் பிரச்சினை நீண்ட நாளாக இருக்கிறது. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீராணம் திட்டத்திற்காக கோடிக் கணக்கில் செலவிட்டு உருவாக்கியுள்ள குழாய்கள் தென் ஆற்காடு மாவட்டத்தில் வழியெங்கும் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி, நெய்வேலியில் உள்ள நீரைக் கொண்டு வந்து, பல கிராமங்களுக்குப் பாசன வசதி செய்ய முடியும். அதைச் செய்ய வேண்டும்.

அடுத்து, தமிழ் நாட்டில் போக்குவரத்துத் துறை நல்ல முறையில் இயங்கி வருகிறது. அதற்காகப் பாராட்டுக்கள். கிராமங்களுக்கு இன்னும் நிறைய போக்குவரத்து வசதிகளைச் செய்ய வேண்டும். நம்முடைய மாநிலத்தில் ஸ்டேன்டர்ட் 20, மேடாடர் போன்ற சிறிய வண்டிகளுக்கு பெர்மிட் கொடுக்கும்போது. ஆறு சீட்டுகளுக்குத்தான் பெர்மிட் கொடுக்கிறோம். பாண்டிச்சேரியில் எத்தனை சீட்டுகளுக்குப் பெர்மிட் கேட்கிறார்களோ, அத்தனைக்கும் கொடுக்கிறார்கள். நாம் ஆறு சீட்டுகளுக்கு 150 ரூபாய் வாங்குகிறோம். ஆனால் 12, 16 பேர்களை ஏற்றிச் செல்லலாம் என்று வண்டி செய்யும் உரிமையாளர்கள் கூறுகிறார்கள். அதைப்போல உரிமையாளர்கள் 12, 16 பேர்களை ஏற்றிச் செல்கிறார்கள். எனவே ஆறு பேர்களுக்குத்தான் என்று இருப்பதை 12 பேர் என்ற அளவுக்கு அனுமதிக்க வேண்டும். பேருந்துகளுக்கு ஒரு சீட்டுக்கு 250 ரூபாய் என்று வசூலிப்பதுபோல, இந்த



சீட்டுக்கு இவ்வளவு என்று கூறினால், அதனால் நிச்சயமாக அரசுக்கு அதிக வருவாய் கிடைக்கும். இது குறித்தும் ஆவன செய்ய வேண்டுமென்று கூறி, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெறும் விவாதத்தில் பங்குகொண்டு என்னுடைய கருத்துக்களை வெளியிட வாய்ப்பு கொடுத்தமைக்கு தலைவரவர்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

(பிற்பகல் 1-35)

திரு. ஆர். இராஜேந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அவை உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். அதோடு நான் உங்களுக்கெல்லாம் நன்றிகலந்த வணக்கத்தைக் கூறும் வண்ணம் என்னை ஆளாக்கிய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை மேலும் மேலும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கன்னி கழிக்காத நிலையில், கன்னி கழிக்க வேண்டுமென்ற நிலையில், கால தாமதமாகிவிட்ட நேரத்தில், நான் உங்கள் முன் நின்று பேசுகிறேன் என்றால், இன்றைக்குத் தான் நான் முதன் முதலாகப் பேசுகிறேன் என்று உறுப்பினர்கள் கருதக்கூடும். கன்னி கழிக்காத நிலையில் நான் இருந்த காரணத்தால்தான், குறிப்பாக இங்கே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இங்கே பேசிக் கொண்டிருந்த நேரத்தில், நான் எதையும் சொல்வதற்கு வாய்ப்பு இல்லையாதலால், தலையாட்டி பொம்மை போல் அமர்ந்திருந்த இடத்திலேயே கேட்டுக்கொண்டிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் பேசும்போது, என்னைப்பற்றியும் திரு. சிவராமன் பற்றியும் குறிப்பிட்டார்கள். எனது கன்னிப் பேச்சிலே எதைப் பேசலாம் என்று நினைத்தேனோ, அது சம்பந்தப்பட்டவர் இங்கே அவையில் இருக்க வேண்டுமென்று யாரை எண்ணியிருந்தேனோ அவர் இங்கே இல்லை. இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்களில் சிலர் ஏதேதோ பேசினார்கள். ஆளுநர் உரையில் உப்பும் இல்லை, சப்பும் இல்லை, காத்து போன பலூன் என்றெல்லாம் கூட பேசினார்கள். ஆடத் தெரியாத பெண் தெரு கோணல் என்று சொல்லுவாளாம், அதேபோல அவர்களே ஒன்றைச் சொல்லி, அவர்களே அதனை அனுபவித்துக் கொண்டும் இருக்கிறார்கள். அவர்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றிரண்டு பேர் கை தட்டி விட்டால் மாமன்றத்திலே அவர்களைக் கேட்க யாரும் இல்லை என்ற நினைப்பில் எதையாவது * என்பது வாடிக்கையாக இருக்கிறது.

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : * என்று பேசுவது பார்லிமெண்டரி பேச்சு அல்ல.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : * என்று உறுப்பினர் குறிப்பிட்ட வார்த்தை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஆர். இராஜேந்திரன் : புதியவன், பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், தவறுதலாகப் பேசியிருந்தால் மன்னிக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மன்னிப்பு கேட்க வேண்டுமென்று சொல்லவில்லை, குறிப்பிட்ட வார்த்தை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது என்றுதான் குறிப்பிட்டேன்.

திரு. ஆர். இராஜேந்திரன் : ஆளுநர் உரையிலே எதுவுமே இல்லையென்று எதிர்ப்பு தெரிவிக்கின்ற முறையில் இங்கே சிலர் பேசினார்கள். ஆளுநர் உரையில் இருக்கிற ஒவ்வொரு வாக்கியமும் ஒவ்வொரு திட்டம் என்கிற முறையிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே செய்ய வேண்டிய நேரத்தில், தகுந்த நேரத்தில் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். சத்துணவுத் திட்டத்தை முதலில் எதிர்த்தார்கள். பிறகு ஆதரித்தார்கள். இந்தமாதிரி திட்டங்களை வகுத்த புரட்சித் தலைவர் அவர்களை மிகவும் சாதாரணப்பட்டவர்கள் என்று யாரும் கருதக் கூடாது. முன்பு சத்துணவுத் திட்டத்தை உருவாக்கும்போது எதிர்த்தவர்களே பிறகு அதை ஆதரிக்கிறோம் என்று வாய் இழித்து பேச வேண்டிய நிலை வந்திருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்களுடைய திட்டங்கள் எப்போதுமே உருப்படியான திட்டங்கள் என்று ஆளுநர் உரையிலே நாம் பார்க்கிறோம். அத்தகைய நல்ல பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய கால கட்டங்கள் நிறைய இருக்கின்றன என்று சொல்லி, இத்துடன் என்னுடைய கன்னிப்பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து மீண்டும் நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது பேசுவேன் என்பதைத் தெரிவித்து, அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 16—3—1985, சனிக்கிழமை. காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-[illegible])

* தலைவரின் அனுமதிப்படி நீக்கப்பட்டது.



5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

101. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 22—9—1984 ஆம் நாளிட்ட 2168 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

102. திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களை தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்தின் நிதி அலுவலராக நியமிப்பது குறித்து கல்வித்துறையின் 1—3—1984 ஆம் நாளிட்ட 224 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

103. டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம் அவர்களை தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக மறு நியமனம் செய்வது குறித்து கல்வித்துறையின் 22—9—1984 ஆம் நாளிட்ட 1257 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49(2) பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

104. பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவைக்கு உறுப்பினர்களை நியமிப்பது குறித்து கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையின் 9—2—1984 ஆம் நாளிட்ட எண் 6021/NU 2-84-2 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1982) 65(2) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

[1985 மார்ச் 15

105. கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு சில உறுப்பினர்களை நியமனம் செய்யப்பட்டது குறித்து, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்துறையின், 29—9—1983 ஆம் நாளிட்ட அரசின் கடித எண் 91769 NU 2-83 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982) 65(2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

106. கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவைக் குழுவிற்கு சில உறுப்பினர்களை நியமனம் செய்யப்பட்டது குறித்து கல்வி, அறிவியல் தொழில் நுட்பவியல் துறையின் 5—12—1983 ஆம் நாளிட்ட அரசின் கடித எண் 68110/ NU -2/83-இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1984 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982) 65 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

107. கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவைக் குழுவிற்கு உறுப்பினர் ஒருவரை நியமனம் செய்தது குறித்து, கல்வி. அறிவியல்-தொழில்நுட்பவியல் துறையின் 18—1—1984 ஆம் நாளிட்ட அரசின் கடித எண் 132126/ NU 2/83-இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1984 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982) 65 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

108. கல்வி, அறிவியல்-தொழில் நுட்பவியல் துறையின் 5—12—1983 ஆம் நாளிட்ட II (2)/கல்வி/7527/83 ஆம் எண் அறிவிக்கையில் செய்யப்பட்ட திருத்தம் குறித்து, கல்வி, அறிவியல்-தொழில் நுட்பவியல் துறையின் 16—4—1984 ஆம் நாளிட்ட, அரசின் கடித எண் 5640/ NU 2/84-இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982) 65 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]



1985 மார்ச் 15]

109. கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு உறுப்பினர் ஒருவரை நியமனம் செய்தது குறித்து, கல்வித்துறையின் 8—10—1984 ஆம் நாளிட்ட, அரசாணை எண் 91880/NU 2/84 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982) 65 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது).

110. கொடைக்கானலிலுள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்திற்கு மூன்றாண்டிற்கு துணை வேந்தரை நியமிப்பது குறித்து. கல்வி, அறிவியல்-தொழில் நுட்பவியல்துறையின் 4—2—1984 ஆம் நாளிட்ட 115 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

111. கொடைக்கானலிலுள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்திற்கு மூன்றாண்டிற்கு பதிவாளரை நியமிப்பது குறித்து, கல்வி, அறிவியல்-தொழில் நுட்பவியல் துறையின் 21—3—1984 ஆம் நாளிட்ட 316 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

112. கொடைக்கானலிலுள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்திற்கு மூன்றாண்டிற்கு நிதி அலுவலரை நியமிப்பது குறித்து கல்வி, அறிவியல்-தொழில் நுட்பவியல் துறையின் 12—6—1984 ஆம் நாளிட்ட 742 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

113. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் அதிகாரமன்றங்களை அமைக்கும் நாளை துணை வேந்தர் நீட்டிப்பது குறித்து, கல்வி, அறிவியல்-தொழில் நுட்பவியல் துறையின் 9—7—1984 ஆம் நாளிட்ட 878 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

[1985 மார்ச் 15

114. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் விதிகளில் செய்யப்பட்ட திருத்தங்கள் குறித்து, பணியாளர்-நிருவாகச் சீர்திருத்தத்துறையின் 21—1—1985 ஆம் நாளிட்ட 60 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

115. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் செய்யப்பட்ட திருத்தங்கள் குறித்து, உள் துறையின் 30—5—1984 ஆம் நாளிட்ட 1085 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

116. திருமண அழைப்பிதழ்கள். வடிவங்கள் அச்சிட்ட வழு வழுப்பான தாள் ஆகியவற்றின் விற்பனை மீதான விற்பனை வரி, மேல் வரி, கூடுதல் வரி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்தல் குறித்து வணிகவரிகள்-அறநிலையத்துறையின் 3—12—1984 ஆம் நாளிட்ட 1309 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழும், 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவின்கீழும் மற்றும் தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரி, மேல்வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவின்கீழும் அவைமுன் வைக்கப்படுகிறது.]

117. உசிலம்பட்டியில் ரொட்டி தயாரிப்புப் பொருள்களின் விற்பனை மீதான கூடுதல் வரியையும், மேல்வரியையும் தள்ளுபடி செய்தல் குறித்து, வணிகவரிகள்—அறநிலையத்துறையின் 12—11—1984 ஆம் நாளிட்ட 1237 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழும் 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவின்கீழும் மற்றும் 1971 ஆம் ஆண்டு விற்பனைவரி-மேல்வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவின்கீழும் அவைமுன் வைக்கப்படுகிறது.]



1985 மார்ச் 15]

118. மதுரையிலுள்ள விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்ற தீர்ப்பின் அடிப்படையில் கூடுதல் வரியையும். மேல்வரியையும் தள்ளுபடி செய்தல் குறித்து, வணிகவரிகள்-அறநிலையத்துறையின் 10—9—1984 ஆம் நாளிட்ட, 992 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழும், 1979 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவின்கீழும் மற்றும் 1971 ஆம் ஆண்டு விற்பனை வரி-மேல்வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1971) 7(3) பிரிவின்கீழும் அவைமுன் வைக்கப்படுகிறது.]

119. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாம் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619(A) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

* 28. மாவட்டத் தொழில் மையங்கள் மற்றும் தொழிற்பேட்டைகள் குறித்த மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தி ஐந்தாவது அறிக்கை.

---

* 14—3—1985 அன்று மேலவை முன் வைக்கப்பட்டது.

2577/[illegible]85
245
29 அக் 1985

தமிழ்நாடு

# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# அதிகாரபூர்வமான வெளியீடு

# OFFICIAL REPORT

சனிக்கிழமை, மார்ச் 16, 1985—தொகுதி 211-எண் 4

Saturday 16th March 1985—Volume 211 - No. 4

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரு. 2.75]

## பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| கவன ஈர்ப்பு— | |
| மாநிலத்தில் உள்ள கடும் மின் பற்றாக்குறை குறித்து .. .. .. | 275—277 |
| ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி. | 277—367 |
| அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. | 367—368 |



143940

D

Y211,32'N88

N85:211:3-4

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

சனிக்கிழமை, 1985 மார்ச் 16.

பங்குனி 3, ரக்தாக்ஷி, திருவள்ளுவராண்டு—2016.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி ( * ) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

### 1. கவன ஈர்ப்பு.

### மாநிலத்தில் உள்ள கடும் மின் பற்றாக்குறை குறித்து.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :—

" இம்மாநிலத்திலுள்ள கடும் மின் பற்றாக்குறையையும் அதன் விளைவு களையும் குறித்து ".

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தை அடுத்தடுத்து மின் பற்றாக்குறை பலவாறாக பாதித்து வருகிறது. நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், 50 விழுக்காடு நீர்மின் நிலையங்களி லிருந்தும், 50 விழுக்காடு அனல் மின் நிலையங்களிலிருந்தும் உற்பத்தியாகிறது. பொதுவாக பல்வேறு காலங்களில் முழுமையாக நீர் மின் நிலையங்களைச் சாராது, அனல் மற்றும் அணு மின் நிலையங்களைச் சார்ந்து இருக்க வேண்டியிருக்கிறது. இது நமக்கு நெடுங்காலமாக இருந்து வரும் பிரச்சினை. மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களே ஒரு சிறந்த வல்லுநராகவும், பொறியாளராகவும் இருக்கிறார்கள். ஆகவே உடனடியாக

@ 369-370 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள மின் பற்றாக்குறையைத் தவிர்க்க ஏதாவது குறிப்பிட்ட திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். சிறப்பாக, மாநில அரசு மத்திய அரசின் ஒப்புதலோடு 'கேஸ் டர்பைன்' மூலம் மின் உற்பத்தி செய்யப்படும் என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், அனல் மின் நிலையங்களையும் அணு மின் நிலையங்களையும் பெருக்கிக் கொள்வது தான் சிறந்த வழியாகும். ஏற்கெனவே பல திட்டங்கள் இந்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அவைகளில் சில அனுமதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆகவே அது குறித்து மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை ஆய்வின்போது விரிவாக விவாதிக்கலாம்.

'கேஸ் டர்பைன்' பற்றிப் பேசினார்கள். சென்னையில் இரண்டு யூனிட்டுகள் 50 மெகாவாட் உற்பத்தித் திறன் வீதம் மொத்தம் 100 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட யூனிட்டுகளுக்கு திட்டங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்திய அரசினர் அவற்றைப் பரிவுடன் பரிசீலிப்பதாக வாக்குறுதியளித்திருக்கிறார்கள்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, அத்தியாவசியமான மின் தேவை என்று, வீடுகளுக்கும் விவசாயத்திற்கும் முழுமையாகக் கொடுக்கப்படுவதாக அறிக்கையில் விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. ஆனால் வீடுகளுக்கு நாள் முழுவதும் முழுமையாக வழங்கப்படவில்லை. மேலும், கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் மின் உற்பத்தி நீண்ட நாட்களாகத் தடைப்பட்டு, கடந்த 7 ஆம் தேதி உற்பத்தி ஆரம்பித்ததாகவும், அதிலும் பின்னால் கோளாறு ஏற்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதன் நிலை என்ன? அது எப்போது முழு உற்பத்தியைத் தொடங்கும்? அதற்காக மாநில அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது ஏற்பட்டிருக்கிற தடங்கல்கள் தற்காலிகமானவைதான். நாம் எதிர்பார்த்த கல்பாக்கம் அணு மின் நிலையம் 200 மெகாவாட் உற்பத்தியும், தூத்துக்குடி மூன்றாவது மின் உற்பத்தி இயந்திரம் 200 மெகாவாட் உற்பத்தியும் ஆக 400 மெகாவாட் கிடைக்கவில்லை. ஆகவே இதுமாதிரி தடங்கல் ஏற்பட்





டுள்ளது கல்பாக்கம் மின் நிலையம் ஒரு மாதத்திற்குள் உற்பத்தியைத் துவங்குவதற்கு முழு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதிலே மாநில அரசு அவர்களைக் கேட்டுக்கொள்ளலாம். நாம் போய் ஒன்றும் செய்ய முடியாது. மத்திய அரசை நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். விரைவில் உற்பத்தி தொடங்கும் என்ற நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறோம்.

(முற்பகல் 10-05)

## 2. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் தமது திருத்தத்தை முன்மொழிவார்கள்:—

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கீழ்க்கண்டவற்றை தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக் கொள்ளவும் :—

'1. அரசு ஊழியர்-ஆசிரியர்களுக்கான 4-வது ஊதியக் குழுவின் அறிக்கையை உடனே பெற்று, அதன் பரிந்துரைகளை ஏற்று, நிதிநிலை அறிக்கையிலேயே அறிவிப்பு தருவதாகக் குறிப்பிடாதது;

2. ஆசிரியர்கட்கும் அரசு ஊழியர்கட்கும் போனஸ், தொழில் வரி ரத்து, இருவழிப் பயணச் சலுகை, நலத்துறை அமைத்தல் ஆகியவைபற்றி ஏதும் குறிப்பிடாதது ;

3. இடைக்கால நிவாரணம் ரூ. 300-ஐ மாதந்தோறும் வழங்குவதற்குரிய அறிவிப்பு தரப்படாதது ;

4. தனியார் மற்றும் நகராட்சி பள்ளி ஆசிரியர்கட்கு விடுப்புகாலப் பயணச் சலுகை, ஓய்வு பெற்றால் ரூபாய் 5,000 ஆகியவைகளை விரிவாக்கி ஆணை பிறப்பிக்க வழி செய்யாதது ;

5. கல்வி நிலையங்களில் பல ஆண்டுகளாக பணி ஈர்ப்பு செய்யப்படாமலும் பணி நிரந்தரம் செய்யப்படாமலும் உள்ள ஆசிரியர்களின் குறைகளைப் போக்குவது பற்றிக் குறிப்பிடாதது ;

6. உள்ளாட்சித் தேர்தல்க்ள், கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் நடத்துவது பற்றி எதுவுமே குறிப்பிடாதது.

ஆகியவை ஆளுநர் உரையில் குறிப்பிடாததற்கு இந்த அவை தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது'."

*திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன்.

***திரு. எஸ். இராகவானந்தம் :*** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது அதை ஆதரித்து என்னுடைய கருத்தையும் கூறுவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக இந்த ஆளுநர் உரையில் பதினைந்து புதிய திட்டங்களை அறிவித்திருக்கின்றீர்கள். எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் ஒரு ஜனநாயக அமைப்பில், இந்தப் பதினைந்து திட்டங்களையும் ஆராய்ந்து பார்த்து, நல்லவைகளை ஆதரித்து, அதிலே மேலும் சில திருத்தங்கள் வேண்டும் என்று சொன்னால், அதைப் பற்றிக் கூறி, நல்லவை அல்ல என்று அவர்கள் கருதுவதையும் அல்லது மேலும் அதை விரிவாக்க வேண்டும் என்று கருதக்கூடிய எண்ணங்களையும், எடுத்துச் சொல்லிப் பேசினால், அது ஆளும் கட்சிக்கு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஒரு ஊக்கம் அளிப்பதாக இருக்கும். மாறாக "Chilling the enthusiasm" என்று சொல்வார்கள். உணர்ச்சியைக் குளிர்ச்சிப்படுத்தும் வகையில் ஆளுநர் உரை மீது பேசுவது என்று சொன்னால், ஒன்றுமே இல்லை என்றும், எதுவுமே இந்த அரசு செய்யவில்லை என்றும், இந்தத் திட்டங்கள் எல்லாம் உபயோகமற்றவை என்றும் ஆளுநர் உரை உப்பு சப்பற்றது என்ற வகையிலேயும், அநேகமாக எல்லா எதிர்க் கட்சி தலைவர்களும் பேசினதைக் குறித்து உண்மையாகவே நான் வருத்தப்படுகிறேன். குறிப்பாக ஆளுநர் உரையின் மீது பேசிய தொழிற் சங்கத் தலைவர்கள் கூட—அதுவும் புகழ்பெற்ற தொழிற் சங்கத் தலைவர்கள் கூட—மிகவும் தியாகம் செய்தவர்கள்—30, 40 ஆண்டு காலமாக எனக்கு அறிமுகம் ஆனவர்கள்கூட . . . . .

***மாண்புமிகு மேலவைத் தலைவர் :*** உறுப்பினர் அவர்கள் என்னைச் சொல்கிறார்களா ? (சிரிப்பு).

***திரு. எஸ். இராகவானந்தம்:*** அப்பேர்ப்பட்ட தொழிற் சங்கத் தலைவர்கள்கூட 'கன்ஸ்ட்ரக்டிவ் கிரிடிசிசம்' என்று சொல்லக்கூடிய அளவில் பேச்சை அமைக்காமல், ஆளுநர் உரையிலே ஒன்றுமே இல்லை என்று சொல்வதன் காரணமாகத்தான் நான் பேச வேண்டுமென்று கருதினேன். உங்களைக் கேட்டுக்கொண்டேன். நீங்களும் வாய்ப்பளித்தீர்கள், எனவே என்னுடைய பேச்சில் இந்த அரசு ஆளுநர் உரை மூலமாக என்ன என்ன நல்ல திட்டங்களை குறிப்பாகவும், சிறப்பாகவும், தொழிலாளர்களுக்காகச் செய்வதற்கு முன் வந்திருக்கிறது என்பதையும், 30—6—1977 அன்று ஆட்சிக்கு





வந்ததிலிருந்து இன்று வரையில் தொழிலாளர் நலனுக்காக என்ன என்ன செய்திருக்கிறது என்பதைச் சுருக்கமாகவும் சொல்ல ஆசைப்படுகிறேன். எல்லாவற்றையும் சொன்னால் அது பகல் ஒருமணி வரைகூட ஆகலாம் என்பதால், சில முக்கியமான 'ஹைலைட்ஸ்' என்று சொல்லக்கூடிய முக்கியமானவைகளாகச் செய்திருக்கக்கூடிய நன்மைகளை மட்டும் எடுத்துச் சொல்லி, டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு எதற்கெடுத்தாலும் தொழிலாளர் துரோகக் கொள்கையைக் கையாளுகிறது என்று சொல்கிறார்களே, அப்படி அல்ல என்பதை எடுத்துக்காட்டவே பேச விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால், மார்க்ஸே கல்லறையிலிருந்து வெளியே வந்து அரசு அமைத்து, தொழிலாளர்களுக்காகத் திட்டங்களை நிறைவேற்றினால்கூட, புரட்சித் தலைவர் அரசு செய்திருப்பதைவிட அதிகமாகச் செய்ய முடியாது என்பதில் நம்பிக்கையுடையவன் நான். எனக்கு மாறுபட்ட கருத்துடையவர்கள், அவ்வாறு இல்லை என்பதை எடுத்துக்காட்டும்வகையில் பேசினால், அவர்கள் கூறும் கருத்துக்கள், அரசுக்கு தொழிலாளர் நலனை மேலும் நல்ல முறையில் பேணுவதற்கு மிகவும் உதவியாக இருக்கும் என்கிற எண்ணத்தோடு நான் என்னுடைய பேச்சை அமைக்க விரும்புகின்றேன்.

*(முற்பகல் 10-10)*

கைத்தறி நெசவாளர்களின் வீட்டு வசதிக்காக மூன்றாண்டுக் கால அளவில் முடிப்பதென்ற காலவரையோடுகூடிய திட்டம் தயாரிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவில் தொழிலாளர்கள் என்று எடுத்துக் கொண்டால், விவசாயத் தொழிலாளர்கள்தான் அதிகம். அதற்கு அடுத்ததாக கைத்தறி நெசவாளர்கள் வருவார்கள். அந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கு வீட்டு வசதி செய்துதர வேண்டுமென்பது மிக முக்கியமான ஒன்றாகும். அவர்களுக்கு வீட்டுவசதி செய்துதர வேண்டுமென்று யாரும் கோரிக்கை வைக்கவில்லை, மிகப் பெரிய போராட்டம் எதுவுமே நடந்ததில்லை. இருந்தாலும் புரட்சித் தலைவர் அவர்கள் அவர்களாகவே, யார் யாருக்கு என்ன என்ன செய்ய வேண்டும் என்கிற உணர்ச்சியோடு intuition என்கிற அளவில் செய்திருக்கிறார்கள். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால், நிரம்ப நிதியை ஒதுக்கீடு செய்து 3 ஆண்டுகளுக்குள்ளாக அவர்களுக்கு எல்லாம் வீட்டு வசதி செய்து தர வேண்டுமென்று இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது மிக மிக பாராட்டக்கூடிய ஒன்றாகும். ஏழை எளிய பாட்டாளி மக்களுக்காக, குறிப்பாக கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு, தொழிற் சங்கம் வைத்து அவர்களுக்காகப் போராடக்கூடிய தொழிற் சங்கத் தலைவர்களும், மற்றவர்களும் இதைப்

பாராட்டிப் பேசுவார்கள். இதுவரை அவர்கள் செய்யவில்லை என்று கருது கிறேன். அதுமட்டுமல்ல. கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு பாது காப்புச் சட்டம் கொண்டு வந்ததே புரட்சித் தலைவர் ஆட்சி தான். அவர் களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக, தலைவர் அவர்களே, அந்தத் தொழி லாளர்கள் மிகவும் பலனடைவதற்காக ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் துரதிருஷ்டவசமாக சில மாஸ்டர் வீவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று இந்தச் சட்டத்தைச் செயல்படுத்த முடியாமல் செய்து விட்டார்கள். இருந்தாலும், புரட்சித் தலைவர் அரசு திறமையான வழக்கறிஞர்களை வைத்து வாதாடியதன் பலனாக வெற்றி பெற்று அந்தச் சட்டம் செல்லும் என்று சொல்லி, அந்தச் சட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்வது நல்லது என்று கருதுகிறேன். அப்படிச் செயல் படுத்துகிற முறையில் அதை இதுவரையில் கைத்தறி நெசவு இலாக்கா செயல் படுத்த வேண்டுமென்று இருந்தது. ஆனால் தொழிற் சங்கத் தலைவர்கள் லேபர் டிபார்ட்மென்டே அதை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற் கிணங்க, அரசு அதை சாதகமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். எனவே அதை லேபர் டிபார்ட்மெண்டுக்குக் கொடுத்து இந்தச் சட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாக கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் புரட்சித் தலைவர் ஆட்சியில் மிகவும் பலனடைய இருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்து, அரசுப் பணியாளர்கள் குடும்பநல நிதி 10 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார் கள். என் காதில் நான் இதுவரையில் கேட்டுக் கொண்டிருந்ததெல்லாம், 10 ஆயிரம், 10 ஆயிரம் என்றுதான். அது என்னவோ ஒரு "சாக்ரோசங்ட்" (Sacrosanct) figure ஃபிகர் என்பதைப் போல, யார் கேட்டாலும், கட்டிடத் தொழிலாளியாக இருந்தாலும், வேறு எந்தத் தொழிலாளியாக இருந்தாலும், அரசு ஊழியராக இருந்தாலும் 10 ஆயிரம் 10 ஆயிரம்தான் என்று சொன்னார் கள். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால், எந்த ஒரு நேரத்திலேயும் அதை 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வந்ததே கிடையாது. ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சியிலே தான் அது ரூபாய் 20 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது தன்னிச்சையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது மிகவும் வரவேற்கக்கூடிய ஒன்று என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள்.



அடுத்தாற்போல, கடந்த ஆண்டில் உழவுத் தொழிலாளர்கள், கைவினை ஞர்கள், சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், கட்டுமானத் தொழிலாளர் கள் ஆகியோரது நலன்களுக்காக அறிவிக்கப்பட்ட இழப்பீட்டுத் திட்டத்தின் படி அத் தொழிலாளர்கள் பணியில் ஈடுபடும்போது இறக்க நேரிட்டால், அளிக்கப்படும் இழப்பீட்டுத் தொகை 5 ஆயிரம் ஆக இருந்தது 10 ஆயிரமாக உயர்த்தப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் 15—9—1984 அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த தினத்திலிருந்து அமுலுக்கு வந்திருக்கிறது. அப்போது அவர்கள் இறந்துவிட்டால் 5 ஆயிரம் தரவேண்டுமென்று இருந்ததை 10 ஆயிரம் ஆக உயர்த்த வேண்டுமென்று அரசு கருதி 10 ஆயிரமாக உயர்த்தியிருப்பது மிகவும் பாராட்டக்கூடிய செயலாகும். இதன் விளைவாக யார் யார் பலனடையப் போகிறார்கள் என்பதை எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். உழவுத் தொழி லாளர்கள் மற்றும் சொற்ப நிலம் உள்ள உழவர்கள், வண்ணார், சலவை நிலை யங்கள் வைத்திருப்பவர்கள், சலவை செய்பவர், செருப்பு பழுது பார்ப்பவர் கள், செருப்பு கட்டு அமைப்பவர்கள், விற்பவர்கள், சக்கியர் என்று சொல்லக் கூடியவர்கள், தச்சர்கள், பொதுவான பெட்டிகள், மரச்சாமான்கள் செய்பவர் கள், வண்டி செய்பவர்கள், வண்டி ஓட்டுபவர்கள், கிராம கொல்லர்கள், மற்றும் சம்மட்டி அடிப்பவர்கள், பொன் மற்றும் வெள்ளி நகை செய்யும் கொல்லர்கள்—திரு. அங்கமுத்து அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று கருதுகிறேன்—நகை வடிவு அமைப்பவர்கள், மற்றும் உலோக வடிவு அமைப் பவர்கள், விலங்குகளை நடத்துபவர்கள், விலங்குகளால் இழுக்கப்படும் வண்டி ஓட்டுபவர்கள், கல் வெட்டி எடுப்பவர்கள், கூடை முடைபவர்கள், செங்கல் அடுக்குபவர்கள், கல் கொத்தனார்கள் மற்றும் ஓடு வேய்பவர்கள், கிணறு வெட்டுபவர்கள், கிணறு தோண்டுபவர்கள், கட்டிடக் கட்டுமான தொழிலாளர் கள் ஆக 1 கோடியே 24 லட்சம் தொழிலாளர்கள் இதன் மூலமாக பல னடைய இருக்கிறார்கள். இது சாதாரண சாதனையா அல்லது யாராவது கேட்ட சாதனையா? எப்பொழுதாவது மாநாடு நடத்தினார்களா இந்தத் தொழிலாளர்கள்? கிட்டத்தட்ட 1 கோடி 24 லட்சம் பேர்கள் பயனடைகி றார்கள். 1981 சென்சஸ் பிரகாரம் 8 கோடியே 82 லட்சம் நம்முடைய மக்கள் தொகை. இதிலே 1 கோடியே 24 லட்சம் பேர்களுக்கு அவர்கள் தவறு செய் யக்கூடிய அளவிலே ஒரு திட்டத்தை யாரையும் கேட்காமல் புரட்சித் தலைவர் அரசு செய்திருக்கிறது.

(முற்பகல் 10-15)

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகை 8 கோடிக்கு மேல் என்றார்கள். அது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ். இராகவானந்தம் :** I am sorry மன்னிக்க வேண்டும். தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகை 4 கோடியே 82 லட்சம் பேர். என்னுடைய ஊரைச் சேர்ந்தவர் என்பதால், என்னுடைய தவறைத் திருத்தி விட்டார். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தமிழ் நாட்டில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கே விரோதமாக மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறாரா? (சிரிப்பு)

**திரு. எஸ். இராகவானந்தம் :** எனவே தமிழ் நாட்டில் உள்ள இந்த அளவு மக்கள் தொகையில் ஒரு கோடியே 24 லட்சம் பேர் பலனடையத் தக்க வகையில் இந்தத் திட்டத்தைப் புரட்சித் தலைவரின் அரசு கொண்டு வந்திருக்கிறது. அத்திட்டத்தால் பலன் அடையக்கூடியவர்கள் எல்லாம் யார் யார் என்று படித்தேன். எனக்குச் சில தகவல்கள் தெரியும் என்ற அடிப்படையில், அவர்களைத் தவிர மேலும் சில தொழிலாளர்களையும் சேர்ப்பதற்கு அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எவ்வளவு பெரிய நல்ல திட்டமிது. ஆனால் நான் ஒன்றை மிகவும் வருத்தத்தோடு இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இங்கே பொறுப்புள்ள தலைவர்கள் எல்லாம் பேசினார்கள், இனியும் பேச இருக்கிறார்கள். நான் மதிக்கக்கூடியவர்கள் எல்லாம் பேசினார்கள், பேச இருக்கிறார்கள். அவர்களில் யாராவது ஒருவர் இப்படிப்பட்ட நல்ல திட்டத்தை, அதுவும் சென்ற ஆண்டு அண்ணா பிறந்த நாள் முதலே அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறீர்களே, அதிலும் ரூபாய் 5,000 என்று சொன்னது போதாது என்று, யாரும் கேட்காமலேயே புரட்சித் தலைவர் ஆட்சி ரூபாய் 10,000 ஆக உயர்த்தியிருக்கிறதே, எவ்வளவு நல்ல திட்டம்—வாட் எ ஒண்டர்புல் ஸ்கிம்—என்று பாராட்டியிருக்கலாம். ஆனால் ஒருவரும் பாராட்டவில்லை என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு மக்களுக்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறது. பல்வேறு நன்மை பயக்கும் செயல்களையும் செய்து வருகிறது. ஆனால் இவைகளையெல்லாம் கிராமப்புறத்திலுள்ள மக்கள் தெரிந்துகொள்ள





வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. எதற்காகச் சொல்கிறேன் என்றால் 'மினிமம் வேஜஸ் ஆக்ட்' எவ்வளவு நல்ல சட்டம். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்களே கூட குறிப்பிட்டார்கள். விவசாயிகளுக்கு நல்ல முறையில் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்திருக்கிறீர்கள். விவசாயத் தொழிலாளர்களுக்காகக் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்தைப் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் அதை ஒழுங்காகச் செயல்படுத்தவில்லையே என்று வருத்தப்பட்டதுண்டு. அவரோடு அரசும் சேர்ந்தே வருத்தப்படுகிறது. ஏனென்றால் அரசைப் பொறுத்தவரை, குறைந்தபட்ச ஊதியத்தைத் தான் அரசு நிர்ணயம் செய்யலாம். இம்பிளிமென்டேஷன் அரசு அதிகாரிகள் கையிலே இருக்கிறது. அவர்களைப் போய் தினமும் "கோட் (goad செய்து கொண்டிருக்க முடியாது. இதையெல்லாம் புரிந்துகொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு, மத்திய அரசின் துணையோடு 75 ரூரல் ஆர்கனைசர்களை நியமித்திருக்கிறது. . .

**திரு. ப. மாணிக்கம் :** அரசும் சேர்ந்து வருத்தப்படுகிறது என்றால், அரசின் இயலாததனத்தாலா அல்லது கவனக் குறைவாலா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, உலகத்தில் "மேன் ஈஸ் பேலிஃபிள்" குற்றஞ் செய்கிறவன்தான் மனிதன். "நோபடி ஈஸ் இன்ஃபேலிபிள்". எனவே, அரசு மனிதர்களைக் கொண்டதுதான். அரசு திட்டம் போடுகிறது. அதைச் செயல்படுத்த வேண்டும் என்று கருதுகிறது. ஆனால் அடித்தளத்தில் உள்ள அதிகாரிகள் சரியாகச் செயல்படவில்லை என்றால், அரசும் சேர்ந்து வருத்தப்பட்டுத்தான் ஆக வேண்டும். அதற்காக பூமியில் உட்கார்ந்து கொண்டு அழுவது என்று அர்த்தமில்லை. அந்த நிலையை மாற்ற தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசும் வருத்தப்படுகிறது என்று சொல்லுவதிலிருந்தே இந்த அரசு எந்த அளவுக்கு ஜனநாயக முறையில் செயல்படுகிறது என்று உறுப்பினர்கள் புரிந்து கொள்ளலாம். இல்லையென்றால் "வாட்டெவர் ஐ ஹேவ் டன் ஈஸ் கரெக்ட்", நான் செய்ததெல்லாம் சரியே, தவறில்லை என்று சர்வாதிகார பாணியில் போகிறோம் என்று அர்த்தமாகிவிடும்.

எனவே இவ்வாறு 75 ரூரல் ஆர்கனைசர்களை மத்திய அரசின் துணையோடு புரட்சித் தலைவரின் அரசு நியமித்திருக்கிறது. அவர்களுக்குத் தற்போது பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சிக்குப் பின்னர் அவர்கள் கிராமங்களுக்குச் சென்று அரசு கொண்டு வந்திருக்கிற பல்வேறு திட்டங்

களைப்பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்லுவார்கள். அதைச் சொல்லி கிராம மக்கள் பலன் அடைவதற்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்வதற்கு உதவியாக இருப்பார்கள். அதற்கு மேலே இன்னொரு காரியத்தையும் அவர்கள் செய்வார்கள்.

லெனின் ஒரு கருத்தைச் சொன்னார். நகரத்தில் இண்டஸ்டிரியல் ஒர்க்கர்களாக இருப்பவர்கள் தங்களுக்காக நல்ல தொழிற் சங்கங்களை அமைத்துக் கொண்ட பிறகு, கிராமத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கும் தொழிற் சங்கம் அமைக்க உதவ வேண்டும் என்றார். அதாவது நகர்ப்புறங்களில் உள்ள ஆர்கனைஸ்டு லேபர் இதற்காக கிராமத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்குப் பொருளாதார உதவிகூட செய்ய வேண்டும் என்று சொன்னார். கிராமங்களில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள் தற்போது 'ஆர்கனைஸ்டு' ஆக இல்லாத காரணத்தால், நகர்ப்புற தொழிலார்கள் அந்தப் பணியைச் செய்யாத காரணத்தால், இன்றையதினம் புரட்சித் தலைவர் ஆட்சியில் இந்தப் பணியைச் செய்வதற்காக 75 ரூரல் ஆர்கனைசர்கள் மத்திய அரசின் உதவியோடு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பயிற்சி பெற்று வரும் அவர்கள் பயிற்சி முடிந்ததும் கிராமங்களுக்குச் சென்று அங்கே விவசாயத் தொழிலாளர்களுக்கு தொழிற் சங்கம் அமைக்கச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று அதோடு ஆண்கள், பெண்கள், அரிஜன்கள் என்று அவர்களையும் 3 பிரிவுகளாகப் பிரித்து செயல்படும்படி ஏற்பாடு செய்திருக்கிறது இந்த அரசு.

(முற்பகல் 10-20)

நான் குறிப்பாக தொழிலாளர் நலனைப்பற்றிப் பேசுகிறேன். இது போன்ற பல்வேறு இலாக்காக்கள் மூலமாக பல்வேறு நன்மைகள் ஏழையெளியவர்களுக்குப் போய்ச் சேருவதற்குத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, இன்னின்ன சலுகைகள் இருக்கின்றன, நீங்கள் பட்டா வாங்கலாம், வங்கிகளிடமிருந்து கடன் வாங்கலாம், யாரிடத்திலே சென்று கடன் வாங்க வேண்டும் என்றும், பட்டா வாங்கிய பிறகு விடு கட்டிக் கொள்ளலாம் என்றும், அதற்காக கடன் வழங்க கிராமக் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது என்றும் அங்கே சென்று யாரைப் பார்க்க வேண்டும் என்றும் யாரிடமிருந்து பணம் வாங்க வேண்டும் என்றும், அவர்கள் தரும் பணத்திற்கு நீங்கள் கமிஷன் தர வேண்டியதில்லை என்றும், அப்படிக் கமிஷன் கேட்டால் எங்களிடத்திலே சொல் என்றெல்லாம் எடுத்துச் சொல்லக் கூடிய அளவிலே அவர்கள் உதவியாக இருப்பார்கள். இப்



படிப்பட்ட ஆர்கனைசர்களை நியமிக்க வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்களை யாரும் கேட்டதில்லை. அவராகவே மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு, மத்திய அரசின் ஆதாரவோடு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அடுத்தது, இன்ஷூரன்ஸ் திட்டம். அந்தத் திட்டத்தை சென்ற ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். உழவுத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள் ஆகியோர்களுக்கான இன்ஷூரன்ஸ் திட்டம். இதை உற்றுக் கவனித்தால், இதனால் எவ்வளவு உழவுத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், சிறு உழவர்கள் பயன் அடைகிறார்கள் என்பது தெரியும். மாதம் ஒன்றுக்கு அவர்கள் பத்து ரூபாய் கட்ட வேண்டும். 18 வயதிலிருந்து 58 வயது வரை உள்ளவர்கள் இதில் சேரலாம். அப்படிச் சேர்ந்த பிறகு அவர்கள் இறந்துவிட்டால், ஐந்தாயிரம் ரூபாய் இன்ஷூரன்ஸ் கம்பெனியிலிருந்து தரப்படும். அரசும் அதற்கேற்ற தொகையைத் தரும். அப்படி அவர்கள் இறந்து விடாமல் 18 வயது முதல் 58 வயது வரை உயிருடன் இருந்து ஓய்வுபெற்றால் 33,500 ரூபாய் வரையில் பெறக் கூடிய அளவிற்குச் சலுகை தருகிறது இந்தத் திட்டம். இது எவ்வளவு பெரிய திட்டம்? ஒரு சாதாரண விவசாயத் தொழிலாளி, கைவினைஞர், சிறு உழவர்கள் மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் கட்டினால், ஓராண்டுக்கு 120 ரூபாய்தான் வருகிறது. 18 வயதில் சேர்ந்து 58 வயதிற்குள் இறந்துவிட்டால், இன்ஷூரன்ஸ் தொகை கிடைக்கிறது. இறக்காமல் இருந்தால் 58 வயது ஆன பிறகு 33,500 ரூபாய் கிடைக்கிறது. இத்தகைய மிகப் பெரியதொரு திட்டத்தை ஆளுநர் உரையில் அறிவித்திருப்பது. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கடிகாரம் என்னைக் கேட்கிறது.

திரு. எஸ். இராகவானந்தம் : நான் இன்னும் எத்தனை நிமிடங்கள் பேச வேண்டும்? இது என்னுடைய கன்னிப் பேச்சு.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்னும் ஐந்து நிமிடங்கள்.

திரு. எஸ். இராகவானந்தம் : மேலவை உறுப்பினர் என்ற முறையில் இப்போதுதான் பேசுகிறேன். பட்ஜெட் மீது பேசுவதாக இல்லை. இதோடு அடுத்த வருஷம்தான் பேசுவதாக இருக்கிறேன். ஆகவே இன்னும் கொஞ்ச நேரம் ஒதுக்கினால் நல்லது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எவ்வளவு நேரம் என்பதை உறுப்பினர் அவர்களே சொல்லலாம். ஏற்கெனவே 20 நிமிடங்கள் ஆகிவிட்டது.

**திரு. எஸ். இராகவானந்தம் :** நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, இது என்னுடைய கன்னிப் பேச்சு. கன்னிப் பேச்சு என்றால், எந்த வகையில் என்பதை நீங்களே புரிந்துகொள்வீர்கள். இந்த வருஷம் இதற்குமேல் பேசுவதாக இல்லை. அடுத்த வருட ஆளுநர் உரையின் மீது தான் பேசுவதாக இருக்கிறேன். இதற்கிடையில் ஒரு மசோதா வரும் என்று நினைக்கிறேன். அதிலே பேச வாய்ப்பு இருக்கிறது.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, இந்தக் கன்னிக்கு வயது என்னவோ ? அதை நான் தெரிந்துகொள்ளலாமா ?
(சிரிப்பு)

**திரு. எஸ். இராகவானந்தம் :** 69 years young (சிரிப்பு). விவசாயத் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கும், அவர்கள் 58 வயது வரையில் இறக்காமல் இருந்தால், 33,500 ரூபாய் கிடைக்கக்கூடிய அளவிலே மிகப் பெரிய திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். எனவே அதைப் பாராட்ட வேண்டும். இத்திட்டத்தை ஆளுநர் உரையில் அறிவித்திருப்பதற்காக நான் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைப்பு ரீதியாக இருக்கக்கூடியவர்கள் போராடி, வாதாடி பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. மேலே நான் சொன்ன அன்-ஆர்கனைஸ்ட் லேபருக்குச் செய்வதுதான் ஓர் அரசின் முழு முதற் கடமையாக இருக்கும். அந்த நோக்கில்தான் இந்த அரசு நான் மேற்சொன்ன சலுகைகளைச் செய்து வருகிறது.

மேலும் தமிழ் நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கு இந்த அரசு பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அதன் மூலமாக வண்டி இழுப்போர், பாரம் சுமப்போர், ஏற்றுவோர், இறக்குவோர் போன்றவர்களுக்கு மிகப் பெரிய சலுகையைத் தரக்கூடிய அளவிற்கு செயல்படுத்தக்கூடிய ஸ்கீம் தயாராகிக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டம் வருமானால் வண்டி இழுப்போர், பாரம் சுமப்போர், மூட்டை தூக்குவோர் ஆகியவர்களுக்கு மிகப் பெரிய சலுகை கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் 24 மாதங்கள்—480 நாட்கள் வேலை செய்தால், அந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்பேர்ப்பட்ட



(முற்பகல் 10-25)

சட்டம் எவ்வளவு சிறப்பான சட்டம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆறு ஆண்டு, ஏழு ஆண்டு காலம் வேலை செய்தால், ஆஃப்டர் ஆல் யூ ஆர் எ கேசுவல் ஒர்க்கர்—ஹையர் அண்ட் ஃபையர் என்ற அளவில் அவர்களை வேலையை விட்டே நீக்கிவிடுவார்கள். இப்போது அப்படிச் செய்ய முடியாது என்ற அளவுக்கு சட்டம் கொண்டு வந்தது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான். இப்போது வழக்கு மன்றத்தில் இருக்கின்றது. இப்போது உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு காரணமாக சில ஷரத்துக்கள் அடிபட்டிருக்கின்றன. அதிலே முக்கியமான ஷரத்துக்கள் எல்லாம் அடிபட்டுவிட்டன, அதற்குத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் கருத்து சொல்வதை நான் பார்த்தேன். இப்போது 480 நாட்கள் வேலை செய்தால், அந்தத் தொழிலாளியை பெர்மெனன்ட் செய்ய வேண்டும் என்று இருக்கின்றது. 1—1—1982 அன்றிலிருந்து ஒரு தொழிலாளர் 480 நாட்கள் வேலை செய்திருந்தால், அவரை பெர்மெனன்ட் செய்ய வேண்டுமென்று, ரீட்ரோஆக்டிவ் ஆகச் செல்லும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அடிபட்ட ஷரத்துக்கள் மிகவும் முக்கியமானவை அல்ல. சாதாரணமான ஷரத்துக்கள்தான் அடிபட்டிருக்கின்றன. மிகவும் முக்கியமானவையாக இருக்கின்ற ஷரத்துக்கள் அடிபடவில்லை. சட்டம் செல்லும் என்றுதான் சொல்லியிருக்கின்றார்கள். அதிலே அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஒரு தொழிலாளி சஸ்பெண்ட் செய்யப்பட்டால், தற்காலிகமாக சஸ்பெண்ட் செய்யப்பட்டால், அந்தத் தொழிலாளியை 180 நாட்களுக்குள்ளாக வேலைக்கு எடுத்துக்கொள்ளாமல் அதற்கு மேலும் சஸ்பென்ஷனில் வைத்திருந்தால், முழு ஊதியம் கொடுக்க வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே சட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள். 90 நாட்களுக்கு 50 சதவிகிதமும், 90 நாட்கள் முதல் 180 நாட்களுக்கு 75 சதவிகிதமும், 180 நாட்களுக்கு மேலே அந்தத் தொழிலாளியை வேலைக்கு எடுத்துக் கொள்ளாமல் சஸ்பென்ஷனிலே வைத்திருந்தால், முழு ஊதியம் தரவேண்டுமென்று சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது ஒரு பாராட்டப்படக்கூடிய சட்டம் என்று அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்ததாக ஒரு கான்ட்ரோவர்சியல் லெஜிஸ்லேஷன் என்று சொல்வார்கள். தொழில் தகராறுச் சட்டத்தில் 10-பி என்று ஒரு பிரிவு இருக்கிறது. அதை எதிர்க்கட்சியில் எல்லோருமே எதிர்த்தார்கள் என்று சொல்லலாம். ஆனால் 'பிளசண்ட் சர்ப்பிரைஸ்' என்று சொல்லக்கூடிய அளவில் வரக்கூடிய மகிழ்ச்சி என்ற அளவில் அந்த 10-பி உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. இதிலே "எங்களைக் காப்பாற்ற" வேண்டுமென்று, இதை யார் யார் எதிர்த்தார்களோ அவர்களே மனுவைக் கொடுத்து கேட்டார்கள். அந்த அளவுக்கு இந்தத் திருத்தம் சிறப்பான ஒரு அம்சமாகும். இந்தத் திருத்தம் வருவதற்கு முன் அது பிரதமராக இருந்தாலும், முதலமைச்சராக இருந்தாலும், அமைச்சராக இருந்தாலும், ஒரு முதலாளியிடம் இந்தத் தொகையைத் தொழிலாளிக்குக் கொடுக்கவேண்டும் என்று சொல்வதற்கு சட்டம் இல்லாமல் இருந்தது. அந்த அளவில் 'வாட்எவர் ஹி செட் இஸ் ஒன்லி ரெகமண்டேட்டரி', அதாவது ஒரு பரிந்துரை என்ற வகையில்தான் இருந்தது. அதை அந்த முதலாளி ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக் கொள்ளலாம், ஏற்றுக்கொள்ளாமல் விட்டுவிட்டாலும் விட்டுவிடலாம். இப்போது 'கவர்ன்மெண்ட் ஆர் ஆர்ம்ட் வித் திஸ் பவர்' அப்படிச் செய்யக் கூடிய ஒரு அதிகாரத்தைப் பெற்றுத் தருவதுதான் இந்த 10-பி பிரிவு. அதைக் கொண்டு வந்ததன் காரணமாக கோயம்புத்தூர் பஞ்சாலைத் தொழிலாளர்கள் அவர்கள் பெற்ற போனஸ் தொகையைத் திரும்பப் பெறுவதற்குரிய வழிவகைகளைச் செய்திருக்கிறார்கள். ஈ.ஐ.டி. சர்க்கரைத் தொழிற்சாலையை இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து அதன்மூலம் மூடக்கூடாது என்று சொல்லப்பட்டு இன்று அந்த ஆலை ஓடிக்கொண்டிருக்கின்றது. அதற்குக் காரணம் இந்த அரசு அந்த 10-பியை உபயோகப்படுத்தியதுதான். ஏறத்தாழ 1,500 தொழிலாளர்கள், ஒரு 20 ஆயிரம் கரும்புத் தொழிலாளர்கள், ஏழு, எட்டு ஆயிரம் கரும்பு விவசாயிகள் இன்றையதினம் பலன் அடைந்திருக் கின்றார்கள். இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்றால், அது இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தியதன் காரணமாகத்தான். மூன்றாவதாக, கன்னியாகுமரியிலே, அந்த மாவட்டத்தில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள் போராடினார்கள். அவர்கள் பஞ்சப்படி நிறுத்தப்பட்டது. சி.பி.எம். அதற்காக போராடினார்கள். இந்த அரசு அந்தப் பஞ்சப்படியை தொடர்ந்து கொடுக்க வேண்டும் என்று இந்தச் சட்டத்தை உபயோகப்படுத்தி அவர்களுக்கு அந்தப் பஞ்சப்படியை வாங்கிக்கொடுத்திருக்கிறது. அந்தப் பெருமை புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியைத்தான் சாரும்.





நான்காவதாக, பனியன் தொழிலாளர்கள். ஏறத்தாழ 25 ஆயிரம் பனியன் தொழிலாளர்களுக்குப் பஞ்சப்படியைக் கொடுக்க மாட்டேன் என்று அவர்களின் முதலாளிகள் சொன்னபோது, அந்தக் கோப்பு, புரட்சித் தலைவர், முதல்வர் அவர்களுக்குச் சென்று, அவரே 10 சதவிகிதம் ஊதிய உயர்வும் ரூ. 46 பஞ்சப்படியும் தரவேண்டும் என்று இடைக்கால உயர்வு கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்தப் பிரச்சினை நீதிமன்றம் சென்று அங்கேயும் இந்த இடைக்கால ஊதிய உயர்வு 10 சதவிகிதம், ரூ. 46 பஞ்சப்படி தரவேண்டும் என்று, இறுதி முடிவு வருகின்ற வரையிலே தரவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றையதினம் திருப்பூரில் உள்ள பனியன் தொழிலாளர்கள் இந்த 10 சதவிகித போனசையும், ரூ. 46 பஞ்சப்படியையும் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள் என்று சொன்னால், அது நமது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி காரணமாகத்தான்.

இதற்குமுன் தொழில் நிறுவனங்களில் 20 தொழிலாளர்களும் அதற்கு மேலும் இருந்தால், அங்குள்ள தொழிலாளர்களுக்கு போனஸ் உண்டு என்று இருந்தது. இப்போது 10 பேர்கள் இருக்கக்கூடிய தொழில் நிறுவனங்களிலும் உள்ள தொழிலாளர்களுக்கு உண்டு என்று சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. அதுவும் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில்தான்.

(முற்பகல் 10-30)

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் லேபர் வெல்பேர் பண்ட் என்று ஏற்படுத்தி, அதிலிருந்து தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய வசதியுள்ள ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதிலே, தொழிலாளர்களும், முதலாளிகளும் பங்கு தர வேண்டுமென்று சொன்னார்கள். அரசினுடைய பங்கு அதிலே எதுவும் கிடையாது. தொழிலாளர்கள் ஒரு ரூபாய், முதலாளிகள் இரண்டு ரூபாய் கொடுக்க வேண்டும். கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது என்று சொல்வது போலச் செய்தார்கள். அரசினுடைய பங்கு அதிலே கிடையாது. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் தொழிலாளி இரண்டு ரூபாய், முதலாளி 4 ரூபாய், அரசு இரண்டு ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொன்னதால், அரசினுடைய பெருந்தன்மை தெரிகிறது. அந்தச் சட்டத்திற்கு மிகப் பெரிய திருத்தத்தை அரசு கொண்டு வந்தது.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1985 மார்ச் 16

புரட்சித் தலைவர் அவர்கள் மருத்துவ மனையில் இருந்தபோது, ஒரு முக்கியமான சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லி, அரசு கொண்டு வந்தது. அவர்கள் அப்பல்லோ மருத்துவமனையில் இருக்கையில் கொண்டுவந்தது கட்டிட, கட்டுமானத் தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டமாகும். எனக்குக் கிடைத்த தகவல்படி, ஏறத்தாழ தமிழகத்தில் 23 லட்சம் கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது வரையில் யாருமே அப்படிச் சட்டத்தைக் கொண்டு வரவில்லை. இந்தியாவிலே உள்ள 22 மாநிலங்களானாலும் சரி, மத்திய அரசாக இருந்தாலும் சரி, யாருமே கொண்டு வராத சட்டத்தைப் புரட்சித் தலைவர் ஆட்சி கொண்டு வந்திருக்கிறது. அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதன் மூலம் தொழிலாளர்கள் இறந்துவிட்டால், 'ஒர்க்மேன் காம்பன்சேஷன் ஆக்ட் அப்ளிகபுள்' ஆகி, 20,000 ரூபாய் கிடைக்கும். குறைந்தபட்ச ஊதியம் வாங்குபவர்கள் இறந்தால், 20,000 ரூபாய் கிடைக்கும். காயம் பட்டால் 24,000 ரூபாய் கிடைக்கும். வேறு எந்தச் சட்டத்திலும் ஒன்றும் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டால், முன்பு சொன்னதுபோல ரூபாய் 10,000 கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்புக்கு ஏற்பாடு செய்திருக்கிறது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்ஷூரன்ஸ் திட்டமும் அவர்களுக்கு வரப்போகிறது. அதற்கான இன்ஷூரன்ஸ் பிரிமியம் பிரின்சிபல் எம்ப்ளாயர் கொடுக்க வேண்டுமே தவிர, தொழிலாளி தர வேண்டியதில்லை. தொழிலாளர்கள் பிரிமியம் தாராமல், அவர்கள் பலன் அடையும் இன்ஷூரன்ஸ் திட்டத்தைப் புரட்சித் தலைவர் அரசு கொண்டு வருகிறதென்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

இறுதியாக கடைகள், நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டம் 1947-லே வந்தது. ஏறத்தாழ 38 ஆண்டுகள் ஆகின்றது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவரவர்களே, கட்டிடத் தொழிலாளர்களுக்கு 20 ஆயிரம் முதல் 24 ஆயிரம் ரூபாய் வரை வழங்க வாய்ப்பு இருக்கிறதென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அந்தக் கட்டிடத் தொழிலாளர்களே, "அந்தத் தொகையைப் பெறுவதற்கு சங்கடங்கள் இருக்கின்றன, எங்களுக்கு ஏற்றதாக இல்லை" என்று அறிக்கை வெளியிட்டிருப்பது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரியுமா? அது பற்றி விளக்குவார்களா?



திரு. எஸ். இராகவானந்தம் : விளக்கம் தர முடியும். சிறைக்குச் சென்ற வர்கள் என்னை வந்து பார்த்தார்கள். இங்கே இருக்கக்கூடிய டாக்டர் கலைஞர், முன்னாள் முதல்வர் அவர்களை வழி அனுப்பினார். அவர்களை சிறைக்குப் போய் வாருங்கள் என்று அனுப்பினார். டாக்டர் கலைஞர் அவர் களால் அனுப்பப்பட்டவர்கள். . .

டாக்டர் மு. கருணாநிதி : அவர்களைச் சிறைக்கு அனுப்பியது அரசாங்கம். அவர்கள் போராட்டதலை ஆதரித்து, வாழ்த்து கூறியது நான்.

திரு. எஸ். இராகவானந்தம் : வழி அனுப்புவதும் வாழ்த்து கூறுவதுதான். ஜெயிலுக்குப் போய் வாருங்கள் என்று சொன்னார்கள். எனக்கு ஞாபகம் இருக்கிறது. வாழ்த்துக் கூறி, சிறைக்குப் போய் வாருங்கள் என்று சொன் னார்கள். அவர்கள் வந்து என்னைப் பார்த்தார்கள். துரதிருஷ்டவசமாக 1983 ஆம் ஆண்டு அறிமுகம் செய்த டிராப்ட் பில்லைக் கொண்டுவந்து விவாதம் செய்தார்கள். அதற்குப் பின்னால் 18 திருத்தங்கள் கொண்டு வந்திருக் கிறோம். மார்க்ஸ், லெனின், ஏஞ்சல்ஸ் ஆகியோர் கல்லறையிலிருந்து வெளியே வந்து, மிகப் பெரிய சட்டத்தை நிறைவேற்றினால்கூட, ஐ கேன் சேலஞ்ச், இப்போதிருக்கும் சிறப்பான சட்டத்தைப்போல அவர்களால் கொண்டுவர முடியாது.

திரு. ப. மாணிக்கம் : தலைவரவர்களே, பழைய அமைச்சரவர்கள், தான் அமைச்சராக இருந்தபோது செய்துள்ள சட்டங்களைப் பற்றி நினைவு கூர்கிறார். நல்லது. ஆனால் மார்க்ஸ், லெனின் எல்லாம் சட்டங்களைச் செய்யவில்லை. அவர்கள் சமூகத்தை மாற்றுவதற்காக மக்களைத் தயார் செய்தார்கள். சட்டங்களால் சமூகம் காப்பாற்றப்படவில்லை என்பதால் அவர்கள் இதைச் செய்தார்கள். அவர்களுடைய கொள்கைக்கு நேர் விரோதமாக, அவர்கள் மறைந்து கல்லரையில் இருக்கிறார்கள் என்ற தைரியததில், இப்படியெல்லாம் சொல்வது சரியாகாது.

(முற்பகல் 10-35)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் திரு. மாணிக்கம் அருகில் இருக்கிறார் என்பதை நினைத்துக்கொண்டு அப்படிச் சொல்லியிருக்கிறார்.

திரு. எஸ். இராகவானந்தம் : நான் அமைச்சராக இருந்தபோது என்று நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆனால் அண்ணா திராவிட முன் னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு செய்ததாகத்தான் நான்

சொல்கிறேன். ஆனால் தொழிலாளர் வர்க்கத்திற்கு முதன் முதலாக சயின்டிபிக்காக, தத்துவ ரீதியாக கொள்கைகளைக் கொண்டு வந்தவர் மார்க்சிஸ்ட் லெனின் தான். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு முறை பேசும்போதுகூட, தென்னாட்டு கம்யூனிஸ்ட் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்று சொல்லியிருக்கிறார். அது இப்பொழுது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக மாறிவிட்டது.

**டாக்டர் மு. கருணாநிதி :** திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக மாறிவிட்டது என்று நண்பர் அவர்கள் சொல்கிறார்கள். பஸ்களை தேசியமயமாக்கியது சரி தான் என்று உச்ச நீதிமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போடப்பட்ட சட்டத்தை ஆதரித்து தீர்ப்பு வழங்கிய பிறகும், பஸ்களை தேசியமயமாக்காமல் விட்டு விட்டது தான் மார்க்சிஸ்ட் லெனின் சித்தாந்தமா ?

**திரு. எஸ். இராகவானந்தம் :** அதுபற்றி பதிலளிப்பதற்கு நான் இப்போது அமைச்சர் அல்ல.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் பேசுவதைப் பார்த்தால் தொழிலாளர் நல அமைச்சர் பேசுவது மாதிரி தான் இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. எஸ். இராகவானந்தம் :** நான் எப்போதுமே மந்திரி தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கலைஞர் யாதவ சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு மந்திரி என்ற பட்டம் உண்டு என்று மதுரையில் சொல்லியிருக்கிறார். அதன்படி நான் எப்போதுமே மந்திரிதான். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தொழிலாளர்களின் நலன் கருதி, நல்ல பல சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கடை நிர்வாகத்தில் இருக்கிற தொழிலாளர்களுக்கு 1947 ஆம் ஆண்டில் தான் முதலில் பாதுகாப்புச் சட்டம் வந்தது. ஏற்கெனவே அவர்களுக்கு என்று இருந்த சட்டத்தை உரிய முறையில் மாற்றி புதிதாக அவர்களுடைய நலன் காக்கும் வகையில் சட்டம் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. இப்போது இல்லாவிட்டால் அடுத்த கூட்டத்தொடரின்போதாவது அதைக் கொண்டுவருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவர்கள் ரொம்ப படிக்கக்கூடியவர். அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன், " உங்களிடத்தில் பெரிய தொழிலாளர் அமைப்புகள் கூட இருக்கின்றன. முதலிலே பல மாநிலங்களை எடுத்துக் கொள்ளுங்கள், குறிப்பாக வங்காளத்தை எடுத்துக்கொள்ளுங்கள். கடந்த 7 ஆண்டுக் காலத்தை கணக்கில் எடுத்துக்கொள்ளுங்கள். தயவுசெய்து அதற்காக 2 அல்லது 3 நாட்கள் ஒதுக்குங்கள். 7 ஆண்டுகளில் மற்ற மாநிலங்கள் எல்லாம் தொழிலாளர் நலன் கருதி என்னென்ன சட்டங்கள் கொண்டு வந்திருக்கின்றன, அதே நேரத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த 7 ஆண்டுக் காலத்தில் என்னென்ன சட்டங்கள் கொண்டு வந்திருக்கிறது என்று கணக்கிட்டுப் பாருங்கள். மற்ற மாநிலங்கள் எல்லாவற்றையும் விட தமிழ் நாடு நிச்சயம் சிறப்பாக இருக்கும் " என்று சொல்லி, அவ்வாறு இல்லையென்று நிரூபித்தால், நான் மன்னிப்பு கேட்கக் கூட தயாராக இருக்கிறேன் என்று கூறி, மிக சிறப்பான சிறிய திட்டங்களை தொழிலாளர் நலன் கருதி இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** புரட்சிகரமான திட்டங்களை தொழிலாளர்களுக்காக நீங்கள் கொண்டு வந்ததற்காகதான் இன்றைக்கு உங்களுக்கு இந்தப் பரிசு கிடைத்ததா ?

**திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை நம்பிக் கெட்டவர்கள் யாரும் இல்லை, நம்பாமல் கெட்டவர்கள் உண்டு. இதைத் தவிர நான் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றும் சொல்லவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தொழிலாளர்களுக்காக வேண்டி ஏற்கெனவே பல சிறப்பு மிக்க திட்டங்களைக் கொண்டு வந்திருப்பதோடுகூட இன்னும் பல திட்டங்களைக் கொண்டு வருவதாக ஆளுநர் உரையில் சொல்லியிருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து உரையை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர்களின் கவனத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். 13 உறுப்பினர்கள் பேச பெயர் கொடுத்திருக்கிறார்கள். கன்னிப் பேச்சு என்று உறுப்பினர் கேட்டதால், அவருக்குக் கூடுதல் நேரத்தை அனுமதித்தேன். மற்றவர்கள் கன்னிகள் அல்ல. (சிரிப்பு)

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தாங்கள் சொல்லும்போது கன்னிபற்றிய பிரச்சினையைச் சொன்னீர்கள். " மற்றவர்கள் எல்லாம் கன்னிகள் அல்ல " என்று சொன்னால், ஏனையவர்கள் சந்தேகப்படுவார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆங்கிலத்தில் இருப்பதை மொழி பெயர்க்கும்போது, அப்படி வந்து விடுகிறது. திங்கள் அன்று காங்கிரஸ் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் பேசுவார்கள். அடுத்து அரசு தரப்பிலிருந்து பதில் அளிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே கட்சித் தலைவர்களுக்கு சிறிது கூடுதல் நேரம் பேச அனுமதிக்கிறேன், மற்றவர்கள் 10 நிமிடத்திற்குள் முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறிக்கொண்டு, என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடல் நலம் தேறி பொறுப்பை ஏற்று செயல்படுவதற்கும், என் மகிழ்ச்சியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் நாடாளுமன்ற, சட்ட மன்றத் தேர்தல்கள் நடந்து, முடிவுகள் தெரிந்ததற்கும் பிறகு இரண்டு மாதம் தாமதம் செய்து, இன்னும் சொல்லப்போனால் இரண்டு மாதத்திற்கு மேலேயே தாமதித்து அவைகள் கூடுவது நல்ல ஜனநாயக மரபு அல்ல என்பதை மட்டும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். காரணம், விசேஷமான சூழ்நிலைகள் இருந்தன என்பது உண்மைதான் என்றாலும் கூட. சில ஜனநாயக மரபுகளை நாம் கைவிடுவது ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு உதவிகரமாக இருக்காது என்பதுதான்.

ஆளுநர் உரையில் பல கொள்கைகள் வைக்கப்பட்டிருந்தபோதிலும், இந்தக் காலத்தில் தமிழ் நாட்டில் 1985-86-ல் என்ன கொள்கை இந்த அரசு வைத்திருக்கிறது என்று பார்த்தால், முழுமையாக இருப்பது ஸ்ரீலங்கா பிரச்சினைதான். இந்த ஸ்ரீலங்கா பிரச்சினை சர்வதேசப் பிரச்சினையாகிவிட்டதோடு, சிக்கல் நிறைந்தது என்பதும் உண்மைதான். அங்கே தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள். குறிப்பாக, கரையோரப் பகுதிகளில் உள்ள மீனவர்கள் தாக்குதல்களுக்குள்ளாகி, துன்பத்திற்குள்ளாகி வெளியேறுகிறார்கள். அள விட முடியாத கொடுமைகள் நடக்கின்றன அங்கே என்பது உண்மை. இந்தப் பிரச்சினையில் தமிழ் நாட்டில் எல்லாக் கட்சிகளுமே கொந்தளிப்பை அடைந்திருக்கின்றன என்பதும் உண்மைதான்.

இந்திய அரசு அளவில் முறைப்படி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முன்பாகவே மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது என் கோரிக்கை. மத்திய அரசு தாமதமாக எடுத்துவரும் நடவடிக்கைகள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவும் என்ற சுயதிருப்தி மனோபாவம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. அது சரியான மனோபாவம் அல்ல.

மற்றொரு முக்கிய பிரச்சினை. நாம் நல்லெண்ணத்திற்காக ஸ்ரீலங்காவிற்கு விட்டுக் கொடுத்தது கச்சத் தீவு. அதுபற்றி, யார் விட்டுக் கொடுத்தது, எப்போது விட்டுக் கொடுத்தது என்ற விவாதத்திற்குள் போவதைவிட—நமக்கு



அனுபவம்—எப்போதுமே இரண்டு நாடுகள் நல்லுறவை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றால், சிலவற்றை விட்டுக் கொடுத்து, சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என்பது சர்வதேச விஷயங்கள், ஆனாலும், இப்போது அனுபவத்தில் கச்சத் தீவு கொடுத்ததானது, அது ஒரு உளவு மையமாக, ராணுவ மையமாக முழுமையாக மாறாவிட்டாலும் கூட, உளவு மையமாக மாறியிருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். எனவே, மத்திய அரசை வலியுறுத்தி கச்சத் தீவைப் பெற முயற்சிக்க வேண்டும். அப்படிப் பெற்றால், இந்த ஸ்ரீலங்கா பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படலாம். என்ன தீர்வு என்பதை என்னுடைய கருத்தாகச் சொல்வதைவிட, அப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதைத்தான் கவனிக்க வேண்டும். இதற்கு மாநில அரசு முயற்சிக்க வேண்டும்.

எடுத்த எடுப்பிலேயே நம்முடைய நாட்டைச் சேர்ந்த இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மீனவர்களைப் பாதுகாக்க முடியும். நமக்கு அது ஒரு பாதுகாப்புத் தளமாகவும், நம்முடைய மிலிட்டரி அவுட் போஸ்ட் என்ற அளவிலும் நாம் அதைப பயன்படுத்த முடியும், என்ற அளவில் கச்சத் தீவைத் திரும்பப் பெற முயற்சிகளை மாநில அரசு எடுத்து மத்திய அரசை வற்புறுத்துவது பொருத்தமாகும்.

ஆளுநர் உரையில் மற்றொன்றும் சொல்லப்பட்டிருக்கிறது, இறுதியாக மாநில அரசு, தமிழ்நாட்டுடைய வேகமான வளர்ச்சிக்கு ஒரு விரிவான திட்டமும், வறிய, நலிவுற்ற மக்களுக்கு நன்மையை அளிக்கும் திட்டமும் வைத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். 15 திட்டங்கள் சொல்கிறார்கள். அதிலே சில திட்டங்கள் இனிமேல்தான் தயாரிக்க வேண்டும். ஏழை மக்களுக்கு நன்மை செய்யும் காரியங்களைச் செய்யவேண்டுமென்பதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. அந்த 15 திட்டங்களிலே இரண்டாவது திட்டம், ஆதி திராவிடர் நலம் பெற விரிவான திட்டங்கள் தயாரிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் பேசும்போது, அதிகமாக தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் பற்றிக் குறிப்பிட்டார். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராகவானந்தம் தொழிலாளர் நலத் துறைபற்றி குறிப்பிட்டார்.

[திரு. ப. மாணிக்கம்] [1985 மார்ச் 16

(முற்பகல் 10-45)

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

திட்டங்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார். திட்டங்கள் தயாரிக்கலாம், ஆனால் வரவுசெலவுத் திட்டம் வரும்போதுதான் அத் திட்டங்கள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பது தெரியவரும். 1985-86 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை மிகவும் அதிகமாக இருக்கும் என்பது நமக்குத் தெரிகிறது.

ஆளுநர் உரையில் நம்முடைய மாநிலத்திலுள்ள நலிவுற்ற பிரிவினருக்கான நிவாரண நடவடிக்கைகள்தான் இருக்கின்றனவே தவிர, இன்றைக்குள்ள நிலைமையை மாற்றுவதற்கான வழியிலே திட்டங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இதை விமர்சனம் செய்ய வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை.

ஆளுநர் உரையில், மத்திய அரசின் முதலீடுகளைப் பொறுத்தமட்டில், போதிய நியாயமான அளவிற்கு இம் மாநிலத்தில் முதலீடு செய்ய வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசினை வலியுறுத்தி வருகின்றதென்பதை உறுப்பினர்கள் அறிவர் என்று கண்டிருக்கிறது. திருச்சிராப்பள்ளியில் தொழிற்சாலை ஒன்றினை அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது என்றும், சென்னையிலுள்ள இரசாயன உரத் தொழிற்சாலையை விரிவுபடுத்துவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கும் என்று எதிர்பார்க்கிறோம் என்றும், சேலம் உருக்காலையினை முழு அளவிலான உருக்காலையாக மாற்ற வேண்டுமென்னும் நீண்ட நாள் கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கிறோம் என்றும் கண்டிருக்கிறது. இவைகளை மத்திய அரசு செய்யும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அவ்வளவு சுலபமாக நடக்குமா? இப்போது வந்திருக்கிற இரயில்வே பட்ஜெட், இன்றைக்கு வரப்போகிற மத்திய அரசின் பட்ஜெட் குறித்த தகவல்களைப் பார்த்தால், அதற்கான வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை. அத்தியாவசியப் பொருள்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்த மானியங்களை (சப்சிடிகளை) நிறுத்தப் போவதாகக் கொள்கைகள் இருக்கின்றன. இந்த நிலையில் நம்முடைய மாநில அரசு போட்டிருக்கிற திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசிடமிருந்து நிதி கிடைக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது.

அடுத்து, எட்டாவது நிதிக் கமிஷன் சம்பந்தமாக ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு தடவையும் நிதிக் கமிஷன் வருகிறது. அது, மாநில அரசின் கோரிக்கைகளைக் கவனிக்கவில்லை என்று நாம் தொடர்ந்து சொல்லி வருகிறோம். நமக்கு இந்த எட்டாவது நிதிக் கமிஷன் மூலம்



1985 மார்ச் 16] [திரு. ப. மாணிக்கம்]

கிடைக்கக்கூடிய உதவி, ஜனத்தொகை அடிப்படையிலே நாம் குறைந்துவிட்டதாலே இனி எக்காரணம் கொண்டும் குறைந்துவிடும் நிலை ஏற்படக்கூடாதென்று கூறியிருக்கிறார்கள். இப்போதுள்ள நிலைமையினால், வளர்ச்சி இல்லாத மாநிலத்திற்கு, வருவாய் குறைவாக இருக்கிற மாநிலங்களுக்கு அதிகம் தருகிறார்கள். நம்முடைய மாநிலத்திற்குத் தருவதில்லை. நம்முடைய மாநிலம் கேட்பதெல்லாம், திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு அதிகம் வேண்டும் என்றுதான் கேட்கிறது. கிடைக்க வேண்டிய நிதி கிடைக்காததால்தான் கேட்கிறோம். ஆளுநர் உரையில்,

"I hope a more equitable system both in the matter of plan assistance and in the sharing of market borrowings will provide on adequate resource"

என்று இருக்கிறது. ஆனால் இன்றைக்கு வந்திருக்கக்கூடிய மத்திய அரசினுடைய பொருளாதார மற்றும் நிதிக்கொள்கைகளைப் பார்த்தால் அப்படிப்பட்ட வாய்ப்பு இருப்பதாகவே தெரியவில்லை. மாறாக ஏற்கனவே கொடுத்தது குறைந்திருக்கிறது என்பது மட்டுமல்ல, மேலும் குறையக்கூடிய ஆபத்தும் இருக்கிறது. ஆகவே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநில அரசு ஒரு நிரந்தர நிதிக் கமிஷனைக் கேட்க வேண்டும். அதன்மூலம்தான், மாநில அரசுகள் தங்களுடைய நிதிநிலைகளை முறைபடுவதற்கும், நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கும் உதவியாக இருக்கும். அப்போது நாமும் கூட நேரடி வரி என்று சொன்னால், அது விவசாயிகளின் மீதோ அல்லது நமது விற்பனை வரி மூலமோ தான் போட முடியும். எனவே தான் நம்முடைய வருவாய் மூலம் வரக்கூடிய காலத்தில் பாதிக்கக் கூடிய நிலை தான் இருக்கிறது. அப்போது வருவாய் மூலம் பாதிப்பு ஏற்படும் காரணத்தினால் நாம் அதிகம் போடுவதற்கு புதிய அடிப்படை ஒன்றை உருவாக்கவேண்டும். வருவாய் மூலம் நமக்குக் குறைந்திருக்கிறது என்பது மட்டுமல்ல, மறைமுக வரியையும் அதிகம் போட முடியாது. திட்டம் என்று சொன்னால், அபிவிருத்தித் திட்டம். ஒரு விஷயம், சமூகக் கண்ணோட்டத்தில் பார்த்தால், சத்துணவுத் திட்டம் ஏழைக் குழந்தைகளுக்கு உதவுகிறது என்பது உண்மை. ஆனால் நிதிக் கொள்கை என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால், அது எப்படி இருக்கிறது? இன்றைக்கு உள்ள நிதி வசதியிலே இவ்வளவு பெரிய தொகையைச் செலவு செய்ய வேண்டுமா? மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. சமீபத்தில் நம்முடைய மாநிலம் சார்பாக உயர் அதிகாரிகள் சென்று வந்தபோது, இப்போது திட்டத்திலே இந்தச் செலவைச் சேர்ப்பதற்கு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். சுமார் 186 கோடி ரூபாயை திட்டச் செலவிலே அவர்கள் ஏற்றுக்கொண்டு விட்டால், பணம் கிடைக்கிறது

(முற்பகல் 10-50)

என்பது உண்மை. ஆனால் இதன் மூலம் மற்ற அம்சத் திட்டத்திற்கு, வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு நிதி குறையும். எனவே தான் அதிக நிதி பெறுவதற்கு, ஏற்கெனவே மாநிலங்களுக்கு நிதி வேண்டுமென்று தொடர்ச்சி யாக எல்லா மாநிலங்களும் கேட்டு வருகின்றன. அந்த வகையிலே ஒரு நிரந்தர நிதிக் கமிஷன் வேண்டும். இன்றைக்குள்ள அடிப்படையை மாற்றுவதற்கு வெறும் திட்டத்திலுள்ள ஒதுக்கீட்டை அதிகரிக்க, மத்திய அரசு எழுப்பக் கூடிய கடன்களிலிருந்து பங்கு வேண்டுமென்று கேட்பதைவிட, அதற்கு மாறாக, மாநிலங்களுக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்ற பிரச்சினையிலே தொடர்ச்சியாக நம்முடைய மாநில அரசு வலியுறுத்த வேண்டும். இன்னும் சொல்லப்போனால், நம்முடைய தமிழ் நாட்டிலே உள்ள பல நிதித் துறை நிபுணர்கள், பொருளாதார நிபுணர்களை அழைத்துப் பேசி வலியுறுத்து வதிலே கவனம் செலுத்த வேண்டும். கடந்த காலத்திலே எல்லாக் கட்சி களையும் கலந்துகொண்டு நிதிக் கமிஷன் முன்னால் அறிக்கை சமர்ப்பிக்கப் படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் அது நிறைவேறவே இல்லை. எந்தக் கட்சிகளையும் கூப்பிடவே இல்லை. நிதிக் கமிஷனைப் பார்க்க அமைச்சர்களும், அதிகாரிகளும் சென்றார்களே தவிர, எந்தக் கட்சியும் கலந்துகொள்ளவில்லை. எனவே தான் இந்தக் கொள்கையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது முக்கியமான பிரச்சினை என்பதாலே அதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இன்றைக்கு உள்ள சூழ்நிலையில், பொருளாதாரச் சூழ்நிலையில் மத்திய அரசு திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டிலோ அல்லது மத்திய அரசு எழுப்பக்கூடிய பொதுக் கடன் களிலிருந்தோ நமக்குத் தரக்கூடிய அளவு ஒதுக்கப்படுமென்ற நம்பிக்கை இல்லை என்பதாலே வலியுறுத்துகிறேன். ஒரு நிரந்தர நிதிக் கமிஷன் வேண்டும். இன்னும் சொல்லப் போனால், அந்த நிதிக் கமிஷன் அடிக்கடி நம்முடைய பிரச்சினைகளை எழுப்புவதற்கும், முறையிட்டு தீர்வு காணுவதற்கும் உதவி கரமாக இருக்கும். நிரந்தர நிதிக் கமிஷனை ஒரு புதிய அடிப்படையில் நாம் உருவாக்க வேண்டும். நாம் செலவு செய்வது குறித்து கூட உற்பத்தியை அதிகரிக்கும் விதத்தில் வளர்ச்சி என்ற முறையிலே நம்முடைய கொள் கையை மாற்றியமைக்க வேண்டும். இங்கே சிறிது வருத்தத்தோடு நான் ஒன்றைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. வளர்ச்சித் துறையிலே என்பதை விட செலவுத் துறையிலே இன்னும் சொல்லப்போனால் நலிவையும், வறுமை யையும் போக்க வேண்டிய திட்டங்கள் என்று வரும்போது, தற்காலிக நிவாரணமாக இருக்கிறதா என்று தான் பார்க்கிறோமே தவிர, அதற்கு அஸ்தி வாரமாக இல்லை. பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு அதனால் வறுமை குறைகிறது என்பதைவிட, இப்போது தற்காலிகமாக நிவாரணம் ஏற்படு



கிறதா என்ற முறையிலேயே நம்முடைய அரசு செல்கிறது. அது சரியான நிதிக் கொள்கை ஆகாது. சென்ற ஆண்டிலே பல திட்டங்களை நிறை வேற்றி, பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்திருக்கிறோம். நான் அதுபற்றி விரிவாகப் பேச விரும்பவில்லை. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர், அதுவும் அமைச்சராக இருந்து அனுபவம் பெற்றவர்,—கடந்த காலத்திலே செய்த தொழிலாளர் சட்டங்களைப்பற்றிச் சொன்னார்கள். எப்போதுமே நல்ல சட்டங்களைச் செய்வது சுலபமான வேலை. ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். சட்டங்களை எப்போதுமே தவறாக ஒப்பிட வேண்டாம். சைனாவிலே சாங்கேஷக் மிகச் சிறந்த சட்டங்களை நிறைவேற்றி அவை எதுவுமே நிறைவேறவில்லை. ஆனால் வருந்து கிறேன் என்று சொன்னபோது கேட்டேன். அரசு சட்டங்களை இயற்றிவிட்டு சரியாக நிறைவேற்றவில்லை என்று வருந்துகிறாரே, ஒன்று ஏமாற்றமா அல்லது கவனக் குறைவா என்று கேட்டேன். அவருக்கே உரிய பாணியில் அது ஒரு மாதிரி சமாச்சாரம் என்று கூறிவிட்டார்கள். இருப்பினும் சட்டங்கள் போட்டால், அவைகள் நிறைவேறுவதற்கான உத்திரவாதத்தை யார் கொடுப்பது? அரசாங்கம்தான் நிறைவேற்ற வேண்டும். அந்தச் சட்டங் களை நிறைவேற்றும்போது, நாங்கள் உதை வாங்கியதுதான் மிச்சம். அவர் குறிப்பிட்ட கட்சிகள் நிரந்தரமாக்குங்கள், நிரந்தரமாக்குங்கள் என்று சொன் னால், இருக்கிறதுதான் போகும். எனவே அதுக்குள் நிறைய நான் போக விரும்பவில்லை. வாழ்க்கையில் நடைமுறையில் உள்ள உண்மைகள் வேறு. அதனால் சட்டங்கள் போட்டோம். சென்ற ஆண்டு பல நிறைவேறி இருக் கின்றன என்று சொல்ல முடியாது. இரண்டு விஷயங்களை நான் சொல்ல விரும்புகிறேன். ஒன்று அரசு சமீபத்தில் கொண்டுவந்த பல சமூக நலத் திட்டங்களிலே 6 வகை ஊழியர்கள், அரசினுடைய நிரந்தர ஊழியர்கள், சத்துணவுத் திட்ட ஊழியர்கள் உட்பட நான் சொல்கிறேன். அதுபோல் சோஷியல் பாரஸ்ட், காடு வளர்ப்புத் திட்டத்தில் போட்ட ஊழியர்களுக்கு 250 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு அது நிரந்தர அடிப் படையிலா? அவர்களுக்கு நிதி வருவாய் இடம் தருகிறதா என்பது எல்லாம் வேறு பிரச்சினை.

(முற்பகல் 10.55)

இவ்வாறு ஆறு வகையான ஊழியர்கள் 'அட் ஹாக்' அடிப்படையில், ஒரு ஒட்டுமொத்தமான சம்பளம் என்ற அடிப்படையில் நியமிக்கப்பட்டிருக்கி றார்கள். அந்தப் பணம்கூட அவர்களுக்குச் சரியாக விநியோகிக்கப்படுவ தில்லை. குறிப்பாக சமூகநலக் கூடங்கள் அமைப்பதற்கான பணியாளர்கள்

மாதம் ஒன்றுக்கு ரூ. 250 சம்பளம் என்ற அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்களின் கீழ் 4, 5 ஊழியர்களை வைத்துக்கொண்டு மரக் கன்றுகளை நட வேண்டும். பாரஸ்ட் ரேஞ்ஜர்கள் அவர்களைப் பார்த்து "நீங்கள் எப்படியாவது மரக் கன்றுகளையெல்லாம் நட்டாக வேண்டும் இறுதியாகக் கணக்குப் பார்த்துக் கொடுக்கிறோம்" என்று சொல்லி விடுகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது போக மீதி வரக்கூடிய ஊதியத்தை அதிகாரிகளே எடுத்துக்கொள்கிறார்கள். இப்படி வீடு கட்டிக் கொண்டவர்கள்கூட இருக்கிறார்கள். திறமையும் தூய்மையும் நிறைந்த நிர்வாகத்தைத் தருவது எங்களுடைய நோக்கம் என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டாலும், உண்மையில் செயல்பாடு என்று வரும்போது அப்படி இல்லை. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். அதாவது நரகத்திற்குச் செல்லும் பாதைகூட நல்ல நோக்கத்தோடுதான் அமைக்கப்பட்டிருக்கிறது என்று. இப்படி நல்ல நோக்கத்தோடு சொல்லிவிட்டால் மட்டும் போதாது, செயல்பாட்டில் அப்படி இருக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயத் துறையில் இரண்டு மூன்று பிரிவுகள் இருக்கின்றன. அதாவது தோட்டக் கலை; விவசாயத் துறை மற்றொன்று ஓரிகல்சர். இந்தத் துறைகளில் மிகவும் முக்கியமான பொறுப்பு வாய்ந்த பதவிகளில் அதிகாரிகள் நியமிக்கப்படாத நிலை கடந்த ஆண்டு இருந்தது. ஸ்பெஷலைஸ்டு துறை என்று சொல்லப்படும் இத்தகைய விசேஷ தன்மையுள்ள துறைகளில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை நியமிக்காமல் பொறுத்தன்மை வாய்ந்தவர்களை நியமிப்பதால், பல தவறுகள் நடக்க ஏதுவாகின்றன. கடந்த ஆண்டில் இத்துறைகளில் பல பதவிகள் நிரப்பப்படாமல் காலியாகவே இருந்திருக்கின்றன. இப்படிப் பல துறைகளைச் சுட்டிக்காட்ட முடியும். வைத்தியத் துறையில் கூட இத்தகைய நிலையால் சில பிரச்சினைகள் அண்மையில் ஏற்பட்டன. ஸ்பெஷலைஸ்டு புரொபசர்கள் இல்லாத காரணத்தால், மருத்துவத் துறையில் பல பாதிப்புகள் ஏற்பட்டன. இவ்வாறு பல துறைகளில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நியமிக்கப்படாததால், பல வேலைகள் தடைப்பட்டிருந்தன என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, விவசாயத் துறையை ஒட்டி ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். அது குத்தகை விவசாயிகள் சம்பந்தமான பிரச்சினை. தொடர்ந்து இந்தப் பிரச்சினை சிக்கலாகிக் கொண்டிருக்கிறது. இது குறித்து விரிவான சட்டம் ஒன்று வேண்டும். கடந்த காலத்தில் இயற்கையின் சீற்றத்தின் காரணமாகவும் வறட்சி காரணமாகவும் குத்தகை அளக்க முடியாத நிலை



ஏற்பட்டு பலமுறை குத்தகை ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும் இப்போதும் குத்தகை பாக்கிக்காக விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றுவது நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. இதைத் தடை செய்யும் வகையில் சட்டமும் இருக்கிறது என்றாலும், வெளியேற்றமும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. சட்டப்படி 5 ஏக்கருக்கு மேல் குத்தகை வைத்திருக்க முடியாது. ஆனால் எத்தனையோ பெரிய பிரமுகர்கள் இன்னமும் 5 ஏக்கர்களுக்கு மேல் குத்தகை நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து ஒரு அடி நிலத்தைக் கூட எடுக்க முடியாது. ஆனால் சாதாரண விவசாயியிடம் 5 ஏக்கருக்கு மேல் குத்தகை நிலம் இருந்தால், நம்முடைய அதிகாரிகள் அவர்டம் சென்று, "உன்னிடம் 2 ஏக்கர் அதிகமாக இருக்கிறது அதை எடுத்துக் கொள்வோம்" என்று மிரட்டுகிறார்கள். எனவே குத்தகை விவசாயிகளின் பாதுகாப்புக்காக விரிவான சட்டம் தேவை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திச் சொல்லிக் கொள்வதோடு, இன்னொரு கருத்தையும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். அண்டை மாநிலமான கருநாடகத்தில் திரு. ஹெக்டே அரசு ஒரு சட்டத்தைச் செய்திருக்கிறது. கேரளத்தில் நடப்பதை நான் சொல்லவில்லை. கேரளத்தில் இருப்பதைச் சொன்னால், முன்னாள் அமைச்சராக இருந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வருத்தமேற்படும். திரு. ஹெக்டே அரசு குத்தகை விவசாயிகள் தங்கள் தவணையைக் கட்டிவிட்டு நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளலாம் என்று கொண்டு வந்திருக்கிற சட்டத்தைப்பற்றி இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். பாக்கியை ரத்து செய்துவிட்டார்கள். அதைப் பின்பற்றி தமிழ்நாடு அரசும் குத்தகை விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுத்து, நிலத்தைச் சொந்தமாக்கும் வகையில் விரிவான ஒரு சட்டத்தை விரைவாகக் கொண்டுவர வேண்டும், அதையும் இந்தத் தொடர் கூட்டத்தின்போதே கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால் கிராமப்புறங்களில் இருக்கும் குத்தகை விவசாயிகள் பெரும் அளவுக்குப் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, கரும்புக்கு அரசு விலையை நிர்ணயித்திருக்கிறது. இந்த விலையினை, கூட்டுறவு கரும்பாலைகளில் கொடுக்கிறார்கள். ஆனால் கரும்பு விவசாயிகளுக்கு தனியார் ஆலைகளில் அதே விலையைக் கொடுக்க மறுக்கிறார்கள். அரசு அறிவித்திருந்தும், தனியார் ஆலைகள் அந்த விலையைக் கொடுக்க மறுக்கின்றன. எனவே தனியார் ஆலைகளிலும் அரசு நிர்ணயித்த விலையைக் கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்க உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ள

வேண்டும். இந்தப் பிரச்சினை காரணமாக பல இடங்களில் கரும்பு இன்னும் வெட்டப்படவில்லை. இதனால் இறுதியாக விவசாயிகள்தான் பாதிக்கப்படுவார்கள் என்பதால், அரசு அறிவிப்பு மட்டும் செய்தால் போதாது, நடைமுறையில் அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.00)

மற்றொன்று. விவசாயிகளுக்கு பல சலுகைகள் அறிவிக்கப்பட்டன. இவைகள் எல்லாம் தேர்தலுக்கு முன்னதாகச் சொல்லப்பட்டன. பல ஆளும் கட்சிகள் செய்யக்கூடிய முறைதான் இது. அந்த அறிவிப்புகளால் சில நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன என்றாலுங்கூட, ஒரு விஷயத்தை நான் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். மின்சாரத்தில் சொல்லப்பட்ட சலுகை மீட்டர் எடுக்கப்பட்டு குதிரை ஓட்டச் சக்தியின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டது. மேட்டுப் பாங்கான நிலத்தில் உள்ளவர்கள், குறிப்பாக சேலம், தருமபுரி, கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் தண்ணீர் குறைவாக உள்ள இடங்களில் உள்ளவர்கள் ஐந்தரை ஹார்ஸ் பவர் போட்டிருக்கிறார்கள். அவர்கள் கொஞ்ச நேரம்தான் ஓட்ட முடியும். முன்பு வருஷத்திற்கு 180 ரூபாய் கட்டி வந்தவர்கள் இப்போது கிட்டத்தட்ட 500 ரூபாய் அளவிற்குக் கட்ட வேண்டியிருக்கிறது. மீட்டர் எடுத்தாகிவிட்டது. இப்போது சலுகை என்பது சுமையாக ஆகிவிட்டது. ஓர் இடத்திலே சலுகை, ஓர் இடத்திலே சுமை என்றாகிவிட்டது. ஆகவே அந்தச் சுமையை மாற்ற வேண்டும். இது குறித்து ஏற்கெனவே விவசாயிகள் சார்பாக மின்சார வாரியத்திடம் முறையீடு செய்யப்பட்டிருக்கிறது. கடந்த மூன்றாண்டுகளில் மின்சாரத்தைப் பயன்படுத்தி அவர்கள் என்ன கட்டியிருக்கிறார்களோ அதன் சராசரியை ஆதாரமாகக் கொண்டு இந்தக் கட்டணத்தை நிர்ணயிப்பதுதான் சரி. மீட்டரை மீண்டும் கொண்டுவர வேண்டாம். அந்த மாதிரி சராசரிக் கணக்கை எடுத்து அதை நிர்ணயித்தால், அந்த விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும். ஹார்ஸ் பவர் மூலம் சலுகை என்பது சுமையாக மாறிவிட்டது என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்தது விவசாயிகள் சர்டிபிகேட் வாங்குவது. உண்மையிலேயே சிறு விவசாயிகள் பணம் இல்லாததால் இந்த சர்டிபிகேட்டை வாங்க முடியவில்லை. பணம் உள்ளவர்கள் பணம் கொடுத்து வாங்க முடியும். தூய்மையான நிர்வாகத்தில் இப்படிப்பட்ட விஷயங்கள் நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



இன்னுமொன்று. மின்சாரத் துறையிலே கையாளப்படக்கூடிய கொள்கையைப்பற்றி அதன் நிதிநிலை அறிக்கை வரும்போது நான் எடுத்துக்கொள்கிறேன். ஆனால் ஒன்றை மட்டும் சொல்லுகிறேன். மின்சார உற்பத்திக்கும், மின் விநியோகத்திற்குமிடையே சரியான விகிதாச்சாரம் இருக்க வேண்டும். மின் உற்பத்தியை விட மின் விநியோகம் அதிகமாக இருக்கிறது. சமூக நலன் என்ற அடிப்படையில் உற்பத்திக்கு மேல் விநியோகம் செய்வதால் தொழில்களுக்கு மின்சார வெட்டு ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கும் மின்வெட்டு ஏற்பட்டிருக்கிறது. இதனால் விவசாயத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதை அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மின்சாரத் துறை பட்ஜெட் வரும்போது இதைப்பற்றி விரிவாக எடுத்துக் கொள்கிறேன்.

மற்றொரு முக்கியமான விஷயம். தமிழ் நாட்டில் பொதுச் சுகாதாரம் மிகப் பெரிய அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலுள்ள நகரங்கள் எல்லாவற்றிலும் இப்போது இரவு நேரங்கள் கொடுமையான நேரங்களாக மாறிவிட்டன. காரணம் கொசுத் தொல்லை. அநேகமாக இரவில் தூங்குவதே கிடையாது. நகரத்திலுள்ள கொசுக்கள் எல்லாம் மின்சார விசிறிக்கு ஒரு வருஷத்திற்கு முன்பு பயந்து ஓடின. இப்போது அவைகள் பயிற்சி பெற்று மின்சார விசிறி வீச்சுக்கு மீறி கடித்துத் தொல்லைப்படுத்துகின்றன. இது சென்னையிலே மிக அதிகம். தமிழ் நாட்டிலே எந்த நகரத்திலும் தங்குவது கஷ்டம். வீடுகளிலும் தங்குவது கஷ்டம். பொது இடங்களிலே தங்குவதும் கஷ்டம்.

இந்த பொதுச் சுகாதாரத்தைப்பற்றி இரண்டு மூன்று விஷயங்கள். எவ்வளவு ஜனத்தொகைக்கு எவ்வளவு வீடுகளுக்கு ஒரு சுகாதார ஊழியர் என்று அரசு போட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். அந்த ஊழியர்களின் எண்ணிக்கை 25 வருடங்களுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது. அதற்கு மேல் சானிடரி ஒர்க்கர்ஸ் நியமனம் செய்ய அரசு அனுமதிக்கவில்லை. முனிசிபாலிட்டிகளின் நிதியைக் காரணம் காட்டி அரசு அனுமதிக்கவில்லை. ஆகவே கூடுதலாக ஊழியர்கள் நியமிக்கப்படவில்லை. ஆகவே சுகாதாரக் கேடு அதிகமாக இருக்கிறது. கழிவு நீரைப் போக்குவதும், குப்பைகளை அகற்றுவதும் எப்போதோ ஒரு நாள்தான் நடக்கிறது. இரண்டாவது, எனக்குக் கிடைத்த தகவல். சென்னையில் கொசு மருந்து அடிக்க 200 ஊழியர்களை கார்ப்பரேஷனில் நியமித்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுத்த வேலை கொசு மருந்து தெளிப்பது. ஆனால் அவர்கள் அதிகாரிகளின் வீட்டில் வேலை செய்

கிறார்கள், கொசுக்களை ஒழிக்கப் போவதில்லை. அதிகாரிகள் வீட்டுப் பணிக்கு கார்ப்பரேஷன் சம்பளம் கொடுக்கிறது. இதையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று சொல்லுகிறேன். ஏனென்றால் நிர்வாகத்தை, திறமைப்படி, தூய்மைப்படி செய்ய வேண்டிய காரியங்கள் இவைகள்.

([illegible])

முடித்துக் கொள்ளுகிறேன்.

(முற்பகல் 11.05)

கடைசியாக ஒரு அம்சம். பஞ்சாயத்துத் தேர்தல்கள் சம்பந்தமாகச் சொல்கிறேன். ஆகஸ்ட்டில் நடத்தப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். பல பிரச்சினைகள் அதிலே வரலாம். நான் ஒன்று சொல்கிறேன். நான் இந்த அரசோ, இந்த ஆளுங் கட்சியோ தேர்தலுக்குப் பயப்படுகிறது என்று சொல்லவில்லை. அப்படி இருக்கும்போது தேர்தல் நடத்துவதற்கு ஏன் பயப்படுகின்றார்கள்? எல்லோரும் ஏற்றுக்கொண்டோம். அவர்களுக்குப் பெருவாரியான ஆதரவு இருக்கிறது. மக்களுடைய ஆதரவு இருக்கிறது. அப்படி இருந்தும் ஏன் நடத்தவில்லை? காரணம்தான் தெரியவில்லை. எல்லோரும் ஏற்றுக்கொண்டும் நகராட்சி, பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடத்தவில்லை. தேர்தல் நடத்தி பொதுமக்களுடைய பிரதிநிதிகள் வந்துவிட்டால், எதையும் தட்டிக் கேட்பதற்கும், கண்காணிப்பதற்கும் உபயோகமாக இருக்கும். மக்கள் தட்டிக் கேட்பார்கள். பிரதிநிதிகள் தட்டிக் கேட்பார்கள். அதிலே சில தவறுகள் நடக்கலாம். சில்லரை விஷயங்கள் இருக்கலாம். இருந்தாலுங்கூட பொதுப் பிரதிநிதிகள் என்று இருந்தால்தான், தட்டிக் கேட்க முடியும், கண்காணிக்க முடியும், அதனால் நல்ல அபிவிருத்திகள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கும். காரணம் மக்கள் பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொள்வார்கள். பிரதிநிதிகளும் மக்களைக் கேட்டுக்கொள்வார்கள். இன்றைக்கு அப்படியெல்லாம் யாரையும் கேட்க முடியவில்லை. ஆள் யாரும் அப்படி இல்லை. அதனால் அபிவிருத்தி இல்லை. பல பஞ்சாயத்துக்களில் உள்ள கிராமங்களில் சாலைகள் சீரழிந்து இருக்கின்றன. அங்கேயெல்லாம் வேலையே நடக்கவில்லை. கணக்கு மட்டும்தான் எழுதுகின்றார்கள். எனவே தேர்தல் நடத்துங்கள். எவ்வளவு சிரமங்கள் வந்தாலும், அந்த சிரமங்களை எல்லாம் கடந்து சில புதிய யோசனைகளை வைத்து தேர்தலை நடத்துங்கள். அதற்கு கோர்ட்டிலே தடை வாங்குகின்றார்கள் என்று அரசு சொல்கின்றது. அதையெல்லாம் ஒரு காரணமாகச் சொல்வதைவிட்டு, எல்லோரும் சேர்ந்து ஒரு வழி கண்டு





பிடிப்போம். காலதாமதம் செய்யாமல் இந்தத் தேர்தலை நடத்துவோம். அவர்கள் தேர்தலுக்கு ஏன் அஞ்சுகிறார்கள் என்பது தெரியவில்லை. ஏன் தேர்தல் நடத்தவில்லை என்பது புரியாத புதிராக இருக்கிறது. இந்த நேரத்தில் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது 15 அம்சத் திட்டம் என்று போட்டிருக்கின்றார்கள். இதிலே சில அம்சங்கள் வரவேற்கக்கூடியவையாக இருக்கின்றன. இந்தத் திட்டத்திலே உள்ள நல்ல அம்சங்களை நிறைவேற்றுவதற்கு, உண்மையிலேயே உருவாய் வாய்ப்புகள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். வரவு-செலவுத் திட்டம் வந்தால் பார்க்கலாம் என்று சொல்லலாம். இருந்தாலுங்கூட, ஏற்கெனவே ஆரம்பத்திலேயே நமக்குப் பற்றாக்குறை இருந்துகொண்டிருக்கிறது. விரிவான முறையில் ஒரு கன்சுயர்ஸ் ஓரியன்டேஷன் அதாவது நுகர்வோருக்குப் பலன் தரக்கூடிய முறையிலே பல திட்டங்கள் இருக்கின்றன. இதை நிறைவேற்ற வாய்ப்புகள் இருக்கின்றனவா என்று அரசு அறிவிக்க வேண்டும். அதைப்பற்றிக் கூற வேண்டும். இந்த 15லே வரவேற்கக்கூடிய அம்சங்கள் இருக்கின்றன என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அவற்றில் எவைகளை உடனடியாக எடுத்துக்கொள்ளலாம் என்பதைப் பார்க்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். திரும்பவும் சொல்கிறேன். திறமையும் தூய்மையும் நிறைந்த நிர்வாகம் நடக்கும் என்று இந்தக் கொள்கை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை இந்த ஆண்டிலேயே குறைந்தபட்சம் நிறைவேற்ற வேண்டும். பஞ்சாயத்துத் தேர்தல் நடத்தவும், வேலை வாய்ப்புக்களைப் பெருக்கவும் என்று நல்ல முயற்சிகளை குறைந்தபட்சம் அரசு மேற்கொண்டால், நான் மிக்க மகிழ்ச்சி அடைவேன். அந்த முறையிலே அரசு அறிவித்துள்ள திட்டங்கள் மட்டுமல்ல, மற்ற புதிய திட்டங்களையும் வகுத்து அறிவிப்புகளுக்கு ஏற்ப நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறி அமைகிறேன்.

* திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால், எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னதுபோல, தமிழகத்து முதலமைச்சராக உள்ள, மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் உடல்நலம் பெற்று வந்திருப்பதற்காக நான் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதை [illegible] கடமையாகக் கருதுகிறேன்.

கவர்னர் அவர்கள் உரையின்மீது சில கருத்துக்களைச் சொல்லும்போது, கவர்னர் உரை என்பது அரசாங்கத்தினுடைய கொள்கைகளைப் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும் என்று ஒரு கருத்தைச் சொல்வார்கள். அரசாங்கத்தினுடைய கொள்கைகளை ஆளுநர் அவர்கள் உரையின் மூலமாக அறிவித்து, அந்தக் கொள்கைகளை நிறைவேற்றுவோம் என்று அறிவிப்பு தருவதுதான் ஆளுநர் உரை என்று எல்லோராலும் சொல்லப்படுகிறது. எனக்கு முன்னால் பேசிய பொதுவுடைமைக் கட்சியினுடைய உறுப்பினராக உள்ள திரு. மாணிக்கம் அவர்கள் "உள்ளாட்சித் துறை தேர்தலைப்பற்றி உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கவில்லை" என்று சொன்னார்கள். அந்தத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்ற கருத்தையும் எடுத்துச் சொன்னார்கள். ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் மிகவும் முக்கியமாகக் குறிப்பிட்டிருந்தார்கள். "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் அண்ணாவினுடைய மிக முக்கியமான கொள்கையாகிய மதுவிலக்குத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவோம்" என்ற ஒரு கருத்தைத் தெரிவித்துக்கொண்டிருந்தார்கள். இந்த உரையில் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும் என்ற ஒரு கருத்தைச் சொல்லவில்லை. அது அண்ணாவினுடைய மிக முக்கியமான கொள்கை. அண்ணா அவர்கள் 1967-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, மதுவிலக்கு அமுல்படுத்தப்பட வேண்டும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். எனவே அண்ணாவினுடைய அந்தக் கொள்கையை, மதுவிலக்குக் கொள்கையை நிறைவேற்றுவார்கள்

(முற்பகல் 11-10)

என்றுதான் இருந்தேன். ஆனால் என்ன காரணத்தாலோ அந்த அறிவிப்பு இந்த ஆளுநர் உரையிலே இடம் பெறவில்லை.

அடுத்து, இன்று முக்கியமான பிரச்சினையாகக் கருதப்படும் பிரச்சினை, நம்முடைய நாட்டுப் பிரச்சினை, உள்நாட்டுப் பிரச்சினை என்பதைவிட, ஸ்ரீலங்காவில் உள்ள தமிழின மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றிய பிரச்சினையாகும். அதைப்பற்றி நாமெல்லாம் பேசுகிறோம். அதைச் சொல்லும்போதுகூட, சில பேர்கள் வேறுபட்ட கொள்கை கொண்டிருந்தால், கேலி செய்வதும், கிண்டல் செய்வதுமான நிலைமைகள் இருக்கின்றன. ஒரு கட்சி தனக்கென்று ஒரு கொள்கை வைத்திருக்கும். ஒரு பிரச்சினையைப் பல கோணங்களில் விமர்சனம் செய்வதுண்டு. திராவிட முன்னேற்றக் கழகம் இனப் பிரச்சினை குறித்து ஒரு கொள்கை கொண்டிருக்கிறது. அந்தக் கொள்கை ஆளும் கட்சிக்கு உடன்பாடற்றதாக இருக்கலாம். அதற்காக உள்



நோக்கம் கற்பிப்பதும், அதைப்பற்றித் தவறாகப் பேசுவதும் பொருத்தமாக இராதென்று தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று எங்கள் கட்சியின் சார்பாக திரு. கணேசன் அவர்கள் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் ஒன்றைக் கேட்டார்கள். என்னதான் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்கள் என்று கேட்டார்கள். என்ன செய்ய வேண்டுமென்று சொல்லிப் பயனில்லை என்று நான் அறிவேன். இந்தப் பிரச்சினையில் பரிகாரம் காண மாநில அரசால் முடியாது என்று நான் கருதுகிறேன். இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் காணுகிற அதிகாரத்தை வைத்துள்ள அரசு மத்திய அரசு என்று சொன்னால், அது மிகையாகாது. தாங்கள் சொல்லுகிற அணுகுமுறை, ஆளுங் கட்சி சொல்கிற அணுகுமுறை ஆகியவை மூலம் அந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண வேண்டுமே தவிர, நமக்குள் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசி, வெளியில் இருக்கிறவர்கள் "இப்படித்தான் தமிழர்கள் பேசுவார்கள்" என்று பேசி, பிரச்சினையைத் திசை திருப்பும் நிலைமைதான் உருவாகியிருக்கிறதென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று பத்திரிகையிலே ஒரு செய்தியைப் படித்தேன். ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினைபற்றி நாடாளுமன்றத்தில் கிளப்பியிருக்கிறார்கள். அங்கே, எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. கோபால்சாமி அவர்கள் பேசும்போது, ஸ்ரீலங்காவில் வாழும் தமிழர்களை கோழிக் குஞ்சுகளைப்போல சாகடிக்கிறார்கள் என்று சொல்லும்போது, அங்கே ஒரு அமைச்சர் கேட்கிறார், "கோழிக் குஞ்சு சைவமா, அசைவமா" என்று. அந்த அளவுக்குத்தான் உணர்வுகள் மதிக்கப் படுகின்றன. இன்னொரு பிரச்சினை வந்தது. ஸ்ரீலங்கா செல்கிற ஒரு விமானம் திருவனந்தபுரத்தில் தடுத்து நிறுத்தப்பட்டது. பிறகு அந்த விமானம் செல்ல அனுமதித்துவிட்டார்கள். அதைப்பற்றிப் பிரச்சினை வந்தபோது கூடச் சொன்னார்கள், "வெடி மருந்து இருந்தது, ஆனால் அந்த வெடி மருந்திலே எழுதி வைக்கவில்லை" என்று. இதனால் நம்முடைய உணர்வுகளை மதிக்காத போக்கைப் பார்க்கிறோம். ஒருவேளை விளைவுகளை எண்ணிப் பார்க்காமல் சொல்லியிருக்கலாம். இன்றைக்கும் நம்புகிறேன், இப்படிப்பட்ட எண்ணங் களைக் கைவிட்டு, ஆட்சியாளர்கள் தக்க முறையில் நடவடிக்கை எடுப்பார்கள் என்று. துணைத் தலைவரவர்களே, நீங்கள் ஆசனத்தில் அமருவதற்குக் கொஞ்ச நேரத்திற்கு முன்னதாக, மாற்றுத் தலைவரிடம், செய்தித் தாளி லிருந்து ஒரு தகவலைப் படிக்க அனுமதி பெற்றிருக்கிறேன். அதை இப்போது படிக்கிறேன். ஸ்ரீலங்கா பிரச்சினையைத் தீர்க்க மத்திய அரசிடம்

கொள்கை இருக்கிறதா என்பதுபற்றி நான் சொன்னால் தவறு. இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது. அதை எழுதியவர் பெயரைப் பார்க்கும்போது, தமிழர் அல்ல என்று தெரிகிறது. அவர் சொல்கிறார்—

**"Indian Express"—Political Commentary—"Sphinx in South Block" by L. K. Dua:--**

"**What is happening in Sri Lanka poses another foreign policy** challenge for the country. We did not have policy of **Sri Lanka and so South Block was surprised when the island republic's ethnic crisis** burst in July 1983 and there **had been a** spill-over across the Palk Strait. The policy following since has failed to prevent Indo-Sri Lanka relations growing from had to worse. One wonders whether New Delhi has though of some new ideas on this and several other questions concerning foreigns relations."

*(முற்பகல் 11-15)*

**"The cheapest commodity in the world is the life of the Ceylon Tamil."**

இதுதான் இன்றைய நிலைமை. எனவே இந்தப் பிரச்சினைக்கு என்றைக்குத் தான் தீர்வு ஏற்படும் என்கிற நிலைமையை எண்ணிப் பார்க்கும்போது, மிகுந்த வேதனை தருவதாக இருக்கிறது. இன்றைக்கு உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களுக்குமே விலை ஏறியிருக்கின்றது. ஒரு பொருளைத் தவிர. அதுதான் ஸ்ரீலங்கா. தமிழர்களின் உயிருக்கான விலை. அங்குள்ள தமிழர்களின் உயிருக்கு என்ன நிலை என்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். துயரம் கலந்த இந்தப் பிரச்சினைக்கு விரைவில் பரிகாரம் காண வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, நிதிநிலை அறிக்கைபற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசால் நியமிக்கப்பட்ட நிதிக் குழுவினுடைய அறிவிப்பானது நமக்கு உரிய நிதியை அளிக்கும் விதத்தில் இல்லை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எட்டாவது பைனான்ஸ் கமிஷனைப் பொறுத்த வரையில், அதனுடைய அறிக்கை 30—4—1984 அன்று மத்திய அரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிறகு அது பாராளுமன்றத்தில் வைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த அறிக்கையை எப்போது முதல் அமுலுக்குக்



கொண்டு வருகிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். Implementation only for the years 1985-86 to 1988-89 1984 ஆம் ஆண்டு முதல் அமுலுக்குக் கொண்டுவர வேண்டிய அறிக்கையை, காலம் கடந்து அறிக்கை வந்ததாலோ அல்லது மத்திய அரசின் நடவடிக்கை காரணமாகவோ 1984-85-ல் இந்த நிதி நிலை அறிக்கையின் பரிந்துரைகளை நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். அதன் காரணமாக பல விளைவுகள் நமக்கு ஏற்பட்டிருக்கின்றன. இதுபற்றி அரசியல் சட்ட நிபுணர்கள் ஒன்று சொல்கிறார்கள். இந்த முடிவுகூட இந்திய அரசியல் சட்டத்தின் 270-வது பிரிவுப்படி தவறு என்று சொல்கிறார்கள். 'கான்ஸ்டிட்யூஷன் ஆஃப் இந்தியா' 270-வது பிரிவை மத்திய அரசு புறக்கணிக்கும்போது சுப்ரீம் கோர்ட்டுக்குக் கூட போகலாம் என்று அரசியல் சட்ட நிபுணர்கள் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட உரிமையை நமக்கு அரசியல் சட்டம் வழங்கியிருக்கிறது. அந்த உரிமை பறிக்கப்பட்டால், தேவைப்பட்டால் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போவதில் கூட தவறு இல்லை. இப்படிச் செய்வதன்மூலம் என்ன நிலைமை ஏற்படும் என்று சொன்னால், மத்திய அரசுக்கு 7,600 கோடி ரூபாய் சேவிங் ஏற்படுகிறது. மத்திய அரசு நிதி ஆணைக் குழுவின் சிபாரிசுகளை ஓர் ஆண்டு தாமதமாக அமுல்படுத்துவதன்மூலம் மத்திய அரசுக்கு 7,600 கோடி ரூபாய் மீதம் கிடைக்கிறது. மொத்தம் 38,000 கோடி ரூபாயில் மாநிலங்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்குக் கிடைக்க வேண்டிய உதவித் தொகையில் 7,600 கோடி ரூபாயை மாநிலங்கள் இழக்கின்ற நிலைமை இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், நாம் பெற வேண்டியது 2,840 கோடி ரூபாய். ஆனால் நிதி ஆணைக் குழுவினுடைய பாரபட்சமான அறிக்கையின் காரணமாக நாம் 2,400 கோடி ரூபாய் பெறக் கூடிய நிலை ஏற்பட்டு, நாம் 400 கோடி ரூபாய்க்கு மேல் இழக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. 'மயிலே, மயிலே, இறகு போடு' என்றால் போடாது. அதுபோல் மத்திய அரசை சாதாரணமாகக் கேட்காமல் வற்புறுத்திக் கேட்க வேண்டும். இப்போது அவர்களுக்கும் ஆளுங் கட்சிக்கும் இருக்கின்ற உறவின் காரணமாக கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய் மாநில அரசுக்கு இழப்பு ஏற்படுகின்ற நிலைமை மாற்றியமைக்க வேண்டும். அது மட்டுமல்ல, இன்னொன்றையும் இந்த ஆட்சியாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய தமிழக அரசில் நிதிச் செயலாளராக இருந்தவர், கல்லூரியில் படிக்கும்போதே பர்ஸ்ட் ரேங்க் எடுத்தவர், ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்தவர். அவருடைய பெயர் குகன் என்பது. அவர் நம்முடைய மாநில பொருளாதாரத்தைப்பற்றி ஒரு சிறிய புத்தகம் எழுதியிருக்கிறார்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1985 மார்ச் 16

(முற்பகல் 11-20)

அதிலே திரு. குகன் சொல்கிறார்.

the per capita State domestic product, the commonly used measure for aggregate growth has slipped 12.1 per cent below the All India average."

அகில இந்திய சராசரியைவிட, நம்முடைய மாநிலத்திலே பொருளாதார வளர்ச்சி குறைந்திருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்,

"...... and is only 53.4 per cent...... goods rate in industrial investment, power generation as well as in food grains production have also lagged behind all-India average."

இது நான் சொல்கிற கருத்தல்ல. பொருளாதார நிபுணர் என்று கருதப்படுகிற, இந்த மாநிலத்தின் நிதித் துறைச் செயலாளராகப் பணியாற்றியவரின் கருத்து. நிலைமை இப்படிப் பின்தங்கிப் போகிறது என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய நண்பர்கள் இந்த ஆளுநர் உரையில் உள்ள திட்டங்களைப் பாராட்டக் கூடாதா என்று சொன்னார்கள். நானும் பாராட்டலாம் என்றுதான் பார்த்தேன். ஆனால் அப்படிப் பாராட்டிச் சொல்ல முடியவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் சொன்னதைப்போல, தூய்மையும் திறமையும் வாய்ந்த அரசாங்கமாக இல்லை என்பதைத்தான் நானும் சொல்கிறேன். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள ரஷ்ய நாட்டு அதிபர்கூட, தூய்மையும், திறமையும் உள்ள அரசாங்கம் இருக்க வேண்டுமென்றுதான் சொல்கிறார். அதிலே ஒன்றும் வேறுபாடு இல்லை. ஆனால் நடைமுறையில் பார்த்தால்தான் வேதனையாக இருக்கிறது. உதாரணமாக தேர்தல் செலவுகளை எடுத்துக்கொண்டால், தேர்தல்கள் முடிந்ததும் தேர்தல் கமிஷனுக்கு நாம் சமர்ப்பிக்கும் செலவுக் கணக்கிலேயே விவகாரங்கள் ஆரம்பமாகிவிடுகின்றன. ஆகவே தூய்மை, திறமை என்று வெறும் வார்த்தைகளாகிப் போய்விடுகின்றன என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

தொழில் வளர்ச்சி ஏற்படாததற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். 1974 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம் உருவாக்கப்பட்டது. 11 ஆண்டுகள் காலமாகியும், எவ்வித முன்னேற்றமும் அங்கே ஏற்படவில்லை என்று புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. அங்கே ஏற்பட்ட ஒரே முன்னேற்றம் என்னவென்றால், இந்த 11 ஆண்டுகளில் 11 கலெக்டர்கள் மாற்றம் செய்யப்பட்டார்கள். இதுதான் முன்னேற்றம். வேறு தொழில் முன்னேற்றம் இடையாது



1985 மார்ச் 16] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கின்றது. அதிலே குறிப்பிட்டிருக்கிறது, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சிப்காட் நிறுவனத்தின் மூலம் இண்டஸ்டிரியல் காம்ப்ளெக்ஸ் அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் இந்த மாதம் 31 ஆம் தேதியோடு (31—3—1985) முடிவடைகிறது. இந்த ஐந்தாண்டுக் காலத்தில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று பார்த்தால், இண்டஸ்டிரியல் காம்ப்ளெக்ஸ் ஏற்படுத்துவதற்கு, நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக 921 ஏக்கர்கள் வேண்டுமென்று திட்டமிடப்பட்டது. ஆனால் 606 ஏக்கர் நிலம் தான் கையகப்படுத்தப்பட்டது. அதிலே இன்னொரு விஷயம், 606 ஏக்கரில் 37 ஏக்கர்தான் விண்ணப்பம் செய்தவர்களுக்கு அலாட்மெண்ட் செய்யப்பட்டிருக்கிறது. எட்டு நிறுவனங்களுக்கு அந்த நிலங்கள் 37 ஏக்கர் கொடுக்கப்பட்டுள்ளது. 13 பேர் விண்ணப்பித்திருக்கிறார்கள். அவர்களில் எட்டு பேருக்குத்தான் தரப்பட்டுள்ளது.

மேலும் அங்கே 10.6 கிலோ மீட்டர் சாலை போட வேண்டுமென்று திட்டமிடப்பட்டு, ரூ. 33.96 லட்ச ரூபாயில் எஸ்டிமேட் போடப்பட்டது. ஆனால் ஏழு கிலோ மீட்டர் சாலை மட்டும் போடப்பட்டுள்ளது.

அதேமாதிரி, ஓவர்ஹெட் டாங்க் ரூ. 10.76 லட்ச ரூபாய்க்குக் கட்ட திட்டமிடப்பட்டு, அதுவும் முடிவடையாமல் இருக்கிறது. அதேமாதிரி, மின்சார வேலைகளைப் பொறுத்தவரையில், ரூ. 37.43 லட்ச ரூபாயில் மின்சார உற்பத்திக்கு திட்டமிடப்பட்டு, வெறும் மூன்று லட்ச ரூபாய்க்குத்தான் அந்தத் திட்டமும் முடிந்திருக்கிறது. மூன்று லட்ச ரூபாய்க்கு வேலை முடிந்திருக்கிற

(முற்பகல் 11-25)

தென்று சொன்னால், அதிகம் 'கம்ப்ளீட்' ஆகவில்லை என்று ஆகிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலிருக்கிற காவேரி ஸ்பின்னிங் மில்ஸ், ஜாயிண்ட் செக்டாரில் உள்ள சதர்ன் ஹைட்ரோ ஆசிட் மில் மூடிக் கிடக்கிறது. கூட்டுறவு சர்க்கரை ஆலை வரும் என்று சொன்னார்கள். வரவில்லை. புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து இரு அமைச்சர்கள் வந்திருக்கிறார்கள். மொத்தத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள நிலைமையை அவர்களும் புரிந்து கொள்ள வேண்டும். இதையெல்லாம் ஏன் கவனிக்கவில்லை என்று தெரியவில்லை. புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்த நிலைமை என்று சொன்னால், மற்ற மாவட்டங்களிலும் எப்படி இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து, தூய்மையும் திறமையும் வாய்ந்த நிர்வாகம் அளிக்கப்படும் என்று சொன்னார்கள். தூய்மையும் திறமையும் வாய்ந்த அரசு என்று சொன்னால், அரசாங்கம் சட்டத்திற்குட்பட்டு அரசியல் சட்டம், மற்ற சட்டங்களுக்குட்பட்டு, நிர்வாகத்தை நடத்துவதுதான் ஒரு தூய்மையான, திறமையான அரசாங்கத்தின் அழகாகும். ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? பத்திரிகை நிருபர்கள் தாக்கப்படுகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டபோது, பத்திரிக்கை நிருபர்கள் ஓடஓட விரட்டப்பட்டு அடிக்கப்பட்டார்கள். அவர்களது பத்திரிக்கைச் சுதந்திரம் பறிக்கப்பட்டது. போலீஸ் அதிகாரிகளின் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட முறையில் யாரையும் குறை சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. பொதுவாக, போகிற போக்கைப் பார்த்தால், இன்றைக்குள்ள நிலைமையில் நாட்டுமக்களுடைய உரிமைகள்—மக்களின் அடிப்படை உரிமைகள்—பாதுகாக்கப்படுமா என்கிற அச்சம்தான் ஏற்படுகிறது. உதாரணமாக மதுரையில் சில மாதங்களுக்கு முன்னாலே ஒரு வழக்கறிஞர் திரு. அய்யாதுரை என்பவர் தாக்கப்பட்டார். பிறகு திருநெல்வேலியில் புகழ் பெற்ற கிரிமினல் வழக்கறிஞர் திரு. சையது அகமது என்பவர் தாக்கப்பட்டார். மூன்றாவது, திரு. நடராஜன் என்கிற வழக்கறிஞர் மணவாளக்குறிச்சியில் பட்டப்பகலிலே கைவிலங்கிடப்பட்டு நாயைவிட மிகவும் கேவலமாக அழைத்துச் செல்லப்பட்டார். வீட்டு நாயைக்கூட மரியாதையாக நடத்துகிறோம்; அடுத்து இப்போது சாத்தூரில் திரு. ஜெகதீஸ்வரன் என்கிற வழக்கறிஞர் போலீசாரால் கொடுமைப்படுத்தப்பட்டுள்ள நிலைமையைப் பார்க்கிறோம். பெண்கள் எல்லாம் தாக்கப்படுகிற நிலைமையை எல்லாம் பார்க்கிறோம். வழக்கறிஞர்கள், அவர்கள்மீது தொடுக்கப்பட்ட தாக்குதலுக்கெதிராக திரண்டெழுந்தார்கள். பிறகு திரு. ஜெகதீஸ்வரனைத் தாக்கிய போலீஸ் அதிகாரியை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள்.

இந்தப் போக்கு நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம்கூட எங்களுக்குத் தெரியாதென்று சொல்லலாம். அரசாங்கம் இதற்குப் பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். இனியும் இத்தகைய நிலைமை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

இன்றைக்கு பத்திரிகையில் வந்திருக்கிற ஒரு செய்தியை மாண்புமிகு துணைத் தலைவரின் அனுமதியோடு படிக்கின்றேன். "மை டியர் குட்டி சாத்தான்" என்றொரு படம் வெளியாகி வெகு நாட்களாக ஓடிக் கொண்டிருக்கிறது. நான் அந்த சினிமாவைப் பார்க்கவில்லை.



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை ஏன் பார்க்கவில்லை என்பதற்குக் காரணம் உண்டா? (சிரிப்பு)

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் சினிமாக்களுக்கே போவதில்லை. அந்தப் படத்திற்கு வரி விலக்கு கொடுத்தார்கள். கொடுத்ததற்கான காரணங்களுக்குள், உள்நோக்கத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை. ஆனால் கொடுத்ததை எந்த முகாந்திரமும் சொல்லாமல் ரத்து செய்துவிட்டார்கள். அப்படி ரத்து செய்தது செல்லாது என்று அந்தப் படத்தின் விநியோகஸ்தர் கோர்ட்டுக்குப் போனார். அதன்மேல் நீதிபதி அழகாகச் சொல்கிறார்.

"By an order of November, 23, 1984, the Government exempted the film, a dubbed Tamil version, from entertainment tax, the show tax and surcharge. By a letter, dated December 1, the Government decided to keep the exemption in obeyance. This decision was not given effect to and the letter of December 1 was cancelled within the next five days. After a month, the Government asked the Commissioner, Commercial Taxes, to give particulars of loss of revenue because of the exemption. On his request, the Government withdrew the exemption forth with by an other, dated February 8, 1985."

(முற்பகல் 11-30)

அது ஒரு விவகாரம்.

"It has no material based on which the Government decided to review the loss. Even assuming that the loss weighed with the Government, it was not clear why the exemption to another film was not withdrawn. The total loss is respect of the letter was Rs. 44.53 lakhs while for the film in question, it was the 39.38 lakhs. The exemption given to first film was for one year, whereas for the 3-D fim it was for six month"

அதனால் நீதிபதி அவர்கள் மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

"Justice K. Venkataswami said, the manner in which the exemption granted was kept in abeyance, how this order (held in abeyance) was cancelled, the concession was later allowed, then withdrawn "forthwith", it was altered to another date and other sequences. "The inescapable conclusion will be that the reason given (loss of revenue) is only ostensible, and the real reason is something the which is not visible to the naked eye."

இதைவிட ஒரு விமர்சனம் என்னால் செய்துவிட முடியாது. எனவே இதில் இருக்கிற குளறுபடிக்கு யார் பொறுப்பு என்று அறிய வேண்டாமா? ஒரு படத்திற்கு விதிவிலக்கு, இன்னொரு படத்திற்கு விதிவிலக்கு இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள வருத்தப்படுகிறேன். இப்படி குளறுபடியாக உத்திரவுகளைப் போட்டு ஒரு குழப்பமான நிலையைச் செய்ய வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்னொரு கருத்து, செக்ரட்டேரியட்டிலே ஏதாவது ஒரு பிரச்சினை என்று மனு கொடுத்தால், அந்த மனுவின்மீது சட்ட ரீதியாக, அவசரத்தோடு கேட்டால், அதற்கு உத்திரவு போடுவதில் ஆறு மாதங்களாகும், ஒரு வருஷமாகும் என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் 25 நிமிடங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சுவையாகப் பேசுவதால் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஒருவர் மது வியாபாரம் செய்வதற்கு லைசென்ஸுக்காக விண்ணப்பம் போட்டு 10 ஆயிரம் ரூபாய் டெபாசிட் செய்தார். அவருக்கு லைசென்ஸ் கிடைக்கவில்லை. அதைப்பற்றிக்கூட அவர் கவலைப்படவில்லை. அவர் என்ன கேட்கிறார் என்றால், லைசென்சு கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. நான் கொடுத்த பணத்தை ரிட்டர்ன் பண்ணுங்கள் என்று கேட்கிறார். செக்ரடேரியட்டில் விசாரித்தால், அந்தப் பெட்டிஷன் 'நாட் ரிசீவ்டு' என்கிறார்கள். மேலதிகாரி, கீழே இருப்பவர் அனுப்பவில்லை என்று சொல்கிறார், விசாரிக்கிறேன் என்கிறார். இப்படி அந்த மனுவைக் கொடுத்தாலும், போடுகிற உத்திரவுகளையாவது சீக்கிரமாகச் சொல்ல வேண்டும். அதைப் பெண்டிங்காக வைத்து ஆறு மாதம் கொலை பண்ண வேண்டாம். கட்சிக்காரன் அவனவன் எங்கெங்கேயோ கோர்ட்டுக்குப்





போகிறான். அது இருக்கட்டும். அப்படிக் காலம் கடத்துவது ஒரு மோசமான நிலைமை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய துணைத் தலைவர் சொன்னதுமாதிரி, இன்னும் நான் என்னுடைய பேச்சை விரிவுபடுத்திக் கொள்ள விரும்பவில்லை.

இன்றைய நிலையில் ஈழத் தமிழர் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை என்று சொல்லி, இரண்டு வார்த்தைகள் மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஈழத் துறவி என்று ஒரு கவிஞர் இருந்தார்; இறந்துபோனார். அவர் இருந்த காலத்தில் விடுதலைக் கவிதைகள் எழுதி இருந்தார். அதை ஞானசிகம் என்ற கவிஞர் சொல்கிறார். "இருள் விலக, ஒளி பரவ, என் தமிழர் கண் திறக்க, ஏற்றுக ஞான தீபமே" என்று. அந்தக் கவிஞர் சொல்கிறார். நானும் அந்தக் கருத்தைச் சொல்லி என்னுடைய உரையை நிறைவேற்றிக்கொண்டு விடை பெறுகிறேன்.'

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அடுத்து, திரு. மயில்சாமி. ஒரு குறிப்பு. தலைவர் அவர்கள் 10 நிமிடம் உறுப்பினர் அவர்கள் பேசலாம் என்று தெரிவித்ததை நான் உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-35)

**திரு. அ. மயில்சாமி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே. ஆளுநர் உரையின்மீது எனது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளி மாணவர்கள் தொடர்ந்து கல்வி கற்பதற்கும், மேலும் அவர்களை ஈர்க்கவும், மாணவர்களுக்கெல்லாம் இலவசச் சீருடையும் பாடப் புத்தகங்களும் வழங்கப்படும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்றுப் பாராட்டுகிறேன். என்றாலும், சீருடை தகுதியுள்ள மாணவர்களுக்கு மட்டும் வழங்கப்படும் என்று உரையிலே சொல்லப் பட்டிருக்கிறது. சீருடை வழங்கப்படுவதின் தத்துவமே மாணவர்கள் அனைவருக்கும்—அந்தப் பிஞ்சு உள்ளங்கள் அனைத்திலுமே—தங்களில் யாருக்கும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற எண்ணம் ஏற்படக்கூடாது, தங்களில் ஏழை பணக்காரர் என்ற உணர்வு ஏற்பட்டுவிடக் கூடாது, என்பது தான். எனவே தகுதியானவர்களுக்கு என்ற வார்த்தையை எடுத்துவிட்டு, பள்ளியில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் சீருடை வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. மயில்சாமி] [1985 மார்ச் 16

அடுத்து, ஆளுநர் உரையில் பள்ளிக் கட்டிடங்களைச் செப்பனிட தனியானதோர் நிதி நிறுவனம் அமைக்கப்படும் என்று சொல்லப் பட்டிருப்பதையும் நான் வரவேற்கிறேன். தமிழகத்தில் இன்றைக்கும் ஆயிரக் கணக்கான உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும், கட்டிடங்கள் எந்த நிலையில் இருக்கின்றன என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறைந்தபட்ச வசதிகள்கூட இல்லாத பள்ளிகள் இன்றைக்கு ஏராளமாக இருக்கின்றன. குடிநீர் வசதிகள் இல்லாத பள்ளிகள் ஆயிரக் கணக்கில் இருக்கின்றன. கழிப்பிட வசதிகள் இல்லாத பள்ளிகள்—அதிலும் குறிப்பாக மகளிர் பள்ளிகள் பெரும்பாலானவை இருக்கின்றன. அதைப்போலவே சுற்றுச் சுவர் இல்லாத பள்ளிகள் ஏராளமாக இருக்கின்றன. இதன் காரணமாகப் பொது சுகாதாரமே பாதிக்கப் படக்கூடிய நிலையில் பல பள்ளிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே அந்தச் சீர்கேடுகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, இத்தகைய குறைகளை யெல்லாம் போக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்றையதினம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் குடும்ப நல நிதி என்ற வகையில் ஏற்கெனவே ரூ. 10,000 வழங்கப்படும் என்றிருந்ததை மாற்றி இனி ரூ. 20,000 வழங்கப்படும் என்று சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன். அதைப்போலவே இடைக்கால நிவாரணமாக ரூ. 300-ம் ரூ. 200-ம் வழங்கப்பட்டதையும் வரவேற்று நன்றி கூறிக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் மற்றொன்றையும் நான் இங்கே குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன். அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களும், ஆசிரியரல்லாத பிற பள்ளி மற்றும் கல்லூரிப் பணியாளர்களுக்கும் அந்தக் குடும்ப நலத் திட்டம் பொருந்துகிற விதத்தில் அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடந்த காலங்களில் இடைக்கால நிவாரணம் தரப்பட்ட போதெல்லாம், அது அனைத்துப் பிரிவினருக்குமான நிவாரணமாக அளிக்கப் படவில்லை. அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நிவாரணம் என்று சொல்லப்பட்டாலும், அத்தகைய நிவாரணம் தனியார் பள்ளிகளிலும், கல்லூரி களிலும் மற்றும் நகரவை மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கு விரிவுபடுத்தப்படவில்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இந்த ரூ. 20,000 வழங்கும் திட்டத்திற்கான ஆணை பிறப்பிக்கும்போது,



1985 மார்ச் 16] [திரு. அ. மயில்சாமி]

அனைத்துப் பிரிவு அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களையும் அதிலும் குறிப்பாக தனியார் துறையிலும் நகராட்சிகளிலும் மாநகராட்சிகளிலும் பணியாற்றுவோரையும் உள்ளடக்கி ஆணை வெளியிடப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் ஆசிரியர் களுக்கு குடும்ப நல நிதியாக ரூ. 5,000 அளிக்கப்படும் என்று சொல்லப்பட்ட போது, நாங்கள் அதை வரவேற்றோம். ஆனால் எங்களோடு பணியாற்று கிறவர்கள், எங்களோடு சமமாக ஊதியம் பெறும் ஆசிரியர்கள் தனியார் பள்ளிகளில் பணிபுரிகிறவர்கள் பெற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி பலமுறை வற்புறுத்திச் சொல்லியிருந்தும், பலமுறை பல மாநாடுகள் நடத்திக் கேட்டுக்கொண்டும், இன்னும் நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர் களுக்கு அது கொடுக்கப்படாத நிலை இருந்து வருகிறது. இந்த நிலைமை விரைவில் மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எட்டாவது நிதிக் குழுவின் தலைவர் திரு. ஒய். பி. சவான் அவர்கள் இந்தியாவில் இருக்கிற 22 மாநிலங்களிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஆசிரியர்களின் ஊதியத்தை அலசி ஆராய்ந்து பார்த்த பிறகு, ஒரு அறிக்கை கொடுத்தார். அதில் ஒரு கருத்தையும் அவர் வெளியிட் டிருந்தார். அதாவது இன்றையதினம் தமிழகத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் தான் இந்தியாவிலேயே மிகக் குறைவான ஊதியம் பெறுகிறார்கள் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். "த தமிழ்நாடு ஸ்டாஃப் ஆர் தி லோயஸ்ட் பெய்டு" என்று அவரே குறிப்பிட்டிருக்கிறார். இந்தியாவிலேயே ஐந்து, அல்லது ஆறாவது இடத்தில் இருந்த தமிழக ஊழியர்கள் இன்றையதினம் கடைசி நிலையில் இருக்கிறார்கள் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் விரைவில் நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் வர இருக்கின்றன. அப்போது கடைசி நிலையில் இருக்கும் தமிழக ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களின் ஊதியத்தை அதிகரித்து அவர்கள் முன்பிருந்த நிலைக்கு உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பெரிய மாவட்டங்களையெல்லாம் இன்றையதினம் அரசு பிரித்திருப்பதைப் பார்க்கிறோம். நிர்வாகம் சரிவர நடைபெறவும் மக்களுக்கு நன்மைகள் முறையாகப் போய்ச் சேரவும் வேண்டும் என்ற அடிப்படையில் இவ்வாறு மாவட்டங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும் பெரிய

மாவட்டங்கள் சிறிய மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசும் மாநில அரசும்கூட தங்களின் அதிகாரங்களைப் பரவலாக்கிக் கொண்டு பங்கீடு செய்து கொள்ள வேண்டும் என்று கமிஷன்கூட போட்டிருக்கிறார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ தமிழகத்தில் உள்ள கல்வித் துறையைப் பொறுத்தவரையிலும், அதிகாரங்கள் பரவலாக்கப்படாமல் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இதன் காரணமாக ஆசிரியர்களுக்கு ஓடோடி வர வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே அதிகாரத்தை இனியாவது கல்வித் துறை பரவலாக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் ஏறக்குறைய 350-க்கும் மேற்பட்ட உதவிக் கல்வி அலுவலர்கள் விடுப்பு எடுக்க வேண்டுமென்றால்கூட, அது சென்னைக்கு வர வேண்டிய நிலைமை தற்போது இருக்கிறது. அதே

(முற்பகல் 11-40)

மாதிரி எழுத்தர்கூட ஒரு சிறு பிரச்சினை என்றாலுங்கூட, கன்னியாகுமரியில் பணியாற்றினாலும் சென்னைக்கு வர வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆசிரியர்களும், அலுவலர்களும் வீட்டுமனை வாங்க வேண்டும் என்றாலும்கூட, இங்கே சென்னைக்கு வந்துதான் அவர்கள் அனுமதி பெற்று வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த அதிகாரங்களைப் பரவலாக அந்தந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய அதிகாரிகளிடம் ஒப்படைத்தால், ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் பொருள் செலவும், கால விரையமும் நிச்சயமாக மிச்சப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான்காண்டுகளுக்கு முன்பு ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களையெல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கினார்கள். மிக்க நன்றி. அந்த ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டார்களேயொழிய, இன்னும் அந்தப் பள்ளிகள் அரசுப் பள்ளிகளாக ஆக்கப்படவில்லை. நான்கு ஆண்டுகள் ஆகியும் அரசு ஊழியர்களாக வந்தவர்களுக்கு நிர்வாகத்தில் விதிகள் வகுக்கப்படவில்லை. அப்படி ஒரு இலட்சம் ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னமும் எந்த விதியின்கீழ் நடத்தப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்படவில்லை. ஏனென்றால் அதற்கான விதிகள் வகுக்கப்படவில்லை. ஆகவே அதை விரைவிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையிலே ஒரு விசித்திரம். உதவிக் கல்வி அலுவலர் அலுவலகத்திலே பணியாற்றுகிற அலுவலர்கள் கல்வித் துறைக்குக் கட்டுப்பட்டவர்களாக இல்லை. மற்ற துறையிலிருந்து வந்தவர்கள் என்பதால்,



அவர்கள் கல்வித் துறையின் கட்டுப்பாட்டிற்குள் இல்லை. ஆகவே கல்வித் துறையின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கக்கூடியவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே பல்வேறு பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆளுநர் உரையிலே மருத்துவப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்படுவது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் உண்மையிலேயே அதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் கோவை நகரில் ஒரு அச்சம் இருக்கிறது. அதைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். கோவை மருத்துவக் கல்லூரியின் அங்கீகாரத்தை ரத்து செய்வார்களோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் அங்கே படிக்கின்ற மாணவர்கள் கோவை மருத்துவக் கல்லூரியை விட்டு வேறு ஒரு கல்லூரிக்கு மாறுதல் வாங்கிச் செல்ல முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அங்கேயுள்ள மாணவர்களின் அச்சத்தையும், பொதுமக்களின் அச்சத்தையும் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவ மனைகளைப் பொறுத்தவரையில், தனியார் மருத்துவமனைகளையும், கிராம மருத்துவமனைகளையும் எடுத்துக்கொண்டால், கிராமப் புறங்களில் இருக்கக் கூடிய மருத்துவமனைகள் எல்லாம் சுத்தமாக இல்லை, சுகாதாரமாக இல்லை. இதெல்லாம் தவிர மருந்துகளும் கிடையாது. இந்த நிலைமைகள் எல்லாம் தொடர்ந்து நீடிக்கின்றன. கிராமப்புறங்களிலே இருக்கக் கூடிய மருத்துவ மனைகளுக்குள்ளே சென்றால், துர்நாற்றம் வீசுகின்றது. தனியார் மருத்துவமனைகளில் அப்படிப்பட்ட நிலைமை நிச்சயமாக இல்லை. தனியார் மருத்துவமனைகள் நல்ல நிலைமையில் சுகாதாரத்தோடு இருக்கின்றன. தனியார் மருத்துவமனைகள் நல்ல நிலைமையோடும், அரசு மருத்துவமனைகள் தாழ்ந்தும் இருக்கின்ற நிலைமை உருவானால், அது ஆரோக்கியமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வசதி இல்லாத பாமர மக்கள் அரசு மருத்துவமனைகளுக்குத்தான் செல்லுகிறார்கள். அந்த அடிப்படையிலே அரசு மருத்துவமனைகள் நல்ல சுகாதாரத்தோடு, நல்ல வசதியோடு இருக்க என்னென்ன வழிவகைகள் உண்டோ அவற்றையெல்லாம் அரசு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராகவானந்தம் அவர்கள் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். 24 மாதங்கள் பணியாற்றினால், அவர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று சொன்னார்கள். அது வேறு யாருக்கும் கிடைக்காத சலுகை என்றும் சொன்னார்கள். உண்மையிலேயே அதை நான் பாராட்டு

கிறேன். அதே நேரத்தில் கல்வித் துறையிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் 24 மாதம் மட்டுமல்லாமல் ஐந்தாண்டுகள் பணியாற்றினாலும்கூட நிரந்தரம் ஆக்கப்படாமல் இருக்கிறார்கள். பத்தாண்டுகள் பணியாற்றினாலும் கல்வித் துறையில் நிரந்தரம் ஆக்கமாட்டார்கள். இதனால் ஐந்தாண்டு, பத்தாண்டு பணியாற்றி, இல்வாழ்க்கையை அமைத்துக் கொண்டு, குழந்தைகளோடு இருக்கின்ற ஆயிரக்கணக்கான ஆசிரியர்களின் எதிர்காலம் இருண்ட காலமாக ஆகிவிடும். இதற்குக் காரணம், அவர்கள் எல்லாம் தேர்வாணைக் குழுவிற்குச் சென்றதற்குப் பிறகுதான் நிரந்தரப்படுத்தப்படுவார்கள் என்ற நிலைதான். ஐந்தாண்டு, ஆறாண்டுக் காலம் பணியாற்றி தேர்வாணைக் குழுவிற்குச் சென்ற யாரும் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இப்படி தமிழகத்திலே கிட்டத்தட்ட 1,500 பட்டதாரி ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப் படாமல் இன்றைக்கோ, நாளைக்கோ விட்டுக்குச் செல்லக்கூடிய பரிதாப கரமான நிலைமை இருக்கிறது. பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாத்திரம் இந்த நிலைமை என்று சொல்லவில்லை. முதுநிலை ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் எல்லாம் அபபடி இருக்கிறார்கள். 10(எ)(1)-இன்படி நியமனம் என்பது கல்வித் துறையிலே நிரந்தரமாக இருக்கக் கூடிய நிலை. அண்மையிலே அரசு ஓர் ஆணையைப் பிறப்பித்தது. பன்னிரெண்டாயிரம் அரசு ஊழியர்களை நிரந்தரப்படுத்தினார்கள். நேற்று நியமிக்கப்பட்டிருந்தாலும்கூட நிரந்தரப் படுத்தலாம் என்ற அளவிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருணை உள்ளத்தால் பன்னிரெண்டாயிரம் அரசு ஊழியர்கள் நிரந்தரப்படுத்தப் பட்டார்கள். கல்வித் துறையிலே ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் விரைவாக முடித்துக்கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினைகளையெல்லாம் கல்வி மானியக் கொள்கைக் குறிப்பின்மீது பேசலாம். பொதுவான கருத்துக்களை இப்போது சொன்னால் நலமாக இருக்கும்.

(முற்பகல் 11-45)

**திரு. அ. மயில்சாமி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பிரச்சினையைச் சொல்வதற்கு ஏன் வருகிறேன் என்று சொன்னால், இந்த ஒரு பிரச்சினையைப் பற்றித்தான் நான் பேசவேண்டும் என்று நினைத்தேன். காரணம் இன்றைக்கு பல ஆசிரியர்கள் ஆணையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்கோ நாளைக்கோ வேலையை விட்டுச் செல்லக்கூடிய அளவுக்கு ஆணையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே இந்த மாமன்றத்திலே அதைப்பற்றிப்



பேசியாவது அதைத் தடுத்து நிறுத்த முடியும். என்ற அடிப்படையிலேதான் நான் சொல்லிக்கொள்கிறேன். வேறு எந்த அடிப்படையிலேயும் இல்லை. இன்றைக்குக்கூட கல்வி இயக்குநருடைய அலுவலகத்திற்கு முன்னர் முதுகலை ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். ஐந்து, ஆறு ஆண்டுக்காலம் பணியாற்றிவிட்டு அவர்கள் எந்த வேலைக்கும் செல்ல முடியாத அளவிற்குத் தள்ளப்பட்டு பரிதாபகரமான நிலைமையில் இருந்துகொண்டிருக்கின்றார்கள். ஆக அருள் கூர்ந்து நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்வது, கல்வித் துறையிலே இருக்கக்கூடிய ஆசிரியர்கள் தேர்வாணைக் குழுவிற்குச் செல்லாமல் கல்வித் துறையிலே உள்ள அதிகாரிகளே அவர்களை நியமிக்க முடியும் என்ற அளவிலே ஆணையைப் பிறப்பித்தால், இந்த 10(எ)(1) பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே மாதிரி 'அப்சார்ப்ஷன்' ஆசிரியர்கள், அதாவது ஈர்க்கப்பட்ட ஆசிரியர்கள்பற்றிச் சொல்லும்போது, பல பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டு, அந்தப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், 20, 25 ஆண்டுகள் பணியாற்றியும்கூட, 'அப்சார்ப்ஷன்' இல்லாத காரணத்தால், அவர்களுடைய ஊதிய உயர்வு நிர்ணயிக்கப்படாமல் அல்லது வேறு எந்தச் சலுகைகளும் இல்லாமல் இருக்கக்கூடிய நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த ஆசிரியர்கள் ஓய்வுகூட பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே அவர்களை உடனடியாக 'அப்சார்ப்ஷன்' செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கோவையிலே இன்றைக்கு பாரதியார் பல்கலைக் கழகம் நான்காவது ஆண்டாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகத்திலே தேர்வுகளை நடத்துவதற்காக பல போஸ்ட்டுகள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். தேர்வுகளை எல்லாம் நல்லமுறையிலே நடத்தி, நல்லபடியாக முடிவுகளைச் சொல்ல வேண்டும் என்ற நிலைமையிலே, அந்தப் பணியிடங்களை இன்னும் நிரப்பவில்லை. 'கண்ட்ரோலர் ஆஃப் எக்ஸாமினேஷன்ஸ்' என்ற பணியிடத்தில் நிரந்தரமாக யாரும் நியமிக்கப்படவில்லை. அதுமட்டும் இல்லை. அடுத்து உள்ள 'டெபுடி கண்ட்ரோலர் ஆஃப் எக்ஸாமினேஷன்ஸ்' என்ற பதவிக்கும் யாரையும் நியமிக்கவில்லை. அதுவும் கிடையாது. ஆக இரண்டு முக்கியமான பணியிடங்கள் கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுக்காலமாகக் காலியாக இருக்கின்றன. இன்னும் அங்கே யாரையும் நியமிக்கவில்லை. இதனால் தேர்வுகளில் வினாத்தாள்கள் தவறாகக் கொடுக்கப்படுகின்றன, முடிவுகள் வெளியிட ஆண்டுக்கணக்காக தாமதம் ஆகின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேமாதிரி என்னுடைய தொகுதியிலே, நீலகிரி மாவட்டத்திலே ஒரே ஒரு கல்வி மாவட்டம்தான் இருக்கிறது. அதை இரண்டு மாவட்டங்களாக ஆக்க வேண்டும். ஏற்கெனவே குன்னூர் மாவட்டம் இருக்கின்றது. இன்னொன்று நீலகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு வீட்டுவசதி வாரியம் அமைக்கப்பட இருக்கிறது என்று சென்ற ஆண்டே ஆளுநர் உரையிலே தரப்பட்டிருந்தது. ஆனால் இன்னும் ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி வாரியமே அமைக்கப்படவில்லை. அதை விரைவிலே அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறுவாணி குடிநீர் கோவை மாநகராட்சிக்கு வழங்கப்படவில்லை. அந்த சிறுவாணி நீர் நாங்கள் இருக்கக்கூடிய பகுதி வழியாகத்தான் வருகிறது. ஆனால் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் கொடுக்கப்பட்டுவிட்டது. இரண்டே இரண்டு பஞ்சாயத்துக்களுக்குத் தவிர மற்றவைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு பஞ்சாயத்துக்கள், ஒன்று தென்கரை, இன்னொன்று திருமல்லூர் பஞ்சாயத்து. அதற்காக மிகப் பெரிய போராட்டங்களை நடத்தியிருக்கின்றார்கள். பேருந்துகளை நிறுத்திப் போராட்டம் நடத்தியிருக்கின்றார்கள். ஆக நிச்சயமாக இந்த இரண்டு பஞ்சாயத்துக்களுக்கு சிறுவாணி தண்ணீர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். நான் இந்த மாமன்றத்திலே தென்கரைப் பிரச்சினைபற்றி ஒரு தீர்வு காண வேண்டும், அதற்கு மாண்புமிகு உறுப்பினர்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் என் உரையை முடித்துக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. வி. வி. வி. ஆனந்தம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின்மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெறும் விவாதத்தில் பங்குகொள்ளும் வாய்ப்பினை நல்கியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் உடல்நலம் பெற்று மீண்டும் இந்த மாநிலத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றமைக்கு நான் சார்ந்திருக்கும் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையில் கிராமப் புறங்களில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புத் திட்டம், முதியோர் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்றோருக்கு ஓய்வில்லம் அமைப்பது போன்ற பல நல்ல





திட்டங்களைக் கூறியிருக்கின்றார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் இம்மாதிரியான நல்ல திட்டங்கள் எல்லாம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள ஏழை எளியவர்களுக்குப் பூரணமாகப் பயன்படுத்தி, அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி பெற்று அவர்கள் வாழ்வு மலர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே எழவேண்டுமென்று சொன்னால், அதற்கு இன்றியமையாதது மதுவிலக்குத் திட்டம். அந்த மதுவிலக்குத் திட்டம்பற்றி இந்த ஆளுநர் அவர்கள் உரையிலே எதுவும் சொல்லப்படவில்லை. மதுவிலக்கைப்பற்றி, உறுப்பினர்களுக்குக் கொடுக்கப் பட்டுள்ள நாட்குறிப்பில் மதுவிலக்குபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மதுவிலக்குப்பற்றி எட்டு பத்திகள் சொல்லியிருக்கிறார்கள். மதுவிலக்குப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டால்தான் கிராமம் செழிக்கும் என்று அண்ணல் காந்தியடிகளும், பேரறிஞர் அண்ணா அவர்களும் சொன்ன வாசகங்களைச் சொல்லியிருக்கின்றார்கள். அதையும் எடுத்து நாட்குறிப்பில் தந்திருக் கின்றார்கள். மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனமில்லை என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு மணி நேரம் சர்வாதிகாரியாக என்னை நியமித்தால், கள்ளுக்கடைகளை மூடிவிடுவேன் என்று காந்தியடிகள் கூறியிருக்கிறார். இன்று நகர்ப்புறங்களில் நல்ல உத்தியோகம் பார்க்கும் தொழிலாளர்கள் 50 ரூபாய் தினம் சம்பாதித்தால்கூட, அதில் பெரும்பகுதியை கள்ளுக் கடைகளிலும், சாராயக் கடைகளிலும் செலவழிக்கிறார்கள். மற்றும் சினிமா பார்ப்பதிலும், லாட்டரிச் சீட்டுகள் வாங்குவதிலும் செலவழித்துவிட்டு, தங்களுடைய குடும்பங்களுக்குக் குறைந்த தொகையை அளிக்கிறார்கள். இந்த அவல நிலை நீங்க வேண்டுமென்றால், மதுவிலக்கைத் தீவிரமாக அமல் நடத்த வேண்டும்; லாட்டரிச் சீட்டை ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

மாவட்டங்களில் நிர்வாகம் திறமையாகச் செயல்பட வேண்டுமென்று பிரிக்கப்பட்டு, இப்போது பல நகரங்கள் மாவட்டத் தலைநகரங்களாக ஆக்கப் பட்டிருக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரம் மதுரையில் இருந்தது. இதனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிறவர்கள் ஒவ்வொரு காரியத்திற்கும் மதுரைக்குச் செல்ல வேண்டியிருந்தது. அந்த நிலைமை மாறி, அந்தந்த மாவட்டத்திலேயே தலைநகர் அமைந்திருப்பதால், நல்ல முறையில் காரியங்களைச் செய்ய வசதியாக இருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். இதுபோன்று, இந்த மாநிலத்தின் தலைநகர் திருச்செந்தூர் சாலையிலோ அல்லது திருச்சிப்புதுக்கோட்டை சாலையிலோ அமைக்கப்பட வேண்டுமென்று

மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்பு தெரிவித்த கருத்தை அமல் நடத்த வேண்டுமென்றும், அந்தத் திட்டத்திற்குச் செலவிடப்படும் தொகை பெரிய முதலீடாகும் என்ற கருத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தல்கள் எப்போது வரும் என்ற திட்டவட்டமான அறிவிப்பை எதிர்பார்த்தேன். ஆனால் பஞ்சாயத்து, நகராட்சித் தேர்தல்கள் இல்லாத சூழ்நிலையில், நகராட்சிகள் எல்லாம் நரகங்களாக இருக்கின்றன. யாரிடம் போய் குறைகளைச் சொல்வது என்று தெரியவில்லை. கமிஷனர்களிடம் போய்ச் சொன்னால், அவர்களிடமிருந்து சரியான பதில் வரவில்லை. மேலும் மதுரை போன்ற பெரிய கோவில் நகரங்களில் பல வெளி நாட்டுப் பயணிகள் சுற்றுலா நிமித்தம் வருகிறார்கள். கோவிலைச் சுற்றியுள்ள வீதிகளெல்லாம் கழிப்பறைகளாகக் காட்சி அளிக்கின்றன. கட்டணக் கழிப்பிடங்கள் ஏற்படுத்தியபின், மூத்திரப் பிறைகளுக்கு அதிகக் கட்டணம் வசூலிப்பதால், யாரும் அங்கே செல்லாமல், கோவிலைச் சுற்றியுள்ள வீதிகளையே கழிப்பிடமாக உபயோகிப்பதால், நகரம் கழிப்பிடமாகக் காட்சியளிக்கிறது. கிழ மாசி வீதியில் பெரிய குப்பை மேடே இருக்கிறது. குப்பைகளை அங்கே கொட்டி, மூன்று, நான்கு நாட்களுக்குப் பிறகு அந்த இடத்தைத் துப்புறவு செய்கிறார்கள். இரவு நேரங்களில் ஆங்காங்கே உள்ள குப்பைகளைத் துப்புறவு செய்தால், இந்த மாதிரி அவல நிலை இராது. இதன் காரணமாக வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகள் மதுரைக்கு வர அஞ்சுகிறார்கள். இதுமட்டுமல்ல, நகரங்களில் வழங்கப்படும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் உண்மையிலேயே பாதுகாக்கப்பட்டதாக இல்லை. எங்கள் விருது நகரில் அண்மையில் குடிநீர் குழாய்களில் தண்ணீர் அசுத்தமாக வருகிறது. அதனால் அங்கே மஞ்சள் காமாலை நோய் அதிகமாகப் பரவுகிறது. அங்கே தண்ணீர் இருக்கிறது. ஆனால் அந்தத் தண்ணீரை இறைக்க மின்சாரம் இல்லை. நகரச் சாலைகள்பற்றிக் கேட்க வேண்டியதில்லை. குண்டும், குழியுமாக நகராட்சி, பஞ்சாயத்துச் சாலைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்த வேண்டும். இந்தக் காரியங்கள் எல்லாம் நடைபெற விரைவாகத் தேர்தல்களை நடத்த வேண்டும். மேலும் அவற்றின் நிதி ஆதாரங்கள் நல்ல முறையில் இருக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரப் பற்றாக்குறை காரணமாக விவசாயமும், தொழில்களும் பாதிக்கப்படுகின்றன. அநேகமாக மின்சாரம் எப்போது வரும், எப்போது போகும் என்பது நிச்சயமற்ற நிலைமையாக இருக்கிறது. இதனால் பல ஆலைகளிலும், பல நிறுவனங்களிலும், சில வீடுகளிலும்கூட ஜெனரேட்டர்களை உபயோகப்படுத்துகிறார்கள். அதற்கு டீசல், மண்ணெண்ணெய்





கிடைப்பது பற்றாக்குறையாக இருக்கிறது. அது கிடைக்காத நிலைமை இருக்கிறது. மேலும் எரி பொருள் பற்றாக்குறை நமது நாட்டில் இருக்கிறது. விறகு விலை வெகுவாகக் கூடிவிட்டது. அதனால் சமூக நலக் காடுகள் அமைக்கும் திட்டத்தைப் பாராட்டுகிறேன். அதை மேலும் விரிவுபடுத்தி, எல்லா இடங்களிலும் சமூக நலக் காடுகளை வளர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-55)

எரிசக்தி பற்றாக்குறையை நீக்குவதற்கு புதிய முறைகளைக் கொண்டு வருவதை வரவேற்கிறேன். சிறிய வகையில் மின் உற்பத்தியை சூரிய ஒளி மூலம் தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யலாம் என்கிற வகையில் ஊக்கம் அளிப்பதை வரவேற்கிறேன். பெரிய ஆலைகளில் பாயிலர்களை சூடுபடுத்த சூரிய சக்தியைப் பயன்படுத்தலாம். அதுபோல் காற்றின் சக்தியை உபயோகப்படுத்தி தண்ணீர் இறைக்கலாம். கயத்தாறில் இம்மாதிரி காற்றின் சக்தியால் தண்ணீர் இறைக்கிறார்கள். அம்மாதிரி இயந்திரங்களைப் பயன்படுத்தி, மற்ற இடங்களிலும் தண்ணீர் இறைக்கலாம். தூரத்தில் உள்ள இடங்களுக்கு கம்பங்களின் மூலம் இப்போது மின்சாரம் கொண்டு போகப்படுகிறது. அதில் இழப்பு ஏற்படாமல் கவனம் செலுத்த வேண்டும். காற்றின் சக்தியால் மின் உற்பத்தி செய்யும் இயந்திரத்தைப் பொருத்த முன் வருபவர்களுக்கு அரசு உதவி செய்ய வேண்டும். அந்தவகையில் ஏழை எளிய விவசாயிகளுக்கு அரசு கடன் வழங்க வேண்டும்.

அடுத்து, கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், எல்.கே.ஜி. முதல் எம்.பி., பி.எஸ். வரை நல்ல கல்விச்சாலையில் சேர்ந்து படிக்க வேண்டும் என்றால், லஞ்சம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்படி நிலைமை இருந்தால், ஏழைஎளிய மக்கள் எப்படி நல்ல கல்வி பெற முடியும்? ஆங்கில போதனா முறை இன்றைக்கு பார்த்தீனியம் விஷச் செடி போல் பரவி விட்டது. ஆங்கிலப் பள்ளிகளில் தம் பிள்ளைகளைப் பெற்றோர்கள் சேர்க்க பெருவாரியாக முன்வர காரணம் ஒன்று சொல்லப்படுகிறது. அங்கு ஓர் ஆசிரியருக்கு 20 அல்லது 25 மாணவர்கள் என்கின்ற நிலைமை இருக்கிறது. அவர்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி கல்வி அறிவைப் புகுத்தி கல்வியை விருத்தியடையச் செய்கிறார்கள், ஆதலால் தான் அத்தகைய பள்ளிகளில் பெற்றோர்கள் தம் பிள்ளைகளைச் சேர்க்க விரும்புகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் நமது கிராமங்களில் இருக்கிற பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளைப் பார்த்தோமானால் 4 ஆம் வகுப்பில் படிக்கும் குழந்தையிடம் இரண்டாம் வாய்ப்பாட்டைக் கேட்டால் கூட, சொல்லத் தெரியவில்லை. ஆகவே கிராமங்களில் ஆனாலும் சரி, நகரங்களில் ஆனாலும் சரி, எந்தப் பள்ளிக்கூடங்களாக இருந்தாலும் சரி, ஓர் ஆசிரியருக்கு

20 அல்லது 25 மாணவர்கள் என்கிற விகிதாச்சாரத்தைக் கண்டிப்பாக அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி மாற்றியமைக்கும்போது, நிறைய பள்ளிக்கூடங்கள் தேவைப்படுமானால் காலை, மாலை என்கிற முறையில் இரண்டு ஷிப்டில் பள்ளிகளை நடத்தலாம். வேலை வாய்ப்பற்ற ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும், மாணவர்களின் கல்வித் தரமும் உயர வாய்ப்பிருக்கிறது.

அடுத்து, விவசாய விளைபொருள்களுக்கு போதிய விலை கிடைக்க ஆவன செய்ய வேண்டும். அப்போது தான் விவசாயிகளுக்கு விளை பொருள்களை உற்பத்தி செய்ய ஊக்கம் ஏற்படும். இப்போது இருக்கிற லெவி முறை விவசாயிகளுக்குப் பயன் தருகிறதா இல்லையா என்று தெரியவில்லை. காரணம் இந்த லெவி முறையின் காரணமாக ஊழல்தான் நடைபெறுகிறது. விவசாயிகளுக்குப் பலன் ஏற்படும் வகையில் ஊழலற்ற நிர்வாகம் அமையும் வகையில் நிர்வாகத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விற்பனை வரி முதன் முதலாக தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டபோது, இங்கு மதுவிலக்கு நடைமுறையில் இருந்தது. அதிலிருந்து வரக்கூடிய நஷ்டத்தை ஈடுகட்டத் தான் விற்பனை வரி வந்தது. ஆனால் இப்போது மதுவிலக்கு இங்கே இல்லை. இந்நிலையில் விற்பனை வரியையும் விதிப்பது நியாயம் இல்லை. இருந்தாலும் அரசின் பல்வேறு நலத் திட்டங்களுக்குப் பணம் தேவைப்படுவதால், அதற்கு விற்பனை வரி இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. ஆனால் மலரிலிருந்து எவ்வாறு வண்டு தேனை மலருக்கு சேதமில்லாமல் எடுக்கிறதோ அதுபோல் வியாபாரிகளுக்கு பாதிப்பு இல்லாமல் விற்பனை வரியை விதிக்க வேண்டும். மேலும் அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் வசூலிக்கின்ற நிலை இருக்கிறது. அதை அவசியம் நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையைப்பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பாரத நாட்டின் வட மேற்குப் பகுதியில் பாகிஸ்தான் இந்தியாவுடன் நட்புறவுடன் இல்லாமல் குரோத மனப்பான்மையோடு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், நாம் நட்பு நாடு என்று கருதிக் கொண்டிருந்த சீனா பாரதத்துடன் போர் தொடுத்து நம் நட்பை முறித்துக்கொண்டது. இந்நிலையில் இனியாவது நம்முடைய இராணுவத்தை மிகவும் பலம் வாய்ந்த ஒன்றாக மாற்றியமைக்க வேண்டியது அவசியமான ஒன்றாகி விட்டது. தென் கோடியில் எந்த நாடும் குரோதம் பாராட்டும் நிலை இல்லாமல் இருந்தது. இப்போது ஸ்ரீலங்காவிற்கும் இந்தியாவுக்கும் உள்ள நட்புறவை வேண்டுமென்றே குலைப்பதற்காக வல்லரசுகள் செய்கின்ற சூழ்ச்சியால் இப்படிப்பட்ட சம்பவங்களை உருவாக்கி வருகிறார்களோ என்று நான் கருதுகிறேன்



(நண்பகல் 12-00)

ஏனென்றால், ஒரு சிறிய தீவு ஸ்ரீலங்கா. அந்த நாடு இந்த மாபெரும் பாரதத்தை எதிர்க்கிறது. நமது பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி அவர்களுடன் பேசி சமாதான முறையில் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் பேச்சு வார்த்தை நடக்காமலிருக்க எத்தனையோ சூழ்நிலைகளை ஏற்படுத்திக்கொண்டு, தமிழ் மக்களை விரட்டுகிறார்கள், தமிழ் மீனவர்களைத் துரத்தியடிக்கிறார்கள். நமக்கு இதனால் தென்கிழக்குப் பாதையில் பாதுகாப்பற்ற நிலை ஏற்படுகிறது. ஆயுதங்களை விற்று வியாபாரம் செய்யும் வல்லரசுகள் ஸ்ரீலங்காவிற்கு அதிகமான ஆயுதங்களை விற்பனை செய்கிறார்கள். இதனால் நமக்கு பாதுகாப்பற்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு ஒரேவழி சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவதும், கிழக்குக் கடற்கரைச் சாலையை ஏற்படுத்துதலுமே ஆகும். அப்படி சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றினால், இப்போது ஸ்ரீலங்காவைச் சுற்றிச் செல்ல வேண்டிய கப்பல்கள், சேது சமுத்திரம் வழியாகச் செல்வதால், நமக்குப் பாதுகாப்பு ஏற்படுவதோடு, ஸ்ரீலங்காவிற்கும் வருமானம் குறைவதால், அவர்களுடைய அதிகார போதை குறையும் என்று சொல்லி, ஆளுநர் உரை மீதான விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

* திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீதான விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்காக எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டு என் பேச்சை தொடங்குகிறேன்.

ஆளுநர் உரையில் பலர் பல கருத்துக்களைச் சொன்னாலும், நான் சிறு வயது முதல் தொழில் செய்து, ஜீவித்து வந்த கைத்தறிபற்றி இதிலே சில திட்டத்தைச் சொல்லியிருப்பதால், நானும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, எனது நண்பரும், முன்னாள் அமைச்சருமான திரு. இராகவானந்தம் அவர்கள் தொழிலாளர்களுக்கு வீடுகட்டும் திட்டம் பற்றிப் பேசிய காரணத்தால், இன்றைக்கு இரண்டு நாட்களாக—நான் திருமணம் செய்து கொண்டு முதலிரவிலே ஆனந்தமாக எப்படி இருந்தேனோ—அதை மறைத்துச் சொல்லவில்லை (சிரிப்பு)—அதைவிட பேரானந்தமாக நேற்றையிலிருந்து இந்த அவையில் மகிழ்ச்சி பொங்க உலா வருகிறேன். காரணம் 1949-ம் ஆண்டிலேயிருந்து கைத்தறி நெசவாளர்களாகிய நாங்கள் பட்ட துன்பங்கள், துயரங்கள் அனைத்தும் மேலோங்க, 1950 லிருந்து நாங்கள்

தெருத் தெருவாகப் பிச்சையெடுத்து உண்டோம் என்று சொல்வதில் நாங்கள் சிறுமை கொள்ளவில்லை. ஏனென்றால் அந்தக் காலக்கட்டத்தில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1949 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார்கள். ஆரம்பித்த அந்தக் கழகம் சீரும் சிறப்பு மாக வளரும்போதுதான், கைத்தறி நெசவாளர்களாகிய நாங்கள் மிகுந்த துன்பத்தில் வளர்ந்து கொண்டிருந்தோம். துன்பத்திற்குக் காரணம், சுதந்திரத்திற்குப் பின்னால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுக் கொண்டிருந்த கைத்தறித் துணிகளுக்குத் தடை விதித்து, உள்நாட்டிலேயே சுதேசி துணிகளைப் பயன்படுத்த வேண்டுமென்று அன்றைய அரசு தீர்மானம் போட்டிருந்தது. அந்த அடிப்படையில்தான், என்னுடைய கணிப்புப்படி, 1952 ஆம் ஆண்டு 'இந்தச் சட்டமன்றத்தில் மற்றும் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் ராஜாஜி அவர்கள் காலத்தில், கைத்தறிக்கு சில இரகங்களை ஒதுக்க வேண்டுமென்று சட்டத்தைக் கொண்டுவந்து பல தலைவர்கள் அதிலே பேசினார்கள். குறிப்பாக, திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களும், திரு. கல்யாண சுந்தரம் அவர்களும், திரு. சீதாராமையா, திரு. வெங்கடசுப்பையா போன்ற வர்களும் பேசி, தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். ஏன் இதையெல்லாம் இப்போது சொல்கிறேன் என்றால், அந்தத் தீர்மானம் 1952 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் தேதி இந்தச் சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்டு, (திரு. சீதாராமையா அவர்களால் கொண்டு வரப்பட்டது என்று ஞாபகம்), 4 ஆம் தேதியே நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்ட தீர்மானம். அதற்கு முன்னதாக எங்கள் ஒப்புயர்வற்ற தலைவரும், எங்களால் இதய தெய்வம் என்று போற்றப் படுபவருமான பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னையில் திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டை அப்போதுதான் நடத்தினார்கள். அந்த மாநாட்டுக்கு முதல் நாள், கொள்கை வகிக்கிற அந்தக் குழு தீர்மா னங்கள் எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்று முடிவெடுக்கிற சூழ்நிலையில், நானும் அங்கே இருந்தேன்.

(பிற்பகல் 12-05)

அந்த மாநாடு சேலம் சித்தையன் என்கின்ற பெரியவருடைய தலைமையிலே நடந்தது. அதில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களுடைய சமுதாயத் திற்கு—தமிழகத்திலேயிருந்த ஐந்து இலட்சம் மக்களுக்கு—வாழ்வளிக்கும் ஒரேயொரு தீர்க்கதரிசனமான தீர்மானத்தைக் கொண்டு வந்தார். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், எங்களின் நன்றிக் கடனைத் தெரிவிப்பதற் காகவே, பேசுகிறேன். அந்தத் தீர்மானம்தான், திராவிட இயக்கத்தில் இருப்ப வர்கள் ஒவ்வொருவரும் அன்றிலிருந்து இன்றுவரை கைத்தறித் துணியையே கட்ட வேண்டும் என்கிற தீர்மானமாகும். மாலைக்குப் பதிலாக கைத்தறி ஆடைகளைத்தான் போட வேண்டும் என்ற அன்புக் கட்டளைத் தீர்மானம்



அது. அந்த மாநாடு 1951 நவம்பரில் நடந்தது. பிறகு ஜனவரி 4-ஆம் தேதி ஒரு தீர்மானம். தேங்கியுள்ள கைத்தறி நெசவுத் துணிகளை எல்லாம் திராவிட இயக்கத் தலைவர்கள் தோளிலே சுமந்து தெருத்தெருவாக விற்க வேண்டும் என்று சொன்னார்கள். அவ்வமயம் எனக்கு 30 வயதுகூட இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராகவானந்தம் இன்னும் இளைஞராக இருப்பார். கலைஞர் கருணாநிதி அவர்கள் . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் திரு. இராகவா னந்தத்தைவிட தாங்கள் முதியவரா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

திரு. சி. இராமலிங்கம் : அவரை விட இளையவன் தான். நாங்கள் எல்லாம் தோளிலே துணியைத் தூக்கி தெருத் தெருவாக விற்றோம். அதன் பலன் என்ன தெரியுமா?

அப்போது இந்தியப் பேரரசு, இங்கே ஆட்சி செய்த இராஜாஜி அவர்கள் தலைமையில் இருந்த காங்கிரஸ் அரசிடம், கைத்தறி நெசவாளர்களுக்கு ஏதாவது நல்லது செய்ய வேண்டும் என்று கூறியது. அப்போது கைத்தறி நெசவுக்கும், மில் துணிக்கும் போட்டாபோட்டி இருந்தது. (இப்போது விசைத் தறி போட்டி இருக்கிறது). அந்தப் போட்டியிலிருந்து எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று, கரை போட்ட வேட்டி, சேலைகளை கைத்தறி நெசவாளர் களுக்கு ஒதுக்க வேண்டுமென்று தி.மு.க. மாநாட்டிலே தீர்மானம் போட்டார் கள். திராவிட இயக்கம் வளர்வதற்கு மாபெரும் பிரச்சாரமாக அண்ணா அவர்கள் கைத்தறித் துணிகளை தலையிலே சுமந்து தெருத்தெருவாக ஊர் ஊராக விற்றார்கள். அன்றைக்கு வந்த சினிமாக்களை எல்லாம் பார்த்தால், கைத்தறித் துணிகளைப்பற்றி இருக்கும். கவிஞர்கள் பாடல்கள் எழுதி யிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பத்து நிமிடம் அவகாசம் கொடுத்திருக்கிறார்கள். போகிற போக்கைப் பார்த்தால், ரொம்ப தாமதமாகும்போல் தெரிகிறது.

திரு. சி. இராமலிங்கம் : அன்றைக்கிருந்த கவிஞர்கள் உடுமலை நாராயண கவி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய பாடல்கள், கண்ணதாசன் எழுதிய பாட்டு, கலைஞர் அவர்கள்கூட பராசக்தி படத்திலே வசனம் எழுதியுள்ளார். தெரு ஓரத்திலே நெசவாளர்கள் பிள்ளைகளை விற் கிறார்கள் தாங்க முடியாத வறுமையால் என்று எழுதினார்கள். கைத்தறித் துணி விற்பனை இயக்கம் கழகத்திற்கு வளர்ச்சியாக இருந்தது. தந்தை

பெரியார் அவர்களை விட்டு வந்த நாங்கள், நெசவாளர்கள் பெரும்பாலும் திராவிட இயக்கத்தில் இருப்பதற்கு அது ஒரு காரணம்.

அதைப்போல் கம்யூனிஸ்ட் நண்பர்கள் நாங்கள் செய்த காரியத்திற்குத் துணை செய்வதுபோல, ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து பட்டினிப் பட்டாளத்தை அழைத்துக்கொண்டு சென்னையை நோக்கி வந்தார்கள். அவ்வமயம் சென்னையிலே அப்போதைய சென்னை ராஜதானியின் பிரதமராக இராஜாஜி அவர்கள் இருந்தார்கள். அவரை அப்போது பிரதமர் என்றுதான் சொல்வது. தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரா, மலையாளம் ஆகிய நான்கு பகுதிகளையும் உட்கொண்டதாக சென்னை ராஜதானி இருந்ததால், அவரை பிரதமர் என்றுதான் சொல்வது. பட்டினிப் பட்டாளத்தை அழைத்து வந்து மனுவை அவரிடம் கொடுத்தோம். அண்ணா அவர்களையும் அழைத்து, ஜீவா அவர்களையும் அழைத்து, இரண்டு பேரையும் கலந்து பேசி, இராஜாஜி அவர்கள், கரை போட்ட வேட்டி, சேலையை கைத்தறி நெசவாளர்களுக்கு ஒதுக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். இவ்வாறு எங்கள் சமுதாயம் வளர்வதற்கு அண்ணா அவர்களின் மாபெரும் தொண்டினை மறக்க முடியாது.

அடுத்து, அண்ணா அவர்கள் 1967-ல் தமிழகத்தின் முதலமைச்சராக வந்தார்கள். அப்போதும் எங்களுக்கு மாபெரும் உதவியைச் செய்தார். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மூலமாக ஒரு தனி நபர் தீர்மானம் சட்ட மன்றத்திலே கொண்டுவந்து, நிறைவேற்றி திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை டில்லிக்கு அனுப்பி வைத்தது.

(பிற்பகல் 12-10)

அதனை அனுப்பிய பிறகு நான் அந்தப் புத்தகத்திலே படிக்கிறபோது அன்றைக்கு மத்திய அரசிலே யார் யார் கைத்தறிக்கு இடைஞ்சலாக இருந்தார்கள் என்ற பெயர்கள் எல்லாம் இருக்கிறது. நான் அதை இங்கே சொல்லத் தயாராக இல்லை. ஆனால் மத்தியிலே இருந்த ஆட்சியாளர்கள் என்ன காரணத்தினாலோ நிறைவேற்றவில்லை. இதற்கு முன்னாலும் பேசியிருக்கிறேன். திராவிட இயக்க வரலாற்றுக்கு அச்சாணி போல இருந்தது கைத்தறி நெசவாளர்களுடைய கரை போட்ட வேஷ்டி சேலை. அவர்களுக்காகச் செய்த அந்த மாபெரும் போராட்டத்தில்தான் நாங்கள் எவ்வளவு பேர் சிறைக்குச் சென்றிருப்போம். அதுபோல 1952-லே போராட்டம். இதிலே நாங்கள் பட்ட இன்னல்கள் எவ்வளவு என்று சொல்ல முடியாது. அந்த இன்னல்



களுக்கெல்லாம் பரிகாரமாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, 1977-லே அவர்கள் திரு. மொரார்ஜி தேசாயை—(மத்திய அரசின் பிரதமர்) சந்தித்து எங்களுடைய கைத்தறிக்கு நீங்கள்தான் உதவ வேண்டும் என்று கூறினார். அன்றைக்கு கன்னிப் பேச்சிலே—இங்கே நமது மாண்புமிகு திரு. இராகவானந்தம் அவர்கள் சொன்னதுபோல—முதன் முதலாக முதலமைச்சராகச் சென்றவர்கள் இந்த நாட்டினுடைய விவசாயத்தைப்பற்றிப் பேசவில்லை, இந்த நாட்டிலுள்ள தொழில் வளத்தைப்பற்றிப் பேசவில்லை. வாடி வதங்குகின்ற எங்களுடைய நெசவாளர்களைப் பற்றித்தான் அன்றைக்கு திரு. மொரார்ஜி தேசாய் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். அதன் பிறகு திருமதி இந்திரா காந்தி அவர்கள் வந்தார்கள். அவர்களிடத்திலேயும் எடுத்துச் சொல்லி வந்தார்கள். எனக்கு ஒரு வாய்ப்பாக இந்த கோ-ஆப்டெக்ஸ் சேர்மன் பதவி கொடுத்தார்கள். அது ஒரு அட்வைசரி போர்டுதான். இது அதிகாரபூர்வமானது அல்ல. நான் சொல்கின்ற ஆலோசனையை அந்த நிறுவனம், அந்த எம்.டி. ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக் கொள்ளலாம்; தள்ளிவிட்டாலும் தள்ளிவிடலாம். ஆனால் அதையே ஒரு கருவியாக வைத்துக்கொண்டு பலமுறை—கிட்டத்தட்ட 9 முறைகள்— திருமதி இந்திரா அம்மையார் அவர்களைச் சந்தித்து மனுக்களைக் கொடுத்தேன். அன்றைக்கு ராஜாஜி அவர்கள் செய்த தீர்மானங்களைச் சொன்னேன். அப்படி சொல்லியும் அவர்கள் அதற்கு மசியவில்லை. ஆனால் அவர்கள் சொன்னது எல்லாம் "பவர் ஹாம் லாபி, படா லாபி ஹை, ஹம் கியா கரேம்" என்றுதான் சொன்னார்கள். ஆனால் நான் அந்த அம்மையாரை விட்டதாக இல்லை. அதே அம்மையாரை 1983-ல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மோகனரங்கம் அவர்களை வைத்துப் பார்த்தபோது, நான் கேட்டேன் "ஹம்கோ பூக் லக்தா ஹை, ஹம் கோ காம்தேமாங்", "தாயே பசிக்கிறது, வேலை கொடு" என்று நான் கேட்டேன். உடனே அவர்கள் மனம் இறங்கி என்ன என்று விசாரிக்கச் சொன்னார்கள். அங்கே திரு. பிரணாப் முகர்ஜி இருந்தார். அவர்கள் மூலமாக விசாரித்தார்கள். நான் கொடுத்த மனுவை வாங்கிக் கொண்டார்கள். கடந்த 1984 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 ஆம் தேதி ராஜ்ய சபையிலே கைத்தறிக்குச் சிலரகத் துணிகளை ஒதுக்கி ஏதாவது செய்ய வேண்டும் என்று சட்டத்தை வைத்தார்கள். வைத்த பிறகு அந்த அம்மையார் இல்லை. இன்னொரு விசேஷம் என்னவென்றால் அந்த அம்மையார் கடைசியாகப் போட்ட பைல்—நான் இதற்கு முன்னாலே கூட சொல்லியிருக்கிறேன்—இந்துப் பத்திரிகையிலே வந்தது. ஜனதா கைத்தறித் துணிகளுக்கு 1½ ரூபாய் சப்சிடி கொடுக்கிறார்கள். அதை இரண்டு ரூபாயாக ஆக்க வேண்டுமென்று இன்றைய துணை ஜனாதிபதியாக இருக்கக்கூடிய திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்ட அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொள்கிற வாய்ப்பு இருந்தபோது, அந்த

அம்மையாரிடத்திலே மனுவைக் கொடுத்தேன். அந்த அம்மையார் அதை ஏற்றுக்கொண்டு அவர்கள் இரண்டு ரூபாய் கொடுப்பது என்று கையெழுத்துப் போட்டார்கள். அடுத்த நாள்தான் அந்தக் கொடியவனால், துன்மார்க்கனால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் அந்த அம்மையார். அவர்கள் இருக்கிறபோதே இந்தச் சட்டத்தை ராஜ்ய சபையிலே வைத்தார்கள். ஆனால் இது நிறைவேறுமா, நிறைவேறாதா என்று அங்கேயுள்ளவர்களைக் கேட்ட நேரத்திலே அடுத்து வரக்கூடிய ஆட்சி, அந்த எம்.பி.-க்கள், அந்தப் பிரதமர் ஒத்துக்கொண்டால்தான், இதை நிறைவேற்றுவார்கள் என்று சொன்னார்கள். நான் இரவும் பகலும் கண்விழித்துக் கொண்டு எங்கே வராமல் போய்விடுமோ, எங்களுடைய நெசவாளர்களுடைய இன்னல்களைத் தீர்ப்பதற்கு யாரும் இல்லை என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அந்த நேரத்திலேதான் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய உற்சாகத்தாலும், ஊக்கத்தாலும், நிதி அமைச்சராக உள்ள திரு. விஸ்வநாத் பிரதாப் சிங்—அவர்கள் கடந்த காலத்திலே காமர்ஸ் மினிஸ்டராக இருந்தபோது அக்கறையோடு துணை அமைச்சர் சர்மா அவர்களுடன் கலந்து பேசி, துணை ஜனாதிபதியாக இருக்கக்கூடிய திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இதற்காக பெரு முயற்சி எடுத்துக்கொண்டு, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மூலமாக கேபினெட்டிலே அந்தத் தீர்மானத்தை வைத்து—அதன்பிறகு, ராஜ்ய சபாவுக்கு வந்து, முந்தாநாள் மார்ச் 14 ஆம் தேதி ராஜ்ய சபாவிலே கைத்தறி நெசவாளர்களுக்கு சில ரகங்களை ஒதுக்குவது என்ற சட்டத்தை நிறைவேற்றி விட்டார்கள். நான் சொன்னேன், அதற்காக நாங்கள் பட்ட இன்னல்கள், என்னுடைய சமுதாயம் படுகின்ற துன்பங்கள், போய், நான் திருமணத்திலே அனுபவித்த அந்த இன்பத்தைவிட, நான் நேற்றிலே இருந்து அதிக இன்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறேன். இந்தச் செய்தியை 'தினமணி' பத்திரிகையைத் தவிர மற்றப் பத்திரிகைகள் போடவில்லை. என்ன காரணமோ தெரியவில்லை. 'தினமணி' பத்திரிகையைப் பார்த்துத் தான் இது எனக்குத் தெரியும். அதன்பிறகு ரேடியோவிலே கேட்டேன். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய ஐந்து லட்சம் மக்களுக்கு ஒரு கோவாப்டெக்ஸ் இருக்கிறது. விளம்பரத்திற்கு மட்டும் பத்திரிகைகள் வருகின்றன. இங்கே "உங்களுடைய விளம்பரங்களைக் கொடுங்கள்" என்று கேட்கிறார்கள். நாங்கள் அவதிப்பட்டு அவதிப்பட்டு, 32 ஆண்டுகளுக்குப் பிறகு இதோ ஒரு பிள்ளையைப் பெற்றிருக்கிறோம். பல கட்சித் தலைவர்களின் தூண்டுகோல்



(பிற்பகல் 12-15)

காரணமாகவும் முற்போக்கு எண்ணம் காரணமாகவும் இத்தகைய சட்டம் அங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. அமரர் இராஜாஜி மற்றும் அறிஞர் அண்ணா அவர்களின் இலட்சியமெல்லாம் இன்றையதினம் இதன் மூலமாக நிறைவேறி இருக்கிறது. அதிலும் சிறப்பாக புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் என்னுடைய சகாப்தத்தில்—அதிலும் குறிப்பாக என்னைப் போன்ற ஒரு நெசவாளி இங்கே இடம் பெற்றிருக்கும்போது—அந்தத் தீர்மானம் நிறைவேறி இருக்கிறது என்றால், இதைவிட நான் பிறந்த பயனை அடைய முடியாது. நான் பிறந்த பயனாக என்னுடைய சமுதாயத்திற்காக நான் தொண்டர் ஆகிவிட்டேன் என்று மிகவும் மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற நடவடிக்கைகளைப் பார்த்தால் தெரியும். 1952 ஆம் ஆண்டில் இதுகுறித்து யார் யாரோ பேசினார்கள். பெரிய வல்லுநர்கள் பெரிய அரசியல் வாதிகள் எல்லாம் அப்போது பேசினார்கள். ஆனாலும் அந்தச் சட்டம் அப்போது நிறைவேற்றப்படவில்லை. மீண்டும் 1968 ஆம் ஆண்டு பேசினார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி போன்றவர்கள் எல்லாம் அப்போது பேசினார்கள். ஆனால் அப்போதும் அத்தகைய சட்டம் நிறைவேற்றப்படவில்லை. ஆனால் சாதாரணமாக இப்போது அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்று சொல்லுவார்கள். அதைப்போல் எங்கள் இயக்கத்தில் இருந்த கலைஞர் கருணாநிதி அவர்கள் இதைச் செய்ய இந்தக் கடமையைச் செய்திருக்கிறார்கள். கலைஞர் கருணாநிதி அவர்கள் இந்தக் கடமையைச் செய்திருக்கிறார்கள். கலைஞர் கருணாநிதி அவர்கள் திராவிட பாரம்பர்யத்தைப்பற்றி திருமண நிகழ்ச்சி ஒன்றில் பேசியிருக்கிறார்கள். அதைப்பற்றி நான் இங்கே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் 20 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. இன்னும் எவ்வளவு நேரம் பேசுவதாக உத்தேசம்?

**திரு. சி. இராமலிங்கம் :** விரைவில் முடித்துக்கொள்கிறேன். பெரியாருடைய வாரிசுகள், அண்ணாவின் தம்பிகள் சங்கராச்சாரியாரைப்போய்ப் பார்க்கலாமா என்பது அவருடைய கேள்வி. நான் அவரைப் பணிவோடு ஒன்று கேட்க விரும்புகிறேன். நான் போனேனா தெரியுமா? போனேன். அண்ணாவின் வீட்டுக்குத்தான் போனேன். இது ஒரு மனிதாபிமானமுள்ள பேச்சல்ல.

இப்போது அண்ணாவின் வீட்டில் யார் இருக்கிறார்கள்? அது அண்ணாவின் நினைவாலயமாக மாற்றப்பட்டு அங்கே ஒரு நூல் நிலையம் வைக்கப் பட்டிருக்கிறது. அவ்வளவுதான். புரட்சித் தலைவர் அவர்கள் எதற்காகக் காஞ்சிபுரம் சென்று சங்கராச்சாரியார் அவர்களைச் சந்தித்தார்? நான் கேட்கிறேன்: "நீங்களெல்லாம் பகுத்தறிவாளர்கள்தானா?" என்னைவிட திராவிட முன்னேற்றக் கழகத்தில் பகுத்தறிவாளர் யாரும் இல்லை என்று என்னாலே உறுதியாகச் சொல்ல முடியும். திராவிட முன்னேற்றக் கழகம் வளர்வதற்காக நான் என்னுடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்தவன். உயிரைத் தவிர மற்றவற்றையெல்லாம் நான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகக் கொடுத்திருக்கிறேன். தென்னாற்காடு மாவட்ட நிதி கொடுத்தவன் நான். பெரியாருக்காக பல மாநாடுகளை நடத்தியவன் நான். நான் பிறந்த புதுப்பேட்டையில் திராவிட மாணவர் மாநாடு என்றும், கடலூரில் திராவிடப் பிரிவினை மாநாடு என்றும், குறிஞ்சிப்பாடியில் கருப்புச் சட்டை மாநாடு என்றும் பல்வேறு மாநாடுகளை நடத்தியவன் நான். என்னுடைய ஆர்வத்தைப் பெரியார் அவர்களே பார்த்துப் பாராட்டி மாவட்டப் பொறுப்பை எனக்கு அளித்தார்கள். என்னைவிட நீங்கள் சுயமரியாதைக் காரர்களா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு நான்கூட சந்தனப் பொட்டிட்டிருக்கிறேன். ஏன் தெரியுமா? சிந்தித்துப் பாருங்கள். இந்த நாட்டில் எத்தனையோ மதங்கள். எல்லோரும் தங்கள் தங்கள் மதத்தின் சின்னத்தை அணியும்போது, நான் மட்டும் அணிவதிலே என்ன தவறு என்பது தான் என்னுடைய கேள்வி. சங்கராச்சாரியாரைப்போய்ப் புரட்சித் தலைவர் எதற்காகச் சந்தித்தார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? பகுத்தறிவில்லையா உங்களுக்கு? 95 வயதான சங்கராச்சாரியார் புரட்சித் தலைவர் அவர்கள் உடல் நோய்வாய்ப்பட்டபோது நாட்டு மக்களுக்கு அவரது உடல் நலம் குறித்து பிரார்த்தனை செய்ய வேண்டுகோள் விடுத்தார். அதுமட்டுமில்லை. மீண்டும் அவர் நல்ல உடல்நிலையோடு திரும்பிவருவார் என்று சொன்னார். அப்படிப்பட்டவர் இன்றையதினம் உடல் நலம் குன்றி யிருக்கிறார் என்று கேள்விப்பட்ட உடனே புரட்சித் தலைவர் அவரைப் போய்ப் பார்த்து வர அங்கே சென்றார். 95 வயது பெரியவர் அவர். எனவே 65 வயதான புரட்சித் தலைவர் அவர்கள் அவரைப் பார்க்கச் சென்றதில் தவறு ஏதுமில்லை. உடனே பாரத்தாயா, தம்பி, இவர்களெல்லாம் அண்ணாவின் வழியில் வந்தவர்களா என்று பத்திரிகையில் எழுதினால் என்ன அர்த்தம்? பகுத்தறிவு வாதம் பேசிக்கொண்டு பத்திரிகைகளிலே போட்டோவை மாற்றி மாற்றிப் போடுகிறீர்களே, இதுதான் தமிழ்ப் பண்பா? இதை எனக்குக் கேட்கத் தெரியாதா? தேர்தல் நேரத்தில் எதையும் பேசுவது என்றால் எங்களுக்குப் பேசத் தெரியாதா?



என்னைவிட திராவிட இயக்கத்திற்காக உழைத்தவன் யார்? திரு. கருணாநிதியின் வரலாறு என்ன? திரு. அன்பழகனின் வரலாறு என்ன? என்னைவிட இவர்கள் கட்சிக்கு என்ன செய்து விட்டார்கள்? என்னுடைய புரட்சித் தலைவர் தான் சம்பாதித்த பொருளையெல்லாம் வாரி வழங்கினார். இன்றைக்குக் கொடுக்கிறார். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து எதற்காக வெளியேறினார்? யாரால் அவர் வெளியே வந்தார்? நினைத்துப் பார்க்க வேண்டாமா? மனச்சாட்சி இல்லையா உங்களுக்கெல்லாம்? நீங்களா திராவிடப் பாரம்பரியத்தைப் பற்றிப் பேசுவது?

அடுத்து, உணவு நிலைமைபற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் இன்றையதினம் ஆட்டுக்கறி கிலோ ரூ. 30 அல்லது ரூ. 32 என்று விற்கப்படுகிறது. கேட்டால் துபாய்க்கு ஆடுகளை உயிரோடு அனுப்பி விடுகிறார்கள் என்கிறார்கள்.

(பிற்பகல் 12-20)

உயிரோடு ஏற்றுமதி செய்வதை நிறுத்த வேண்டும் என்று பணிவோடு இந்த அரசை ஆர். எம். வீ. அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். கூறு போட்டு அனுப்பலாம். உயிரோடு அனுப்பினால் தோல்கூட கிடைப்பது கஷ்டமாகிவிடும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** துணைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

**திரு. சி. இராமலிங்கம்:** துணைத் தலைவர் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். மன்னிக்க வேண்டும். உயிரோடு அனுப்புவதால் தோலும் அங்கே போகிறது, ரோமமும் அங்கே போகிறது. அந்த ரோமம் இருந்தால் இங்கே பிரஷ் செய்வார்கள். தோல் இருந்தால் செருப்பு மற்ற பொருள்கள் செய் வார்கள். ஆடுகளை உயிரோடு அனுப்புவதால்தான் இன்றைக்கு ஆட்டுக்கறி கிலோ 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஏழைகள் இந்த விலைவாசி ஏற்றத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இப்படி பல பொருள்களின் விலை கள்ளக் கடத்தல்காரர்கள், பதுக்கல்காரர்கள், கலப்படக்காரர்கள் ஆகியவர் களால்தான் ஏறுகின்றது. பேரீச்சம் பழம் கிலோ 30 ரூபாய்க்கு விற்கிறது. திராட்சை 80 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதையெல்லாம் இந்த அரசு கண்டுபிடித்து, பிடித்து வருகிறது. பத்திரிகைகள் இதையெல்லாம் எழுதுவ தில்லை. வேறு எதையெதையோ எழுதுகிறார்கள். மக்களுக்கு வருவாயைத் தரக்கூடியதைப்பற்றி எழுதாமல், இந்த நாட்டு முன்னேற்றம்பற்றி எழுதாமல்

எதையெதையோ எழுதுகிறார்கள். நெசவாளர் சமுதாயத்தை வாழ வைத்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கும், திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கும், திரு. சங்கமா அவர்களுக்கும், திரு. வெங்கட்ராமன் அவர்களுக்கும் என்னுடைய நெசவாளர்கள் சமுதாயத்தின் சார்பாக நன்றி கூறிக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே பல சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். அதிலே சீருடை வழங்குவது ஒன்று. இந்தச் சீருடை கைத்தறி உடையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸ்காரர்கள் டெரிகாட்டன் உடையைக் கேட்கிறார்கள். இந்த நாட்டின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் உடை கைத்தறி உடையாகும். ஆகவே அதையே பயன்படுத்த வேண்டும், வழங்க வேண்டும். நாம் திருமணம் செய்வதாக இருந்தால், பணக்காரப் பெண்ணாக இருந்தாலும், சொந்தத்தில்தான் பெண் எடுப்போம், வெள்ளைக்காரப் பெண்ணை யாரும் கட்டுவது கிடையாது, வெளிநாட்டுப் பெண்ணைக் கட்டுவது கிடையாது. ஆனால் உடையிலே மட்டும் வெளிநாட்டு உடை ஏன் ? இதையெல்லாம் மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை அந்த அம்மையாரிடம் நான் கொடுத்திருக்கிறேன். அந்தக் கோரிக்கையை நிறை வேற்றுவதாக அந்த அம்மையார் வாக்களித்திருக்கிறார்கள். அந்த அம்மையார் இறந்துவிட்ட காரணத்தால் மீண்டும் நன்றியைக் கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். டி. சீத்தாபதி : துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு நண்பர்கள் தமிழகத்திலேகூட ஆங்கிலேயப் பெண்களை மணம் செய்திருக்கிறார்கள் என்பதை தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. இராமலிங்கம் : யாரோ ஒருவன் பண்ணிக்கொள்ளலாம். என் பெண்ணை சொந்தக்காரர் தவிர வேறு யாருக்கும் கொடுக்கவில்லை. பெண்ணை எடுப்பதும் அப்படித்தான். கலப்பு திருமணம்பற்றிப் பேசும்போது நான் சொல்லியிருக்கிறேன். முருகன் குறத்தியைக் கட்டிக் கொண்டிருக்கிறார். மகாவிஷ்ணு இல்லாமிய பெண்ணைக் கட்டிக் கொண்டார். நாமெல்லாம் அப்படியா கட்டிக் கொண்டிருக்கிறோம் ?

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புதிய சரித்திரம் சொல்லுகிறார். அந்தக் கதையைச் சொன்னால் நானும் தெரிந்துகொள்ளலாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஏற்கெனவே கதை ரொம்பச் சொல்லியாகிவிட்டது. மேலும் பேசினால் ரொம்ப நேரம் ஆகிவிடும்.



திரு. சி. இராமலிங்கம் : துலுக்கநாச்சியார் என்ற அம்மையார் திருப்பதியில் உள்ள சாமியைப் பார்த்து, "இந்தக் கோவிலுக்கு வருபவர் எல்லோரும் உங்கள் ஜனங்களாகவே வருகிறார்கள். எங்கள் ஜனங்கள் வருவதில்லையே" என்று முறையிட்டபோது, "போகும்போது உங்கள் ஜனங்களாக வருவார்கள்" என்று சொன்னதாகச் சொல்லுவார்கள். அதனால்தான் திருப்பதிக்குப் போகிறவர்கள் மொட்டை அடிக்கிறார்கள். அது ஒரு சம்பிரதாயம்.

*செல்வி ஆ. லீலாவதி: துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் இந்த ஆட்சியை அமைக்க மீண்டும் ஆதரவு கொடுத்துள்ளார்கள் என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை. அதேபோல ஆசிரியர்கள் சமுதாயம் இந்த ஆட்சியில் மிக நம்பிக்கை வைத்துள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழையெளிய மக்கள் முன்னேற்றத்திற்கும், தாழ்த்தப்பட்ட மக்கள் துயரைத் துடைக்கவும், வறுமையையும், வேலையின்மையையும் நீக்க அரசு இந்த அறிக்கையில் கூறியிருப்பதைப் பாராட்டி இதற்கு மத்திய அரசு முழு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் ஓய்வூதியம் கூடுதலாக 81,273 பேருக்குக் கிடைக்கும் என்பதற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால் ஆசிரியர் சமுதாயத்தில் பென்ஷன் வாங்குபவர்களுக்கென்று ஏற்கெனவே தீர்ப்பு வந்துவிட்டது.
"Liberalised Pension to Teacher—Pensioners of Aided Schools, Colleges and Local Bodies Schools.".
குறித்து தீர்ப்புக் கூறி ஓராண்டுக் காலம் ஆகியும் அவர்களுக்கு இன்று வரை லிபரலைஸ்ட் பென்ஷன் வழங்கப்படாததால், ஆசிரியர் சமுதாயத்தில் இருப்பவர்கள் மிகவும் வருந்திக் கொண்டிருக்கிறார்கள். அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்தத் தீர்ப்புக்கேற்ப லிபரலைஸ்ட் பென்ஷனைக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-25)

44.28 லட்சம் செலவில் 16 புதிய ஆதரவற்றோர் இல்லங்களை அரசு ஏற்படுத்துவதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். இன்னும் 600 குடும்ப அட்டைகளுக்கு ஒரு கடை என்று இன்னும் இரண்டு ஆயிரத்திற்கு மேற்பட்ட நியாயவிலைக் கடைகளை அமைப்பதையும் 20 கிலோ அரிசி ஒரு கார்டுக்கு வழங்குவதையும் நான் வரவேற்கிறேன். ஆனால் உச்சவரம்புச் சம்பளம் ரூ. 1,000-த்திற்கு மேல் இருப்பவர்களுக்கு அது இல்லை. தற்போது

ஆயிரம் ரூபாய் சம்பளம் என்பது மிகக் குறைந்த சம்பளம் என்றுதான் கூற வேண்டும். விலைவாசிகள் அதிகமாகியிருக்கின்றன. ஆகவே இந்த உச்சவரம்பை உயர்த்த வேண்டும். சம்பளம் ஆயிரத்திற்கும் மேற்பட்டிருந்தாலும், அப்படிப் பட்டவர்களுக்கும் வரம்பைத் தளர்த்த வேண்டும். அதனால் அவர்களும் பயனடைவார்கள் என்று இந்த நேரத்திலே எடுத்துச்சொல்லிக்கொள்கிறேன்.

எட்டு லட்சம் அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணத் தொகை வழங்குவதாகவும், ஆனால் அதிலே 50 சதவிகிதம் அரசு பிடித்துக் கொள்வதாகவும் கூறியிருக்கிறார்கள். இந்த நிவாரணம் மிகவும் குறைவாகத் தரப்பட்டிருக்கிறது என்று ஆசிரியர்கள் தரப்பிலே சொல்லப்படுகிறது. அதைப் பிடித்தம் செய்யாமல் அப்படியே விட்டுவிடவேண்டும் என்று நான் ஆசிரியர்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாடு தேர்வாணைக்குழு நடத்தும் தேர்வு ஆசிரியர்கள் சமுதாயத்திற்கு அவசியமில்லை என்பது அனைவரின் கருத்து. மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் கூறியதுபோல, பல ஆசிரியர்கள் இதனால் பாதிக்கப்படுகின்றார்கள். நமது அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்திலே, தேர்வாணைக் குழுவையே முற்றிலுமாக நீக்கிவிட்டார்கள். ஆனால் நம் மாநிலத்திலே எட்டு, ஒன்பது ஆண்டுகளாக ஆசிரியர்கள் வேலை செய்துகொண்டிருந்தபோதிலும், அவர்கள் தேர்வாணைக் குழுவிற்குச் செல்ல வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. அவர்கள் தேர்வாணைக்குழுவின் தேர்வில் தேர்ச்சி பெற்று மீண்டும் வந்தாலும் அவர்களின் சம்பள விகிதம் மாறுகிறது. அவர்கள் எப்போது பணியைத் தொடங்குகின்றார்களோ, அந்தத் தொடக்கத்தில் பெறும் சம்பளத்தைத்தான் வாங்கவேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. அதாவது ரூ. 700 அளவில் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த ஆசிரியர்கள், மீண்டும் அந்தத் தொடக்கச் சம்பளம், ரூ. 450 தான் வாங்கிக் கொண்டு பணியைத் தொடரும் நிலைமைகள் இருக்கின்றன. இப்படி ஒரு அவல நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் மிகவும் பாதிப்பு நிலையை அடைந்திருக்கின்றார்கள். இதைப்பற்றி வருடாவருடம் ஆசிரியர்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் இந்த மேலவையிலே கூறிக்கொண்டிருக்கிறோம். அதில் தீர்வுக்கு வழியில்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. அவற்றிற்குத் தீர்வு காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

26—6—1984 அன்று வெளியான அரசு ஆணையில் அரசு அலுவலர்கள், இரண்டு ஆண்டுகள் பணியாற்றிய 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு சலுகை கொடுத்திருக்கின்றார்கள். அவர்கள் தேவையான அனுபவம் பெற்று விட்ட காரணத்தினாலே அவர்களை நிரந்தரம் செய்கிறோம் என்று அரசு ஆணைப் பிறப்பித்து இருக்கின்றது. அதேமாதிரி தேவையான அனுபவத்தை





ஆசிரியர்களும் பெற்றுவிட்ட காரணத்தினால், இவர்களுக்கும் பணி நிரந்தரம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் தேர்வாணைக் குழுவிற்குச் செல்லாமல் இவர்கள் அனைவருக்கும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று மீண்டும் மீண்டும் இந்த அரசினைக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் அதிகமாக இருந்து கொண்டிருக்கின்றன.

இடைநிலை ஆசிரியர்கள் இரண்டாண்டு பயிற்சி பெற்றால், அவர்களுக்கு ஒரு ஊக்க ஊதியம் என்று சொல்கின்றார்கள். (P.E.T.) ஆசிரியர்களும், கிராப்ட் ஆசிரியர்களும், நாங்களும் 'இரண்டு ஆண்டுக்காலம் பயிற்சி பெற்றிருக்கிறோம். "ஏன் இதிலே ஒரு ஓரவஞ்சனை, எங்களுக்கும் ஏன் அந்தச் சலுகைகளைக் கொடுக்கக்கூடாது?" என்று கேட்கின்றார்கள். ஆசிரியர்கள் சமுதாயத்திலே இதனால் பிளவுகள் ஏற்பட வழிவகுக்காமல், இந்த இரண்டு ஆண்டு பயிற்சி பெற்றவர்கள் அனைவருக்கும் அந்தச் சலுகையை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பநல நிதி ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ. 20 ஆயிரத்திற்கு உயர்த்தப் பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் தனியார் பள்ளி ஆசிரியர்கள் ஒரு மாற்றாந்தாய் நிலையில் நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பே இல்லை. ஊதியப் பாதுகாப்பில்லை. இரு வழிப் பயணச் சலுகை

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை.)

(பிற்பகல் 12-30)

கொடுப்பதில்லை. வீடு கட்டக் கடன் அவர்களுக்கு இல்லை. ஆகையால் இவைகளையெல்லாம் அரசு உடனடியாக அவர்களுக்கு வழங்க வேண்டும். தனியார் பள்ளி ஆசிரியர்களும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்தான். அந்தப் பள்ளிகளில்தான் அதிகமான மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். அதனால் அவர்களுடைய பளு அதிகமாக இருக்கிறது. அவர்கள் அதிகமாக நிர்வாகத்தால் துன்பப்படுத்தப்படுகிறார்கள். பணிப் பாதுகாப்பு இல்லாமல் இரண்டு ஆண்டுகளாக, ஏறக்குறைய 90 ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். சென்னை, செங்கை மாவட்டத்தில் மட்டும் 90 ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராகவானந்தம் அவர்கள் கூறியதுபோல, தொழிலாளர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால் ஆசிரியர்கள் 12, 15 ஆண்டுகள் வேலை செய்தாலும், பணிப் பாதுகாப்பு இல்லாமல் திடீரென்று வேலை நீக்கம் செய்யப்

படுகிறார்கள் என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். இதற்கு கல்வி அதிகாரிகளும் உடந்தையாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். செங்கை மாவட்டத்திலே ஒரு தனியார் பள்ளியிலே 15 ஆண்டுக் காலமாக ஓர் ஆசிரியர் வேலை பார்த்து வருகிறார். அவர் செருப்பு போட்டுக் கொண்டு நிர்வாகியைப் பார்க்கச் சென்றார் என்பதால், அவரை வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்று நிர்வாகி அதிகாரியைக் கேட்டிருக்கிறார். அதிகாரியும் அவரது பணியை 'டெர்மினேட்' செய்யலாமென்று உத்தரவிடுகிறார். டி.ஈ.ஓ. அதைச் செய்துவிட்டு, ரிடையராகிறார். உடனே அப்பீல் செய்து, நல்லவேளையாக டைரக்டர் அவர்கள் அவரது பணியை 'டெர்மினேட்' செய்தது தவறு என்று சொல்லி, மீண்டும் அந்த ஆசிரியர் பணியில் சேர்ந்திருக்கிறார். இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கும்போது, தவறான காரியங்களைச் செய்யும் அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, டி.நகர் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்களுக்கு 15 நாட்கள் ஊதியத்தை வெட்டி, கொடுத்திருக்கிறார்கள். இது நியாயம் இல்லாதது. மூன்று முறை முழு ஊதியம் கொடுக்க வேண்டுமென்று மாவட்டக் கல்வி அதிகாரி சொல்லி அந்த பில்லைத் திருப்பி அனுப்பியுள்ளார். நிர்வாகி செய்தது தவறு என்று மூன்று முறை சொல்லியிருக்கிறார். மீண்டும் அந்த நிர்வாகி மாவட்டக் கல்வி அதிகாரியைப் பார்த்து சமாதானம் சொல்லி, காரணம் இல்லாமல் 15 நாட்கள் அவர்களுடைய சம்பளத்தைப் பிடித்தம் செய்து, கொடுத்திருக்கிறார். அதே டி.ஈ.ஓ. இப்போது நிர்வாகியைச் சந்தித்தும், இதற்கு அனுமதி அளித்திருக்கிறார். ஆகையால் அரசு இம்மாதிரியான அதிகாரிகள்மேல் நடவடிக்கை எடுத்தால், மற்ற அதிகாரிகளுக்கு ஓரளவுக்குப் பயமிருக்கும் என்றும் இவ்வாறான அநியாயங்கள் செய்யமாட்டார்கள் என்றும் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். வேலியே பயிரை மேய்ந்தால் ஆசிரியர்கள் யாரிடம் செல்வார்கள்?

அடுத்து, பழுதுபட்ட நிலையில் உள்ள பள்ளிக் கட்டிடங்களைச் செப்பனிட காலவரையறையோடு உள்ள திட்டம் வகுக்கப்படுமென்று அரசு கூறியுள்ளதை நான் வரவேற்கிறேன். சென்னை, செங்கை மாவட்டத்திலுள்ள பள்ளிகளுக்குச் சென்றபோது, அநேக பள்ளிகளில் கட்டிடங்கள் இல்லை. புக்கத்துறை, ஊத்துக்காடு, கூவத்தூர், குணாம்பேடு, வீராணகுன்னம் ஆகிய கிராமங்களில் உள்ள பள்ளிகளுக்குக் கட்டிடங்களே இல்லாமல் இருக்கின்றன. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கேயுள்ள ஆசிரியர்கள், அங்கு நான் சென்ற உடனே,





உடனடியாக எப்படியாவது அந்த இடத்திலிருந்து மாற்றம் செய்துகொண்டு போய்விடலாம் என்ற எண்ணத்தைச் சொல்கிறார்கள். ஓராண்டில் நான்கு தலைமை ஆசிரியர்கள் மாறிவிட்டார்கள். இப்போது தலைமை ஆசிரியரே இல்லை. கட்டிடங்கள் நன்றாக இல்லை என்று காரணம் கூறுகிறார்கள். ஆகவே நான் இதனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அடுத்து, செங்கை மாவட்டம் முழுவதும் எச்.ஆர்.ஏ., சி.சி.ஏ. கொடுக்க வேண்டும். அங்கேயுள்ள ஆசிரியர்கள் தாங்கள் எந்த அளவுக்கு அவதிப்படுகிறார்கள் என்று கூறும்போது, மிகவும் பரிதாபமாக இருக்கிறது. பக்கத்திலே நல்ல பள்ளிகள் இல்லாததாலும் கல்லூரிகளுக்கு அனுப்ப வேண்டியிருப்பதாலும், அவர்கள் ஹாஸ்டலில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்க வேண்டிய நிலை இருக்கிறது என்றும், அதனால் சுமை அதிகமாக இருக்கிறதென்றும், தங்களுக்கு எச்.ஆர்.ஏ., சி.சி.ஏ. கொடுத்தால் நலமாக இருக்குமென்றும் என்னிடம் தெரிவித்தார்கள்.

(பிற்பகல் 12-35)

முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின்மூலம் 80 லட்சம் பிள்ளைகள் பயனடைந்துள்ளதை வரவேற்கிறேன். நானும் ஓர் ஆசிரியையாதலால் உண்மை நிலைமையைச் சொல்கிறேன். என்னுடைய பள்ளியில் 1,200 மாணவர்கள் படிக்கிறார்கள் என்றால், 800 மாணவர்கள் சத்துணவு சாப்பிடுகிறார்கள். ஒவ்வொரு பள்ளியிலும் இதுதான் நிலைமை. ஆனால் சில நேரங்களில் அரிசி நன்றாக இல்லை. அப்படி நன்றாக இல்லாத அரிசியை மீண்டும் அரிசி மில்லில் கொடுத்து சுத்தம் செய்து அதன்பிறகு குழந்தைகளுக்கு உணவாக்கிக் கொடுக்க வேண்டும். சில வேளைகளில் குழந்தைகள் உணவைச் சாப்பிடவில்லையென்றால், அதற்குக் காரணம் அரிசி நன்றாக இல்லையென்று தெரிந்துகொள்ளலாம்.

அமைப்பாளர்களை எடுத்துக்கொண்டால், அவர்கள் ஓய்வு இல்லாமல் எல்லா தினமும் வேலை செய்கிறார்கள். அவர்கள் விடுப்பு எடுக்க வழியில்லாமல் அவதிப்படுகிறார்கள். ஆதலால் சத்துணவு அமைப்பாளர்களுக்கு வாரத்தில் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் விடுப்பு அளிக்க வேண்டுமென்றும் அதற்கு முன்னேற்பாடாக குழந்தைகளுக்கு ரொட்டி, பால், முட்டை போன்றவற்றைக் கொடுத்து சரிக்கட்டலாம் என்கிற யோசனையையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, முதலாம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரையுள்ள தகுதியான மாணவர்களுக்கு இலவச சீருடை தருவதுபற்றிச் சொல்லியிருப்பதை வரவேற்கிறேன். இப்படி தகுதியுள்ளவர்களுக்கு என்று சொல்லியிருப்பதன் காரணமாக மாணவர்களிடையே படிப்பதில் போட்டி வரும். இங்கே சில உறுப்பினர்கள் "தகுதியுடைய" என்று சொல்லியிருப்பது குறித்து வேடிக்கையாகப் பேசினார்கள். நான் சொல்கிறேன், அப்படிப் போட்டிருப்பது நல்லதுதான். சீருடை வழங்கும்போது முதல் மூன்று ரேங்க் வரை எடுக்கின்ற மாணவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். அதோடு கூட தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு மட்டும் கொடுத்தால் மாத்திரம் போதாது. உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் அதை விரிவுபடுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வீட்டு வசதி வாரியம் ஆசிரியர்களுக்காக அமைக்கப்பட வேண்டும். செங்கல்பட்டு மாவட்டத்தில் பள்ளிகளைச் சுற்றி ஏராளமான திறந்தவெளி இடங்கள் இருக்கின்றன. அங்கே வெளியூர்களிலிருந்து வந்து தங்கி பாடம் சொல்லிக் கொடுக்கின்ற ஆசிரியர்களுக்கு எல்லாம் வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் யாரும் வேலை மாற்றம் வேண்டுமென்று கேட்டு போகமாட்டார்கள். நான் சொன்ன யோசனைகளையெல்லாம் அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று சொல்லி, வாய்ப்பளித்தமைக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்திலே கலந்துகொண்டு என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மக்களுடைய இதய நாயகனாக, அவர்களுடைய இதயத்திலே, இதய சிம்மாசனத்திலே வீற்றிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உடல் நலம் பெறவும், தொடர்ந்து இந்த நாட்டு மக்களுடைய தலைவராகவும், தமிழக முதலமைச்சராகவும் வரவும் இந்த நாட்டு மக்கள் அத்தனை பேரும் ஜாதி மத இன உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு ஆண்டவனிடத்திலே தொழுத அனைத்து மக்களுக்கும், அதற்கேற்ப மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பூரண உடல் நலம் பெற்று மீண்டும் இங்கே முதலமைச்சராகப் பொறுப்பேற்க உதவிய அனைத்து மருத்துவ வல்லுநர்களுக்கும் என்னுடைய இதயபூர்வமான



நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். பசித்தவனுடைய வயிற்றுக்கு முன்னால் ஆண்டவனாகக் காட்சியளிப்பது ரொட்டித் துண்டும், சோற்றுக் கவளமும்தான் என்று பெரியவர்கள் சொல்லியதை நான் கேட்டிருக்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ 80 லட்சம் பசித்த வயிறுடன் இருக்கிற குழந்தைகளுக்கு ஆண்டவனாக அடையாளம் காட்டிய மனிதர்தான் புரட்சித் தலைவர் அவர்கள் என்று தமிழ் நாட்டுக்கு வருகை தந்த அன்னை தெரசா அவர்கள், தமிழ் நாட்டிலே வந்து தான் கூறினார்கள். அந்தச் சோற்றை பசித்த 80 லட்சம் குழந்தைகளுக்கு வழங்குவதற்காக ஆண்டவனால் அடையாளம் காட்டப்பட்ட மனிதர்தான் எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் என்று ஏழையெளியவர்களுக்காக தன்னுடைய வாழ்வை ஒப்படைத்திருக்கும் மனிதாபிமானமிக்க தெரசா அம்மையார் அவர்களே அறிக்கை தந்திருக்கிறார்கள் என்னும்போது, ஆண்டவனே ஒரு சாட்சியாக தமிழகத்திற்கு வந்து அந்த உணர்வை வெளியிட்டிருக்கிறார் என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசில், மேதகு ஆளுநர் அவர்களால் நிகழ்த்தப்பட்ட உரையின்மீது இங்கே தொடர்ந்து விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 12-40)

நல்ல இதயம் படைத்தவர்கள் எல்லாம் ஆளுநர் உரைமீது விவாதம் என்ற நோக்கில் அதிலே இருக்கிற நல்ல பல கருத்துக்களை எடுத்துப் பாராட்டி வாழ்த்தினார்கள். ஆனால் சிலர் பாராட்டுகிற உணர்வு படைத்திருந்தாலும், தாங்கள் அமர்ந்திருக்கிற இடத்தின் காரணத்தாலே, அவைகளைப் பாராட்ட மனமில்லாமல் குறை சொல்லி குற்றம் சொல்கிற நிலைமைகளை நாம் இங்கே பார்க்கிறோம். இங்கே மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள், ஈழத் தமிழர்கள் பிரச்சினையை வெகுவாக எடுத்துக் காட்டினார்கள். இங்கே எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள், அந்த ஈழத் தமிழர்கள் பிரச்சினையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிற நோக்கில், மைய அரசு முழுப் பொறுப்பு ஏற்றிருந்தாலும், அந்த மைய அரசு செய்யவேண்டிய கடமைகளை உணர்ந்திருந்தாலும், நமக்குள்ளே ஒருவருக்கொருவர் கிண்டலும் கேலியும் செய்து கொள்ளக்கூடாது என்று சொன்னார்கள். அந்தக் கருத்தில் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்த நாங்கள் துளியும்கூட பின்வாங்கத் தயாராக இல்லை. ஏற்றுக் கொள்கிறோம்.

ஆனால் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த அரசு, ஈழத்திலே அடிபட்டுக் கொண்டிருக்கிற தமிழர்களுடைய எதிர்காலத்தையும், பாதுகாப்பையும் நிர்ணயம் செய்வதில் பின்வாங்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஈழத் தமிழர்கள் பிரச்சினையை மைய அரசின் கவனத்திற்காக கவன ஈர்ப்புத் தீர்மானமாக சென்ற ஆண்டு இந்த அவையில் கொண்டு வந்தார்கள். அப்படி வருகிற நேரத்தில், அவையினுடைய முன்னவர் மரியாதைக்குரிய அண்ணன், மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அந்த நிலைமையைத் துல்லியமாக தெளிவாக எடுத்துச் சொன்னார்கள்.

1952 ஆம் ஆண்டு தொடங்கிய அந்த ஈழத் தமிழர் போராட்டம், 1985 ஆம் ஆண்டு தீர்மானம் போடுகிறவரையில் உச்ச கட்டத்தைப் பெற்றிருக்கிற தென்பதை யாரும் மறந்துவிட முடியாது. 1952 ஆம் ஆண்டு ஸ்ரீலங்காவில் உள்ள தமிழர்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்ட நேரத்தில், அவர்களை இரண்டாந்தர குடிமக்களாக உணர்த்திய நேரத்தில் இங்கே தமிழ் நாட்டில் ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், சட்டமன்றப் பேரவையில் அப்போது கல்வியமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து, மைய அரசுக்கு அனுப்பினார்கள். ஆகவே 1952-ல் ஈழத் தமிழர்கள் ஈழத்தில் இரண்டாந்தர குடிமக்களாக ஆக்கப்பட்டது குறித்து பேரவையில் தீர்மானம் கொண்டுவந்து அனுப்பினார்கள். 1952-க்குப் பின்பு 1985 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து தமிழர்கள் அடிபடுகிறார்கள், ஈழத்து வீதிகளிலே தமிழர்களின் ரத்தம் ஓடுகிறது. தமிழச்சிகள் கற்பழிக்கப்பட்டு கற்பு சூறையாடப்படுகிறது. ஆனால் புரட்சித் தலைவர் 1977-ல் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு இடையிலே இருந்த எந்த அரசும், எந்த முதலமைச்சரும், எந்த அமைச்சரும் மைய அரசுடைய கவனத்தை ஈழப் பிரச்சினையில் திருப்ப முன்வந்தார்களா என்றால், இல்லை யென்றுதான் வருத்தத்தோடு சொல்ல முடியும். அதுமட்டுமல்ல, 1977-ல் மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசுதான் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்தது. 1981-லும் கொண்டு வந்தது. புரட்சித் தலைவர் எடுத்த நடவடிக்கையின் காரணமாக அதுவரையில் இந்தப் பிரச்சினையின் பக்கமே திரும்பாத மத்திய அரசு, ஒரு கோடி ரூபாயை ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினைக்காகக் கொடுத்தார்கள். அதுமட்டுமல்ல, அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-வில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றவர்கள் எல்லாம் ஒரு மாதச் சம்பளத்தைக் கட்டாயமாகத் தரவேண்டுமென்று சொல்லி, அந்தப் பணத்தை எல்லாம் அதற்காக அனுப்பினார்கள். நான் இந்த நேரத்தில் கேட்கிறேன், தமிழர்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறவர்களைக் கேட்கிறேன்,





" நீங்கள் என்ன சொன்னீர்கள் ? " ஒரு மாதச் சம்பளத்தைக் கொடுக்க முன்வந்தார்களா-? முன்னாள் முதல்வரும் இன்றைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமாக இருக்கிற மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் கலைஞர் கருணாநிதி அவர்கள் என்ன சொன்னார்கள், தெரியுமா ? இந்தப் பணம் போய்ச் சேருமோ சேராதோ என்று சந்தேகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். " தமிழ் நாட்டிலேயிருந்து, ஈழத்திலே அடிபடுகிற தமிழனுக்கு

(பிற்பகல் 12-45)

அவனுடைய துன்பத்தைக் குறைக்க, துயரத்தைக் குறைக்க நாம் நம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும் " என்று தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்களிடத்திலே வசூல் செய்து அனுப்பவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் மரியாதைக்குரிய அகில உலக தமிழர்களுக்கெல்லாம் தலைவர்கள் என்று சொல்கின்றவர்கள் " இந்தப் பணம் போய்ச் சேருமோ சேராதோ ?" என்று சொல்லி ஒரு பைசாகூட கொடுப்பதவற்கு முன் வராதவர்கள். இவர்கள் ஈழத் தமிழனைப்பற்றிப் பேசுவதற்கு என்ன அருகதை இருக்கிறது என்பதைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதுமட்டுமல்ல. இந்தப் பணம் போய்ச் சேருமோ சேராதோ என்று சொன்னவர்கள், பன்னாட்டு சட்டப்படி பாஸ்போர்ட் இல்லாமல் ஈழத்தின் மண்ணிலே கால் வைக்க முடியாது என்று தெரிந்தும், மரியாதைக் குரிய நெடுமாறனுக்கு வாழ்த்துக் கூறி, நடைபயணத்தை அங்கே துவக்கு கிறார்கள். அடிபட்டவனுக்கு இந்தப் பணம் போய்ச் சேருமோ சேராதோ என்று கூறி தமிழனை உதவி செய்ய வேண்டாம் என்று சொன்னவர்கள் அங்கேபோய் வாழ்த்து கூறுகிறார்கள். இந்த அரசியல் கபடவேடதாரிகளை நாட்டுமக்கள் அடையாளம் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையின்மூலம் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே அடிபடுகிற தமிழனை வைத்து இங்கே அரசியல் செய்கிறார்கள். அங்கே கொட்டுகிற ரத்தத்தை வைத்து இங்கே அரசியல் செய்கிறார்கள். அங்கே செய்யப்படுகிற கற்பழிப்பினுடைய கோர தன்மைகளை இங்கே சொல்லி தங்களுக்கு அரசியல் வசந்த காலத்தை உருவாக்கிக்கொள்ள முயன்று வருகிறார்கள் என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்திருக்கின்ற காரணத்தினால், மைய அரசினுடைய முழு கவனத்தை அங்கே திருப்புவதற்கு இன்றையதினம் அழுத்தந்திருத்தமான நடவடிக்கை களில் முனைப்பாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த அவையில் இந்தச் சந்தர்ப்பத்தில் பணிவோடும், உறுதியோடும் சொல்லுவேன், டாக்டர்

புரட்சித் தலைவர் அரசும், அவரைச் சார்ந்திருக்கிற அமைச்சர் பெருமக்களும், அவர்களோடு இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் யாரைக் காட்டிலும் எவரைக் காட்டிலும், கிஞ்சித்தும் அந்த ஈழப் பிரச்சினையிலே குறைந்தவர்கள் அல்ல என்பதை இந்த நேரத்திலே உணர்ந்தாக வேண்டும். அதுமட்டுமல்ல, இதிலே குறைகளைச் சொன்னவர்கள், இதிலே கொள்கைகள் இல்லை என்று சொன்னவர்கள் அனைவருக்கும் எங்கள் இயக்கத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அன்றையதினம் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அராஜகம் என்று கூறி ஓர் உதாரணத்தைச் சொன்னார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேலை செய்ய வரவில்லை என்று சொல்லி ஓர் ஆசிரியர் அடிக்கப்பட்டார். மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டார். உடனடியாக அவர் விடுதலை செய்யப்பட்டார் என்றும் சொன்னார்கள். நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். வேடசெந்தூரில் எல். புதூர் என்ற ஊரில் கே. இரங்கசாமி என்ற ஆசிரியர். அவர் ஆசிரியர் தொழில் பார்க்கிறார். அந்த ஆசிரியர், 14 கட்சி முற்போக்குக் கூட்டணி பொதுக்கூட்டத்தில் பகிரங்கமாக மேடை ஏறி, மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் கருணாநிதியை வாழ்த்திப் பேசியதற்குப் பின்னரும், இன்னமும் அவர் ஆசிரியராகத்தான் பணியாற்றிக்கொண்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆசிரியர் ஒருவர் மேடை ஏறிப் பேசியதாகக் கூறி அவர் இன்னும் பணியில் இருப்பதாகச் சொன்னார்கள். என்னிடமும் ஆளும் கட்சியின் மேடையிலே பேசியவர்கள் பட்டியல் இருக்கிறது. அதை நான் தலைவர் அவர்களின் அனுமதியோடு படிக்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

அதற்கு நடவடிக்கை எடுத்தால் இதற்கும் எடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டியல் இருப்பதாகச் சொன்னார்கள். என்னுடைய வாதம் எல்லாம், ஆளும் கட்சிக்கு வராத காரணத்தினால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அவரை அடித்தார்கள், ஆஸ்பத்திரியிலே இருக்கும் அவரை சீக்கிரம் ரிலீஸ் செய்ய வேண்டும் என்று





சொன்னார்கள் என்ற குற்றச்சாட்டு சொன்ன காரணத்தினாலே, அவர்கள் மேடையிலே பகிரங்கமாகப் பேசி இருந்தும் டாக்டர் புரட்சித் தலைவர் அரசு அவர்கள்மீது எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை ; அவர் ஊரில் நிம்மதியாக பணியிலே வேலை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்களுக்கு நான் உணர்த்துவதற்காகத்தான் நான் சொன்னேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் எழுந்தார்)

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மணியாகிவிட்டது.

(பிற்பகல் 12-50)

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சில உணர்வுகளை அந்தப் பகுதியிலே தமிழகம் முழுவதும் ஆண்டு கொண்டிருக்கிற புரட்சித் தலைவரை குற்றம் சாட்டுவது போல் வெளிப் படுத்திய காரணத்தினாலே இப்படியும் இருக்கிறது என்பதைச் சொல்வதிலே தவறு இருக்கக் கூடாது. அதைத்தான் இங்கே சொன்னேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** பத்து நிமிடத்திற்கு மேலே ஆகிவிட்டது. 13 நிமிடம் ஆகிவிட்டது. சீக்கிரம் முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களை எல்லாம் சொன்னார்கள். உண்மையிலே இன்னும் விளக்கமாகக்கூட பேசுவதற்கு இருந்தாலும் எங்களோடு துணையாக இருக்கிற எங்களோடு உடன்பட்டிருக்கிற மரியாதைக் குரிய காங்கிரஸ் கட்சி இயக்கத்தைச் சார்ந்தவர்கள் நேற்றையதினம் மரியாதைக்குரிய மாண்புமிகு அம்மையார் அவர்கள் கருத்துக்களை எல்லாம் சொல்லி பரிமாறிக் கொண்டார்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

விவசாயி உற்பத்தி செய்கிற பொருளான நெல்லுக்கு விலையை ஏற்றித் தரவேண்டும், அதற்கு அரசு துணையாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் ஒன்றை இந்த அவையின் மூலமாகச் சொல்வது பொருத்தமாக இருக்கும். மத்திய அரசுக்கு நம்முடைய மாநில அரசு ஒரு குவிண்டால் நெல்லுக்கு 175.51 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது. ஆனால் மத்திய அரசு 141 ரூபாய் முதல் ரகத்திற்கும், 137 ரூபாய் இரண்டாவது ரகத்திற்கும், 135 ரூபாய் மூன்றாவது ரகத்திற்கும்

விலை நிர்ணயம் செய்திருக்கிறது. அந்த விலை நிர்ணயம் செய்கிற குழு மத்திய அரசாலே நிர்ணயம் செய்யப்படுகிறது. எங்களுடைய வேண்டுகோள் எல்லாம் நெல்லுக்கு தமிழ் நாடு முழுவதும் தனியாக விலை நிர்ணயம் செய்கிற குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். அங்கே விளைகிற கோதுமையோடு இந்த நெல்லையும் இணைத்துப் பார்க்கிற நேரத்தில், உற்பத்திச் செலவு கோதுமையை விட நெல்லுக்கு அதிகமாக வருகிறது. இருந்தாலும் நிர்ணய விலை குறைக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், 1982-83-ல் விவசாயப் பெருமக்கள் வேதனைப்பட்ட நேரத்தில் இந்த அரசு ஏறத்தாழ குவிண்டால் ஒன்றுக்கு மானியமாக ரூ. 35 என்ற அளவில் நம்முடைய அரசு கொடுத்தது. அப்படிக் கொடுத்ததற்கு ரிசர்வ் வங்கி அபராத வட்டியாக 12 விழுக்காட்டிலிருந்து 18 விழுக்காடு வரை நம்மிடத்திலே வாங்கினார்கள். ஏறத்தாழ 25 கோடி ரூபாய் நமக்கு நட்டம். விவசாயப் பெருமக்களுக்கு மத்திய அரசு நெல்லுக்கு ஏற்ற விலையைக் கொடுக்காத காரணத்தால், நம்முடைய அரசுக்கு ஏறத்தாழ 25 கோடி ரூபாய் நட்டம். அதை ரிசர்வ் வங்கி அபராத வட்டியாக வாங்கியது என்பதை நாம் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள வேண்டும். எனக்கு இருக்கிற ஆசை, உண்மையிலேயே விவசாயப் பெருமக்கள் அந்த விலை நிர்ணயக் குழுவிலே இடம் பெற வேண்டும். விவசாய சங்கத் தலைவர்கள் அந்த விலை நிர்ணயக் குழுவிலே அங்கம் பெறக்கூடிய வாய்ப்பை உருவாக்க வேண்டும். இங்கு இருக்கின்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் அதற்கான வழிகளை நீங்கள் எங்களுக்குச் செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் கல்வியைப்பற்றிச் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். மெக்காலே என்றவர் கொண்டு வந்த கல்வித் திட்டத்தால், இந்த நாட்டிலே வெறும் சட்டப் படிப்பைப் படித்து குமாஸ்தாக்களாக உருவாகக்கூடிய சூழ்நிலைதான் இருந்து வந்தது. பல கல்வி வல்லுநர்கள் எல்லாம் சொன்னார்கள். இந்தக் கல்வி முறை மாற்றப்பட வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் மாற்றுவதற்கு யாரும் முனைப்பாக இல்லை. புரட்சித் தலைவர் அவர்கள்தான் அந்தக் கல்வி முறையை மாற்றி தொழில் கல்வி என்ற அடிப்படையிலே, இந்த நாட்டில் படித்தவுடனே ஒருவன் கல்லூரியை அல்லது பள்ளிக் கூடத்தை விட்டு வெளியே வருகிறான் என்று சொன்னால், ஒரு இளைஞன் வெளியே போகிறான் என்று சொன்னால், அவன் தன்னுடைய வாழ்விலே அவனாலே சம்பாதித்துக்கொள்ள முடியும், ஒரு தொழிலைச் செய்ய முடியும் என்ற அளவுக்கு தொழில் கல்வியை இந்த மண்ணிலே புகுத்தியவர் நமது புரட்சித்



தலைவர் அவர்கள். அது மட்டுமல்லாமல், அவர்கள் எத்தனையோ பல்கலைக் கழகங்களை கடந்த ஏழு ஆண்டுகாலத்தில் உருவாக்கியிருக்கிறார்கள் என்பதையும் பார்க்கிறோம். புரட்சித் தலைவர் அவர்களின் கடந்த கால ஆட்சியில், அவருடைய பெரு முயற்சியினாலே ஏறத்தாழ ஒரு பெண்கள் பல்கலைக் கழகமும், தமிழுக்கு ஒரு பல்கலைக் கழகமும் உருவாக்கப்பட்டிருக் கின்றன. இப்படி நாட்டிலே அவர்கள் பல்கலைக் கழகங்களை எல்லாம் உருவாக்கி நாட்டிலே ஒரு நல்ல ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்பதைச் சொல்லி, இந்த ஆளுநர் அவர்கள் உரையை வரவேற்று அமைகிறேன். நன்றி. வணக்கம்.

(பிற்பகல் 12-55)

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் கலந்து கொண்டு சில கருத்துக்களைக் கூறுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மத்திய அமைப்பிலும் சரி, மாநில அமைப்பிலும் சரி, தேர்தல்கள் நடைபெற்று புதிய அரசுகள் பொறுப்பேற்றிருக்கின்ற நிலையில் ஆசிரியர்கள் பட்டதாரிகள் முற்போக்கு முன்னணியின் சார்பில் மத்திய அரசில் பொறுப்பேற்றிருக்கும் பிரதமர் அவர்களுக்கும் ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும், அதைப்போலவே நமது மாநிலத்தில் மீண்டும் பொறுப் பேற்றுள்ள மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் அவரோடு அமைச்சர் பொறுப்பினை ஏற்றுள்ள ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய இயக்கத்தின் சார்பில் வாழ்த்துக்களையும், நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக ஆளுநர் உரையில் நாட்டின் நிர்வாகத்தில் தூய்மையையும் திறமையையும் கொண்டுவர வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றையதினம் சமுதாயத்திலும் அரசு அமைப்புகளிலும் திறமையையும் நேர்மையையும் வளர்க்க இது ஏதுவாக இருக்கும். எனவே அனைத்து நிலையிலும் உள்ள மக்களும் இதற்கு ஒத்துழைப்பு நல்கி ஊழல் ஒழிப்புப் பணியில் ஈடுபட்டு [illegible] திகழ வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பா. ரா. தாமஸ்] [1985 மார்ச் 16

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் நல்ல முறையில் உடல் நலம் பெற்று தமிழகத்திற்குத் திரும்பி வந்திருக்கிறார்கள். அதற்கு இறைவனுக்கு நன்றி என்று எந்தவிதமான கருத்து வேறுபாடின்றி அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் கூறியதானது சிறந்த ஒரு ஒருமைப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. நமது நாட்டின் தந்தை மகாத்மா காந்தியடிகள் ஒருமுறை சொன்னார். மக்களுக்குத் தொண்டு செய்வதே மகேசனுக்குத் தொண்டு என்று சொன்னார்கள். (Serving the People is Serving God) அந்த முறையில் நம்முடைய முதல்வர் அவர்கள் அப்பழுக்கில்லாமல் மாநில மக்கள் அனைவருக்கும் உண்மையான முறையில் தொண்டாற்றியதன் காரணமாகத்தான் இறைவனே அருள் உள்ளம் பற்றி அவர்களுக்கு மீண்டும் நல்ல உடல் நலத்தை வழங்கியிருக்கிறார்கள் என்று நான் எண்ணி இம் மன்றத்தின் மூலம் இறைவனுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மார்ட்டின் லூதர் அவர்கள் சுருக்கமாக ஒரு வாசகத்தில் ஒரு உண்மையைக் குறிப்பிட்டார்கள்

More things are wrought by prayer than what the world dreams.

அந்த வகையில் இன்றையதினம் பிரார்த்தனையின் பலனைக் கண்கூடாகக் கண்டோம்.

இன்றையதினம் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையே நல்ல உறவு நிலை நிலவும் காலம் ஏற்பட்டிருக்கிறது. ஒருவேளை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் அல்லது எட்டாவது நிதிக்குழுவின் பரிந்துரைகள் நம்முடைய மாநிலத்திற்குப் பல இடையூறுகளை உருவாக்கக் கூடுமோ என்ற அச்சம் நமக்கிருக்கிறது. நபர் வாரி வருமானத்தின் அடிப்படையில் நம்முடைய மக்கள் தொகை குறைந்துள்ளதன் அடிப்படையில் நமக்கு மத்திய அரசின் நிதி உதவியில் இழப்பு ஏற்படுமோ என்ற எண்ணமும் நமக்கு இருக்கிறது என்பதை நான் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் இந்தியா முழுவதையும் எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு நாளும் நாம் ஒரு ஆஸ்திரேலியா கண்டத்தையே உருவாக்கும் வகையில் மக்கள் தொகையைப் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், நாம் பெருகி வரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திக்கொண்டு வருகிறோம். எனவே மத்திய அரசு நம்முடைய உணர்வுகளை மதித்து நபர் வாரி வருமான அடிப்படையில் கணக்கிட்டு, நமக்குக் கிடைக்க வேண்டிய நிதி உதவியைக் குறைத்துவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



985 மார்ச் 16] [திரு. பா. ரா. தாமஸ்]

நம்முடைய மாநிலத்தின் முன்னேற்றம் கருதி இங்கே பல திட்டங்களை ந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும், மத்திய அரசின் முதலீடு திகரிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவ்வாறு முதலீடு சய்ய மத்திய அரசு ஏற்றுக் கொண்டதாகவும் சில முதலீடுகளுக்கு ஏற்பளிப்பு வளிக்க முன்வரக்கூடிய நிலையை நாம் அறிக்கையில் சுட்டிக்காட்டி ருந்தாலும்கூட, இன்றையதினம் காஷ்மீருக்கு எவ்வாறு ஒரு பாதுகாப்பு லை இருக்கிறதோ அதைப்போன்ற நிலை தமிழகத்திற்கும் தரப்பட வேண்டும் ன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தெற்கே உள்ள தமிழகத்திலும் ற்போது காஷ்மீரில் உள்ளதுபோன்ற ஒரு பாதுகாப்பு நிலை இருக்கிறது. வ்வாறு கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து காஷ்மீருக்குப் ாதுகாப்பை உருவாக்கியிருக்கிறோமோ அந்த முறையில் இப்போது மிழகத்தின் ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவுள்ள கடற்கரைப் பகுதியிலும் ட்டமிட்ட முறையில் பாதுகாப்புப் பணிக்காக என்று கப்பற்படைத் ளத்தை அமைப்பது மட்டுமல்லாமல், விமானப்படை தளத்தையும் அமைக்க வண்டிய ஒரு சூழ்நிலை உருவாகிவிட்டது என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திரிகோண மலையில் எவ்வாறு மெரிக்கா ஏகாதிபத்திய உணர்ச்சியைக் கொண்டு சில ஆக்கிரமிப்புகளைச் சய்துகொண்டு நமக்கு எதிரான உணர்வுகளை வளர்த்துக் கொண்டிருக் றார்களோ அதையெல்லாம் கருத்தில் கொண்டு நாம் நம்முடைய பாதுகாப்பை ன்னும் பலப்படுத்தியாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவையின் அனுமதியோடு வையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-00)

**திரு. பா. ரா. தாமஸ் :** நமது பகுதியிலே அவர்கள் தாக்குவதையும், ங்கிருந்து அகதிகளாக வரக்கூடிய தமிழ் இன மக்களைக் கொன்று குவிக்கக் டிய காட்சிகளையும், ஒருவேளை நமது கடற்படையும், விமானப் படையும் சர்ந்து சரியானபடி ரோந்து சுற்றியிருந்தால் நிச்சயமாக தவிர்த்திருக்கலாம். றத்தாழ 22-ல் இருந்து 25 இலட்சம் வரை தமிழ் மக்கள் அங்கே வாழ்ந்து காண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் காப்பது தமிழ் நாட்டினுடைய பாறுப்பல்ல. இந்திய அரசுக்குத்தான் நேரடிப் பொறுப்பு இருக்கிறது. மற்கு வங்கத்திலிருந்து இவ்வாறு அகதிகள் வெளியேறிய காலங்களில் வர்களுடைய பராமரிப்புக்கென்று, சீரமைப்புக்கென்று ஐந்து பைசா [illegible] ல்லை ஓட்டச் சொல்லி அதிலிருந்து வந்த தொகையைக் [illegible]

அளித்ததைப் போல, ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையிலும், அகில இந்திய அளவில் தபால் தலையை ஒட்டச் செய்து அதில் வருகிற பணத்தைக் கொண்டு அந்த அகதிகளைச் சீரமைக்க ஏன் உதவக் கூடாது என்று மத்திய அரசை இந்த மாநில அரசின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு இயக்கம் சற்று தொய்வுபட்டிருக்கிறது. காரணம், வங்கிகளில் வாங்கிய கடனை யாரும் திருப்பிச் செலுத்தவில்லை. மக்கள் அரசாங்கத்திடமிருந்து அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். அதோடுகூட கூட்டுறவு இயக்கங்களில் உயிரோட்டம் இல்லையென்று சொல்லுகிறார்கள். புதிய சட்டத்தின் அடிப்படையில் விதிகள் வகுத்த பிறகு கூட்டுறவு இயக்கங்களுக்கான தேர்தல் நடத்தப்படும் என்று இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றங்களானாலும் சரி, கூட்டுறவு இயக்கங்களானாலும் சரி, தேர்தல் நடந்து மக்கள் பிரதிநிதிகள் இல்லாத கால கட்டத்தில் நிச்சயமாக இவைகள் செயல்பாடுகளில் உயிரோட்டம் இழக்கத்தான் செய்யும். ஆகவே விரைவிலே தேர்தலை நடத்தி ஜனநாயக முறைப்படி செயல்பட வைக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் என்பது பாராட்டப்படக்கூடிய ஒரு திட்டம். நாற்பத்தைந்தரை கோடி ரூபாயை மாநில அரசு மத்திய அரசிலிருந்து பெற்று வேலை வாய்ப்பை வழங்கியிருக்கிறது. அதோடு தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்தும் முறையை நிரந்தரமாக்கி கிராமப் பகுதியில் வேலை வாய்ப்பு உருவாக்கக் கூடிய அம்சமாக வகுக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துகிறேன். பட்டதாரி ஆசிரியர்கள், படித்தவர்கள் ஆகியவர்களுக்கெல்லாம் மாநில அரசின் சார்பில் இந்த ஆண்டில் ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்கக் கூடிய அம்சமாகும். இதுகுறித்து நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். பல்லாயிரக்கணக்கான பேர் வேலை வாய்ப்பு நிறுவனங்களில் பதிவு செய்துவிட்டு காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் ஒரு கட்டுப்பாட்டை வைத்திருக்கிறோம். குறைந்தது ஐந்தாண்டுகளுக்கு வேலை வாய்ப்பு நிறுவன பதிவேட்டில் பதிந்தவர்களுக்குத்தான் இந்த உதவித் தொகை என்று வைத்திருக்கிறோம். எஸ்.எஸ்.எல்.சி. படித்தவராக இருந்தால் 50 ரூபாய் என்றும், பி.யூ.சி. படித்தவராக இருந்தால் 75 ரூபாய் என்றும், பட்டதாரியாக இருந்தால் 100 ரூபாய் என்றும் வைத்திருக்கிறோம். ஐந்தாண்டுகள் என்று எவ்வளவு நாள் அவர்கள் காத்துக் கொண்டிருக்க முடியும்? படித்தவர்கள் தங்களுடைய வசதிகளைத் துறந்துவிட்டு, விற்றுவிட்டு, கல்லூரியில் படித்துவிட்டு வேலை கிடைக்கும் என்று



எதிர்பார்த்து, ஏமாந்து விரக்தி மனப்பான்மையோடு இருக்கிறார்கள். சென்ற ஆண்டுகூட ஒரு கோரிக்கை மாநாடு நடந்தது. கன்னியாகுமரியிலிருந்து படித்த வேலையில்லாதவர்கள் சென்னை கோட்டை நோக்கி வந்து விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தார்கள். புதிய கல்வித் திட்டங்களின் மூலமாக நாம் கல்வியை வளர்த்துக் கொண்டிருக்கிறோம். அகில இந்திய அடிப்படையில் தமிழகம் மூன்றாவது இடத்திலே இருக்கிறது. படித்தவர்கள் அதிகம் உள்ளவர்கள் என்ற கணக்கில் முதலாவதாக கேரளமும், இரண்டாவதாக மராட்டியமும், மூன்றாவதாக நாமும் இருக்கிறோம். முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் மூலமாக, இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்குவதன் மூலமாக, இலவசமாக சீருடைகள் வழங்குவதன் மூலமாக பள்ளிகளிலே பிள்ளைகள் சேருவது அதிகமாகிக் கொண்டிருக்கும்போது, வேலை வாய்ப்புகளை தள்ளிக்கொண்டே போனால், பிறகு படித்தவர்கள் மத்தியிலே பயங்கரமான உணர்வுகளை உண்டாக்கக் கூடிய நிலை வளர்ந்துவிடும். இதைத் தவிர்க்க வேண்டும். ஓராண்டுக் காலம் வேலை வாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்திருப்பவர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்பட வேண்டும். மூன்றாண்டுகளுக்குள் அவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தர வேண்டிய நிலைமையை உருவாக்க வேண்டும். மேலும் வேலை வாய்ப்பு நிறுவனங்களில் பதிந்திருப்பவர்களைக்கூட தேர்வாணைக் குழு தேர்ந்தெடுப்பதில்லை. ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படாமல் வெளியே அனுப்பப்படும் நிலை இருக்கிறது. ஆகவே வேலை வாய்ப்பு நிறுவனத்தில் ஓராண்டுக்கு பதிவு செய்திருந்தாலும், உதவித் தொகை வழங்க வேண்டும் என்றும், மூன்று ஆண்டுகளுக்கு மேல் இருந்தால், அவர்களுக்கு நிரந்தரப் பணி கொடுக்க வேண்டும் என்றும் ஆணையிட வேண்டும். 35 வயதுக்கு மேல் இருந்தால் உதவித் தொகை கிடையாது என்று சொல்லுகிறார்கள். அதையும் அரசு மாற்ற வேண்டும்.

(பிற்பகல் 1-05)

நான்காவது ஊதியக் குழுவானது, ஜனவரி மாத இறுதிக்குள்ளாக அதனுடைய அறிக்கையை கொடுத்து அனைத்து ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், அரசு ஊழியர்கள் எல்லோருக்கும் ஊதியம் வழங்கப்பெறும் என்று சொன்னார்கள். ஆனால் அது நடைபெறவில்லை. இன்று பத்திரிகையிலே ஒரு செய்தியைப் பார்த்தேன். மத்திய அரசினுடைய நான்காவது ஊதியக் குழு பரிந்துரைக்கு ஆய்வு செய்துகொண்டிருக்கும்போதே ஒரு இடைக்கால நிவாரணம் அளித்திருக்கிறார்கள். இப்போது பாராளுமன்றத்திலேகூட கேட்டிருக்கின்றார்கள். ஊதியக் குழுவின் பரிந்துரை என்னவாயிற்று? அது

வாவில்லையா? மீண்டும் இரண்டாவது முறையாக ஊழியர்கள் இடைக்கால நிவாரணம் கேட்டிருக்கின்றார்களே, அப்படி இரண்டாவது இடைக்கால நிவாரணம் கொடுக்க வழி இருக்கிறதா அதற்கு சட்டத்திலே வழி இருக்கிறதா என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படியிருந்தால் நம் மாநிலத்திலேகூட பரிந்துரையைப் பெறுவதில் காலதாமதம் இருந்தால், இரண்டாவது இடைக்கால நிவாரணத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விரைவிலே அமல் நடத்த வேண்டும் என்று கேட்கிறேன். 1—1—1984 ஆம் தேதியிலிருந்தே, ஊதியக் குழு அமைக்கப்பட்ட தேதியிலிருந்தே வழங்க வேண்டும். நிலுவை வழங்கப்பட வேண்டும் என்று ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் சார்பிலே நான் வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். இடைக்கால நிவாரணம் 300 ரூபாய் கொடுத்திருக்கின்றார்கள். அதைக்கூட பொங்கல் பரிசு என்று சொல்லிப் பெருமைப்படுகிறார்கள். அதே சமயத்திலே ஊதியம் குறைவாக வாங்குகின்றவர்களுக்கு ரூ. 200 கொடுத்திருக்கின்றார்கள். இதிலே பெருத்த முரண்பாடு, பாரபட்சம் இருக்கிறது. யூ.ஜி.சி. ஸ்கேல் வாங்குபவர்களுக்குக் கிடையாது, ஓய்வு ஊதியம் வாங்குபவர்களுக்குங் கிடையாது என்று சொல்லி விட்டோம். அடிப்படை அகவிலைப் படி பெறாதவர்களுக்குக் கிடையாது என்று சொல்லிவிட்டோம். பகுதிநேர ஊழியர்களுக்கு இல்லை என்று சொல்லி விட்டோம். கொடுக்கப்படுவதில் 50 விழுக்காட்டை வரப் போகின்ற ஊதிய உயர்வில் சரிப்படுத்திக்கொள்வோம் , என்று சொல்லிவிட்டோம். அப்படி என்றால் ரூ. 150 பொங்கல் பரிசு தானே அது அனைத்து ஊழியர்களுக்கும் தரவேண்டாமா? அது நியாயம் அல்லவா? அது தர்மம் தானே. அந்த அடிப்படையிலே அனைத்து ஊழியர்களுக்கும் அந்த ரூ. 300 கொடுக்கும் போதே அந்த ரூ. 150-ஐ தகுதி இருக்கிறதோ தகுதி இல்லையோ, அனைவருக்கும், ஓய்வு ஊதியம் பெறுகின்றவர்களுக்கும் வழங்க வேண்டும். இதை நான் வலியுறுத்துகிறேன்.

பி.ஜி. பட்டதாரிகள் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள், பி.எட். பட்டம் படிக்கவில்லை. இருந்தாலும் அவர்கள் அடிப்படை ஊதியமாக ரூ. 675 வாங்குகின்றார்கள். அகவிலைப் படி வாங்குகின்றார்கள். அவர்களுக்கு மறுக்கிறார்கள். இது அதர்மம் அல்லவா! அலுவலகத்திலே உள்ளவர்கள், அதற்கு ஊகரிபிகேஷன் கொடுக்கும்போது, 'அவர்களுக்கு இல்லை' என்று சொல்லி மறுக்கிறார்கள். 1—10—1984-லேயிருந்து புதிய ஊதிய விகிதத்தில் கொடுக்கும் போது, புதிய ஊதிய விகிதம் அமைக்கப்படும்போது, பாதித் தொகையை பிடித்தம் செய்து விடுவார்கள். எனவே தகுதி பெற்ற, பணி நீட்டிப்பு பெற்றிருக்கும் ஆசிரியர்களுக்குக்கூட இது மறுக்கப்படுகிறது. இதையெல்லாம் அரசு மீண்டும் மறு ஆய்வு செய்து, அவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.



பொதுவாகவே தனியார் பள்ளிகளிலே உள்ள ஆசிரியர்களுக்குக் கொத்தடிமை நிலைமைகள் இருக்கின்றன. எப்போதுமே கொத்தடிமைகள். ஒரு வழியில் கொத்தடிமைகள் அல்ல. இரண்டு வழிகளில் கொத்தடிமைகளாக இருக்கின்றார்கள். அரசாங்கமே அவர்களைக் கொத்தடிமைகளாக நடத்துகின்றார்களோ என்ற ஐயப்பாடு இருக்கிறது என்பதற்குக் காரணம் என்னவென்றால், இந்த ரூ. 300, ரூ. 200 தனியார் பள்ளிகளிலே பணியாற்றுபவர்கள் பெற்றார்களா என்றால், இல்லை. அவர்கள் எப்போது பெற்றார்கள்? இன்னும் சில பள்ளிகளில் பெறவில்லை. இதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எவ்வளவு தொய்வு இருக்கிறது? ஏன் இவ்வளவு கால தாமதம்? ஆகவேதான் சொல்கிறேன். அரசாங்கமே இவர்களைக் கொத்தடிமைகளாக நடத்தக்கூடாது. அதுவும் பெண்கள் பள்ளிகளிலே பணியாற்றுகின்றவர்கள், பெண் அதிகாரிகள் கட்டுப்பாட்டுக்குள் உள்ள மகளிர் கூட அதிகமாக நடுங்குகின்றார்கள், அஞ்சுகின்றார்கள். சில பள்ளிகளில் அவர்களுக்கு பல மாதங்களாக இன்னும் ஊதியம் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு பொதுவாக 1 ஆம் தேதியே ஊதியம் வழங்க வேண்டும் என்று நம்முடைய அரசினுடைய திட்டவட்டமான ஆணை இருக்கிறது. முதலாம் தேதியே எல்லா அரசு அலுவலர்களும் ஆசிரியர்களும் ஊதியம் வாங்க வேண்டும் என்று இருக்கிறது. பெண்கள் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற பள்ளிகளிலே 10 ஆம் தேதி 15 ஆம் தேதி தான் வழங்குகின்றார்கள். அதிகமாகப் பேசினால், அவர்களுக்கு ஆபத்துதான் வரும். இதை மாற்ற வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

குடும்ப நல நிதி ரூ. 10 ஆயிரம் என்பதை ரூ. 20 ஆயிரம் என்று உயர்த்தியிருக்கிறார்கள். அதற்கு பெரும் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு என் பாராட்டுக்கள் உரித்தாகுக.

நான்கூட ஒரு கருத்தைச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர்கள்கூட இங்கே நான் ஒன்றும் கேட்கவில்லை என்று சொன்னார்கள். நான் நினைவு படுத்த விரும்புகிறேன். மாண்புமிகு திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் மத்திய நிதி அமைச்சராக இருந்தபோது, சொன்னார்கள். ஒரு ரூபாயினுடைய மதிப்பு 19 காசுகள் ஆக ஆகிவிட்டது என்று சொன்னார்கள். அதே அடிப்படையிலே நான் ஒரு கேள்வி இங்கே போட்டேன். இங்கே அப்போது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இருந்தார்கள். அவர்களைக் கேட்டேன். மாண்புமிகு திரு. பிரணாப் முகர்ஜி மத்திய அமைச்சர் அவர்கள் ஒரு ரூபாயினுடைய மதிப்பு 19 காசுகள் இல்லை என்று சொல்கின்றார்களே,

அப்படி என்றால் ரூ. 10 ஆயிரம் என்பதை ரூ. 50 ஆயிரமாகக் கொடுப்பார்களா என்று கேட்டேன். நிதி அமைச்சர் அவர்கள் அப்போது தரமுடியாது என்றும் நம்முடைய மாநிலத்தினுடைய நிதிநிலை போதுமானதாக இல்லை என்றும் சொல்லிவிட்டார்கள். அதை நான் இப்போது நினைவுபடுத்துகிறேன்.

எப்போதுமே நாங்கள் நன்றி உணர்வைக் காட்ட கடமைப்பட்டவர்கள் என்ற வகையிலே நன்றியைத் தெரிவித்துக் கொண்டு வருகிறோம். அதுபோல ரூபாய் 5 ஆயிரம் என்பதை ரூபாய் 10 ஆயிரம் என்றபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. இராகவானந்தம் அவர்கள் நன்றி சொன்னார்கள். நாங்களும் அதற்கு நன்றி சொல்கிறோம். தொழிலாளர்களுக்கும் மற்ற உழைப்பாளி களுக்கும் கொடுத்ததற்காக எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(பிற்பகல் 1-10)

ஆனால் நம்முடைய மன்றத்தில் 1—4—1984 முதல் ஓர் அறிவிப்பு கொடுக்கப் பட்டது. அரசு ஊழியர்கள் 5,000 ரூபாய் போட வேண்டும், அரசு 5,000 ரூபாய் அளிக்கும்; அவர்கள் ஓய்வு பெறும்போது 10,000 ரூபாய் கொடுக்கப் படுமென்று சொன்னார்கள்.

It is intended for Government Employees என்ற வாசகம் போட்டார்கள். அப்போதே சந்தேகம் வந்துவிட்டது. 'கவர்ண்மென்ட் எம்ப்ளாயீஸ்' என்று போட்டிருக்கிறார்களே, தனியார் பள்ளிகள், கல்லூரிகளிலே பணி புரிபவர் களுக்குக் கொடுப்பார்களா, உள்ளாட்சித் துறை பணியாளர்களுக்குக் கொடுப்பார்களா என்ற சந்தேகம் வந்தது. நிதி அமைச்சரவர்கள், நிச்சயமாகக் கொடுப்போமென்று சொன்னார்கள். அப்போதைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்களும் உள்ளாட்சித் துறை ஊழியர்கள் அனைவருக்கும் கொடுக்கப்படுமென்று சொன்னார்கள். சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு மாத்திரம் அந்தத் திட்டத்தை விஸ்தரித்திருக் கிறார்கள். மதுரை மாநகராட்சி ஊழியர்களுக்கு இல்லையே என்? இரண்டும் உள்ளாட்சித் துறையிலே உள்ள நிர்வாகங்கள். சென்னை மாநகராட்சி ஊழியர்கள் ஓய்வு பெறும்போது, அவர்கள் கட்டிய தொகையுடன் ஐந்து ஆயிரம் சேர்த்துக் கொடுக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டம் மதுரை மாநகராட்சி ஊழியர்களுக்கு இல்லை. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இல்லை. அவர்கள் கொத்தடிமைகளாக இருக்கிறார்கள், நம்முடைய அரசிலே. There should be no disparity, discrimination.





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் 15 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும். 1-30 மணிக்கு அவையை முடிக்க வேண்டும். ஆகவே சீக்கிரம் முடித்துக்கொள்ளுமாறு உறுப்பினரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** ஆகவே, இந்த முரண்பாட்டைக் களைய வேண்டும். இந்தத் திட்டத்தை 1—4—1984-லிருந்தே அமல்படுத்த வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது ஒரு வழிப் பயணச் சலுகை தான் கொடுத்திருக்கிறார்கள். 1983-லே கொடுத்தார்கள். இதை இரு வழிப் பயணச் சலுகையாகக் கேட்கிறார்கள். ஆனால் உள்ளாட்சித் துறை ஊழியர் களுக்கும், தனியார் பள்ளியில் பணி புரிபவர்களுக்கும் அந்தச் சலுகை கிடையாது. அவர்களுக்கும் அதை வழங்க வேண்டும். 10 முதல் 15 வயதுவரை உள்ள மாணவர்களுக்கு உணவு கொடுக்கிறோம். அம்மையார் அவர்கள்கூடச் சொன்னார்கள். அங்கே அரிசியின் தரம் குறைவாக இருக்கிறது. அதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அரிசியின் தரம் நன்றாக இருக்க வேண்டும். அரிசியைப் பாலிஷ் பண்ண அவர்களுக்கு அதிகாரமில்லை. பாலிஷ் பண்ணினால் நன்றாக இருக்கும். நிறைய சோறு காணுகிறது. ஆனால் கலர் மோசமாக இருக்கிறது. அரிசியில் தரம் வேண்டும் . . .

**திரு. எஸ். இராகவானந்தம் :** அரிசியை பாலிஷ் பண்ணினால் ஊட்டச் சத்து குறைந்துவிடுமென்பது எனக்குக் கிடைத்த தகவல்.

**செல்வி ஆ. லீலாவதி :** அந்த அரிசியிலே ஒருவிதமான வாசனை வருகிறது. அரிசியைப் பாலிஷ் பண்ணினால் அந்த வாசனை போய்விடும். மாணவர்கள் பசியோடு வரும் நேரத்தில், வாசனையால் சாப்பிடாமல் போய் விடுகிறார்கள். ஆனால் அரிசியைப் பாலிஷ் பண்ணுவது நல்லது.

**திரு. பா. ரா. தாமஸ் :** நல்ல அரிசிச் சோற்றை சாதாரணமாகப் பார்த்த உடனே ஒரு மகிழ்ச்சி ஏற்படும். கலர் கம்மியாக இருந்தால், அந்த மகிழ்ச்சி ஏற்படாது. நாகர்கோவில் பகுதியில் புழுப்பு அரிசி சாப்பிடுவதால் அதிக சக்தி கிடைக்கிறது என்கிறார்கள். இருந்தாலும் இந்தச் சிறிய மாற்றம் செய்யக் கூடியதுதான். இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மேலும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வாங்குவதை மாற்றி, விலை எங்கு குறைவாக இருக்கிறதோ அங்கே வாங்க வேண்டும். இந்தத் திட்டத்தை 12-வது வகுப்பு மாணவர்

களுக்கும் விரிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, மாணவர்களும் இந்த நிர்வாகத்தில் பங்கு பெற வேண்டும். இது தவறுகள் நடக்காமல் இருக்க கண்காணிக்க வாய்ப்பாக இருக்கும். சமையல் கூடம் கட்ட அதிகபட்சமாக 5,000 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். சில இடங்களில் 10,000 ரூபாய், 15,000 ரூபாய்கூட ஆகிறது. அதை வேறு வழிகளில் கொடுக்க வேண்டும். இலவசப் பாடப் புத்தகம் பற்றி எல்லாம் சொல்லிவிட்டேன்.

அடுத்து, ஃப்ரி பிரைமரி ஸ்கூல்—நம்முடைய மாநிலத்தில் மத்திய அரசுப் பள்ளிகள் வரப் போகின்றன என்று சொல்லுகிறார்கள். தேவையான பணியிடங்களை நிதித் துறை அனுமதிக்காததால் 45,000 ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். நிதித் துறை பணியிடங்களை அனுமதித்தால்தான், அவர்களை நியமிக்க முடியும். பணியிடங்கள் இல்லாததால், அநேக ஆசிரியர்கள் பணியில்லாமல் இருக்கிறார்கள். 4000 முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் பணி வரன்முறை செய்யப்படாததால், உண்ணாவிரதம் இருக்கிறார்கள். எங்கெங்கே பணி வான்முறை செய்யப்படாமல், ஊதிய உயர்வு வாங்காமல், தேர்வு நிலை, சிறப்புத் தேர்வு நிலை வாங்காமல் இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் பணி நிரந்தரம் செய்து, எல்லாச் சலுகைகளையும் அளிக்க வேண்டும். 25—6—1984 நாளிட்ட அரசாணை 996-லே 12 ஆயிரம் இளநிலை உதவியாளர்கள் தேர்வாணைக் குழு தேர்வு இல்லாமல் ரெகுலரைஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். அப்படி ஏன் ஆசிரியர்களைப் பண்ணக் கூடாது? அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள்

(பிற்பகல் 1.15)

என்ன தப்பு செய்தார்கள்? அதை அவசியம் இந்த அரசு செய்ய வேண்டும். நேரடியாக அனைத்து ஆசிரியர்களுக்கும் ஊதியம் வழங்க வேண்டும். தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு சரிவர ஊதியம் வழங்குவதில்லை. எல்லோருக்கும் ஒவ்வொரு மாதமும் நேரடியாகவே சம்பளம் போய்ச் சேரும் வகையில் ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும். இன்றைக்கு அரசுப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் தனியார் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் இடையே ஏன் வேறுபாடு வைக்க வேண்டும்? தனியார் பள்ளித் தலைமையாசிரியர் வேண்டிய ஜாபிதாவைத் தயார் செய்கிறார், நிர்வாகி அதை சான்ஷன் செய்கிறார், பிறகு அப்ரூவல் ஆவதற்காக டி.இ.ஓ. ஆபீசுக்குப் போகிறது. அங்கே சில நாட்கள் அது இருக்கிறது. இந்நிலையில் இன்கிரிமெண்ட், பிராவிடண்ட் பண்ட் போன்ற சாதாரண விஷயங்களுக்குகூட அங்கே நாட் கணக்கில், வாரக் கணக்கில் சம்பந்தப்பட்ட பேப்பர்கள்



காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் இங்கே சொன்னதுபோல், அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். தேக்கமில்லாமல், சிறப்பாக, நீதியாக, நேர்மையாக நிர்வாகம் நடக்க இந்த அரசு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**திரு. நெல்லை பாலாஜி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தினை வழி மொழிந்து பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து என் உரையை ஆரம்பிக்கிறேன்.

ஆளுநர் உரையைப் பற்றிச் சொல்லும்போது, இங்கே மாற்றார்கள் ஒரு விதமாக விமர்சித்தார்கள். அது தவறு. எனது எண்ணங்களைப் பொறுத்தவரையில், ஆளுநர் உரையானது முழுக்க முழுக்க முக்கனி சாறாக எனது கண்களுக்குத் தெரிகிறது. காலம் சென்ற பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுடைய மறைவுபற்றிப் பேசும்போது, மாற்றார்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். 3 பத்தி ஒதுக்குவதா, 3 பாரா ஒதுக்குவதா என்றெல்லாம் பேசினார்கள். அதற்கு மாண்புமிகு தலைவர் அவர்களும் "அவர்கள் மிகப் பெரிய பதவியை வகித்தவர்கள்" என்ற கருத்துக்களைச் சொன்னார்கள். இந்திய வரலாற்றை எடுத்துப் பார்ப்போமேயானால், 1970ஆம் ஆண்டு வரையில் மிகுந்த அவமானமுடைய வரலாறை உடையதாக நமது நாடு இருந்தது. அந்நியன் படையெடுத்து இந்நாட்டை அடக்கினான், அதைத் தடுக்க நாதியில்லாத நாடு என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த நினைப்பில் பாகில்தான் படையெடுத்தபோது, அவர்களுடைய படையெடுப்பை அடக்கி, நாமும் அடுத்தவர்களை அடக்குகிறவர்கள், வலிமை மிக்கவர்கள் என்பதை நிரூபித்தவர்கள் காலம் சென்ற நமது பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள். கஜினி முகமது சோமநாதபுரம் கோயில் நோக்கி படையெடுத்த நேரத்தில் "சோமநாதனே, சொக்கநாதனே எங்களைக் காப்பாற்று" என்று துளசியையும் வில்வத்தையும் எடுத்து அங்குள்ளவர்கள் அர்ச்சனை செய்தார்கள். அவர்களுடைய அர்ச்சனை பலிக்கவில்லை. மாறாக கஜினி முகமது கொள்ளையிட்டதுடன் ஒரு மியூசியத்தையும் அமைக்கும் அளவுக்கு இருந்திருக்கிறான். ஆனால் அதே நேரத்தில் அடுத்தவன் படையெடுத்து வரும்போது, ஆண்டவனை நோக்கி அர்ச்சனை செய்யாமல் எதிரிகள் அதிர்ச்சியடையும் வகையில் நமது சக்தி எவ்வளவு என்று நிரூபிக்கும் வகையில் பகைவர்களை அடக்கி அனுருண்டு

உற்பத்தி செய்து, அதை வெடிக்கச் செய்து அகில உலகத்திற்கும் தெரியும் வண்ணம், நாங்கள் எந்த வல்லரசுக்கும் குறைந்தவர்கள் அல்ல என்று எடுத்துக் காட்டியவர்கள் காலம் சென்ற பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள். அவர்களுக்காக ஆளுநர் உரையில் தெரிவித்துள்ள வாசகங்கள் முழுமனதோடு, உணர்வு பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டிய வார்த்தைகள்.

அடுத்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் புதுப் பொலிவோடு, பூரண சுகத்தோடு மீண்டும் ஆட்சி அரியணையில் ஏறியிருக்கிறார்கள். ஆழ்ந்த மக்கள் படை பலத்தைக் கொண்டவர்கள். தமிழ் நாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு அடுத்தபடி ஓர் இயக்கத்தை உருவாக்கி, அந்த மக்கள் இயக்கத்தின் துணையுடன் ஆட்சிக்கு வர முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். இங்கு இருந்தாலும், வேறு எங்கிருந்தாலும் தான் இந்நாட்டை ஆள முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி பேசும்போது, தொகுதிக்குச் செல்லாமலே தேர்தலில் வெற்றி பெற்றவர் பசும்பொன் முத்துராமலிங்கம் அவர்கள் என்று இங்கே குறிப்பிட்டார்கள். அதுபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் தொகுதிக்குப் போகாமலேயே தேர்தலில் கண்ணியத்திற்குரிய காய்தே மில்லத் அவர்களும் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டினார்கள். பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களும் கண்ணியமிகு காய்தே மில்லத் அவர்களும் தொகுதிக்குப் போகாமலே தேர்தலில் வெற்றி பெற்றபோது இருவரும் இந்த பாரத கண்டத்தில் எங்கோ ஒரு பகுதியில் தான் இருந்தார்கள். அவர்கள்

(பிற்பகல் 1-20)

பக்கத்துப் பக்கத்துத் தொகுதிகளுக்குரிய வேட்பாளர்களைப் போய் ஆதரிப்பார்கள். அவர்கள் வெற்றியும் பெறுவார்கள், வெற்றி பெறாமலும் போவார்கள். ஆனால் நம்முடைய புரட்சித் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் அமெரிக்காவில் படுத்துக்கொண்டே இந்த செந்தமிழ் மண்டலத்தை மீண்டும் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டவர்கள். அப்படிப்பட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை முழுமனதோடு ஆளுநர் உரையில் பாராட்டியிருப்பது கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியை அடைகிறேன். அது மட்டுமல்லாமல், எம்.ஜி.ஆர். அவர்களுடைய உடல்நலக் குறைவு ,என்ன செய்தது என்று சொன்னால்,





" தீயினைக் கும்பிடும் பார்ப்பான்
நித்தம் திசை வணங்கும் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னேநின்று கும்பிடும்
ஏசுமதத்தார் யாரும்
பணிந்திடும் தெய்வம்
பொருள் யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் உண்டு, இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்"

எனும் பாரதியின் தத்துவம் நடைமுறைப்படுத்தப்பட்டது, நம்முடைய எம்.ஜி.ஆர். அவர்கள் உடல் நலம் குன்றிய இந்தக் காலம் தான்.

இஸ்லாமிய சகோதரர்கள் பள்ளிவாசல்கள் மூலமாகவும், கிருஸ்தவ சகோதரர்கள் தேவாலயங்கள் மூலமாகவும், இந்து சகோதரர்கள் இந்து தர்மத்தின் சைவ, வைணவ, சாஸ்திர, சம்பிரதாயத் தத்துவங்கள் மூலமாகவும், "எங்கள் எம். ஜி. ஆரைப் காப்பாற்றிக் கொடு, இறைவா" என்று ஆதங்கப்பட்டுக் கேட்டார்கள். அந்தப் பிரார்த்தனை என்ன செய்தது என்று சொன்னால், பழுத்த சுயமரியாதை வாதி, மாண்புமிகு உறுப்பினர், என்னுடைய அருமை நண்பர் திரு. இராகவானந்தம் அவர்களையே " நான் 69 வயது வரையில் பிரார்த்தனையில் நம்பிக்கையில்லாதவன், இப்போது பிரார்த்தனையின் வலிவைப் புரிந்துகொண்டுவிட்டேன்" என்று சொல்லி, ஏழுமலையானை தரிசிக்கப் போகிறேன் என்று சொல்லி, ஏழுமலையானை தரிசித்து வந்தவர்கள். அதற்கு அடுத்ததாக என் வழி என்றைக்கும் ஐயா வழி என்று சொல்கின்ற இந்த மன்றத்தின் உறுப்பினர் அருமை அண்ணன் கலைஞர் அவர்கள், எம். ஜி. ஆர். குணமடைவதாக இருந்தால், யானும் பிரார்த்திக்கிறேன் என்று அறிவித்தவர்கள் ஆவார்கள். அவர்களும் அந்தரங்கமாகப் பிரார்த்தனை செய்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அந்த அளவுக்கு பிரார்த்தனை வலுப் பெற்றிருக்கிறது.

தீமையிலும் இந்த தேசத்திற்கு நன்மை கிடைக்கும் அவ்வப்போது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஏற்பட்ட உடல் குன்றத்தின் விளைவாக இந்த நாட்டிலே ஆன்மீகம் வளர்ந்திருக்கிறது என்பதை அறியும் போது அளப்பறிய மகிழ்ச்சி அடைகிறேன், அளப்பறிய மகிழ்ச்சி அடைகிறேன்.

(மணியடிக்கப்பட்டது) 

திரு. க. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, பிரார்த்தனை என்பதற்கு, 'விழைவு', 'வேண்டுகோள்' என்று பொருள் இருக்கிறது. அந்தப் பொருளில்தான் நானும் பிரார்த்தனை செய்கிறேன் என்று கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, என்னிடம் கூட கலைஞரே நேரில் சொன்னார். கலைஞரைப்பற்றி உறுப்பினர் சொல்வதற்கு, கலைஞரே பதில் சொன்னால்தான், நன்றாக இருக்கும். மற்ற உறுப்பினர்கள் கலைஞருக்காக பதில் சொல்வது அவ்வளவு நன்றாக இருக்காது என்று கருதுகிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்கள் அவையில் இல்லாத நேரத்தில், அவரைப்பற்றிக் கருத்துக்கள் சொல்லும்போது, அந்தக் கட்சியின் உறுப்பினர் விளக்கம் அளிப்பது தவறல்ல என்று கருதுகிறேன்.

திரு. நெல்லை பாலாஜி : 'விழைவு' என்பதற்கும் 'வேண்டுதல்' என்பதற்கும் வேறுபாடு உண்டு. மனிதர்களிடம் கேட்பது விழைவு. ஆண்டவனிடம் கேட்பது வேண்டுதல். எனவே வேண்டுதல் வேண்டாமை இலானடியைச் சேர்ந்து வேண்டி கேட்கவேண்டுமென்றுதான், கலைஞர் அவர்களும் பிரார்த்தித்திருப்பார்கள் என்று நான் கூறினேன். ஆக . . .

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அவர் பெரியார் வழி, அண்ணா வழியில் உண்மையிலேயே நடைபோடுகிறவர். (மணியடிக்கப்பட்டது) (குறுக்கீடுகள்).

திரு. ஜேப்பியார்: மதுரை ஆதீனத்தை எப்படி ஏற்றுக்கொண்டார்கள் ?

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஆதீனத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆதீனம் கூறுகிற தமிழ்ப்பற்றை ஏற்றுக்கொள்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் மிகவும் வேகமாகப் பேசி நேரத்தைப் போக்காமல் இருக்க வேண்டுமென்று நானும் பிரார்த்தனை செய்கிறேன்.

திரு. நெல்லை பாலாஜி : நானும் அந்தப் பிரார்த்தனையை விணாக்க மாட்டேன். பெரியார் வழி என்கிறபோது இந்த மன்றத்தில் குன்றக்குடி அடிகளாரை உறுப்பினராக ஆக்கியது யார் காலம் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.





திரு. க. மீனாட்சிசுந்தரம் : அவர் பெரியார் வழியைப் பின்பற்றினார். அதனால்தான் அவரையும் இங்கே மேலவை உறுப்பினராக்கினார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பட்டது).

திரு. நெல்லை பாலாஜி : ஒரு உறுப்பினர் இது என்னுடைய கன்னிப்பேச்சு தானா என்று கேட்கிறார். நான் கன்னி கழிந்தவன். ஆனால் கற்போடு இப்போது இருக்கிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி : அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-வின் கொள்கை 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற அடிப்படையில் பல்வேறு வழிகளில் வணங்குவதற்கு அவரவருடைய மனப்பக்குவத்தைப் பொறுத்தது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மற்ற உறுப்பினர்கள் கூடுமான வரையில் குறுக்கிடாமல் இருப்பது நல்லது.

(பிற்பகல் 1-25)

திரு. நெல்லை பாலாஜி : ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பது பேரறிஞர் அண்ணா அவர்கள் 'வேலைக்காரி' படத்திலேயே தெரிவித்துவிட்ட தெளிவான கொள்கையாகும். கருத்துக்கு எட்டாத மாபெரும் சக்தி என்ற ஒன்றிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கின்றேன் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் 1957 பொதுத் தேர்தலுக்கு முன்னாலேயே தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். "நான் ஒன்றும் கடவுளின் எதிரி அல்ல" என்று தெளிவாக்கியிருக்கிறார்கள்.

1979-80 என்று கருதுகிறேன். நம்முடைய கலைஞர் அவர்கள் மன்னார்குடியிலே ஒரு சிலை திறப்பு விழாவிற்குச் சென்றிருந்த நேரத்தில், "திராவிட முன்னேற்றக் கழகம் நாத்திக இயக்கம் அல்ல. நான் வேண்டுமானால் நாத்திகனாக இருப்பேன், காங்கிரஸ் இயக்கம் நாத்திக இயக்கம் அல்ல, ஆனாலும் எப்படி நேரு நாத்திகரோ அந்த மாதிரி" என்று சொல்லி, டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்திலே பட்டவர்த்தனமாகவும், வெட்ட வெளிச்சமாகவும் சொல்லியிருக்கிறார்கள். எனவே திராவிட முன்னேற்றக் கழகம் ஐயா வழி இயக்கம் என்று இப்போது சொல்வதை சந்தேகத்தோடு நான் பார்க்கின்றேன்.

அடுத்தபடியாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் மக்களின் முழு நம்பிக்கையைப் பெற்று ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் வைத்திருக்கிற திட்டங்களிலே ஒன்று சத்துணவுத் திட்டம். இந்த சத்துணவுத் திட்டம் இந்தியாவிலேயே எங்கும் போடாத திட்டம். நம்முடைய ஆட்சிக்கு முன் ஆண்டவர்கள் ஏதோ தாராளமாக வாரத்திலே ஒருநாள் உப்புமா என்ற அளவுக்கு தங்கு தடையில்லாமல் போட்டிருக்கிறார்கள். அதுவும் திங்கள்கிழமை சாப்பிட்டவர், செவ்வாய்க்கிழமை சாப்பிடக்கூடாது. செவ்வாய்க்கிழமை சாப்பிட்டவர்கள் புதன்கிழமை சாப்பிடக்கூடாது. புதன்கிழமை சாப்பிட்டவர்கள் வியாழக்கிழமை சாப்பிடக்கூடாது. வியாழக்கிழமை சாப்பிட்டவர்கள் வெள்ளிக்கிழமை சாப்பிடக்கூடாது. இப்படி திங்கள்கிழமை சாப்பிட்டவன் அடுத்த திங்கள் கிழமைதான் சாப்பிடுவான். எனவே வாரத்திற்கு ஒருநாள் போடப்பட்ட உப்புமா திட்டமாக அது இருந்தது. ஆனால் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் வாரத்தின் அனைத்து நாட்களிலும், சோறில்லாமல் தவிக்கின்ற ஏழைக் குழந்தைகள் மற்றும் எல்லோரையும் கவனித்துப் பார்த்து, இந்த சத்துணவுத் திட்டத்தை பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். இது 80 லட்சம் பேருக்குத் தெளிவாகப் போடப்படுகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலை அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராசர் காலத்திலேயிருந்து மதிய உணவுத் திட்டம், பள்ளியின் அனைத்து வேலை நாட்களிலேயும். ஏழைக் குழந்தைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. நெல்லை பாலாஜி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஆசிரியருடைய மைந்தன். எனவே . . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் ஆசிரியரே.

**திரு. நெல்லை பாலாஜி :** அவர் ஆசிரியர். நான் ஆசிரியருடைய ஒரே மைந்தன். என்னுடைய தந்தையார் வீட்டிலேதான் பள்ளிக்கூடமே நடந்தது. எப்போது சாப்பாடு போட்டார்கள், எப்படி சாப்பாடு போட்டார்கள் என்று அடியேன் கண்ணாறக் கண்டு கழித்தவன் அந்தக் காட்சியினை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்படிப் போடுகிற திட்டத்தில் " எங்காவது ஒரு சில தவறுகள் நடந்தால், பல்லி விழுந்தது, பாச்சை விழுந்தது என்று சொல்லி திட்டத்தையே குறை சொல்லாதீர்கள் " என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சத்துணவுத்



திட்டம் 80 லட்சம் குழந்தைகளுக்குப் போடப்படுகிறது. இந்தத் திட்டத்தை செத்த உணவுத் திட்டம் என்ற அளவுக்கு மாண்புமிகு கலைஞர் அவர்களே பேசுகிற நிலைமை இருந்தது. ஆனால் மக்கள் அது சமூக நலத் திட்டம் என்பதைப் பட்டவர்த்தனமாக, பூரணமாக ஏற்றுக் கொண்டார்கள், அந்தத் திட்டத்திற்கு முழு ஆதாவு தந்திருக்கிறார்கள் என்பதையே இந்தத் தேர்தலின் வெற்றி காட்டுகிறது.

அடுத்தபடியாக, தேங்கிக் கிடக்கிற கைத்தறித் துணிகளை என்ன செய்வது என்ற கேள்வி வந்தது. நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உழுகின்ற விவசாயிகளுக்கு ஆணாக இருந்தால் ஒரு வேட்டியும், ஒரு துண்டும், பெண்ணாக இருந்தால் ஒரு சேலையும், ஒரு ரவிக்கையும் என்கிற புரட்சிகரமான திட்டத்தைக்கொண்டு வந்து ஆண் பெண் இருபாலாருக்கும் தேவையான வஸ்திரங்களை வழங்கினார்கள். இப்படி இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக விளங்குகிற டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சியை மக்கள் முழு மனதோடு ஏற்றுக்கொண்டார்கள் என்பதையே தேர்தல் வெற்றி காட்டுகிறது. இப்படி உலகத்திலே எங்குமில்லாத அற்புதத்தை நம்முடைய மாநில அரசு செய்து வருகிறது. முதலமைச்சர் அவர்கள் செய்து வருகிறார்கள்.

அதைப்போல, உலகத்திலே வேறெங்கும் இல்லாத அளவுக்கு உலாமாக்களுக்கு ஓய்வூதியத் தொகையை நம்முடைய தமிழக அரசு அளித்துக்கொண்டு வருகிறது. இந்தியாவிலே முஸ்லீம் மாநிலம் என்று கருதப்படக்கூடிய காஷ்மீர் மாநிலத்திலேகூட இல்லாத நிலை. முஸ்லீம்கள் பங்கு கொள்கின்ற கேரள மாநிலத்தில்கூட இல்லாத நிலை. ஆனால் தமிழக உலாமாக்களுக்கு ஓய்வூதியத் தொகை அளிக்க தெளிவாக ஒத்துக்கொண்டு முன்வந்திருக்கிறது. உலாமாக்களுக்கு ஓய்வூதியத் தொகை தருகின்ற நமது அரசு அதே நேரத்தில் இந்து தர்மத்தைச் சார்ந்த அர்ச்சகர்களுக்கும், ஓதுவார்களுக்கும், பட்டர்களுக்கும், ஆலயங்களில் திருப்பள்ளி எழுச்சி பாடி இறைவனை எழுப்புவதிலேயிருந்து, இறைவனை பள்ளியறையிலே படுக்க வைப்பதுவரையில் நாதஸ்வரம் வாசிக்கின்ற ஏழை நாதஸ்வர வித்வான்களுக்கும், ஆலயத்திலே ஓங்காரமிடுகின்ற சிறப்புமிக்க திருச்சங்கை ஊதுகின்றவர்களுக்கும், இவ்வாறு பொருளாதாரத்திலே பாம ஏழைகளாக இருப்பவர்களுக்கும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

முப்பது ஆண்டுக் காலம் உலாமாக்கள் வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்கு ஓய்வூதியத் தொகை கொடுக்கப்பட்டிருக்கும்போது, ஆலயங்களிலே பணி யாற்றுகிற அர்ச்சகர்கள், ஓதுவார்கள், பட்டர்கள், இவர்களுக்கும் அளிக்க வேண்டும். அவர்கள் பரம ஏழைகளாக இருக்கிறார்கள். அவர்கள் முதிர்ந்த மூப்பின் காரணமாக வறுமையின் காரணமாக, முதிர்ந்த மூப்பு இருந்தும்கூட, வேலைக்கு வருகிறார்கள். இந்த அரசு இந்த நிலையை மாற்றி வெகு விரைவிலே எந்த ஆலயமாக இருந்தாலும் சரி, அறநிலையத் துறைக்குக் கட்டுப் பட்டிருக்கிற அத்தனை ஆலயங்களிலே பணிபார்க்கிற அர்ச்சகர்களுக்கும், வயது முதிர்ந்தவர்களானால், ஒரு ஓய்வூதியத் தொகை வழங்க வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உடனே மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவிக்கலாம். "நம்முடைய ஆலயங் களுக்குப் போதுமான வருவாய் இல்லையே, என்ன செய்வது ?" என்று சொல்லலாம். ஒன்றை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 30 ஆண்டுக் காலமாக ஒரு சட்டத்தை வைத்துக்கொண்டு இந்த நாட்டை ஒரு கொள்ளைக் கூட்டம் கொள்ளை அடித்துக்கொண்டு வருகிறது. சாகுபடியாளர்கள் பாதுகாப்புச் சட்டம் என்கிற ஒரு சட்டத்தின் வளைவின் கீழ் ஆலயங்களுக்கு வரக்கூடிய வருவாய் அனைத்தும் வராமலேயே இருந்து வருகிறது. அரசுக் கணக்கு தெளிவாகத் தருகிறது. விவசாயப் பொருள் நன்றாக விளைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆண்டுக்காண்டு சராசரி புள்ளி விவரங்கள், அதிகமான அளவுக்குப் போய்க்கொண்டு வருகின்றன. ஆனால் நித்திய கால பூஜைக்கே இந்த நாட்டிலே வழி இல்லை என்ற நிலை. சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்தின் விளைவாக தமிழ் நாட்டிலுள்ள தேவாலயங்கள் அனைத்தும் நித்திய கால பூஜைக்கு வழி இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றன. உடனடியாக இந்தச் சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது என்னுடைய கருத்து அல்ல. ஏற்கெனவே இந்தக் கட்சி தேர்தலிலே மக்கள் முன்னாலே ஒரு அறிக்கை வைத்துத்தான் வருகிறோம். அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே "ஆலயங்களைப் பராமரிக்கப் போதுமான நிலங்கள் இருந்தும்கூட, நிலங்களி களிலேயிருந்து வருமானம் வருவது இல்லை. இதற்கான காரணம் சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்தின் சிக்கல்கள் என்பதாகும். நாங்கள் ஆள வருவோமானால், சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்தை ஆலய பராமரிப்பு, பாதுகாப்பு என்ற நிலையிலே ஆலயங்கள் என்ற அளவிலே ரத்து செய்வோம்" என்று நிதர்சனமாகக் காட்டியிருக்கிறது. அந்த அறிக்கையின்





அடிப்படையில்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை மக்கள் ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார்கள். எனவே வெகுவிரைவிலே ஆலயங்களிலே நித்திய கால பூஜை நடக்கவும், இருண்டு கிடக்கக்கூடிய ஆலயங்களிலே எல்லாம் விளக்கு ஒளி தரவும் வெகுவிரைவிலே இந்தச் சாகுபடியாளர்கள் பாதுகாப்புச் சட்டத்திலே இருந்து ஆலய நிலங்களுக்கு விதிவிலக்கு தர வேண்டுமென்று நான் இந்த மன்றத்திலே வற்புறுத்துகிறேன். இப்படி சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் ஒரு ஏக்கர், அரை ஏக்கர் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்த அவையை 1-30 மணிக்குள்ளாக முடித்து விடவேண்டுமென்று தலைவர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். எனவே சீக்கிரம் முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. நெல்லை பாலாஜி :** எனவே, ஏழை நிலச்சுவான்தார்கள் ஒரு ஏக்கர், அரை ஏக்கர் என்று நிலத்தின்கீழ் இருந்துகொண்டு அவர்களுக்கும் இந்த சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம் என்ற வளைவின்கீழ் அவர்களுக்குரிய பங்கு தரப்படாமல், கடந்த 30 ஆண்டுக் காலமாக இந்த நாட்டிலே ஒரு மோசடிக் கும்பல் மோசடி செய்து வருகிறது. எனவே ஏழை நிலச்சுவான் தார்கள் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரர்களுக்கு சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்திலேயிருந்து விலக்கு கிடைக்க வேண்டுமென்றும் நான் இந்த மன்றத்தை வற்புறுத்துகிறேன். இனி நான் பேசத் தயாராக இல்லை. உரை நிறைவுறுகிறது. அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 18—3—1985 திங்கட்கிழமை காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-33)

## 3. அவை முன் வைக்கப்பட்ட தாள்கள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

120. வணிக வரிகள்-அறநிலையத் துறையின் 6—10—1982 ஆம் நாளிட்ட II(2)|CTRE|160/83 ஆம் எண் அறிவிக்கையில் செய்யப்பட்ட திருத்தங்கள் குறித்து, வணிக வரிகள்-அறநிலையத்துறையின், 30—1—1985 ஆம் நாளிட்ட 74 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது].

121. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது விவர அட்டவணையில் செய்யப்பட்ட திருத்தங்கள் குறித்து, வணிக வரிகள்- அறநிலையத் துறையின் 5—1—1985 ஆம் நாளிட்ட 28 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது].

122. 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விதி முறைகளில் செய்யப்பட்ட திருத்தங்கள் குறித்து, பணியாளர்-நிருவாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளர்—எம்), 27—12—1984 ஆம் நாளிட்ட, 1278 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப் படுகிறது.]

123. அன்னூர், புஞ்சைப் புளியம்பட்டி, அவினாசி ஆகியவற்றின் அறிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளில் உள்ள கிராமங்களை, விவர அட்டவணையிலிருந்து நீக்கிவிடும் விருப்பத்தை அறிவிப்பது குறித்து, வேளாண்மைத் துறையின் 18—1—1985 ஆம் நாளிட்ட 56 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது].

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

இல்லை.



( ஆம் பக்கத்தில் இனம் 1-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

கீழ்க்கண்ட காரணங்களால் தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது :—

(1) பருவமழை பொய்த்ததனால் நீர் மின் நிலையங்களுக்கு நீர் வரத்து குறைந்துள்ளது.

(2) பருவமழை பொய்த்ததன் காரணமாக டிசம்பர் மாதம் முதல் கோளாவிலிருந்து மின்சாரம் கிடைக்கவில்லை.

(3) கல்பாக்கம் அணுமின் நிலையம் ஆண்டு பராமரிப்பு பணிகள் நிமித்தம் 7—12—1984-லிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யவில்லை.

(4) நேரிடையாக மின் அனுப்பும் வசதியில்லாததால் ராமகுண்டத்திலிருந்து போதுமான மின்சாரம் கிடைக்கவில்லை.

(5) தூத்துக்குடி 3-வது மின் இயந்திரம் 1—2—1985 முதல் ஹைடிரஜன் வாயு கசிவு காரணமாக பழுது அடைந்ததால் மின் உற்பத்தி செய்யவில்லை

(6) ஆண்டு பராமரிப்புப் பணிகள் காரணமாக எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 5-வது பிரிவு மின் உற்பத்தி செய்யவில்லை.

(7) நெய்வேலியிலுள்ள 9-வது பிரிவு ஆண்டு பராமரிப்பு பணிகள் காரணமாக 22—2—1985 முதல் 7—3—1985 வரை மின் வழங்கல் குறைந்துள்ளது.

2. தூத்துக்குடி 3-வது பிரிவு பழுது பார்த்தலுக்குப் பிறகு நடப்பாண்டு மே மாதத்திலும், எண்ணூர் 5-வது பிரிவு அடுத்த வாரத்திலும் உற்பத்தியை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 6—3—1985 அன்று உற்பத்தியை தொடங்கிய கல்பாக்கம் அணு மின் நிலையம் 235 மெகாவாட்டிற்குப் பதிலாக 100 மெகாவாட் மின்சாரம் அளித்து வருகிறது. அடுத்த வாரத்தில் முழு அளவு மின்சாரம் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[1985 மார்ச் 16

3. மேலே கூறியவற்றின் காரணமாக உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு 30 சதவிகிதம் மின் வெட்டு உச்சத்தேவையிலும், மின் அளவிலும் 1—2—1985 முதல் அமுல்படுத்தப்பட்டது. மேலும் 1—3—1985-லிருந்து மின்வெட்டு, மின்சாரத்தை அதிகமாகப் பயன்படுத்தும் உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு 50 சதவிகிதம் ஆகவும், இதர உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு 40 சதவிகிதம் ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் இதே தேதியிலிருந்து கிராமப்புற மின் தொடர்கள் 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இரண்டு பிரிவுகள் பகல் நேரத்தில் 6 மணி வீதமும், இரவில் 3-வது பிரிவிற்கு 8 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஞாயிறுதோறும் இப்பிரிவுகள் முறை மாற்றம் பெறும். இதற்கு முன்பு கிராமப்புற மின் தொடர்கள் 2 பிரிவுகளாக்கப்பட்டு பகலில் 6 மணி வீதமும், இரவில் 2 பிரிவிற்கும் 8 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. வீட்டிற்கும் வணிகத்திற்கும், குறைந்த அழுத்த தொழிற்சாலைகளுக்கும் மற்றும் அத்தியாவசிய பணிகளுக்கும் மின்வெட்டு தற்போது அமுலில் இல்லை. இது சென்ற ஆண்டிற்கு மாறுபட்டது ஆகும். இவ்வாண்டு, கடந்த ஆண்டுகளைப் போல் அல்லாமல், தொழிற்சாலைகளுக்கு உச்ச நேர கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை. 1—2—1982 முதல் மின்சாரம் அளிக்கப்பட்ட உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு மின் வெட்டிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளைப்போல் அல்லாமல் புதிய தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் தற்போது தடையேதும் கிடையாது.

143940
600 008.
D
V211,32'N85
N85.211.3-4

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhantha Works Publishing Society (Tirunelveli), Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFASSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavur District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Thanjavur District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jagannathan Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mari Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

---

© TAMIL NADU LEGISLATIVE COUNCIL SECRETARIAT—PUBLISHED UNDER RULES 196 AND 199 OF THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.